# பொன்மணித் தீபம்

பூவை எஸ். ஆறுமுகம்

வரம் பதிப்பகம்

51, பெல்சு சாலை,
திருவல்லிக்கேணி, சென்னை-600005

முதற் பதிப்பு : 1974

[ அனைத்துரிமையும் பதிப்பகத்தாருக்கே ].

விலை ரூ 6-50

வைரம் அச்சகம், சென்னை - 600005. தொலைபேசி : 88433

# பதிப்புரை

தமிழ் நாட்டு வாசகர்களுக்கு நன்கு அறிமுகம் ஆனவர் இந்நூலாசிரியர் பூவை எஸ். ஆறுமுகம்.

பொருளாதாரத்தில் சம நிலையிலுள்ள ஒரு குடும்பத்தினரிடையே புதுப் பணம் ஏற்படுத்திய ஏற்றத்தாழ்வு, கணவன் மனைவி-குடும்ப வாழ்க்கை குலையாமலிருப்பதற்குத் தேவையான அமைதி காக்காமல் போனதின் விளைவு ஆகியவற்றைக் கொண்டு ஆசிரியர் இந்நூலை எழுதியுள்ளார்.

தமிழ் மக்கள் இந்நூலை வரவேற்று மிகுந்த ஆதரவு அளிப்பார்கள் என்று நம்புகின்றோம்.

எஸ். வடிவேலு

# பொன்மணித் தீபம்

## 1. பூப்போல ஒரு புன்னகை

அந்தி மாலை அற்புதமாகவே மணக்கிறது!...

குமாரி மஞ்சுளாவின் மனத்தில் அப்போது புதிய அமைதி தலைகாட்டத் தலைப்பட்டது. 'தேவி-பாரடைஸ்' திரைப்பட அரங்கை மீண்டும் ஒரு முறை நோக்கினாள் அவள். உண்மையிலேயே தேவலோகத்தின் தலைவாசலில் பாதம் பதித்திருப்பதாகவே அவள் உணர்ந்தாள். அவ்வுணர்வு அவளுக்கு இதமளித்திருக்க வேண்டும்! காலையில் வேலைக்குப் புறப்பட்டவள்; ஐந்து மணி வரையிலும் பணிகள் காத்திருந்தன. உழைப்பு இல்லையேல், பிழைப்பு நடக்க முடியுமா? இனி அவளுக்கு ஓய்வு; ஆமாம், நாளைக்காலை வரைக்கும்! அவள் தன்னுடைய நளினமான பூவிரல்களைச் சொடுக்கி விட்டுக் கொள்ளலானாள். ரெமிங்டனில் அவள் 'டைப்' பண்ணின கடிதங்கள், ரசீதுகள், விலைப்பட்டியல்கள் கொஞ்சமா, நஞ்சமா?

மஞ்சுளாவின் எழில் மண்டிய இளம் மார்பகத்தில் மொய்த்திருந்த வண்ணத்துப் பூச்சிகள் சிறகடித்துப் பறந்து கொண்டிருந்தன. அவளுடைய பெருமூச்சு அடங்கியதுதான் தாமதம்; அந்த வண்ணத்துப் பூச்சிகளும் 'கப்சிப்' என்று அடங்கிவிட்டன. நழுவி விடத் துடித்த மார்பகச் சேலையை அவள் செம்மைப்படுத்திக் கொண்டாள். ஒருகணம் தன்னை மறந்து, தன் சூழலை மறந்து புன்னகை செய்தாள். பிறகு

நடை பாதையினை நோக்கி நடை தொடர்ந்தாள். அவளோடு அவள் எண்ணங்களும் தொடர்ந்திருக்க வேண்டும்!

அவள் எதை நினைப்பாள் ?

அவள் எதை மறப்பாள் ?

நினைவும் மறதியும் கூடு விட்டுக் கூடு பாய்வதுதான் வாழ்க்கையா ; — வாழ்க்கை விளையாட்டா ?

மஞ்சுளா தன்னிரைப்பு பெற்றதும் பதட்டத்தோடு தன்னுடைய கைக் கடிகாரத்தைத் திருப்பினாள். 'ஓ...மை... குட்னெஸ் ;... மணி ஐந்து முப்பைத்தைந்து ஆயிட்டுதே ?... அத்தான் சொன்ன பேச்சைக் காப்பதாக இருந்திருந்தால், இந் நேரம் இங்கே வந்து சேர்ந்திருக்க வேணுமே ?... ' என்று எண்ணப் பூக்களை மன நாரில் தொடுத்த வண்ணம் அவள் தன்னுடைய கோல விழியை அண்ணா சாலையைச் சுற்றிலும் சுழல விட்டாள். சொர்க்கம் என்கிற மையப் புள்ளியைச் சுற்றி அமைக்கப்பட்ட, வட்டத்தில் அழகு காட்டிய 'தேவி' — 'தேவி-பாரடைஸ்' — 'தேவி பாலா' வும் அவள் நோக்கில் நிழலாடினவே !

இன்னமும் அந்த ரோஜா நிற 'டாட்ஜ்' காரைக் காணோமே!...

அவள் மனம் தவித்தது ; லஜ்ஜை மேலிட, கண்களைத் தாழ்த்தினாள் அவள். பெண் ஒருத்தி ஏதோ காரியமாகத் தன்னந் தனியாக நின்று கொண்டிருந்தால், சாலையில் போவோரும் வருவோரும் அவளை விழுங்கிவிடுவது மாதிரி இப்படியா வைத்த கண் வாங்காமல் பார்ப்பார்களாம் ? சே !...

அப்போதுதான், அவளுக்குத் தன் தோழி நிர்மலாவின் நினைவு வந்தது. உடனே, அவள் அங்கிருந்து நகர்ந்து, அருகிலிருந்த பூக்கடையில் இருபத்தைந்து காசுக்கு டிசம்பர் பூ வாங்கினாள். டப்பைப் பையில் மீதித் 'துட்டை'ப் போட்ட போது, அவளது பார்வையில் அந்தக் கடிதங்கள் பட்டன.

சலனம் கண்ட உள்ளத்தோடு, பையை இழுத்து மூடியபடி, அவள் திரும்பவும் தேவி பாரடைஸ் தியேட்டரை நோக்கி நடந்தாள். நடந்தாளா ? — ஊஹூம் ; நடை பயின்றாள். அன்ன நடை ; பின்னல் ஜடை ; அதில் கனகாம்பரச் சுமை. மோகனிச் சிலை உயிர் பெற்று நடக்கத் தொடங்கி விட்டால் அந்த அதிசயத்தை மனித ஜாதி பார்க்காமல் ஏமாற முடியுமா, என்ன ?

" ஹெல்லோ மஞ்சு !..."

தியேட்டருக்கு வழி காட்டிய இடத்தை அடைந்த மஞ்சுளா, தன்னை அழைத்த குரல் கேட்டு இன்ப வேதனையுடன் தலையை உயர்த்தினாள். யார், அத்தானா ?— ஊகூம் !

அவனைக் கூவிக் கூப்பிட்டவன் ; மாசிலாமணி, 'மகாத்மா பதிப்பகத்தில் உடன் பணி புரிபவன் ;

" ஓ... நீங்களா ? "

மஞ்சுளாவின் முத்துப் பற்கள் முத்து நகை சிந்தின. பட்டுக் கருநீலக் கண்கள் நிமிர்ந்து தாழ்ந்தன. தாழ்ந்த அக் கண்கள் நிமிர்ந்தபோது, மாசிலாமணி ஒயிலோடு குனிந்து செம்தித்தாள் ஒன்றை எடுந்து நிமிர்ந்ததைக் கண்டன.

" மஞ்சு, இந்தாங்க உங்களோட நியூஸ் பேப்பர் ! "

" ரொம்ப தாங்க்ஸுங்க, மிஸ்டர் மாசிலாமணி ; " மஞ்சள் வெயில் அவளது பிறை நெற்றியில் பளிச்சிட்ட பிறைத் திலகத்தோடு கண்ணாமூச்சி 'விளையாடியது போலும் ; நிர்மலா பிரியப்பட்ட டிசம்பர்பூப் பொட்டலத்துக்கடியில் பத்திரிகையை வைத்துக் கொண்டாள் அவள்.

அவன் சிரித்தான். சிரித்தபோது, அவனுடைய இளமையின் அழகு மேலும் அழகு காட்டியது. எளிமையான அழகு எத்துணை ரம்மியமாகப் பொலிகிறது ; நேருக்கு நேர் நின்ற அழகி மஞ்சுளாவைப் பார்க்கக் கூச்சப்பட்டவன் போன்று,

அவன் தன் கண்களைக் கீழ்வசமாக இறக்கிய வண்ணம் சொன்னான்: "மஞ்சு, நாம் ரெண்டு பேரும் என்னவோ இன்று நேற்றுத்தான் பழகுகிற மாதிரி, இந்தச் சாதாரண காரியத்துக்குக் கூடப் பெரிதாக நீங்கள் சொல்றீங்களே? உண்மையான அன்பு இப்படிப்பட்ட 'ஃபார்மாலிட்டி' யை யெல்லாம் எதிர்பார்ப்பதில்லை; எதிர்பார்க்கவும் கூடாது. இது என்னுடை மனக் கருத்தாகும்;"

அவனைப்போலவே அவளும் பான்மையுடன் சிரிக்கலானாள் "உங்களோட மனப் போக்கு எனக்குப் புரிஞ்சது தானுங்க மிஸ்டர் மாசிலாமணி. அதற்காக, செய்த உதவிக்கு நன்றி சொல்லாமல் இருந்தால், அந்த உதவியை—அந்த உதவிக்குப் பின்னாலே இருக்கிற அன்பைத் தட்டிக் கழிக்கிற மாதிரி ஆகாதுங்க? உங்க அன்புக்கு ஒரு தாங்க்ஸ் போடணும்னு என் மனசிலே பட்டது. என் கடமையைச் செஞ்சிட்டேன். அவ்வளவுதான்;" என்று கூறிவிட்டு, அவள் தன்னுடைய மார்பகத்தில் மையமிட்டு இழைந்திருந்த சங்கிலியின் டாலரை நெருடத் தொடங்கினாள். அவள் விழிகள் ஏன் இப்படிக் கலங்குகின்றன?

"வேடிக்கையான பெண் நீங்க!"

அவள் நாசுக்காக நிலையைச் சமாளித்துக் கொண்டு, நாணம் காட்டினாள்.

"மஞ்சு, உங்க அப்பா—அம்மா பூசல் இன்னமும் தீரலீங்களா?"

"இல்லீங்க;" என்றாள் அவள், ஏக்கமும் வேகமும் கலந்த குரலிலே.

"உங்க நிலைமைக்கு நான் ரொம்ப வருந்துகிறேன், மஞ்சு", என்று உளமார்ந்த அனுதாபத்தைத் தெரிவித்தான் அவன். உடனே, சோகத்தின் இழைகளைப் பிரித்துவிடும் நோக்கத்தோடு, "மஞ்சு, அதுசரி. இப்போ யாருக்கவோ காத்துக்கினு நிற்கிறதாகத் தோணுதுங்களே?" என்று கேட்டான்.

இவ்வாறு விசாரிப்பதை மஞ்சுளா ஒருவேளை நாகரீகக் குறைவாகக் கருதிவிடுவாளோ என்ற தவிப்பில் மறுகிய அவன், அவளுடைய முகத்தை நேருக்கு நேராகப் பார்க்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

அவள், அவனை—அவனுடைய கண்களைச் சந்தித்த வேளையிலே, அவனும், அவளை—அவளுடைய விழிகளைச் சந்திக்க நேர்ந்தது!

சற்றே இமைகளைச் சுருக்கிக் கொண்டே அவள் என்னவோ கூற வாயெடுத்தாள்.

அதற்குள் அவன் இடைமறித்தான். "காரண காரியம் இல்லாமல் நீங்க இம்மாதிரியான இடங்களிலே அனாவசியமாக நிற்கமாட்டீங்க என்கிறதையும், இதுபோன்ற விஷயங்களிலே நீங்க ரொம்ப ஸ்ட்ரிக்ட்—கண்டிப்பு என்பதையும் அறிந்தவன் என்கிறதாலேதான், ஒரு சுவாதீனத்தோடு உங்களைக் கேட்கத் துணிஞ்சேன், மஞ்சுளா!" என்று விளக்கம் தந்தான் மாசிலாமணி.

கதிர் முத்தம் பட்டு, ரோஜாப்பூ இதழ் இதழாக மடல் விழும் அல்லவா? அந்தப் பாங்கில் மஞ்சுளாவின் முறுவல் அமைந்தது. "மிஸ்டர் மாசிலாமணி, ஒரு வேடிக்கை பார்த்தீங்களா?... நாம் இருவரும் இன்னமும் ஒருத்தருக்கொருத்தர் அந்நியம் என்கிற நினைப்பை நாம் இரண்டு பேரும் அறிந்தோ, அறியாமலோ, மனசுக்குள்ளே கொண்டிருக்கிற காரணத்தினாலேயே தான் நாம் பரஸ்பரம் விளக்கங்களைப் பரிமாறிக் கொள்கிறோமோ என்று எனக்குத் தோணுது. நாம் இருவரும் ஒருத்தருக்கு ஒருத்தர் இனிமேல் அந்நியம் இல்லே என்கிற உண்மையை நான் உணர்கிறேன்; அதுபோல நீங்களும் உணர்வீங்கள் என்றும் நான் நம்புகிறேன்" என்றாள் அவள். உணர்வுகளின் ஆட்சி மேலோங்கியது. செவ்வதரங்கள் துடித்தன. அன்பின் பான்மை விழிகளிலும் பேசியது.

# 10

"மஞ்சு!..."

அவனுடைய நா தழுதழுத்தது.

சந்தடியற்றிருந்த அந்த ஒதுக்குப் புறத்தினையும்கூடப்படை எடுத்துவிட்டான் பிச்சைக்காரன் ஒருவன்; "பசிக்குதுங்க!" என்று பல்லை இளித்தான். ஆமாம், அவனிடம் எஞ்சி நின்றது ஒரேயொரு பல்லேதான்!

"பசிக்குதா?... பசித்தால் சாப்பிடுறதுதானேப்பா?" என்று கேட்டாள் மஞ்சுளா. அவள் சிரிக்க வேண்டுமே?

ஆனால் அவன் சிரித்தான்.

அப்போது, மஞ்சுளா பிச்சைக்காரனுக்குப் பத்துக்காசு தர்மம் இட்டாள்.

அவனுக்கும் மனிதாபிமானம் உண்டு.

நல்ல மூச்சுவிடத் தொடங்கிய பிச்சைக்காரன், "நீங்க ரெண்டு பேரும் இன்றைக்கு மாதிரியே என்றென்றைக்கும் நல்லா இருப்பீங்க. ஐயாவுக்கும் அம்மாவுக்கும் ஆண்டவன் ஒரு குறையும் வைக்க மாட்டான்!" என்று வாழ்த்தி வணங்கிவிட்டு நகரலானான்.

இரு ஜோடி விழிகள் இணைந்து பிரிந்தன. வெட்கம் கூடி ஓடியது; கசிவின் சிலிர்ப்பு நாடிச் சாடியது!

"மிஸ்டர் மாசிலாமணி, உங்க கேள்விக்கு நான் பதில் சொல்ல வேணும். என்னோட அத்தானுக்காக நான் காத்துக்கினு நிற்கிறேனுங்க!" என்றாள் மஞ்சுளா. அவள் குரல் மிகவும் இயல்பாகத் தொனித்தது.

"ஓ, அப்படியா?..." என்றான் அவன். அவன் பேச்சும் மிக இயல்பாகவே அமைந்திருந்தது. "படத் தயாரிப்பாளர் ஆனந்தரங்கம் அவர்களின் ஒரே பிள்ளையான மிஸ்டர் ஞானசேகரன்தானே உங்க அத்தான்?" என்று வினவினான் மாசிலாமணி.

"ஆமாங்க, அத்தானை உங்களுக்குப் பழக்கம் உண்டுங் களா?" அதிசயக் குறி நெற்றியில் இருந்தது.

"பழக்கம் இல்லீங்க, மஞ்சு, சுலபமாகப் பழகிவிடக் கூடிய சாமான்ய இடமா அது, நம்மைப் போலே" என்றான் அவன்; "உங்க அத்தானைப் பற்றி நீங்களே சொல்லியிருக்கீங்க!"

மஞ்சுளா பெருமூச்சை நெட்டித் தள்ளினாள்; "ஆமாம்! என் அத்தான் மிஸ்டர் ஞானசேகர் ரொம்ப நல்லமாதிரி. ஒரு நாள் உங்களை அவருக்கு அறிமுகப்படுத்துறேனுங்க, மிஸ்டர் மாசிலாமணி" என்று புன்னகைக் கோலம் ஏந்தினாள் ஏந்திழை. நயமான சிரிப்பு மட்டுமல்ல, வினயமான சிரிப்பும் கூடத்தானே?

அந்தி மயங்கத் தொடங்கிற்று.

"ஆல் ரைட்! அம்மா கோபிப்பாங்க. நான் வரட்டுமா?"

"நல்லதுங்க!"

பற்றற்ற துறவியென, மாசிலாமணி விடைபெற்று நடந்தான். அவன் நடையில்தான் எத்தனை நிதானம்; இனி அவன் தியாகராய நகர் பஸ்ஸைப் பிடித்தாக வேண்டும்.

மாசிலாமணி என்றால், மாசில்லாத மணிதான்!......

குளிர் காற்றையும் மீறிக் கொண்டு அவளது மாம்பழக் கன்னங்களில் வேர்வைத் துளிகள் முத்தார்த்தன. வசமிழந்து அலைபாயத் தொடங்கிய உள்ளத்தை நிலைப்படுத்த முயல்பவள் போன்று, மார்பில் அணைத்திருந்த செய்தித்தாளை எச்சரிக்கையாக எடுத்து புரட்டினாள் அவள்.

அதோ, அடுத்த ரேடியோ போட்டோ!

வீர பாரதத்தின் ராணுவம் சுட்டு வீழ்த்திய பாகிஸ்தான் விமானம் பரிதாபமாகக் காட்சியளித்தது — அநீதிக்குக் கிட்டுகின்ற தண்டனையைப் போல! அமிர்தசரஸ் மீது குண்டுகளை வீசவந்த பாகிஸ்தான் விமானம் அதோ கதி!...... பாவம்!

மறுபடியும் அவள் பெருமையோடு — பெருமிதத்தோடு தனக்குள் 'சபாஷ்' போட்டுக் கொண்டாள்; வங்கதேச விடுதலை போர் துவங்கிய நாளிலிருந்து எவ்வளவோ 'சபாஷ்' போட்டு விட்டாள்.

நாட்டின் நெருக்கடி நிலைமையை நினைவூட்டின, தெரு விளக்குகள்.

மஞ்சுளா பரபரப்படைந்தாள். 'ஆ! மணி ஆறு ஆயிட்டுதே அத்தானோட 'டாட்ஜ்' எங்கேயாவது 'டாட்ஜ்' பண்ணிட்டுத் தோ, என்னமோ? என் கையில் அவசரமாகப் பேச வேணும்னு 'போன்' பண்ணினாரே? ஆல்ரைட்! இனியும் என்னாலே இந்தச் சந்தடிக்கு மத்தியிலே தாமதிக்க முடியாது' அவளுக்கே உரித் தான சுதந்தரப் பண்பு அவளுடைய விழிவட்டங்களில் சுடர் விட்டது. ரசிகப் பெருமக்களிடையே பொங்கி வழிந்து கொண் டிருந்த 'கடலோரம் வாங்கிய காற்றை' அவளும் ரசித்தவாறு அங்கிருந்து புறப்படத் துடித்தாள் அவள். அழிம்பு செய்த மயிரிழைகள் இப்போது கட்டுப்பட்டன.

அப்போது—

"மஞ்சுளா!... மஞ்சுளா!... "

சடக்கென்று நின்று, நிதானமாகத் திரும்பிப் பார்த்தாள் அவள். ஆம், அத்தான்தான்; அவள் நோக்கு ஊடுருவிப் பாய்ந்தது.

ரோஜா நிறக் காருக்கருகில் நின்று கொண்டிருந்தான் ஞானசேகர் — கம்பீரமாக. அவனுக்குப் பக்கத்தில் யாரோ ஒருத்தியும் நின்று கொண்டிருந்தாள்— ஒய்யாரமாக!

இக்காட்சியைக் கண்டதுதான் தாமதம், உடனே குமாரி மஞ்சுளாவின் இளம் நெஞ்சம் - கன்னி மனம் ஆனந்தக் கூத் தாடத் தொடங்கிவிட்டதே; பூஞ்சிட்டுக் கன்னங்கள் சாதுர்ய மாக மலரத் தொடங்கிவிட்டனவே!......

ஆஹா! — யார் அந்தப் பூலோக ரம்பை?

# 13

ரோஜா வண்ணக் காரைக் குறிவைத்து மஞ்சுளா நடை தொடர்ந்தாள். அத்தானோடே அன்புப் பிடியிலிருந்து எப்படித் தப்புறதின்னு வழி புரியாமல் திகைச்சு தவிச்சுக்கிட்டிருந்த எனக்கு, அந்த பூலோக ரம்பை ஒரு நல்ல வழியைக் காட்டப் போருன்னுதான் தோணுது' இத்தகைய நினைவு அவளுக்குத் துணை சென்றது. எட்டிப் பார்க்க முனைந்த நெடுமூச்சு, அவளுடைய திடசித்தம் இட்ட ஆணையை மீற முடியாதுதான். மாலைக் காட்சி தொடங்கவிருந்த தருணமாதலால், அவள் மிகவும் கவனமாக ஒதுங்கி நடக்கலானாள். இடம், பொருள், ஏவல் என்பதெல்லாம் 'போதை'க்குத் தெரியாதல்லவா?

புஹாரி வந்துவிட்டது.

"வா, மஞ்சு, வா! ..." என்று ஆவல் பொங்க அன்பு மிஞ்ச, பாசம் கெஞ்ச வரவேற்றான் ஞானசேகரன். சிந்திச் சிதறிக் கிடந்த ஒளிப் பின்னலின் சன்ன இழைகளுக்கு மத்தியிலுங் கூட, அவனுடைய ஒப்பனை அலங்காரம் மிக நேர்த்தியாகவே மணத்தது. 'ஈவினிங் இன் பாரிஸ்' வாடையாயிற்றே ;

மஞ்சுளா பூப்போலப் புன்னகை புரிந்தாள். அந்தப் புன்னகை, தன்னை பாவாடை கட்டிய சிறுமி மஞ்சுளாவாக ஆக்கிய விந்தையை அவளது உள் மனம் உணர்த்தாமல் இல்லை! தஞ்சை மண்ணிலே நிலா மலர்ந்த நேரங்களிலே தன்னோடு ஓடிப் பிடித்து விளையாடிய சிறுவன் ஞானசேகரனை மறக்க மாட்டாள் அவள் ; "சுகம்தானுங்களே அத்தான் ?" என்று 'க்ஷேமலாபம்' விசாரித்தாள் அவள் எடுப்பான மூக்குக்கு ஒற்றைக் கல் மூக்குத்தி எடுப்புத்தான் ;

"ஓ, நல்ல சுகம்தான், மஞ்சு !" என்று பதிலளித்தான் ஞானசேகரன். புதிய மீசையை நீவி விட்டவனாக, ஒயிலோடு தன் அருகில் நின்ற அழகுப் பெண்ணை நோக்கலானான் அவன்.

# 14

அப்போதுதான் அந்தப் பூலோக ரம்பையின் நினைவே மஞ்சுளாவிக்கு வந்தது போலும் !

"மஞ்சு, நீ இப்போது ஒரு புதிய சிநேகிதியைச் சந்திக்கிருய். பெயர், தமிழரசி ;..." என்று அறிமுகப்படுத்தினுன் அவன். "உன்னைப்பற்றி தமிழரசிக்குத் தெரியும் ;" என்றும் தெரியப்படுத்தினுன்.

"வணக்கம், மஞ்சு ;" என்று நளினமான லாவகத்துடன் பூங்கரம் குவித்தாள் தமிழரசி. புராண காலத்தின் ஆடலழகி ரம்பை நவநாகரீக மோகம் மேலிட்டு இந்த மண்ணிலே காலடி எடுத்து வைத்து விட்டால் எப்படி இருக்கும் ? அப்படி இருந்தது அவள் தோற்றப் பொலிவு, நல்ல வேளை, பிடி இடை ஒடிந்து விடவில்லை.

"வணக்கமுங்க. தமிழரசி ;"

"எங்க ஞானசேகரோட பங்களாவுக்குப் பக்கத்துப் பங்களாதான் எங்களுடையது, மஞ்சுளா ;" என்முள் தமிழரசி ஓர விழிப்பார்வை மஞ்சுளாவை விழுங்கி விடுமோ ?

"ஓ, அப்படியா ?" விநயம் மிகுந்த குறும்புத்தனம் அப்போது மஞ்சுளாவின் இதழ்க் கடையில் கடை விரித்தது. 'லோ கட்' சோளி இப்படியா அவள் பொன் மேனியைப் பிடித்திருக்கும் ? — அவளுக்கு 'அது' பிடித்திருக்கும் ; அவள் என்ருல், தமிழசியாக்கும் ;...

ஞானசேகரனின் கள்ள விழிப்பார்வை மறுபடியும் மஞ்சுளாவின் பால் நிலைத்தது. "வழியிலே தமிழரசியோட வண்டியிலே 'டாஷ்' ஆயிடுச்சு. என் வண்டியிலே அழைச்சுக்கினு வந்தேன். இதோட அப்பா விக்டரீ ஹவுஸ் பக்கந்தான் இருக்காங்க ;" என்றும் விவரம் ஒப்புவித்தான். பிறகு, தமிழரசியையும் மஞ்சுளாவையும் மாறி மாறிப் பார்த்தவாறு, "நாம மூணு பேரும் சாயா குடிக்கலாமா ? என்று கேட்டான். அயல் நாட்டு 'டெரீன்ஸ்லாக்' அது ; மின்னியது. 'ஸ்டேட் எக்ஸ்பிரஸ்' பாக்கெட் வந்த அவசரத்தோடு ஒளிந்தது.

மஞ்சுளாவை நோக்கினாள் தமிழரசி.

அதற்குள், " அத்தான், நேரம் கெட்ட நேரத்திலே நான் சாயா சாப்பிடுற பழக்கம் இல்லீங்க " என்று மஞ்சுளா முந்திக் கொண்டு கூறினாள். " நீங்க ரெண்டு பேரும் வேணும்னா சாப்பிட்டு வாங்க !" என்றாள். அத்தான் சிகரெட்டை ஒளித்துக் கொண்ட சாகசம் அவளுக்குச் சிரிப்பை வரவழைத்தது.

அப்பாவைக் கண்டு திரும்புவதாகச் சொல்லிச் சென்றாள் தமிழரசி. அவளைத் திரும்ப அழைத்துச் செல்ல வேண்டியது ஞானசேகரனின் பொறுப்பாம்; பக்கத்துப் பங்களா என்றால், பின் சும்மா ?

தவிப்பிற்கு ஓர் இடைவெளி கிட்டின ஓர்மை, நல்ல மூச்சு விட்டான் ஞானசேகரன். களி துலங்க, " மஞ்சு ! " என்று விளித்தான். புஹாரீக்கு வர இசைவாளா மஞ்சு ?...

அப்போது, மோட்டார் சைக்கிளில் குறுக்கே பாய்ந்த காவல் அதிகாரி, "மிஸ்டர்... இந்த டாட்ஜ் உங்களுடையது தானே ? சீக்கிரம் எடுங்க; ஊம்;" என்று உத்தரவிட்டார். " நாட்டின் நிலைமைக்கான விதிகளை மறந்திடக் கூடாது;......" என்றார் கடுமையாக;

" இதோ, புறப்பட்டேன், ஸார்; " என்று மரியாதையோடு சொல்லிய வண்ணம் ரோஜா நிறக் காரின் முன் கதவைத் திறந்தான் ஞானசேகரன். மோட்டார் சைக்கிள் திசை மாறி விட்டதால் ஏற்பட்ட துளி நிம்மதியோடு அவன் மஞ்சுளாவை உருக்கமாக நோக்கினான். " மஞ்சு; இந்த லெட்டரை அமைதியாகப் படிச்சுப் பார்; உன் முடிவை ஒரு வாரத்துக்குள்ளே நீ எனக்கு எழுதிடணும்; " என்று தாழ்குரலெடுத்துச் சொல்லி விட்டு, ஓர் உறைக் கடிதத்தை மஞ்சுளாவின பொற்கரங்களிலே ஒப்படைத்தான அவன்.

அந்தக் கடிதம் ஏன் அப்படி நடுங்குகிறது ?...

## 2. வங்காளப் போர் !

பாரீ முனையில் இறங்கியதும், புடவையைச் சரி செய்து கொண்டே ஓர் அரைக் கணம் சைனு பஜாரைச் சுற்றிச் சூழ நோக்கிய தருணத்தில், மஞ்சுளாவின் நெஞ்சில் அவளையும் அறியாமல் ஒரு திகில் ஏற்படவே செய்தது. இம்மாதிரியான நேரங்களில், முன்பெல்லாம் இந்தக் கடை வீதி எவ்வளவு கம்பீரமாக ஒளி வெள்ளத்தில் மிதந்து கொண்டிருக்கும் ! பாகிஸ்தான் பேரில் எரிச்சல் எரிச்சலாக வந்தது அவளுக்கு. வலுச் சண்டைக்கு வந்து, நன்ருக வாங்கிக் கட்டிக்கொள் கிறது ;— வேண்டும், வேண்டும்... இன்னும் நன்ருக வேண் டும் ; பாகிஸ்தான் இனி தப்ப முடியாது. ஆமாம், அநீதி எப்படித் தப்ப முடியும் ?

ஒளி கீறிக் கிடந்த மெல்லிய வெளிச்சம் அங்கங்கே சிதறிக் கிடந்தது.

மஞ்சுளா மிகவும் கவனமாகத் தம்புச் செட்டித் தெருவில் மடங்கினுள்.

வழி நெடுகிலும் வானெலிச் செய்திக்காக பொதுமக்கள் எத்துணை ஆர்வத்தோடு காத்திருக்கிருர்கள் ; குளிரைச் சட்டை செய்யும் நேரமா இது ? வெற்றி மேல் வெற்றி பெற்றுக் கொண் டிருக்கும் பாரதத்தை எண்ணியெண்ணி அவர்களின் தோள் கள் விம்மிப் புடைத்துக் கொண்டிருக்க வேண்டும் ; ஆமாம் ; சுதந்தர வங்காள தேசம் கூடிய விரைவிலேயே விடுதலை அடைந்து விடும் !

வேலைக்குப் போகும் போதும் சரி, வேலை முடிந்து திரும்பும் சமயத்திலும் சரி, அவள் அந்தப் பிள்ளையாருக்கு ஒரு கும்பிடு போடுவது வழக்கம், கும்பிடு கொடுத்து கும்பிடு வாங்க

வேண்டும் என்பார்கள். ஆனால், பிள்ளையார் கும்பிடு போட மாட்டார், என்றாலும், சித்தி விநாயகர் கல் அல்ல; சந்நிதியில் 'ஸ்லிப்பர்'களைக் கழற்றி விட்டு நின்றாள் மஞ்சுளா. கருவண்டுக் கண்கள் இரண்டும் தியானம் புரிந்தன. பாரதத்தின் இறுதி வெற்றிக்காகவும் பங்களா தேஷ் விடுதலைக்காகவும் அவள் நெஞ்சுருகப் பிரார்த்தனை செய்தாள். அதைத் தொடர்ந்து தன்னுடைய வழக்கமான கோரிக்கையையும் ஐங்கரனிடம் சமர்ப்பிக்கத் தவறவில்லை அவள். 'தெய்வமே, என்னோட நியாயமான ஆசைகளையும் நேர்மையான கனவுகளையும் நிறைவேற்றி வைக்க நீ எப்போது நாள் பார்த்திருக்கே?' விழிச் சொட்டுக்கள் மாரகச் சேலைப் பகுதியில் பட்டுத் தெறித்தன. அவற்றைத் துடைத்தாள். அப்போது அவளது விரல்களின் உணர்விலே, ரோஜா நிற பாலீஷ் சோளிக்குள் உறங்கிய 'அந்தக் கடிதம்' விழிப்புப் பெற்றது போலும்! வெற்றி விநாயனே; என்ன சோதிப்பு இது...?

மண்ணடியைத் தாண்டி, நைனியப்பன் தெருவிலுள்ள அறைக்கு அவள் எப்படித்தான் அவ்வளவு சீக்கிரமாக வந்து சேர்ந்தாளோ?

'மகாத்மா பதிப்பகத்'திற்குப் புறப்பட்டபோது, அறைக் கதவைப் பூட்டிச் சாவியை டம்பப் பைக்குள் போட்டிருந்தாள்; அது இப்போது லேசில் கைக்கு சிக்கவில்லை; சோதித்தது. அன்புத் தோழியான நிர்மலாவுக்கென்று வாங்கி வந்திருந்த டிசம்பர் பூப் பொட்டலத்தையும், அலுவலகத் தோழன் மாசிலாமணியின் தயவினால் மீண்டும் கைக்குக் கிடைத்த செய்தித் தாளையும் ஜன்னல் விளிம்பில் வைத்து விட்டுச் சாவியைத் தேடி எடுத்து விட்டாள் குமாரி மஞ்சுளா. அலை பாய்ந்த நெஞ்சத்தோடு அவள் அவசரம் அவசரமாகக் கதவைத் திறந்தாள். விளக்கைப் போட்டாள், தபால் போடுவதற்காகத் திறந்து விட்டிருந்த ஜன்னலின் ஒரு கதவை முதலில் மூடினாள்; அப்புறம் 'டீபாய்' மீதிருந்த 'மர்ஃபி'யை இயக்கலானாள்:

"...... மீண்டும் தலைப்புச் செய்திகள். வங்காள தேசத்தில் பாதிக்கு மேற்பட்ட பகுதிகளை நம் பாரத ராணுவம் கைப்பற்றி விட்டது. ஜெஸ்சூர், சில்கெட் உள்பட இருபது நகரங்களை இதுவரைப் பிடித்துவிட்டோம். இப்போது நாம் டாக்காவை நோக்கி விரைந்து கொண்டிருக்கிறோம்...."

அவள் துள்ளிக் கொண்டே வெளிப்புறம் வந்து, பத்திரிக்கையையும் பூப்பொட்டலத்தையும் எடுத்துக் கொண்டாள். இடது கையில் சுழன்றுடிய டம்பப்பையைக் கழற்றினாள். பாதையில் கிடந்த ஸ்லிப்பர்களை ஒதுக்கமாகப் போட்டாள், உள்ளே போய் எல்லாவற்றையும் அந்தந்த இடத்தில் வைத்தாள்.

நிர்மலாவிடம் பூவைக் கொடுக்க வேண்டும். 'ஜெஸ்சூரை நம்ப ராணுவம் கைப்பற்றிடுச்சு; பேஷ்! நிர்மலா குதிச்சிருப்பாள்'

வாசற் கதவை உட்புறம் தாழிட்டுக் கொண்டு சமையற் கட்டுக்கு விரைந்தாள் மஞ்சுளா. பணி உடைகளை இடம் மாற்றினாள். சாக்லெட் நிற சேலைக்கும் ஜாக்கெட்டுக்கும் இடம் கொடுத்தாள். மங்கின ஒளியில் அவள் தன்னுடைய பிரேஸியரை குனிந்து எடுத்த நேரத்தில், அடியில் மறைந்து கிடந்த அந்த உறைக் கடிதமும் கையோடு வந்தது. பெருமூச்சுக்கு வழி காட்டியபடி அவள் தலை நிமிர்ந்தாள். கடிதமும் கையுமாக ஹாலுக்கு வந்த அவள், அக்கடிதத்தை ரோஜா நிற டைரிக்குள் வைத்தாள். மேல் முனை, பார்வைக்குப் படும்படியாக செய்தாள். அந்தி மயங்கிய வேளையிலே தேவிபாரடைஸ் அரங்கச் சூழலிலே ஞானசேகரன் அத்தானைச் சந்தித்ததை அவளால் மறந்துவிட முடியாதுதான்! அத்தானோடு உடன் இருந்த பூலோக ரம்பையைத்தான் அவள்மறந்துவிடுவாளா என்ன? ஞானசேகரனோடு நின்றிருந்த அந்த அழகியைக் கண்டவுடன், மஞ்சுளாவின் இதயம் குதூகலம் அடைந்ததல்லவா? பின் அவளுடைய அதே மனம் ஏன் இப்படிச் சலனம் கண்டு தவிக்கிறது?

மன உளைச்சலுக்கு ஓய்வு வேண்டும்.

முற்றத்திலிருந்த பானையில் ஒரு தம்ளர் தண்ணீர் எடுத்து முகத்தைக் கழுவிக் கொண்டாள் அவள். டவலைத் தோளில் போட்டுக் கொண்டு நடந்தாள். அவளோடு, அவள் எண்ணங்களும் நடந்திருக்கலாம். கண்ணாடியின் முன்னே நின்று பொட்டு இட்டாள்; ஜடைப் பூவைச் சீர் செய்தாள். 'மர்மப் படங்களிலே வருகிறமாதிரி அத்தான் என் கையிலே ஒரு லெட்டரைக் கொடுத்திட்டு, ரீச்சர்ட் பர்ட்டன் போலே போயிட்டாரே?... விஷயம் ஒரே சஸ்பென்ஸாக இருக்கே?... நல்ல அத்தான்!..., மூண்டெழுந்த பதட்டத்தை மண்டையில் அடிக்க முயன்றது. நிதானமாகத் தலை நீட்டிய மனத்துணிச்சல்.

கும்மியை அனுபவித்தாயிற்று.

தோழி நிர்மலாவைக் காண கதவைச் சாத்திவிட்டு, பூவும் கையுமாகப் பின்கட்டுக்கு அடியெடுத்து வைத்தாள் மஞ்சுளா. அவளை எதிர்கொண்டு அழைப்பவள் போன்று நிர்மலாவே வந்து கொண்டிருக்கிறாள். சிநேகிதியைச் சந்தித்ததும் அவளது கதுப்புக் கன்னங்கள் ஆனந்தமாகக் குமிழ் பறித்தன!

" மஞ்சு, நீ வந்து நேரமாச்சா? "

" இல்லே நிர்மலா. சற்று முந்தித்தான் ரூமுக்கு வந்தேன். இன்னிக்கு 'ஹெட்லைன்ஸ்' மட்டுந்தான் கேட்க முடிஞ்சது. நீதான் பூராச் செய்திகளையும் ஒன்றுவிடாது கேட்டிருப்பாயே? நீ இத்தனை நாழிகையாக ஜெஸ்சூர் பகுதியிலேதான் சஞ்சரிச்சிட்டு இருந்திருப்பே?... இல்லையா, நிர்மலா? "

" யூ ஆர் ரைட்! நீ சொன்னது முக்காலும் உண்மைதான். உன்னைக் காட்டிலும் வேறே யாராலே உன்னோடை தோழியைப் புரிஞ்சுக்க இயலும், மஞ்சு? மெய்யாகவே என்னோடை கன்னி மனம் என் அத்தான் குமாரலிங்கத்தோடு ஜெஸ்சூர் பகுதியிலே தான் நடமாடிக்கிட்டு இருந்திச்சாக்கும்!... " என்று பரவசத்தோடு நிர்மலா கூறினாள். " நாம் டாக்காவை கைப்பற்றியானதும் தான் எனக்கு நல்ல மூச்சு வரும்! "

தோழியின் பரவசத்தில் மஞ்சுளாவுக்கும் கட்டாயம் பங்கு கொடுக்க வேண்டும்! "நமக்கு கிடைச்ச நல்ல சேதி தந்த சந்தோஷத்திலே நாம இரண்டுபேரும் வழியிலேயே நின்னு பேசிக்கிறு இருக்கோம். உட்புறம் இருந்தாலும், வழி என்ருல் வழிதானே?... பெண்களாகப் பிறந்த நாம் வழியை அடைக்கவே கூடாது என்கிறது நம்மோட தமிழ்ப்பண்பாடு!... அறைக்குப் போகலாம், வா, நிர்மலா" என்று கூப்பிட்டாள்.

கதவுகள் வழிவிட்டன.

எதிர்ப்பக்கமாக இன்னொரு கூடை நாற்காலியை இழுத்துப் போட்டாள் மஞ்சுளா, கழுத்துச் சங்கிலியின் கல்பதக்கம் இப்போது அடங்கியது. அவள் தன்னைத்தானே — தனக்குத் தானே ஒருதரம் உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டாள், 'அம்மா...... அப்பா......' என்று அவளுடைய இதயத்தின் இதயம் ஏன் இப்படி வீரிட்டலறுகிறது?

நிர்மலா மெய்மறந்த நிலையில் வீற்றிருந்தாள்.

மஞ்சுளா கண்களைத் துடைத்துக் கொண்டாள். தோழியின் நிலைமட்டுமல்ல, நினைவும் அவளுக்கு விளங்கியது. பாரதத் திருநாட்டின் பெயரையும் மானத்தையும் கட்டிக் காக்க, உயிரை பணயம் வைத்து வீரச் சமர்புரிந்து கொண்டிருக்கும் வீரன் குமாரலிங்கத்துக்கு நிர்மலா மட்டும்தாஞ கடமைபட்டிருந்தாள்? 'மஞ்சு, இந்தச் சண்டையிலே பாகிஸ்தானை சரணுகதி அடைய செஞ்சிடும் நம்ப பாரதம்! பங்களா தேஷும் வெகுவிரைவிலேயே விடுதலை பெற்றிடும்! இதுதான் நடக்கப் போகுது, தருமம் வென்றே தீரும் என்கிறதுதானே விதி...! பாரதத்தின் சரித்திரப் புகழ் கொண்ட அந்த வெற்றியைச் சொல்ல என் அன்பு அத்தான் குமாரலிங்கமும் நம்ப தமிழ் மண்ணை மிதிப்பாங்க. அப்போது என்னோட ஆசை அத்தானை உனக்கு அறிமுகப் படுத்தி வைப்பேனுக்கும்' என்ருளே தோழி நிர்மலா? — ஆகா நிர்மலாவுக்குத்தான் அவள் உயிர் அத்தான்பால் எவ்வளவு உயிர்!... மஞ்சுளா சுயஉணர்வினைக் கைக்கொண்டு ஏறிட்டு நோக்கினாள்.

நிர்மலாவின் மலர்விழிகளினின்றும் கண்ணீர் மாலை நீண்டது.

மஞ்சுளா அந்தக் கண்ணீரை ஆதரவுடன் துடைத்தாள்.

நிர்மலாவின் மேனி புல்லரித்திருக்க வேண்டும். " மஞ்சு! " என்றாள். அன்பின் நன்றி குரல் கொடுத்தது. " மற்றவங்க கண்ணீரைத் துடைக்கிற பக்குவமும் மனமும் கொண்டவள் நீ, ஆனா, உன் கண்ணீரைத் துடைக்கிறதுக்கு உன்னோட அம்மாவும் அப்பாவும் எப்போதுதான் மனமும் பகுவமும் பெறப் போறாங்களோ தெரியலையே, மஞ்சு? " பரிவுடன் வினவினாள்.

" அப்பாவும் அம்மாவும் சீக்கிரம் ஒன்று சேர்ந்தால்தான் நிம்மதி. நாம் என்னத்தைக் கண்டோம்? அந்த ரகசியம் ஆண்டவனுக்கும் விதிக்கும்தான் புரியும் போலே? இப்போது கூட வழியிலே தரிசனம் தந்த பிள்ளையாரப்பனிடம் என்னுடைய அந்த மாமூலான பிரார்த்தனையை ரிமைண்ட் பண்ணிட்டுத் தான் வந்தேன்!... " என்றாள் மஞ்சுளா. அவள் தொண்டை கம்மியது. பேச்சை வேறு திசைக்குத் திருப்ப எண்ணினாள் அவள். " நிர்மலா, உன் அத்தானை வரவேற்க நீ இப்போதிருந்தே ஏற்பாடு செய்யத் தொடங்கலாம்! நீ கொடுத்துவச்ச பெண். வீர பாரதத் தாயின் வீரத்திருமகனை நீ அடையப் போகிறாய்!... உன்னோட அன்பு அத்தானின் வெற்றிப் பங்குக்கு என்னுடைய வாழ்த்துதல்களையும் உன் கையிலே காணிக்கை செலுத்தக் கடமைப்பட்டவள் நான்!... சரிதானே தோழிப் பெண்ணே? " என்றாள்.

" செர்ட்டன்லி !... நிச்சயமாக ! " என்று மனம் விட்டுச் சிரித்தாள் நிர்மலா. பூங்கரங்கள் சேலையின் முன் பகுதியைத் தழுவின.

மஞ்சுளா வாய் விட்டுச் சிரித்தாள் ; " அம்மாவுக்குச் செய்தி தெரியுமில்லையா ? " என்று கேட்டாள்.

" ஓ ! " என்றாள் நிர்மலா. அவளது களை பொருந்திய முக விலாசம் கறுக்கத் தொடங்கியது. " இந்நேரம் அப்பா இருந்

திருக்க வேணும் ; என் அத்தானுக்குக் கிடைச்சிட்டிருக்கிற வெற்றிப் பங்கைச் சொல்லிச் சொல்லி, வானத்துக்கும் பூமிக்கு மாகக் குதிச்சுக்கிண்ணு இருப்பாங்க ! " என்று தழுதழுத்த குரலில் தெரிவித்தாள் அவள்.

" விதி பொல்லாதது, நிர்மலா ! "

" விதி மட்டுமல்ல, பாசமும் பொல்லாததுதான், மஞ்சு ! "

" வாஸ்தவம்தான், நிர்மலா ! " என்று ஆமோதித்தாள் மஞ்சுளா. தாமரைப் பூக்கள் இரண்டும் தளும்பித் தவித்தன, மேலண்டைச் சுவரிலே 'காட்சி' கொடுத்துக் கொண்டேயிருந்த — தம்பதி சமேதராமக் காட்சி கொடுத்துக் கொண்டேயிருந்த மீனாட்சி - சுந்தரேசன் படத்தை — நிழற் படத்தை எவ்வளவு நேரம்தான் பார்த்துக் கொண்டிருப்பாள், பாவம் ; — 'அ.ம்.மா ; ...அ...ப்...பா !' எதையெதை எல்லாமோ நினைவு கூர்ந்தாள் மஞ்சுளா! கூடிப் பிடித்து விளையாடும் சிறுமியாக அவள் உள் ளம் ஆடியது. நல்ல ஆட்டம், நல்ல விளையாட்டு ! வாழ்க்கை ஒரு விளையாட்டாம் ! — எங்கள் பதிப்பகத்திலே வெளிப்படுத்தப் பட்டிருக்கிற ஒரு நாவலில் இப்படி ஒரு கதாசிரியர் சொல்லி யிருக்கிறார் ! — ஊஹூம், நான் நம்பமாட்டேன் நம்பவே மாட் டேன் !... வாழ்க்கை ஒரு சோதனை — போராட்டம் — தண்டனை யுங் கூட !... ஆமாம் !

" மஞ்சு ! "

மஞ்சுளா திடுக்கிட்டு விழித்தாள். யார் அவர் தோளைத் தொட்டதாம் ? 'ஓ... என்ன, நிர்மலா ?" என்று தடுமாறினாள்.

கை கொட்டிச் சிரித்தாள் நிர்மலா. " உன் தோளைத் தொட்டதும், ஏன் அப்படித் திடுக்கிட்டே மஞ்சு ?... முதலிலே உன் அழகான நெற்றியிலே முத்தம் கொடுத்துக்கிணு இருக் கிற வேர்வை முத்துக்களைத் துடைச்சிக்க. அப்பாலே நாம் பேசலாம் ! " என்று விஷமமாகப் புன்னகை காட்டினாள் நிர்மலா. பிறகு, "மஞ்சு, இந்த டைரி எழுபத்திரண்டாம் வரு

ஷத்திய புது டைரியா, என்ன ?'' என்று வினவினுள். மேஜை மீதிருந்த மஞ்சுளாவின் ரோஜா வண்ண நாட்குறிப்பு அவள் கைக்குத் தாவியிருந்தது அப்போது.

மஞ்சுளா அந்த டைரியைப் பார்த்தாள், ''அது பழசு, நிர்மலா !'' என்றுள். சிரிப்பை அடக்க முடியவில்லை அவளால்,

''ப்பூ, இவ்வளவுதாஞ ?'' என்று உதட்டைப் பிதுக்கியவளாக, அந்த ரோஜா நிற டைரியை மேஜை மீது போட்டாள் நிர்மலா. ஆனுல், அது மேஜையில் விழுவதற்கு மறந்து 'பொத்' தென்று தரையில் விழுந்து வைத்தது, அத்துடன் முடிந்ததா கதை ? டைரி விழுந்த அவசரத்திலே, அவனுள்ளே கண் வளர்ந்து கொண்டிருந்த 'அந்தக் கடிதம்' வேரு இப்போது சமய சந்தர்ப்பம் தெரியாமல் முந்திரிக் கொட்டையாகத் தலையை நீட்டித் தொலேக்க வேண்டும் ? நிர்மலாவின் பாம்புக் கண்களினின்றும் அது தப்பி விட முடியுமா ? ''மஞ்சு... மஞ்சு !... இந்த லெட்டர் உன்னேட அத்தான் திருவாளர் ஞான சேகர் அவர்களிடமிருந்து வந்திருக்கிற காதல் கடிதம் தானே ?... எப்படி என் ஆருடம் ?'' என்று விளையாட்டுச் சிறுமியென நகை புரிந்த வண்ணம், எடுத்த அந்தக் கடிதத்தை உரியவளிடம் கொடுத்தாள் தோழி நிர்மலா.

''என் ஆருயிர்த் தோழி நிர்மலாவோட கெட்டி யாருக்குத் தான் வரும் ?... ஆஞ, அவளோட ஆருடத்தைப் பற்றி யான் ஒன்றும் அறியேன் பராபரமே !'' என்று சிரித்துக் கொண்டே கைகளை அகல விரித்து அழகு காட்டினுள் மஞ்சுளா.

நிர்மலாவுக்கு இருப்புக் கொள்ளவில்லை. எழுந்து மஞ்சுளாவின் சுருளலை படிந்திட்ட கூந்தலைக் கோதி விட்டபடி, ''என் ஆருடத்தைப் பற்றி நீ ஒண்ணும் அறிய வேண்டாம். ஆஞ, நான் இப்போது சொன்ன ஆருடம் சரியா, தப்பான்னு மட்டும் நீ சொல்லி விடு, போதும் ! நீ இப்போது கையிலே வச்சிருக்கிற அந்த லெட்டரிலே உன்னுடைய விலாசம் மட்டும்தான் இருக்

காக்கும். மற்றப்படி, யார் அந்தத் தபாலை எழுதினது என்பதற்கான தடயம் எதுவுமே இல்லையாக்கும், ஆனாலும், நான் சொல்கிறேன், அந்தக் கடிதம் உன் அன்பு அத்தான் ஞான சேகரிடமிருந்து உனக்கு வந்திருக்கின்ற காதல் கடிதம் என்று! இப்போது சொல், என் ஊகம் சரியா, இல்லையா என்று?..." என்று கெஞ்சினாள் நர்மலா.

கூடை நாற்காலியில் பாங்குடன் சாய்ந்தவாறு நிர்மலாவை அண்ணாந்து நோக்கினாள் மஞ்சுளா. "உன் ஊகம் செம்பாதி சரி, அடி! என் அன்பு அத்தான் மிஸ்டர் ஞானசேகர் கடிதம் தான்! ஆனால்... ஆனால், அது காதல் கடிதமா, காதல் இல்லாத கடிதமா என்கிற துப்பு எனக்குத் தெரியவே தெரியாது, நிர்மலா. ஏன் தெரியுமோ? நான் இந்தக் கடிதத்தை இன்னமும் பிரிக்கவே இல்லை!..." என்றாள்.

"ஓஹோ! அப்படியா சங்கதி?... ஆல்ரைட்! நான் பூஜை வேளைக் கரடியாக வேஷம் போடக் கூடாது! நான் புறப்படுகிறேன். முதலில் நீ உன் அத்தான் லெட்டரை ஆற அமர வாசித்துப் பார், மஞ்சு!..." என்று உரைத்து விட்டு, சடுதியில் அங்கிருந்து நகர்ந்து விட்டாள் நிர்மலா.

வேண்டுமென்றே தனிமையில் விடப்பட்டது போன்ற தவிப்பை உணர்ந்து தவிக்கத் தொடங்கினாள் மஞ்சுளா. கைப்பிடிக் கடிதத்தை முன்னும் பின்னும் புரட்டினாள். உள்ளம் துடிக்க, உதடுகள் துடித்தன. அத்தான் ஞானசேகரனும் அவன் அறிமுகம் செய்து வைத்த தமிழரசியும் அவளுக்குரிய மன மேடையில் அழகு காட்டினர். கலவரமும் குழப்பமும் மனோ நிலையுடன் தோன்றிய அவளுக்கு அந்தக் கடிதம் தேடி வந்த மாய விதி போலப் புதிர் போட்டது. புதிர் ஒருநாள் விடுபட்டுத்தானே ஆக வேண்டும்? அவளுக்கே உரித்தான மன வைராக்கியத்தை ஆட்படுத்திக் கொண்டவளாக, அந்தக் கடிதத்தின் உறையைக் கிழித்தாள் அவள்.

இதோ ஞானசேகர் பேசத் தொடங்குகிறான்!

# 3, ஞானசேகரன்

ஞானசேகரனா இத்தனை நேரமாகப் பேசினான் ?.. இல்லை ! அவனுடைய இதயம் அல்லவா பேசிக் கொண்டிருந்தது !

அந்தக் கடிதத்தை நான்காக மடித்து டைரியில் வைத்து விட்டு, எழுந்தாள் மஞ்சுளா. மனம் சிலந்தியாகி எண்ணவேலை பின்னத் தலைப்பட்டது. அவள் உள்ளம் எதிர்காலத்தைப் பற்றியும் சிந்தித்துப் பார்க்க வேண்டிய நிர்ப்பந்தம் இப்போதும் ஏற்பட்டிருந்ததை அறிந்துதான் இருந்தாள். இப்படிப்பட்ட சிந்தனையில், கூட்டிற்குள் முடங்கிக் கிடக்கும் பூஞ்சிட்டாகத் தவித்து மறுகிய நாட்கள் எத்தனை எத்தனையோ வந்து போனதும் உண்டு. அம்மாதிரி நேரங்களிலே, முதல் நினைவாக, அம்மா—அப்பா பிரச்சினைகளும் அடுத்த நினைவாக, அத்தான் ஞானசேகரனின் நச்சரிப்பும் அவளைப் பாடாய்ப் படுத்தி விடும்.

ஆனால், இப்பொழுதோ ?—

மஞ்சுளாவுக்கு இசையோ, பேச்சோ வேண்டாதிருந்தது.

எங்கோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த அவள் கண்களை மூடி மூடித் திறந்தாள். அப்போதும் கூடவா அப்பா - அம்மாவின் திருமணப் புகைப்படம் பார்வைக்கு இலக்காக வேண்டும் ? இந்தப் படத்திலே இருக்கிற மாதிரி அப்பாவும் அம்மாவும் இனி எப்போதுதான் 'ஜோடி'யாக இணைந்து காட்சியளிக்கப் போகின்றார்களோ ?

தன் கட்டில் சிட்டுக்குருவி ஒன்று கிறீச்சிட்டது. மஞ்சுளாவின் சித்தம் திசைமாறியது. தென்புறம் திரும்பினாள். அவளுடைய விழி விரிப்பில் அவளது நாட்குறிப்பு பட்டது. உன்னிப்பாக நோக்கினாள். ஞானசேகரனின் கடிதத்தின் சுமையைத்

தாளமாட்டாதது போல, அந்த டைரி பிரிந்து கிடந்தது. அதில் எழுதப்பட்டிருந்த வரிகளை அவளால் மறந்துவிட முடியவில்லை.

விடிந்தால் தீபாவளி. இரவு, தோழி நிர்மலா விடை பெற்றுச் சென்றதும், பதிப்பகத்திலிருந்து கொண்டு வந்திருந்த நாவலொன்றைத் துணைக்கு இருத்திக் கொண்டிருந்த நேரம். சென்ற தீபாவளி நினைவுக்கு வந்தது சாமான்யமாகவா மீனாட்சியும் சுந்தரேசனும் தீபாவளியைக் கொண்டாட மனம் ஒப்பினார்கள்? விதரணை புரிந்த நாள் தொட்டு நிகழ்ந்த நடப்புக்களை நினைவுகூர்ந்தாள் அவள். அப்பா முன் கோபி; அம்மாவோ படுவீம்பு! — பின்னர், தாம் பத்தியத்தில் முரண் உலவத் தொடங்கியதில் வியப்பு ஏது? தாய் தந்தையரின் மன முறிவுச் சூழலில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கையில்தான், "மஞ்சு!" என்று அன்பு சொட்ட வந்து நின்றான் ஞானசேகரன்.

"என்னங்க அத்தான் அது? பார்சல் மாதிரி இருக்கே?" என்று விசாரித்தாள்.

அவளுடைய கண்டுபிடிப்பு சரி என்கிற மாதிரியாக அவன் தலையை ஆட்டிக் கொண்டே, "முதலிலே நீ என்னோடு காரில் எங்க பங்களாவுக்குப் புறப்படு. இந்தத் தீபாவளியை யாச்சும் அண்ணாமலைபுரத்தில் கொண்டாடலாம் நீ இது என் இஷ்டம் மாத்திரம் இல்லே. உன் மாமா மாமியோட இஷ்டமும் கூடத் தான்!" என்று வேண்டினான்,

ஆனால், அவளோ "அத்தான், அங்களோட மாசுமருவற்ற அன்புக்கு ரொம்ப ரொம்ப நன்றிங்க. வழக்கம் போல நீங்கள் இந்தத் தடவையும் என்னை மன்னிக்க வேணும். அம்மாவையும் அப்பாவையும் விட்டுப் பிரிஞ்சிருக்கிற நேரம் இது. இந்தச் சிதம்பர ரகசியம் உங்களுக்குத் தெரியும். ஆகச்சே, இந்தச் சந்தர்ப்பத்திலே என்னோட இருப்பிடத்தின் படியைத் தாண்ட மாட்டேனுங்க, அத்தான்! என்னைக் கட்டாயப்படுத்தி உங்க

பொன்னுன காலத்தை வீணுக்கிக் கிட வேண்டாங்க!" என்றுள் கண்டிப்போடு.

"நீ சொன்னுல் சொன்னதுதான்!... ம்... புரியாமல் இல்லே. போகட்டும்; உனக்காக நான் ஆசையோடு எடுத்தாந்த இந்தப் பட்டுச் சேலே, சோளித் துண்டையாச்சும் மறுதலிக்காமல் ஏற்றுக்கொள்."

மஞ்சுளா மறுபடியும் புதிர்ப்புன்னகையுடன் அந்தந் தீபாவளிப் பரிசுகளேயும் நிராகரித்து விட்டாள். "என் கல்யாணம் 'ஸெட்டில்' ஆகிறதுக்கு முந்தி இம்மாதிரியான எந்தப் பரிசைசையும் எந்த இடத்திலேயிருந்தும் அடைகிறதுக்கு நான் தயாராக இல்லீங்க, அத்தான்!" என்றுள்.

ஞானசேகரன் கண்கலங்க விடைபெற்றுன், அந்த நாட் குறிப்பு என்றென்றும் சொல்லிக் கொண்டிருக்கும்!

ஞானசேகரன் ஏற்றி வைத்த சுமையை அவள் இறக்கியாக வேண்டாமா? — வேண்டும்!

என்னவோ நினைவில்; தூக்கத்தில் நடப்பவள் போன்று நடந்த அவள், 'டக்' கென்று நின்று கண் திறந்தால், மற்றுமொரு புகைப்படம் தென்படுகிறது! மஞ்சுளாவும் ஞானசேகரனும் பிள்ளேப் பிராயத்து இளஞ்சிட்டுக்களாகத் திகழ்ந்த அப் படத்தையே வைத்த கண் எடுக்காமல் பார்த்தாள் அவள், 'அத்தான், நாம ரெண்டு பேரும் இந்தப் போட்டாவிலே இருக்கிறதாட்டம் எப்பவுமே சின்னஞ் சிறு பிள்ளேகளாகவே இருந்திருக்கக் கூடாதா?... ஐயோ, தெய்வமே!...' என்று ஏக்கத்துடன் அவள் தன்னுள் சொல்லிக் கொண்டாள்.

காலம் ஒரு செப்படி வித்தைக்காரன் போல ஒரே அந்தஸ்திலிருந்த ஞானசேகரனின் குடும்பமும் மஞ்சுளாவின் குடும்பமும் இப்படித் தினசமாறிப் பிரியச் செய்தது. தஞ்சாவூர் மானம்புச் சாவடியில் சோடா கம்பெனி வைத்து வயிறு வளர்த்துக் கொண்டிருந்த ஞானசேகரனின் தந்தையான ஆனந்த

ரங்கத்துக்கு இருந்திருந்தாற்போல எங்கிருந்துதான் 'புதையல்' கிடைத்ததோ தெரியவில்லை! கண் மூடிக் கண் திறப்பதற்குள்' அவர் திடீர்ப் பணக்காரராகி விட்டார், பட்டணம் போய்ச் சேர்ந்து விட்டார்.

நாட்கள் ஆமையாக நகர்ந்தன, சுந்தரேசனைப் பொறுத்த அளவில். மீனாட்சியின் தமையனான ஆனந்தரங்கத்திடமிருந்து தன் மைத்துனனான சுந்தரேசனுக்கு அதிசய விதியைப் போன்று ஒருநாள் கடிதமொன்று வந்தது. அக்கடிதத்தில், தங்கையைக் குடும்ப சகிதம் சென்னைப்பட்டணத்துக்கு வந்து போகும்படி கேட்டுக் கொண்டிருந்தார் ஆனந்தரங்கம். பழக் கடை வியாபாரம் போட்டியின் விளைவாக மந்தம் தட்டிப் போயிருந்ததால், மனம் குமைந்து சுந்தரேசன் வருந்திக் கொண்டிருந்த நேரம் அது. மீனாட்சிக்குப் பட்டணத்திற்குப் புறப்பட உள்ளூர ஆசை. ஆனாலும், நலிந்து மெலிந்திருக்கும் நேரத்தில் தாங்கள் அங்கே செல்வது அவ்வளவு உசிதமாகப் படவில்லை சுந்தரேசனுக்கு, கடைசியில் வழக்கம் போலவே அன்றும் கணவனுக்கும் மனைவிக்கும் இடையே பூசல் பூதமாகக் கிளம்பியது. வெற்றி மீனாட்சிக்குத்தான். அந்த வெற்றிக்கு ஆதார சுருதியாக அமைந்தவள் சிறுமி மஞ்சுளா! – "என் அத்தானை நான் பார்த்தால்தான் மத்தியானம் சாப்பிடுவேன். என்னோட அத்தான் ஞானசேகர் என் கண்ணுக்குள்ளவே நிற்குதாக்கும். பாவம் எத்தனை நேரம்தான் அது நின்னுகிட்டிருக்கும்? கால் வலிக்காதாக்கும்?" என்று வாதம் செய்து, பிடிவாதம் செய்தாள் அவள்.

சுந்தரேசனின் குடும்பம் ரெயிலேறிற்று.

"நாளைப் பின்னைக்குக் கொள்வினை, கொடுப்பினை வச்சிக்க வேண்டியவங்க நாம. உன் அண்ணன் போட்ட தபாலுக்கு மதிப்புவச்சுப் போகாட்டி, பணக்காரராகிட்ட அவர் நம்ப பேரிலே சடனை கொள்வாரே?" என்றார் சுந்தரேசன், மனைவியின் பேச்சுக்கு அனுசரித்தவண்ணம்.

எழும்பூர் வந்ததும், அக்கம்பக்கத்தில் ஆனந்தரங்கம் கொடுத்திருந்த முகவரியை விசாரித்தார் சுந்தரேசன்.

"குதிரைப் பந்தயத்தில் லட்சாதிபதியாகிட்ட அந்த மனுசனைக் கேட்கிறீயாப்பா? அவர் இந்தப் பக்கத்திலே சிந்தாதிரிப் பேட்டையிலேதான் வசிக்கிறார்" என்றார்கள்,

பெரிய மாடி வீட்டின் வாசலிலே பிஸ்கட் தின்றுகொண்டிருந்தான் சிறுவன் ஞானசேகரன்.

அன்பு அத்தானைக் கண்டதுதான் தாமதம், சிறுமி மஞ்சுளாவுக்குக் குதூகலம் தலைகால் புரியவில்லை. கழிந்த ஒரு வருஷமாக அடக்கிப் பத்திரமாகப் பாதுகாத்துவந்த அத்தனை பாசத்தையும் நேசத்தையும் ஒரே சொல்லில் வடித்து, "அத்தான்!" என்று ஆனந்தம் மேலிட அழைத்துக்கொண்டே அவனை நோக்கிப் பசுங்கன்றென ஓடினாள் சிறுமி.

ஆனால் வெயிலில் பட்டுச் சட்டையும் நிக்கரும் பளபளக்க நின்ற ஞானசேகரனோ பிஸ்கட்டைச் சுவைப்பதிலேயே குறியாக இருந்தான்.

மஞ்சுளாவின் சிவந்த கன்னங்கள் கறுத்தன. பால் வதனம் சுண்டிப் போயிற்று. "ஏ, அத்தான்! உன் ஆசைப் பெண்டாட்டி உன்னைத் தேடி வந்திருக்கேன். 'வா'ன்னு கூடச் சொல்லாம, அப்படியே நின்னுக்கிட்டிருக்கீயே?" என்று அழுகையும் ஆத்திரமுமாகக் கேட்டாள்.

"ஏ, மஞ்சுக்குட்டி! என்ன பிதற்றுறே? நீ என் பெண்டாட்டியா? யார் சொன்னது? எங்க பங்களாவாட்டம் உனக்கும் பங்களா இருக்குதா? இல்லை தானே, பின்னே நீ எப்படி எனக்கு பெண்டாட்டியாக வரமுடியுமாம்? சும்மா பகற்கனவு காணாதே! ஆமா, சொல்லிட்டேன்" என்று எகத்தாளமாகவும் எக்காளமாகவும் சாடினான் சின்னப் பையன் ஞானசேகரன்.

அவ்வளவுதான், ரோஷம் வந்துவிட்டது சிறுமி மஞ்சுளாவுக்கு. ஏதோ ஒரு வைராக்கியத்தோடு தன் மாமன் மைந்தனை

ஒரு முறை முறைத்துப் பார்த்துவிட்டு, பிறகு தன் பெற்றோர்களை நெருங்கினாள். "அப்பா, நமக்கு மட்டும் இதுமாதிரி பங்களா ஏன் இல்லே?" என்று கேட்டாள்.

"நாம ஏழைங்க, மஞ்சு!"

"அத்தானுக்கு மட்டும் இத்தனை பெரிய பங்களா இருக்குதே?"

"அவங்க பணக்காரங்க"

"அப்படின்னு, நாம மாத்திரம் அவங்களைப் போல ஏன் பணக்காரங்களா இருக்கலே?"

"நம்ப அதிர்ஷ்டம் அவ்வளவுதான், அதனாலேதான் ஏழைகளாகவே நாம் நிற்கிறோம், மஞ்சு! கடவுளுக்கு இன்னமும் இரக்கம் உண்டாகல்லேம்மா!"

"அப்படிங்களா அப்பா? உலகத்திலே ஒருத்தரை பணக்காரராக்வும், இன்னொருத்தரை ஏழையாகவும் ஆக்கி விளையாடுற அந்தக் கடவுளையா நான் இத்தனை நாளும் கும்பிட்டுக்கிட்டு வந்தேன்? சரி, சரி, அப்பா அம்மா! வாங்க நம்ப ஊருக்கே திரும்பிப் போயிடலாம், எனக்கு புத்தி வந்தாச்சு!" என்று செருமி அழுதவாறு, பெற்றோர்களின் கைகளைப் பற்றிப் பரபரவென்று இழுத்தாள் மஞ்சுளா.

அவர்களும் கண்கலங்கி அங்கிருந்து புறப்பட ஆயத்தப்பட்டார்கள் இக்காட்சியைக் கண்ட சிறுவன் ஞானசேகரன் வெலவெலத்துப் போய்விட்டான். அழுகை பீறிட்டது. மஞ்சுளாவை நோக்கி ஓடி, அவளது பிஞ்சுக் கைகளைப் பரிவுடன் பற்றிக் கொண்டான். "எங்க வீட்டுக்கு வந்துட்டு, கோபமாத் திரும்பலாமா மஞ்சு?... வா, உள்ளே! நீ வந்தால்தான் அத்தையும் அத்தை புருஷனும் வருவாங்க!" என்று கெஞ்சினான்.

மஞ்சுளா திமிறிக் கொண்டு அவன் பிடியினின்றும் விடு தலை பெற்ருள். " நான் தான் உன் பெண்டாட்டி இல்லையே? பின்னே எதுக்காக என் கையைப் பிடிச்சியாம்? " என்று வீராவேசத்தோடு மடக்கினுள்.

" இது தெரியலையா? அடி, மச்கு! என் அத்தை மகள் கையைப் பிடிக்காமல் பின்னே வேறே யாரோட கையை நான் பிடிக்கிறதாம்? " என்று கேட்டு விட்டுக் கைகொட்டிச் சிரித் தான் அவன். தான் சிரிப்பதைக் கண்டு வழக்கம் போல அவ ளும் சிரித்துவிடுவாளென்று மனப்பால் குடித்த அப் பிஞ்சு மனம் ஏமாற்றமடைந்தது. உடனே அவளுடைய அடிவயிற்றில் பூவிரல் பதித்துச் சிரிப்பூட்டத் தொடங்கினுன். மஞ்சுளாவால் அதற்கு மேல் சிரிக்காமல் இருக்க முடியவில்லை.

" மஞ்சு, இந்தா பிஸ்கட்!"

" எனக்கு வேணும்! அது எச்சில் ரொட்டி! "

" அப்போவெல்லாம் நான் சாப்பிட்டதை நீயும் சாப்பிடு வியே மஞ்சு? "

" இப்போதான் நான் உன்னேட பெண்டாட்டியாக ஆக முடியாதின்னு ஆயிடுச்சே? "

" ஓ, அப்படியா? இந்தா, புது ரொட்டி!"

சிறுமி மஞ்சுளா ரொட்டியை ஏற்ருள். " அத்தான்' இப்போ நடந்த கதையை எப்போதும் நீ மறந்திடாதே! நானும் மறந்திடமாட்டேன்! " என்று முழங்கினுள்! ஓர் உறுதிப் போடும் வைராக்கியப் பண்பும் அடிநர்த்தனமிட்டன!

காலடியில் தவழ்ந்த பூனைக் குட்டியின் ஸ்பரிசம் பட்டதும், தன் உணர்வு எய்தினுள் குமாரி மஞ்சுளா. பொங்கித் தளும்பிய கண்ணீர் வெள்ளத்தோடு மீண்டும் அந்தப் புகைப்படத்தைப் பார்த்து விட்டுத் திசைமறுகினபோது, அவளுடைய கண்ணீர்த் துளிகள் அந்தக் கடிதத்தின் மீது — ஞானசேகரனின் அந்தக்

கடிதத்தின் மீது சிதறி விழுந்தன. 'அத்தான்! நீங்க திரும்பத் திரும்பச் சோதிக்கலாமா?' மனம் விம்மியது. மனச்சாட்சி விம்மியது. கண்களைத் துடைத்துக் கொண்டாள் அவள். ஆனால், அந்தக் கடிதத்தின் மீது சிதறியிருந்த அந்தக் கண்ணீர்த் துளிகளை யார்தான் துடைப்பதாம்?...

ஆழி தழுவி வரும் காற்று அணைந்தால் ஆரோக்கியமாக இருக்கக் கூடும். சாளரத்தின் ஒரு கதவைத் திறந்தாள் அவள், வளர்ந்திருந்த வண்ண நிலாவை அனுபவித்தது பெண் உள்ளம்,

மணி ஒன்பது - பத்து, சாப்பிட்டதாகப் பேர் பண்ணி முடிந்தது, கொட்டாவி புறப்பட்டது,

நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்த மஞ்சுளா, தயாராகக் காத்திருந்த வெள்ளைத் தாளில், "அன்பு அத்தான் அவர்களுக்கு!" என்று எழுதத் தொடங்கினாள்!...

## 4. கடிதங்கள் இரண்டு!

காலை மணி எட்டு! மஞ்சுளா இனி பதிப்பகத்திற்குப் பணி புரியப் புறப்பட்டு விடுவாள்! விடியற்காலையில் துயிலெழுந்தவளுக்கு, நிற்க நிலைக்க நேரம் இல்லை. கண்ணாடியின் நின்று, ஷிபான் சேலையும் நைலக்ஸ் சோளியும் ஜோடி சேர்ந்திருக்கின்றனவா என்று சோதித்துக் கொண்டாள்; 'ஓ, கே!' என்று முணுமுணுத்தவாறு கழுத்துச் சங்கிலியைச் சீர் செய்து கொண்டபோது அப்பா அம்மாவின் நினைவு மீண்டும் சிலிர்த்தது, பெற்றோர்களைச் சந்தித்துத் தன் திட்டத்தைச் செயற்படுத்த வேண்டியது முதல் அலுவல், நாளைப் பொழுது நல்ல பொழுதாக விடிய வேண்டும்!

அந்த ரோஜா நிற டைரி அவள் பார்வைக்கு இலக்கானது, உள்ளே அஞ்ஞாத வாசம் செய்த மாதிரி இருந்த அந்த இரண்டு கடிதங்களையும் மாறிமாறிப் பார்வையிட்டாள், ' அத்தான்! நீங்க என்னை மன்னிச்சே ஆகணுமுங்க! ' —மார்பகம் எம்பிப் புடைத்தது, 'இந்நேரம் என்னுடை எக்ஸ்பிரஸ லெட்டர் என் அன்பு அத்தான் கையிலே கிடைச்சிருக்கலாம்!' வலது கண் துடிக்கலாமோ?... கையில் கடிதங்கள் துடித்தன!...

அப்போது, அங்கே தோழி நிர்மலா வந்து நின்றாள்' '' மஞ்சு, நான் உன்னை 'மீட்' பண்ணுற போதெல்லாம் நீ லெட்டரும் கையுமாகவே காட்சியளிக்கிறெ, ஓ மறுபடியும் உன் அன்பு அத்தான் 'ரீமைண்டர்' அனுப்பிச்சுட்டாங்களா? '' என்று சிரித்தாள்,

'' அன்றைக்கு நீ ஆருடம் சொன்ன அதே லெட்டர்தான், நிர்மலா! '' என்றாள் மஞ்சுளா நிதானமான அமைதியோடு,

'' ஓஹோ, அப்படியா? இன்னொரு லெட்டர் தென்படுதே மஞ்சு? அது...?

'' அதுவா? அது நான் என் அன்பு அத்தானுக்கு அனுப்பின தபாலின் நகல்! ''

'' பேஷ், பேஷ்!... அப்படின்னு, உங்க கல்யாண விருந்து சாப்பாடு இந்தத் தை மாதத்திலேயே கிடைச்சிடும்னு சொல், அப்படித்தானே, மஞ்சு? ''

' தீர்க்கப்படாது இருக்கிற கேள்விகளுக்கே என்னாலே விடை சொல்ல முடியலே! இந்த நிலைமையிலே, நீ வேறே கேள்விக்கணைகளைத் தொடுத்துக்கினு இருக்கிறீயே? ஒரு அன்புக் கட்டளை இடப்போறேன், செய்வாயா நிர்மலா? ''

உன் அன்புக் கட்டளையைச் சிரமேல் தாங்குவது என்னுடை தலையாய கடமையாச்சே, மஞ்சு? '' — முறுவலில் விஷமத்தனமான அன்பு,

“ பேஷ், பேஷ் !... என்னுடைய தோழி நிர்மலா சமர்த்து யாருக்கு வருமாம் ?... இந்தா, இந்த இரண்டு தபால்களையும் நீ வாய்விட்டுப் படி ; உன் கேள்விகளுக்கான பதில்கள் கிடைச்சிடும் !” என்று அமைதியாகக் கூறி, தன்னிடமிருந்த இரு கடிதங்களையும் அருமைத் தோழி வசம் ஒப்படைத்தாள் மஞ்சுளா.

நிர்மலாவின் கைகளிலே அக்கடிதங்கள் தத்தளித்தன. “ இந்த லெட்டர்களை நான் படிக்கிறது நாகரீகமல்ல, மஞ்சு !” என்று அவள் தடுமாறினாள்.

“ நான் சொல்லித்தானே நீ படிக்கப் போகிறாய் !”

“ நிர்மலா, நமக்குள்ளே இனியும் ரகசியம் இருக்கக் கூடாதல்லவா ? ம்... முதலிலே என் அன்பு அத்தானுடைய லெட்டரை படி ! சாதாரண லெட்டர் இல்லே ! லவ் லெட்டர் !... ம்... பரவாயில்லே. படி, நிர்மலா !... நமது நாட்டின் எல்லைப் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட ராணுவ முகாம்களிலேயிருந்து உன் அன்பு அத்தான் மிஸ்டர் குமாரலிங்கம் உனக்கு ஆசையோட எழுதின எத்தனையோ காதல் கடிதங்களை நீயும்தான் படிச்சிருப்பாய் ! ஆனா, என் அன்பு அத்தான் மிஸ்டர் ஞானசேகரன் எழுதியிருக்கிற இந்தக் கடிதம் — இந்தக் காதல் கடிதம்தான் என் வரைக்கும் விதி !... இந்தப் புதிருக்கு நீ விடை காணவும் முடியும் !... ஆல்ரைட் ! நீ படி !” என்றாள் மஞ்சுளா. சலனத்தை வென்ற ஓர் அபூர்வ அமைதி அவள் குரலுக்கு எப்படித்தான் பக்குவப்பட்டதோ ? நெற்றிப் பொட்டுத் தளதளத்தது !

குனிந்த தலையை நிமிர்த்தப் பயந்தவள்போல் நிமிர்ந்தாள் மஞ்சுளாவிற்கு அவள் அன்பு அத்தான் எழுதிய அக்கடிதத்தை வாய்விட்டு நிதானமாகப் படிக்கத் தொடங்கினாள்.

“ பிரியமுள்ள அத்தை மகள் மஞ்சுளாவுக்கு,

உன்னுடைய காதலுக்காக இன்னமும் எத்தனை காலம் தவம் கிடப்பது ? இனியும் நீ என்னை சோதிப்பது அழகா ?

" என்க்காக நீ ! உனக்காக நான் ! " என்ற இந்த முடிவு இன்று நேற்று நிர்ணயம் செய்யப்பட்டது அல்லவே! அந்த உறவின் உரிமையோடுதான், நாம் இருவரும் இதுகாறும் சந்தித்தும் பழகியும் வந்திருக்கிறோம். இவ்வுண்மையின் நிலவரத்தை என் மாதிரி நீயும் உணர்ந்திருக்க வேண்டுமென்றே நான் எதிர்பார்க்கிறேன் ; நம்புகிறேன்.

இந்தத் தீபாவளிக்கு நான் உனக்காக ஆசையோடு வாங்கிவந்த புடவை—சோளியைக் கூட ஏதேதோ தர்க்கம் பேசித் தட்டிக் கழித்து, நிர்த்தாட்சண்யமாக நிராகரித்து விட்டாய் நீ! இன்னமும் அவை உனக்காகவே காத்திருக்கின்றன ; அவை என்றென்றும் உனக்கென்றே ,காத்துக் கொண்டும் இருக்கும் !...

பொழுது விடிந்து, பொழுது போனால், தஞ்சை மண்ணிலே நீயும் நானும் மணல் வீடு கட்டி, கணவன்—மனைவி விளையாட்டு விளையாடி மகிழ்வோமே, அந்தப் பொன்னான இனிய நாட்களை நீ மறந்து விட்டாயா ? அந்நாளிலே, தஞ்சாவூரிலே நீயும் நானும் ஒரு சமயம் போட்டோ எடுத்துக் கொண்டோமே, அந்தப் பசுமையான நிகழ்ச்சியை உன்னால் எப்படி மஞ்சு மறக்க முடியும் ?

சமீபத்தில ஒரு நாள் அண்ணா சமாதிக்கு அருகில் நாம் இருவரும் எதிர்பாராமல் சந்திக்க நேர்ந்தது. வழக்கம் போலவே அப்போதும் உன்னிடம் உன் முடிவைச் சொல்லும்படி நான் வேண்டினேன். நீயோ விதிபோலச் சிரித்தவாறு, "அத்தான், இன்னமும் நான் பங்களா வாங்கலேங்களே ? இந்நிலையிலே, ஏழை அபலையான நான், லட்சாதிபதியான உங்களைக் கணவனாக அடைவதற்கு எப்படிங்க நான் கனவு காண முடியும் ? " என்று புதிர் போட்டு விட்டு, உன் தோழிகளுடன் நீ நழுவி விட்டாய் !

இனிமேல் உனக்கு எதற்கடிப் பங்களா ? எனக்கிருக்கும் பங்களாக்கள் போதாதா ?

சதா சர்வ காலமும் என் நெஞ்சிலும் நினைவிலும் நீக்க மற விளையாடும் நீ விதியின் நாயகியாகி இனியும் விளையாட லாமா ?

புதிர் போட்டது போதும் மஞ்சு, புதிர் போட்டது போதும் !

உன்னைப் போலவே நானும் மதிக்கிற — மதிக்கக் கடமைப் பட்டிருக்கிற அந்தத் தமிழ்ச் சமுதாயப் பண்பாட்டின் பேரால் இறுதித் தடவையாக கேட்கிறேன்.

எனக்கு — என் காதலுக்கு — ஏன், நம் காதலுக்கு வழி பிறக்க வேண்டும், ஏன் தெரியுமா ? தை பிறக்கப் போகிறது !

பாப்பா கையில் ஹல்வாவை வைத்துக் கொண்டு, தான் மனத்தில் விரும்பிய முறுக்கின்மேல் குறி வைத்து, அந்தத் தின் பண்டம் கைக்குக் கிடைக்கும் வரையிலும் விம்பு செய்து அழுது அடம் பிடிக்கும்.

ஆனால் நான் பாப்பா அல்ல ! ஆனாலும் உன் நினைவில் பித்தனாய் அலைபவன் ! நம் ஜாதகங்கள் எப்போதோ பொருந்தி விட்டன, நம் மனங்கள் இனித்தான் பொருந்தப் போகின்ற னவா ?

நான் மட்டுமல்ல ? என்னைப் பெற்றவர்களும் உன் நல்ல முடிவுக்காகவே காத்திருக்கிறார்கள். உன் முடிவு நல்லதன மாக அமைந்து விட்டால், உன் தாய் தந்தையர் 'ராசி'யாகி, நம் கலியாணத்தை முன் நின்று நடத்தி வைப்பார்கள் !-இதற்கு நான் பொறுப்பு ! என் சாகசங்கள் வென்றே தீரும் !

நீ உன் தீர்ப்பைச் சொல்வதற்குள், நான் என்னுடைய தீர்ப்பினைச் சொல்லி விட வேண்டும் :

இந்த பிறவியிலே அடைந்தால் உன்னையே — என் கனவுக் கிளியான உன்னையே என் வாழ்க்கைத் துணையாக —

என் உயிரின் துணைவியாக அடைவது என்று நோன்பு மேற்கொண்டிருக்கிறேன். இவ்வுண்மையை மனிதாபிமானத்தோடு எண்ணிப் பார்.

மறந்துவிட மாட்டாயே என்னை ?

மறுத்துவிட மாட்டாயே என்னை ?

நல்ல தீர்ப்புச் சொல்லும் வாயல்லவா, அருமை மஞ்சு !...

ஓ... மை டியர் மஞ்சுளா !...

உன் அன்பு அத்தான்,

ஆ. ஞானசேகரன்

நிர்மலா வளை குலுங்க முகத்தை ஒத்திட்டுக் கொண்டு, ஆசுவாசப் பெரு மூச்சு விட்டவளாகத் தலையை நிமிர்த்திப் பார்த்தாள், பேசும் கண்களிலே நாணம் பேசியது. முறுவல் மாருமல் வீற்றிருந்த மஞ்சுளாவின் கம்பீரமான மௌனம், தான் ஆவலோடு எதிர்பார்க்கும் நல்ல சேதியையே — நல்ல தீர்ப்பையே மற்றொரு கடிதம் வழங்கியிருக்க வேண்டும் என்பதற்குச் சாட்சியம் போல அமைந்திருப்பதாகவே நிர்மலா உணர்ந்தாள். வரவழைத்துக் கொண்ட அமைதியோடு மறு கடிதத்தைப் பிரித்துப் படிக்கலானுள்.

அன்பு அத்தான் அவர்களுக்கு,

வணக்கம் பல,

காதலுக்கு—அதாவது, நீங்கள் என்பால் கொண்டிருப்பதாகக் குறிப்பிடுகிற அந்தக் காதலுக்கு ஒரு நினைவுச் சின்னமென அமைந்திருக்கும் உங்கள் அன்புக் கடிதத்தை வழக்கம் போலவே நிதானமாகப் படித்தேன். வழக்கத்திற்கு விரோதமாக, ரொம்பவும் கனமானதும் பெரியதுமான வார்த்தைகளை அங்கங்கே அள்ளி வீசியிருப்பதையும் என்னுல் உணர்ந்திட முடிந்தது.

நான் உங்களைச் சோதிக்கிறேனா?

இல்லை, இல்லவே இல்லை, அத்தான்!

உங்களைச் சோதிக்க நான் யார்?

என்னை மொய்க்கும் சோதனைகளைச் சமாளிக்கவே எனக்கு வழிவகை புரியவில்லை!

இந்நிலையிலே, நான் எப்படித் தங்களைச் சோதிக்க முடியும்?

ஆனால், ஓர் கசப்பான உண்மையை நீங்கள் இந்த நெருக்கடிக் கட்டத்தில் சிந்தித்தே ஆகவேண்டும்.

அன்பு அத்தான்!—என்னைப் பற்றின மட்டுக்கும், தாங்கள் என்றோ கொம்புத் தேனாக—எட்டாப் பழமாக ஆகிவிட்டீர்கள்; ஆக்கப்பட்டுவிட்டீர்கள் !

இன்னமும் விளங்க வில்லையா?

சரி; புதிரை இதோ, விடுவித்து விடுகிறேன்:

தஞ்சை மண்ணிலே அல்லும் பகலுமாக மணல் வீடு கட்டி புருஷன்—பெண்டாட்டி விளையாட்டு விளையாடினோம் நாம் இருவரும். காலம் நம்மைப் பிரித்தது. ஒரு நாள் உங்களது வீட்டாரின் அழைப்பின் பேரில் நான் என் பெற்றோருடன் உங்களைக் காண ஓடோடி வந்தேன். தஞ்சை மண்ணின் நிழலிலே என் விளையாட்டுத் தோழனாக மட்டுமல்லாது, அன்பு அத்தானாகவும் உறவு கண்டு, உரிமை கொண்டு பழகிய உங்களைச் சந்தித்து அளவளாவ எத்தனை மகிழ்ச்சியோடு நான் வந்தேன், தெரியுமா?

ஆனால், என் ஆசைக்கனவை ஒரு நொடியிலே பொடித்து விட்டீர்களே, அத்தான்?

பட்டணத்திலே உங்களது பங்களாவில் நின்றிருந்த நீங்கள், வீடு தேடி வந்தவளை 'வா' என்று கூடச் சொல்லாமல், நீங்கள் பாட்டுக்கு பிஸ்கட் தின்பதிலேயே கருத்தாக இருந்தீர்

கள் எனக்கு ஆத்திரமும் அழுகையுமாக வந்தது. உடனே பாவாடை சலசலக்க உங்களை நெருங்கி, "உன் பெண்டாட்டி வந்திருக்கேன். வான்னுகூடச் சொல்லமாட்டேங்கிறியே?" என்று கோபித்தேன் உங்களை.

அப்போது நீங்கள் என்ன சொன்னீர்கள்? என்று நினைவிருக்கிறதா, அத்தான்?—"எங்க பங்களா வாட்டம் உனக்கும் பங்களா இருக்குதா? இல்லைதானே? பின்னே, நீ எப்படி எனக்குப் பெண்டாட்டியாக ஆக முடியுமாம்? சும்மா பகல் கனவு காணுதே!... ஆமா, சொல்லிட்டேன்!..." என்று ஏசிய ஏச்சை நீங்கள் எப்படி மறந்திருக்க முடியும்? அந்த ஏச்சுப் பேச்சை நான் எங்ஙனம் மறப்பேன், அத்தான்? மறக்கக்கூடிய 'அபாய அறிவிப்'பா அது?

எனது பிஞ்சு நெஞ்சிலே விதி அன்றைக்கு ஏற்றிவைத்த அந்த 'டேஞ்சர் சிக்னலை'—அதே விதி இன்றைக்குத்தான் இதோ, இறக்கி வைக்கப் போகிறது!...

என் கனவும் மணல் வீடும் ஒன்றேதான்!

ஒரு முறை நாம் பரிமாறிக் கொண்ட ஒரு லைப்ரரி நாவலிலே 'காதல் என்பது புரட்சிக்கு மறுபெயர்' என்று சொல்லப் பட்டிருந்தது கண்டு நீங்கள் மிகவும் ரசித்தீர்கள் அல்லவா? அது உங்களுக்கு மிகப் பொருத்தமே. இலட்சாதிபதி வீட்டுத் திருக்குமாரனாகிய தாங்கள் என்னைக் காதலித்தது உண்மையிலேயே ஒரு புரட்சிதான்!

ஆனால், நீங்கள் சொல்லும் அந்தக் காதலை நான் எங்கே கண்டேன், அத்தான்?

நீங்கள் சொல்லுகிறமாதிரி எனக்குப் பங்களா வேண்டாம்; ஆனால் நிழலுக்கு அண்டி ஒண்டக் கேவலம் சாண் தரையாகிலும் எனக்கென்று சொந்தமாக இருக்கவேண்டாமா? இந்த இலட்சணத்திலே, உங்களுக்காகநான் கனவு கண்டால்,அதை விதி அனுமதிக்குமா? இல்லை, இந்தச் சமூகம்தான் அங்கீகரிக்

குமா? இவ்விஷயத்தில், தெய்வத்தின் நிலையென்ன வென்பதைப் பற்றி நான் ஏதும் அறியமாட்டேன். ஏனென்றால், தெய்வத்தை நான் சந்தித்ததில்லை!...

அத்தான்!—என் வரை 'காதல்' ஒரு ஏட்டுச் சுரைக்காய்! காதல் ஒரு ஹம்பக்!—காதல் என்பது ஒரு பொய் விளையாட்டு!

விஞ்ஞானத்தில், மாறுபட்ட இரு துருவங்கள் சந்திக்க முடியும்'—ஆனல், பொருளாதார விதிப்படி, பணக்கார மாமன் மகனும், ஏழை அத்தை மகளும் சந்திக்கவே முடியாது, மண மேடையிலே!

நீங்கள் சுட்டின மாதிரி, நான் முறுக்கு; வெறும் முறுக்கு! ஹல்வா எங்கே? முறுக்கு எங்கே?...

தொடக்கம் என்றால் அதற்கு ஒரு முடிவும் இருக்கவே செய்யும். இது விதி; விதியின் விதி. ஆகவே, இதோ, என் முடிவு!...

அன்பு அத்தான்! உங்களுக்கு நல்ல தீர்ப்பு வழங்கும் 'பாக்கியம்' எனக்கு இப்பிறப்பிலே கிடையாது! எனவே, என்னை—இந்த மஞ்சுளாவை மறந்துவிடுங்கள்! தயவு செய்து மறந்து விடுங்கள்!—பெரிய மனசு பண்ணி மறந்துவிடுங்கள்! உங்கள் விளையாட்டுத் தோழியை - உங்கள் அன்பு அத்தை மகளை நீங்கள் மன்னிக்காவிட்டால், பின் இந்த மண்ணிலே வேறு யார்தான் மன்னிப்பது?...

ஆனால் ஒன்று:

ஐந்து வயதிலே, அறியாப் பருவத்திலே தஞ்சையம்பதியிலே மணல் வீடு கட்டி புருஷன்—பெண்டாட்டி விளையாட்டு விளையாட எனக்கு விளையாட்டுத் தோழனாகக் கிட்டிய அந்த அத்தானை—அன்பு அத்தான் ஞானசேகரை ஏழேழு பிறவிக்கும் என்னால்மறக்கவே முடியாது!...

இப்படிக்கு,

எஸ். மஞ்சுளா

புயலில் சிக்கிய பூங்கொடியாகி, கண்களை ஏறிட்டு விழித்தாள் நிர்மலா, கண்ணீர் மாலை நீண்டது. மூச்சு வாங்கியது.

அதற்குள், மஞ்சுளா முந்திக்கொண்டாள். நிர்மலா, கடந்த நாலு நாளாக நாம் சரிவரப் பேசமுடியாமல் போயிடுச்சு. நாளைக்கு ஞாயிற்றுக் கிழமை. வட்டியும் முதலுமாகப் பேசுவோம். பேசறதுக்கு விஷயமா இல்லை?... நீ புறப்படு. எனக்கு வேலைக்குப் புறப்பட 'டைம்' ஆயிட்டுது! என்றாள், கண்ணீரும் கம்பலையுமாக!

பயங்கர அமைதி நிலவத் தொடங்கிய நேரத்தில், சைக்கிள் மணிச் சத்தம் கேட்டது. (டிசம்பர் மாதக் குலுக்கலுக்கான தமிழக அரசுப் பரிசுச் சீட்டைப் பெட்டியில் போட்டுவிட்டு, 'பாத் ரூம்' செல்லவிருந்த மஞ்சுளா, வாசலில் எட்டிப் பார்த்தாள். அஞ்சல் சேவகன் நின்றார்.

"யாருங்கம்மா மஞ்சுளா என்பது?... அவங்களுக்கு ஒரு எக்ஸ்பிரஸ் லெட்டர் வந்திருக்குதுங்க"!

"நான் தான் மஞ்சுளா!..."

## 5. பொருளாதாரத்தில் மேடு பள்ளம்

பதிப்பகத்தில் காலடி எடுத்துவைத்த குமாரி மஞ்சுளாவுக்கு எங்கிருந்து, எப்படித்தான் அத்தகைய புத்துணர்ச்சி பீறிட்டுப் பொங்குமோ, தெரியாது! எல்லையற்ற பேரெழில் எல்லை கண்ட மாதிரி, பெண்மையின் ஜீவகளை பொங்கி வழிந்திட, தனக்குரிய இருப்பிடத்தை அடைந்தாள் அவள். டம்பப் பை, காலைப் பத்திரிகை, ரவா உப்புமா பாக்கெட், குடை ஆகியவற்றை நாற்காலிக்கு அடியில் வைத்துவிட்டு நிமிர்ந்தாள்.

இடது கைவிரல் பிடியில் மூந்தானே நாணயமாக அடங்கியது. புத்தகத்தை வலது கை சமன் செய்தது,

அதோ, காந்தி மகாத்மா!...

மஞ்சுளா கையெடுத்துத் தொழுதாள். திசை மாறிய பார்வையில், ஹாலின் நாற்புறச் சுவர்களையும் அலங்கரித்த தலைவர்கள் நிழலாடினர். நாடு, இனம், மதம், மொழி, கட்சி போன்ற வேலிகளைத் தாண்டி நின்ற அத்தலைவர்களின் காலடியில் உலகம் நன்றியோடு சுழன்று கொண்டிருப்பதாக அவள் உணர்ந்தாள், பெருமையும் பெருமிதமும் பிடிபடவில்லை.

சுவர்க் கடிகாரம் பத்து அடிக்கிறது. மஞ்சுளாவின் கடமை உள்ளம் குறுகுறுக்கத் தொடங்கியது. நீண்ட கூடத்தைக் கண்ணோட்டமிட்டபடி, அவள் தன் ஆசனத்தில் அமர்ந்தாள்.

இனிமேல் அவள் சாதாரண மஞ்சுளா அல்லள்!— 'மகாத்மா பதிப்பகத்தின் லேடி டைப்பிஸ்ட் மஞ்சுளா வாக்கும்!

மருதாணி விரல்கள் இதோ, தட்டெழுத்துக்களில் விளையாடத் தொடங்கிவிட்டன!

முன் நெற்றியில் துளிர்த்திருந்த வேர்வையைத் துடைத்துக் கொண்டே முதுகைச் சற்றே நிமிர்த்தினாள் மஞ்சுளா, ஒன்றாகக் கலந்து கிடந்த அலுவலகக் கடிதத் தாள்களை வகைப்படுத்திவிட்டு, மேஜையைப் பார்த்தாள், இன்னும் ஒரேயொரு தபால்தான் பாக்கி. அதையும் டைப் செய்தால், இப்போதைக்கு இந்த 'செட்' பூர்த்தியாகிவிடும். காத்திருந்த கடிதத்தின் நகலைப் படித்தாள். நிர்வாகி இளங்கோவின் தமிழில் நயம் இருக்கும். அவளும் அதை நயந்ததுண்டு. இளங்கோ பதிப்பகத்தின் உரிமையாளரான திருவாளர் செந்தில் நாயகத்திற்குத் தூரத்து உறவுக் காரராம் இவர், கொள்வினை—கொடுப்பினைக்கான உறவு முறையாம். ஆனாலும், ஏழ்மை நிலை. ஏழ்மை மட்டும் குறுக்கிடாமல் இருந்திருந்தால், முதலாளியின் ஒரே

மகளோ இளங்கோ என்றைக்கோ திருமணம் புரிந்து கொண் டிருப்பாராம்! மிஞ்சியிருந்த நகல் பிரதியில் கண்பதித்தாள் அவள். புரட்சி எழுத்தாளர் அதிவீர ராமபாண்டின் எழுதிய 'காணுமற் போன காதல்' என்னும் நவீனத்தின் நான்காம் பதிப்புப் பொங்கல் பரிசாக வெளியிடப் பெறும் என்கிற தகவல் சிங்கப்பூர் வியாபாரிக்குச் செல்ல வேண்டும். அந்தக் கதையை அவளது ரசிக உள்ளம் அசைபோட்ட போது, ஒரு சிலிர்ப்புக் கிளர்ந்தெழத் தவறவில்லை.

கிளியோபாட்ரா அன்று லீவு போட்டிருக்கிருள் போலிருக் கிறது. ஸ்டெல்லாவும், நூருன்னிஸாவும் கருமமே கண்ணு யிருந்தார்கள். ஓ, மிஸ்டர் மாசிலாமணி வேலைக்கு வந்திருக் கிருர் !...

தொலைபேசி யாரையோ கூவிக் கூவி அழைக்கிறது!

மஞ்சுளாவுக்கு ஏனே திடீரென்று ஓர் அச்சம்—இனம் விளங்காத அச்சம் மனத்தின் உள்ளே கூண்டுப்புழுவாக நெளி யத் தொடங்கியிருந்தது, 'என்னுடை எக்ஸ்பிரஸ் லெட்டரை அத்தான் இந்நேரம் தாராளமாகப் படிச்சிருப்பாங்க. என் பேரிலே அத்தானுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்திருக்கும். அதற்கு நான் என்ன செய்யட்டும்?... ஒருவேளை, என்னை டெலிபோனில் அழைச்சு, என்னைச் கோபிச்சாலும் கோபிப் பாங்க! ஓ, பேஷாகக் கோபிக்கட்டுமே!... அவர் என்றென் றைக்கும் என் அன்பு அத்தான்தானே?... நினைவுகளைப் பூத் தொடுப்பதற்கான நேரம் காலம் மனத்திற்குத் தெரிவதில்லை தான். தன் உணர்வு விழிப்புப் பெற்றது, தொலை பேசியில் மாசிலாமணி உரையாடியதை அறிந்தபின், டைப் அடிக்கப் பட்ட தாள்களைச் சரிபார்ப்பதில் ஈடுபட்டாள் மஞ்சுளா. எல் லாம் ஒழுங்காகவே அமைந்திருந்தது கண்டு, அமைதி கனிந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. அவற்றை நிர்வாகியிடம் சேர்ப்பிக்க வேண்டும். எழுந்து, நிர்வாகியின் அறையை நோக்கி நடந்த போது, மாசிலாமணி எதிர்ப் பட்டதைக் கண்டு ஒதுங்கி நின்ருள்,

"மிஸ் மஞ்சுளா, நேற்றைக்குச் சாயந்திரம் நீங்க வீட்டுக்குப் புறப்பட்டுப் போனதுக்கப்புறம், பராசக்தி ஹவுஸிலிருந்து உங்களுக்கு 'ஃபோன் கால்' ஒண்ணு வந்திச்சுங்க. உங்களோடே மறுபடியும் 'காண்டாக்ட்' செய்யறதாகச் சொன்னாங்க" என்றான் மாசிலாமணி.

"சரிங்க," என்று புன்சிரிப்புடன் சொல்லிவிட்டு, நிர்வாகியின் அறைக் கதவைத் தள்ளினாள் மஞ்சுளா. அவள் திரும்பிய போது, அவள் கையில் ஒரு கற்றைக் காகிதங்கள் இருந்தன. எதிர்பாராமல் எதிர்ப்பட்ட பதிப்பகத்தின் சொந்தக்காரர் செந்தில் நாயகத்தை வணங்கினாள் அவள். அவர்தம் அன்பின் பாசத்தை அவள் மறக்கமாட்டாள்!

## டிபன் வேளை

"மஞ்சுளா!" என்ற அழைப்புக் குரல் இரட்டைச் சுருதியில் கேட்டது.

ஸ்டெல்லாவும், நூருன்னிஸாவும் சாப்பாட்டுக்குத் தயாராக நின்றார்கள். மஞ்சுளாவும் கூட்டுச் சேர்ந்து விட்டால், 'ஜமா' பூர்த்தி என்று அர்த்தம். இந்த முக்கூட்டுக் கைகூடி வருவதென்பது இலேசல்ல. நூருன்னிஸா ஏழை வீட்டுப் பெண். நோயாளிப் பெற்றோர்களைப் பராமரிப்பதற்காக அவள் அவ்வப்போது திருவல்லிக்கேணியே சதம் என்று இருந்து விடுவதும் உண்டு. ஸ்டெல்லாவுக்குத் தன் காதல் லீலைகள்தாம் பிரதானம். பதிப்பகச் சொந்தக்காரரின் நெருங்கிய நண்பரின் அருமைப் புதல்வி என்ற சலுகை வேறு. கிளியோபாட்ரா பர்ட்டி ஆகியிருக்கிறாளாம்! ஆகவே, அவள் இந்தச் சின்னஞ் சிறுசுகளோடு ஒட்டமாட்டாள்.

மஞ்சுளா உப்புமாப்பொட்டலத்துடன் எழுந்தாள்; ஹாலைக் கடந்தபோது, மாசிலாமணி அச்சுப் படிகளைத் திருத்துவதில் முனைந்திருப்பதை அறிந்தாள். தோழிமார்களை முன்னே செல்ல விட்டு, பின் தங்கிய அவள், "நீங்க சாப்பிடலீங்களா?" என்று அன்பாகக் கேட்டாள்.

" காணுமல் போன காதல் " வேலை தொடங்கிவிட்டது. நாலாவது பாரத்திலே இன்னும் ஒரு பக்கம் பாக்கியிருக்கிறது. அதையும் பார்த்து அனுப்பிச்சிட்டா, அச்சகத்திலே வேலை 'டிலே' ஆகாது. சாப்பாடு எங்கே ஓடிப்போகுதுங்க ? " என்ருன் மாசிலாமணி. அவன் கண்கள் இப்போதுதான் தாழ்ந்தன மென்னகை மாறவில்லை.

மஞ்சுளா நாணம் கலந்த புன்னகையோடு, "நான் போய் சாப்பிட்டுங்களா ? " என்று கேட்டாள்.

" சாப்பிடுங்க, மஞ்சுளா ! " என்று இதமாகப் புன்னகை செய்த அவன், " மணி என்னுங்க ஆகுது ? " என்று தொடர்ந்தான்.

"ஒன் ட்வெண்டி ! "

மஞ்சுளா சாப்பாட்டுக் கூடத்தை அடைந்த போது, தோழியர் இருவரும் அவளுக்காகக் காத்திருந்தது தெரிந்தது.

" நீங்க ரெண்டுபேரும் சாப்பிடுறதுதானே ? " என்ருள் மஞ்சுளா.

" நீங்களும் சேர்ந்தால்தானே இந்த அபூர்வ முக்கூட்டுக் கலகலப்பாக இருக்கும் ! இல்லீங்களா, மஞ்சுளா ? " என்று தெரிவித்தாள் நூருன்னிஸா. இமைகள் பட்டாம் பூச்சிகளாகப் படபடத்தன.

"ஓ, அப்படியா ? " என்று பாங்குடன் முறுவல் சிந்திஞள் மஞ்சுளா. ஒற்றைக்கல் மூக்குத்தியில் கவர்ச்சி சிந்தியது.

" ஆஹா ! " என்று கை தட்டிஞள் ஸ்டெல்லா. சோளி யின் மேல் பொத்தானை மறந்துவிடாமல் அழுத்திவிட்டாள்.

" என்ன ? " என்று தலையை ஒயிலோடு உயர்த்திஞள் மஞ்சுளா. செவ்வதரங்கள் இடைவெளி காட்டின.

"இந்த மஞ்சுளாவைப் பார்த்தால், அந்த மஞ்சுளாவைப் பார்க்க வேண்டியதே இல்லை ! அசல் அந்த மஞ்சுளாவின்

சிரிப்பு மாதிரியே நம்ப மஞ்சுளாவின் சிரிப்பும் அமைஞ்சிருக்கு! ஆமாம். நூருன்னிஸா!"

"அப்படியா? நான் அந்த மஞ்சுளாவைப் பார்த்த தில்லையே?"

"நான் மட்டும் நேரிலேயா பார்த்தேன்? படத்திலேதான் பார்த்திருக்கிறேன்!"

"நல்ல ஸ்டெல்லா!" என்று அழகு காட்டினாள் மஞ்சுளா; நாணம் நெகிழ்ந்தது.

"நல்ல ஸ்டெல்லா ஆனதாலேதான், நீங்க சினிமாவிலே நுழைஞ்சிடலாம்னு அப்போதே உங்களுக்கு யோசனை சொன்னேன். திரை உலகத்திலே நீங்க அடி எடுத்து வைக்கத் துணிஞ்சிட்டீங்கன்னா, உங்க இயல்பான பேரழகுக்கு நல்ல வரவேற்பு கிடைக்கும்; அதன் மூலம் உங்க எதிர்காலம் பிரகாசிக்கவும் இயலும். ஆமா, மஞ்சுளா!"

"ஓ. கே. உங்க ஆலோசனையைப் பரிசீலனை செஞ்சுக்கினு தான் இருக்கேன், சகோதரி!" விநயமான நகைப்பு பிரதிபலித்தது!

"இதிலே பரிசீலிக்கிறதுக்குத் தேவையே இல்லையே, மஞ்சுளா? நீங்க 'ஊம்' என்று தலையை அசைச்சிட்டால் போதும்; அப்போதே உங்க ஆசை அத்தான் தன்னோட படத்திலே உங்களை நடிக்க வைத்து விடுவாரே?" அவளுடைய நாவல் பழ முகம் மின்னியது.

இரண்டு நாட்களாகச் சாரல் கட்டியிருந்த வானம் அப்போது பளீரென்று வெளி வாங்கியது. மஞ்சுளா மௌனம் காத்தாள். ஸ்டெல்லா குறுக்கிட்டாள். "பிரமாதமாக என்ன யோசிக்கிறீங்க, மஞ்சுளா? யாரோட நடிக்கிறதென்று சிந்திக்கிறீங்களா? உங்க அன்பு அத்தானோட நடிச்சால் போச்சு!" என்று அமர்க்களமாகச் சிரிக்கலானாள் அவள்.

மஞ்சுளாவின் அழகு முகம் சிறுத்தது. "டோண்ட் பி ஸில்லி !...ஸ்டெல்லா. போதும் உங்க அதிகப் பிரசங்கித்தனம்" என்று சூடாகச் சொன்னாள் அவள். வெப்பம் பட்ட ரோஜாப் பூக்களாயின கன்னங்கள்.

"நான் ஒண்ணும் தப்பாகச் சொல்லவில்லையே மஞ்சுளா?" என்று பரதவித்தாள் ஸ்டெல்லா ; பதற்றம் பயமாக உருவெடுத்தது.

மஞ்சுளா மூச்சு விடவில்லை. சலனம் காணத் தொடங்கியிருந்த இதயத்தில், காலையில் வந்திருந்த அந்த 'விரைவுக் கல்தம்' திரும்பவும் குரல் கொடுத்தது. மாசிலாமணி நினைவு கொண்டு நினைவுபடுத்திய 'பராசக்தி மூவிஸ்" என்ற புதிய தமிழ்ப்பட நிறுவனம் தயாரிக்கப் போகும் முதல் படத்தில் மஞ்சுளாவுக்குக் கதாநாயகி வாய்ப்பு அளிக்க முடிவு செய்திருக்கிறார்களாம் !...

"மஞ்சு, இது எங்க வீட்டுப் பிரியாணி !" என்று கூறி. ஒரு பகுதியை மஞ்சுளாவின் இலையில் இட்டாள் ஸ்டெல்லா.

மஞ்சுளா அவளை அமைதியாக நோக்கினாள் ; தன் உப்புமாவில் அவளுக்கும் நூருன்னிஸாவுக்கும் பங்கு அளித்தாள்.

சமுத்தாய வாழ்க்கையில் இலை மறைவு காய் மறைவாக இருந்து வரும் பொருளாதார மேடு பள்ளங்களிலே மஞ்சுளாவின் உள்ளம் ஏறியும் இறங்கியும் தடுமாறியிருக்க வேண்டும் ! இமைகள் நனைந்தன. ஆண்களின் கூடத்தில் 'சர்வதேச அரசியல்' பாடாதபாடு பட்டுக் கொண்டிருந்த விசித்திரத்தையும் அவள் ரசிக்கத் தவறவில்லை.

பிற்பகல் அலுவல்கள் தொடங்க இன்னும் இருபது நிமிடங்கள் இருக்கின்றன.

தோழிமார் மூவரும் முகப்புப் பகுதிக்கு வந்தார்கள். மஞ்சுளா ஏதோ சிந்தனையுடன் பின்புறம் திரும்பினாள். செவிகள் தீட்சண்யமாகக் காத்திருந்தன, அத்தான் ஞானசேகரன்

தொலைபேசியில் அழைத்து விடுவாரோ? ஒன்றும் அரவம் கேட்கவில்லை. அவரவர்கள் கீழே போய் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கலாம்.

கீதாவிலிருந்து மாசிலாமணி வெளியேறியதைக் கண்டதும் சடக்கென்று திரும்பலானாள் மஞ்சுளா.

அரசினர் தோட்டத்தின் வாயிற்புறத்தில் பெற்றோர் சகிதம் யாரோ பெண் ஒருத்தி நின்றாள்.

மஞ்சுளா ஏக்கப் பெருமூச்செறிந்தாள். வேப்பேரியிலிருக்கும் தந்தையும் மயிலாப்பூரிலிருக்கும் தாயையும் நாளைக்குச் சந்தித்து, அவ்விருவரையும் மீண்டும் இணைத்து வைப்பதற்கான தன் திட்டத்தைச் செயற்படுத்வ வேண்டுமென்ற பொறுப் புணர்வு அவளை ஆட்கொண்டது. நெஞ்சம் விம்மியது. அவள் பார்வையில் மாசிலாமணி நின்றான்.

" டிபன் சாப்பிட்டாச்சுங்களா மஞ்சுளா ? "

" ஆச்சுங்க ! "

" என்ன டிபன் ? "

" ரவா உப்புமா ? "

"எனக்கு ரவா உப்புமாவென்றால், நிரம்பப்பிரியம் ! இப் போது கூட ரவா உப்புமாதான் சாப்பிட்டு வர்றேன் !"

மாசிலாமணி அவளுடைய'கைக்கடிகாரத்தைப் பார்த்ததை ஊகித்துக் கொண்ட மஞ்சுளா, "இன்னும் பத்து நிமிஷம் இருக் குங்க, மிஸ்டர் மாசிலாமணி ! " என்றாள்.

மாசிலாமணி விரைவாக ஹாலை நோக்கி நடக்கலானான்.

கன்னிப் பெண்டிர் மூவரையும் கடமை அழைத்தது.

" மஞ்சுளா, உங்களுக்கு 'போன்' வந்திருக்காம் ! " என்றான் மாசிலாமணி,

மஞ்சுளா பதட்டத்தோடு விரைந்தாள். உள்மனம் இப்படியா அடித்துக் கொள்ள வேண்டும்? இதோ, புறப்பட்டேனுங்க!'' என்று பதில் மொழிந்து மீண்டாள், நெற்றியிலும் முகத்திரையிலும் வேர்வை வெள்ளமாக ஓடியது.

மஞ்சுளாவின் ஒன்றுவிட்ட சிற்றப்பா சேது கொடுத்த தகவல் இது:

மஞ்சுளாவின் தந்தை சுந்தரேசன் கைது செய்யப்பட்டு, வேப்பேரி போலீஸ் ஸ்டேஷனில் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்...!

## 6. அரை நாள் விடுதலை!

திருவல்லிக்கேணி — கிள்ளியூர் பஸ் கிடைத்து விட்டது! மஞ்சுளா பஸ்ஸில் ஏறினாள்.

பஸ் நின்று நின்று ஓடியது.

கண்டக்டர் ஓரக் கண்ணால் விழித்துப் பார்த்தபடி, "டிக்கட் ப்ளீஸ்!" என்றான், மஞ்சுளாவிடம்.

மஞ்சுளாவுக்கு அந்தப் பார்வை அருவருப்பாகப்பட்டது. 'டிக்கெட் ப்ளீஸ்!' என்றவுடன், அக்குரல் டிக்கெட் பரிசோதகருடையதாக இருக்குமோ என்று தோன்றியது. ஆனால், அருகில் நின்ற ஆளைப் பார்த்ததும், கண்டக்டர் என்று புரிந்தபடி சரி, டிக்கெட் வாங்கச் சொல்கிறார் என எண்ணி, ஏற்கனவே தயாராக வைத்திருந்த 'துட்டை' நீட்டி டிக்கெட்டைப் பெற்றுக் கொண்டாள், கை விரல்களைத் தொட்டு அழுத்திப் பயணச் சீட்டைக் கொடுத்த விதமும் அவளுக்கு ஆத்திரத்தை ஊட்

டிற்று. வலது கை மீண்டும் இரும்புக் கம்பியை நாடியது; உடல் குலுங்கிக் கொண்டேயிருந்தது.

''உட்காருங்க ஸிஸ்டர்!'' என்ற குரல் கேட்டது.

மஞ்சுளா மெதுவாகத் திரும்பினாள்.

ஆசனத்தின் முனையில் வீற்றிருந்த ஓர் இளைஞன் எழுந்து வழிவிட்டதும், அவனை அடுத்து சல்லாபமாக உட்கார்ந்திருந்த வாலிபனும் எழுந்து விட்டான். மஞ்சுளா ஒரு வழியாக அமரலானாள். தன் அருகில் வேறொருத்தியும் அமர்ந்து கொண்டதை அவள் கண்டாள். மனிதாபிமானப் பூண்டு, தன் இடத்தை விட்டுக் கொடுத்த இளைஞனின் குரல், கேட்டுப் பழகிய மாதிரி இருந்தது. அவளுக்கு இருக்கின்ற மனக் குழப்பங்களுக்கு மத்தியில், அந்தக் குரலை இனம் கண்டு கொள்ள விருப்பம் ஏற்படவில்லை. யதேச்சையாக அவள் பக்கவாட்டில் விழிகளைச் சாய்த்தபோது, அன்பு காட்டிய உருவத்தைப் புரிந்து கொள்ளத் தவறவில்லை அவள். 'சுகுமார்!' என்று அவளது மதுர இதழ்கள் முணு முணுப்புச் செய்தன. அப்போது, 'உட்காருங்க ஸிஸ்டர்!' என்று பண்பு காட்டிய அன்பு அவள் செவிகளில் ஒலித்தது. 'சுகுமார் திருந்தி விட்டவரை சந்தோஷம்!' பழைய நிகழ்ச்சியில் அவளுடைய உள்ளம் ஒன்ற மறுத்தது. மத்தியானம் முதல் அவளுக்குத் தன் தந்தையைப் பற்றி நினைப்பதற்குத்தான் பொழுது சரியாகி விட்டதே?

அண்ணா சாலை சூழல் மாதிரி, அந்தி மஞ்சள் பின் தங்கி விடவில்லை.

எதிர்பாராத சோதிப்பு எப்படி முளைத்திருக்கிறது?

அப்பா கைது செய்யப்பட்டதாகத் தகவல் கிட்டியதும், மஞ்சுளா எப்படித் தவித்துப் போய்விட்டாள், பாவம்! அப்போதே வேப்பேரிக்குப் பறந்து போய்க் கண்டுவிட வேண்டுமென்றுதான் அவள் துடியாய்த் துடித்தாள். அலுவலகத்தில் அரை நாள் லீவு கேட்டுக்கொண்டு புறப்படுவது என்ற தீர்

மானத்தோடு, மேஜை மீது பரப்பிக் கிடந்தவற்றை ஒழுங்கு படுத்தினாள் அவள். லீவுக்கான காரணத்தை என்னவென்று சொல்வது என்பது ஒரு பிரச்னையாக முளைத்தபோது, உண்மை யான காரணத்தைச் சொல்லி லீவு கோரினால், பிறகு அலுவல கத்தில் தனக்குள்ள கௌரவம் பாழ்பட்டு விடுமே என்ற விவேக உணர்வு தலை தூக்கியது. விடுமுறைக்கான கார ணத்தை உடம்பின் பேரில் தூக்கிப் போட்டு விட வேண்டியது தான் புத்திசாலித்தனமான செய்கையாகும் என்று மனம் தெளிந்த அவள். அவ்வாறே செய்வதென்ற திட்டத்துடன் நிர்வாகி இளங்கோவனைச் சந்தித்தாள். தலைவலி தாள முடிய வில்லையென ஜுரம் வருகிற மாதிரி இருப்பதாகவும் பொய் சொன்னாள்.

அவளை ஏற இறங்கப் பார்த்த இளங்கோ, கவலையும் கல வரமும் சூழ்ந்து கிடந்த அவளது அழகு முகம் அவளது வாக்கு மூலத்திற்கு அனுசரணையாக அமைந்திருப்பதை உணர்ந்தவர் போன்று ஒரு பெருமூச்சு விட்டார். "மஞ்சுளா, கல்யாணமா காத நீங்க உடம்பைப் பற்றி இவ்வளவு அலட்சியமாக இருக்க லாமா? உங்க உடல் நலத்தைப் பற்றி இனிமேலும் உங்க தாய் தகப்பனார் அக்கறைப்படுவாங்கன்னு இனியும் நீங்க எதிர்ப் பார்க்கலாமா?" என்றார்.

"வாஸ்தவம்தான், சார்!"

மஞ்சுளா களை பறிபோன சிரிப்பை வெளிப்படுத்தினாள் அம்மா – அப்பா நினைவு ஏற்படுத்திக் கொடுத்த சுழல் அவள் சிரிப்பில் நிழல் விரிக்கத் தவறவில்லைதான். என்றாலும் உள்ளூர ஒரு தெம்பு ஊர்ந்திருந்தது. லீவு கிடைத்துவிடும்! ஆகவே, அவள் நிர்வாகியிடம் ஒப்படைப்பதற்காகக் கொணர்ந்திருந்த கடித நகல்களை மேஜைக் கண்ணாடித் தகட்டிலே மெதுவாக வைத்த வண்ணம், "நான் புறப்படட்டுங்களா, சார்?" என்று வேண்டினாள் அவள்.

இளங்கோ தலையை நிமிர்த்தி, "உங்க கையிலே டைப் அடிக்கக் கொடுத்த ட்ராஃப்ட்களைத்தானே வச்சீங்க மஞ்சுளா?" என்று சற்றே தடித்த குரலெடுத்துக் கேட்டார்.

"ஆமாங்க!"

"அவை எல்லாமே இன்னிக்குச் சாயங்காலம் அவசரமாகத் தபாலில் சேர்த்தாக வேணும்னு உங்ககிட்ட நினைப்பூட்டினேன்!"

"ஆமா நினைப்பூட்டினீங்க!"

"இப்போது அவைகளைத் திருப்பிக் கொண்டுவந்து வைத்தால் அதற்கு என்ன அர்த்தம், மிஸ் மஞ்சுளா?" என்று கேள்விக் கணையைத் தொடுத்தார், 'மகாத்மா பதிப்பகத்தின் நிர்வாகியான இளங்கோ.

மஞ்சுளாவின் இதயத்துச் சூழலை மறைத்துக் கொண்டு, உதட்டுக் கரையில் தங்கிக் கிடந்த புன்னகை சுருங்கியது, எழில் வதனம் சுண்டிப் போய் விட்டன, இளங்கோவின் பேச்சுத் தன்னைப் புண்படுத்தியதை அவள் உணராமல் இல்லை. என்றாலும், வழக்கம் போல திடீரென்று உணர்ச்சி வசப்பட்டு விடக் கூடாது என்று அறிவு பூர்வமாகத் திட்டமிட்டுக் கொண்டே, "சார் ..!" என்று அழைத்தாள்.

அவள் அழைத்த குரலின் தொனியில் என்ன கண்டாரோ, இளங்கோ?— "என்ன, மஞ்சுளா?" என்றார். போலித்தனமான மனிதாபிமனம் அவர் பேச்சில் குழைந்தது.

மனிதமனத்தின் சூட்சுமச் சாகஸங்களையெல்லாம் மஞ்சுளாதானா அறிந்து கொள்ளாமல் இருந்து விடுபவள்? "ஐயா, எனக்கு ஜுரம் வருகிற மாதிரி இருப்பதனாலேதான் இப்படிப் பட்ட இக்கட்டு ஏற்பட்டிருக்குதுங்க. இதைத் தவிர வேறு எந்த அர்த்தத்தையும் என்னாலே புரிஞ்சுக்கிட முடியலீங்களே? நான் இங்கே வேலைக்குச் சேர்ந்த இத்தனை மாதத்திலே இது போல ஒரு நாளும் ஏற்பட்டது கிடையாது என் வரை என்கிற

உண்மையை என்னைப் போல நீங்களும் உணர முடியும்னுதான் நான் நினைக்கிறேன். கிளியோபாட்ரா லீவு போடாமல் இருந் திருந்தாலாவது, எனக்கு நியாயமான விடுதலை அரை நாளைக் குக் கிடைச்சிருக்கலாம்!'' என்று அழுத்தம் கொடுத்துச் சொல்லிக் கொண்டே, அந்தக் காகிதக்கற்றையைத் திரும்பவும் எடுக்கலானுள் மஞ்சுளா.

"என்ன செய்யப் போறீங்க?"

"என்ன ஸார், இப்படிக் கேட்கிறீங்க? என் கடமையைச் செய்யப் போறேன்; அவ்வளவுதான். இப்போது உங்களுக்குத் திருப்திதானே, ஐயா? ஒரு இடத்திலே வேலைன்னு வந்தப்புரம் உடம்பைப் பற்றிக் கவலைப்படலாமுங்களா? பாதி நாள்கூலி லாபம்தான், அந்தமட்டும் எனக்குக்கூடத் திருப்திதான்!"

"ஓ.கே!"

நாலரை மணிக்கு அவள் கடன் — அதாவது, கடமை முற் றுப் பெற்றது. என்றாலும் மீதமிருந்த அரைமணி நேரத்தையும் அவளுக்குரிய இருப்பிடத்திலேயே செலவிட்டாள், 'அப்பா என்ன நிலைமையிலே இருக்காங்களோ, தெரியலையே!... தெய் வமே, என்னை ஏன் இப்படிச் சோதிக்கிறே? எங்களை ஏன் இப்படிச் சோதிக்கிறே? எங்களை ஏன் இப்படியெல்லாம் அலைக் கழிக்கிறே, பிள்ளையாரப்பனே?... அப்பா ஏன் கைது செய்யப் பட்டாங்க? எப்படிக் கைது ஆனுங்க அப்பா?... என்று அந்த இடை வேளைப் பொழுதிலே பலவாருக எண்ணி எண்ணக் குமைந்த வேதனையை இளங்கோ எங்ஙனம் அறிவார்? இத்த கைய மன வேதனைகளுக்கு மத்தியில், தன் அன்பு அத்தான் ஞானசேகரன் வேறு தன்னைத் தொலைபேசியின் மூலம் அழைத் துப் பேசாமல் இருந்தவரை ஒரு புதிய தலைவலி மிச்சம் என்றே அவளுடைய அந்தரங்க மனம் அமைதியடைந்தது!

ஐந்துமணி அடித்ததுதான் தாமதம் தாமதமின்றிப் பரபரப் புடன் அலுவலகத்தினின்றும் மஞ்சுளா புறப்பட்டாள்.

கைதான அப்பாவை ஜாமீனில் விடுதலை செய்வதற்கு மிஸ்டர் மாசிலாமணியை அழைச்சுக்கிட்டுப் போனால் என்ன?' என்று ஓர் ஆலோசனை நெஞ்சில் ஓடியது. ஆனால் அந்த யோசனை விவேகமானதாகப் படவில்லை அவளுக்கு. இந்த நடப்பு—கௌரவக் குறைவான இந்த நடப்பு மாசிலாமணிக்குத் தெரியாமல் இருப்பதே சிலாக்கியம்! — அவள் புறப்பட்டுவிட்டாள்!

எழும்பூருக்கென்று இப்படியொரு விசித்திரமான பரபரப்பா?

கூவம் கிளைப்பாலம், சித்ரா டாக்கீஸ், ஹாரிஸ் சாலை எல்லாம் அதற்குள் மறைந்து விட்டனவே?

நினைவுகளுக்கு 'ஹோல்டான்' போடமுடிகிறதா?

இருமனம் ஒன்றுசேர் தப்பதியாகவே சுந்தரேசனையும் மீனாட்சியையும் மணப் பந்தல் அறிமுகப் படுத்தியது; அவர்களின் தாம்பத்திய இல்வாழ்க்கை சராசரி மத்தியதரக் குடும்பத்திற்கு உண்டான இயல்பு நிலைகளோடு அமைந்தது. தொழிலில் கிடைத்த வருமானம் அவர்களை மானத்தோடு வாழ வழிவகை செய்தது. சுந்தரேசன் முன்கோபியாகவும், மீனாட்சி வீம்புக்காரியாகவும் இருந்து வந்தாலும்கூட, ஊடல் கூடலும் அவர்களிடையே அன்றாட நிகழ்ச்சியாகவே அமைந்துவிட்டன. என்றாலும், அவர்களது தாம்பத்தியத்தில் இம்மியளவு விரிசல் கூட ஏற்பட்டது கிடையாது. அந்தமட்டில், தஞ்சை மண்ணின் ராசியென்றுதான் சொல்ல வேண்டும்.

மஞ்சுளா பிறந்தாள்.

கணவன் மனைவியரிடையே நிலவிவந்த—தவிர்க்க முடியாத ஒரு விதியை ஒத்து நிலவிவந்த 'முரண்' கொஞ்சம் கொஞ்சமாகக் குறையத் தொடங்கிற்று. சுந்தரேசனின் வருவாயில் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டது. இதன் விளைவாகத்தானோ என்னவோ, மீனாட்சியும் முன்னைவிட, சற்றே விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை கொள்ளத் தொடங்கினாள்.

மஞ்சுளா வளர்ந்தாள்.

'அத்தான், அத்தான்!' என்று வாய் ஓயாமல் அழைத்தும் கண் ஓயாமல் பார்த்தும், உடல் ஓயாமல் விளையாடியும் மகிழ்ச்சி அடைந்த தன் அருமை மகள் மஞ்சுளாவின் கனவுப் பதுமை யாக விளங்கிய மைத்துனன் மகன் ஞானசேகரனை மஞ்சுளா வுக்குக் கலியாணம் செய்துவைக்க வேண்டுமென்ற இன்பக் கனவு சுந்தரேசனின் தந்தை உள்ளத்திலே நாளொரு ஆசை யும், பொழுதொரு கவலையுமாக வளரத்தொடங்கியது. கணவன் மீதிருந்த கோபதாபங்கள் எல்லாவற்றையும் மறந்து, தன் அன் புப் புதல்வியின் எதிர்காலத்தைப் பற்றி அக்கறை கொள்ள லானாள் மீனாட்சி. சுந்தரேசன் தம்பதியின் கனவுகளை அங்கீ கரிப்பதுபோதிரி, ஆனந்தரங்கம் தம்பதிகளும் தங்கள் செல்ல மகன் ஞானசேகரன் வளர்ந்துபெரியவன் ஆனதும் அவனுக்கே மஞ்சுளாவைக் கட்டிக்கொடுக்க இசைவும் தந்தனர்.

இச்சந்தர்பத்தில்தான், ஆனந்தரங்கம் திடுதிப்பென்று பணக்காரராகி சென்னை சென்றதும், அங்கே குதிரைப் பந்தயத் தில் இலட்சாதிபதியானதும் புனைகதையைச் செவிமடுப்பது மாதிரியே தோன்றியது சுந்தரேசனுக்கும் மீனாட்சிக்கும். தங்களையும் மீறிய வகையில் சுந்தரேசனும் மீனாட்சியும் தனித் தனியே கவலைகொள்ளலாயினர். இதன் காரணமாக கணவன் மனைவிக்கும் பழையபடி முரண்பாடு நிலவத் தொடங்கியது. மீண்டும் பூசல்கள் வெளிப்படையாகவே கிளம்பின. உள்ளுக் குள்ளேயே கனன்ற எரிமலையின்வாய் ஒரு நாள் திறந்துதானே தீரவேண்டும்? ஆனால், ஒரு சிறப்பு என்னவென்றால், தன் குடும்பத்திற்கும் தன் அத்தான் ஞானசேகரின் குடும்பத்திற் கும் நடுவிலே விதி ஒரு பள்ளம் பறித்துவிட்ட விபரீதத்தையோ அல்லது அந்த விபரீதம் விளைவிக்கவல்ல சோதிப்புகளைப் பற்றிய கிஞ்சித்தும் மஞ்சுளா எண்ணிப் பார்க்கவில்லை.

புயலும் அமைதியும் சுழல் சக்கரம்!

ஒருநாள், ஆனந்தரங்கத்திடமிருந்து வந்த அழைப்பின் பேரில் மீனுட்சி, சுந்தரேசன், மஞ்சுளா ஆகிய மூவரும் பட்டணத்திற்குப் புறப்பட்டார்கள். பட்டண விஜயம் சிறுமி மஞ்சுளாவின் பால் மனத்திலே சிறுவன் ஞானசேகர் வாயிலாக ஒரு கீறலை—செப்பனிட வாய்க்காத ஒருவிதக் கீறலை உண்டுபண்ணிவிட நேர்ந்தது. அது மட்டுந்தாஞ? சுந்தரேசன் தம்பதியின் உள்ளங்களிலேயும் அந்தக் கீறலின் பதிப்பு ஆழமாகப் பதியத் தொடங்கி விட்டது. 'போனேம், வந்தோம்' என்று அவர்கள் சென்னையைவிட்டுப் புறப்பட்டபோது, எழும்பூர்ச் சந்திப்பில் மீனுட்சி ஓர் உண்மை நிவரத்தைத் தன் கணவனிடம் மனம்விட்டுத் தெரிவித்தாள். நம்ப மஞ்சுவை என்னேட அண்ணன் மகன் ஞானசேகருக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுக்கவேணுமென்கிற உண்மையான அக்கறை உங்களுக்கு இருக்கும் பட்சத்திலே, நீங்களும், எங்க அண்ணன் மாதிரி காசு பணம் சம்பாதிச்சு முன்னேறுகிற வழியைப் பாருங்க, அப்பத்தான் நம்ப ஆசையும், நம்ப மஞ்சுக் குட்டியின் கனவும் ஏடாகூடம் இல்லாமல் பலிக்க வாய்க்குமுங்க; அத்தான்!" என்ருள். "எங்க அண்ணி காமாட்சியின் வாயும் அப்போதுதான் அடைக்கும்," என்று முடித்தாள்!

கொண்டவளின் பேச்சு சுந்தரேசனுக்கு நியாயமானதாகவே பட்டது. 'மீனுட்சி, என் மனசிலே உறுத்திககிட்டு இருக்கக் கூடிய அந்தப் பயங்கர வேலையை நீயும் எடுத்துக் காட்டிச் சொல்லிவிட்டாய், வாழ்க்கையிலே பணம் காசு சேற்றது அதிர்ஷ்டத்தாலே என்கிறது பொய் அல்லதான். ஆனலும், நீயும் நானும் இனியேனும் மனசு ஒத்து நடந்து, ஒரு தீவிர வைராக்கியத்தோட பாடுபட்டால், நாமும் உங்க அண்ணன் மாதிரி உயரமுடியாமல் போனலும், ஏதோ ஓரளவுக்காவது முன்னேற முடியும் என்கிற நம்பிக்கை எனக்கு ஏற்படுகிறது. நம்ப மஞ்சுக் குட்டியை அதோட அத்தான் ஞானசேகரன் கையிலே ஒப்படைக்க வேண்டியது நம்ப கடமையாகும்!' என்ருர் அவர்.

"வாஸ்தவம்தானுங்க, அத்தான்!.. இலட்சாதிபதி வீட்டுச் சம்பந்தம் கிட்டணும்னு நாமும் ஒரு அந்தஸ்தைப் பெற முயற்சி செஞ்சால்தானுங்களே நல்லது? அதுதானுங்க நியாயம்! எப் பாடுபட்டும் நம்ப மஞ்சுவோட கனவை நிறைவேற்றி வைக்க வேண்டியது பெற்றவர்களான நம் கடமையாச்சுதே?"

மறுமாதமே அவர்கள் பட்டணத்தின் ராசிமிக்க மண்ணை மிதித்தார்கள். செம்புதாஸ் தெருவிலே இரும்புக் கடை ஒன்று உருவாயிற்று. சுந்தரேசன் குடும்பத்தின்பால் சீதேவியின் கடைக்கண் நோக்கு விழத் தொடங்கிவிட்டது அந்த ஒரு பாக்கியத்தோடு மட்டும் வாழ்க்கையின் கதை முடிந்துவிடுகிறதா?...

டஸ், திருப்பத்தில் மடங்கி நின்றது.

குமாரி மஞ்சுளாவின் மனம் விழிப்புப் பெற்றது. புரசைவாக்கம் குளத்தை உணர்ந்து, இறங்கினாள். நெடுஞ்சாலையில் நடந்தாள். "அப்பாவும் அம்மாவும் வாழ்க்கையை ஒரு யாகமாகக் கருதியிருந்தால், இப்படிப்பட்ட தீவினைகள் சம்பவித்திருக்கக் கூடுமா?... ஈஸ்வரா; அப்பா ஏன் 'கைது' செய்யப்பட்டார்? அப்பாவை எப்படி விடுதலை செய்வேன்?... மயங்கிவிட்ட அந்தி நிழல் அவளது உள்ளத்திலும் படர்ந்தது. அத்தான் ஞானசேகரனைப் பற்றிய சிந்தனையுமா இப்போது தோற்றிக் கொள்ள வேண்டும்!...

வேப்பேரி போலீஸ் ஸ்டேஷன் வந்தது.

மஞ்சுளா திடுக்கிட்டாள்:

ஏன் தெரியுமா?

முகப்பில், அந்த ரோஜா நிற 'டாட்ஜ்' விதியெனச் சிரித்தது!

## 7. சட்டமா? விதியா?

அந்த ரோஜா நிறக் காரைக் கண்டதும், சூறைக்காற்றில் சிக்கிக் கொண்ட காம்பு முல்லைப் பூவென மஞ்சுளாவின் பூ மனம் அல்லாடித் தள்ளாடியது. சூறைக் காற்றின் கொடுமை மிக்க தாக்குதலைத் தாங்க முடியாமல், இதழ் இதழாக முல்லை மலர் உதிர்வதைப் போன்று அவளது கோல விழிகளினின்றும் வெந்நீர் சரம் கட்டிச் சொட்டத் தொடங்கியது. பூ மனத்தில் நிகழ்ச்சிகள் என்னென்னவோ பூ மணமாகச் சிந்திச் சிதறின. எதையுமே நினைக்கவோ, அன்றி மறைக்கவோ முடியாத நிலையில் தவித்து உருகிக் கொண்டிருந்த அவளை அந்த 'டாட்ஜ்' மேலும் சோதித்தது. இத்தகைய சோதிப்பு, காவல் நிலையத்தின் தலை வாயிலில் சாத்துக்கிடக்குமென்று அவள் கனவு கூடக் கண்டதில்லை அல்லவா? விதியின் சிரிப்பலைகள் அவளுள் கொடூரமாக எதிரொலித்துக் கொண்டேயிருந்தன. அப்பா கைதான விஷயம் புரியாத புதிராக இருக்கிறது. இது போதாதென்று, அன்பு அத்தான் ஞானசேகரின் கார் கூடவா இங்கே காத்திருக்க வேண்டும்? மனத்தையும் மானத்தையும் உயிர்க் கழுவில் நிறுத்தி ஊசலாடச் செய்து விட்டிருக்கும் விளையாட்டிற்குப் பெயர்தான் விதியா?...

மஞ்சுளா கண்களை மூடி மூடித் திறந்தாள். கண்களைக் குத்திப் பாய்ந்த ஒளிக்கதிர்கள் இதயத்தைச் சாடாதா?— அப்பா கைது செய்யப்பட்டிருக்கிறார்! எப்பாடு பட்டாவது, யாருடைய சிபார்சின் பேரிலாவது அல்லது, பணம் கட்டியாவது உடனடியாக அப்பாவை ஜாமீனில் விடுவித்தாக வேண்டும்! பிரவாகமாகப் பொங்கிய பாச வெள்ளத்தில் தந்தையின் விடுதலை ஒன்றுதான் அவளுக்குக் குறிபாக அமைந்தது. தந்தைக்கு ஏற்பட்டிருந்த அவக்கேடு பற்றி மாசிலாமணியிடம் தெரி

விப்பது தாமல்லவென்று கருதிய அவளது தன்மானம் இத்துன் பத்தைத் தன்னுடைய மாமன் மகன் ஞானசேகரிடம் கூடப் பகிர்ந்து கொள்ளவும் விரும்பாததில் வியப்பு ஏதும் இல்லை.

'நினைத்தது நடக்காமல் இருப்பதும், நினைக்காதது நடப்பது தான் வாழ்க்கை நாடகத்தோடு விதிமுறை இயல்பு போலிருக்குது!' என்று அவள் எண்ணினாள், ஞானசேகரின் கார் இங்கே ஏன் வந்திருக்கிறது?

ஒளிச் சிதறலுக்கு மத்தியிலே சிதறாத எழிற்கோலத்துடன் நின்று கொண்டிருந்த அந்தக் காரின் 'நம்பர் பிளேட்' அவளுக்குப் பழக்கமானது இன்று நேற்றல்ல! தன் தந்தையை உத்தேசித்துதான், ஞானசேகர் அத்தான் இங்கே காவல் நிலையத்திற்கு வருகை தந்திருக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டாள் அவள். அப்பாவைப் பற்றிய நிலவரத்தையும் கைது செய்யப்பட்ட சட்டச் சூழலையும் அறிந்து, அதற்கேற்ப, தன்னுடைய பொறுப்பில் அப்பாவை எப்படியும் ஜாமீனில் எடுத்து விடவேண்டுமென்றுதான் அவள் கருதியிருந்தாள். ஆனால்... அப்பா கைதான விஷயம் வெளியிலும் பரவிவிட்டதே!— பெண்மையின் தன்மானம் தழல் கண்ட மெழுகுப் பிண்டமென உருகி வழிந்தது. செய்தி கிட்டியதும், உடனடியாக இங்கு வந்திருந்தால், ஒரு வேளை இந்நிகழ்ச்சி தற்காலிகமாகவேனும் அம்பலமாகாமல் காக்கப்பட்டிருக்கக் கூடும். மனத்தின் இக்கூற்றை அவளால் முழுமையாக அங்கீகரிக்க முடியவில்லை' அப்பா கைது செய்யப்பட்ட சேதி இன்று இல்லாவிட்டாலும், நாளை எப்படியும் அத்தானுக்கோ, மற்றவர்களுக்கோ தெரியாமல் தப்ப முடியாதல்லவா?

உள்ளே அதிகாரம் நிர்த்தாளிபட்டது.

அவசரத்துக்கு லீவு கொடுக்க மறுத்துவிட்ட பதிப்பக நிர்வாகி மீது மஞ்சுளாவுக்கு எரிச்சல் மூண்டது. அப்பொழுது அவள் மனச்சான்று கசப்பான ஓர் உண்மையை யதார்த்தமாக நினைவூட்டியது: 'மஞ்சு! உன்னுடைய அன்பு அத்தானின்

காதலை நிராகரித்து விட்டு, இப்போது உன் தன்நலத்தை யொட்டி அவரைச் சந்திக்கப் போகிறாய் !' — அந்தக் குற்றச் சாட்டில் எரி மெழுகானாள் அவள்.

மணி — ஆறு இருபது.

சோதனைகள் விளையாடட்டும், மேளதாளத்தோடு ! — அவள் எதையும் தாங்கும் மனத் திண்மையோடு காவல் நிலையத்தின் உள்ளே நுழைந்தாள்.

அப்போது:

" வா, மஞ்சுளா !..."

ஞானசேகரன் மிக அன்பாக வரவேற்றான்.

"அத்தான் !..."

மஞ்சுளாவின் தவிப்பு மேலும் அதிகரிக்கத் தொடங்கியது. அன்பு அத்தானின் முகத்திரையில் தெறித்துக் கிடந்த ஏக்கத்தின் சாயலை அவள் உணர்ந்து கொள்ளத் தவறவில்லை. 'அத்தானை நான் நிராகரித்தேன் ! ஆனால், அத்தான் என் அப்பாவை நிராகரித்து விடவில்லை !' — இவ்வாறு அவள் மனச் சாட்சி நினைவூட்டியதும், அந்நினைவே நெருஞ்சி முள்ளாகி உறுத்தியது.

"மஞ்சுளா, யாமா உன்னைப் பிற்பகலிலேயே எதிர்பார்த்தாங்களாம் !" என்றான் ஞானசேகரன். தனக்கும் மஞ்சுளாவிற்கும் இடையே எதுவுமே பிளவு ஏற்படாதது மாதிரி இவ்வளவு இயல்பாக அவனால் எப்படி பேச முடிகிறது ?

மஞ்சுளாவால் அப்படிப் நடந்து கொள்ள முடியவில்லை. இருந்தாலும், சமாளித்துக் கொண்டாள். லீவு கிடைக்கல் லீங்க, அத்தான் !" என்றாள் அமைதியாக.

"என்ன, இப்படிப்பட்ட அவசரத்துக்குக் கூடவா உங்க ஆபிசிலே லீவ் கொடுக்க மாட்டேனுட்டாங்க ?... உங்க மானேஜர் மிஸ்டர் இளங்கோவா அப்படி திர்த்தாட்சண்யமாக மறு

தவிச்சார்?" உணர்ச்சி வசப்பட்டுப் 'பட பட' வென்று கேள்வி களை அடுக்கினான் அவன். முன் நெற்றியில் புரண்ட சுருள் முடிகள் கண்களை மறைத்தன.

பரவிக் கிடந்த குழல் ஒளியில் மஞ்சுளாவின் வட்டக் கரு விழிகள் பளபளத்தன. பெருமூச்சு வெடித்தது. "அப்பா கைது ஆகிட்டாங்க. அப்படின்னு ஆபிசிலே உண்மையைச் சொல்லி லீவ் கேட்டிருந்தால், கட்டாயம் எங்க மானேஜர் இளங்கோ லீவ் கொடுத்திருப்பாருங்க. ஆனா, இந்த வயிற்றெ ரிச்சலைப் போய் ஆபிசிலேயும் அம்பலப்படுத்தத் துணியலேங்க நான். அதனாலேதான் இவ்வளவு லேட்!..." என்று தாழ் குரலில் கூறி நிறுத்தினாள் அவள். காவல் நிலையத்தின் உட் புறம், ஊடுருவின அவள் கண்கள்; உள் மனமோ, 'அப்பா ஏன் கைது ஆனார்களாம் ?' என்று நச்சரித்தது.

ஞானசேகர், கண்களில் சலனத்தைத் தேக்கிய நிலையில் "மஞ்சுளா, நீ சொல்வது நியாயம்!" என்றான்.

மஞ்சுளாவின் கனி இதழ்கல் துடிதுடித்தன. 'மஞ்சு, மஞ்சு என்று அழைக்கும் அன்பு அத்தான் இப்போது வந்தது முதல் மஞ்சுளா என்று கூப்பிட்டுக் கொண்டிருக்கிறாரே? நான் அவருக்கு எழுதிய அந்த லெட்டர் என்னை அவருக்கு அந்நிய மாக ஆக்கிவிட்டதோ ?' வெய்துயிர்ப்பு வளராமல் இருக்காது.

சப்-இன்ஸ்பெக்டர் அழைப்பதாகக் கூறி கான்ஸ்டபிள் ஒருவர் வந்து ஞானசேகரை அழைத்துச் சென்றார்.

மஞ்சுளாவுக்கு இருப்புக் கொள்ளவில்லை. மீண்டும் உட் புறம் விழி விரித்தாள். அப்பா தென்பட்டால் தானே ? சிற்றப் பாவைக்கூட காணோமே ? ஞானசேகர் வந்துவிட்டதால், ரொக்க ஜாமீனில் அவள் தந்தையை விடுவிக்கவேண்டி வராது நபர் ஜாமீனுக்கு பட்டதயாரிப்பாளர் மகன் ஞானசேகருக்கு நல்ல தகுதி உண்டு. இப்போதைக்கு அவளுடைய பாங்குச் சேமிப்புக்கு அவசியம் இல்லை!...

நீதியின் காவல் தலத்திலே, கடமைக்குப் பற்றுக்குறை இருக்கலாமோ ?

சுவர்க் கடிகாரம் 'டிங்-டிங்' கென்று ஏழு முறை அலறி ஓய்ந்தது.

பாதை தடுமாறி, முள் படல்மீது கால் வைத்துவிட்ட மாதிரி பதைத்துப் புடைத்துக் கொண்டேயிருந்த மஞ்சுளா ஏறிட்டு விழிந்தபோழ்தில், அங்கே தன் எதிரில் தன் தந்தை சுந்தரேசன் நிற்பதைக் கண்டதும், உணர்ச்சித் தவிப்பில் ஒரு கணம் அவள் நிலை கலங்கிவிட்டாள். "அப்பா !" என்று விளித்தாள். விழிகள் சுழித்தன.

"மஞ்சு, ஏம்மா இப்படிக் கலங்கித் தவிக்கிறே? இப்போ என்ன நடந்திட்டுது ?" என்று தொண்டை அடைக்கக் கேட்டார் சுந்தரேசன். அந்திச் செவ்வகமாக அவர் கண்கள் காணப்பட்டன.

"இனி என்ன அப்பா நடக்கவேணும் ?" கண்களைத் துடைத்துக் கொள்ள மட்டுமே அவளால் அப்போதைக்கு முடிந்தது.

"இப்போது ஒண்ணுமே நடந்திடல்லே, மஞ்சு !" என்று பொய்யான புன்னகையைக் காட்டினார் மஞ்சுளாவின் அப்பா.

"பின்னே, நீங்க ஏனப்பா கைது ஆனீங்க ?" என்று உறங்காத நீதிபோல விழிப்புடன் விசாரித்தாள் சுந்தரேசனின் அருமைப் புதல்வி.

ஒரு விநாடி அப்படியே வாயடைத்துப் போய்விட்ட சுந்தரேசன், மறு விநாடி வாயைத் தூக்க எத்தனம் செய்தார். கலைந்து கிடந்த கிராப்பு வாடைக் காற்றில் அலைந்தது.

அதற்குள் ஞானசேகர் விரைவாகத் திரும்பி, "சரி, வாங்க மாமா, போகலாம்; வா, மஞ்சுளா !" என்றான்.

அவனுடைய சொல்லுக்குப் கட்டுப்படக் கடமைகொண்ட பாவனையில் 'ஊ ்' என்று தலையை ஆட்டியபடி, ஞானசேகரை தொடரலானார் சுந்தரேசன். ஆனால், மஞ்சுளாவோ திக்குத் திசை புரியாமல் விழித்தாள். அவள் கால்கள் நீதிபூமியை விட்டு நகர மறுத்தன.

திரும்பிப் பார்த்தான் படாதிபதியின் மகன். "மஞ்சுளா ஏன் அப்படி மலைச்சுப் போயிட்டா? வா!" என்று பரிவான ஆதரவோடு அழைத்தான் அவன், பட்டுச் சட்டைப் பையில் கரன்ஸி நோட்டுகள் எட்டிப் பார்த்தன.

"நான் இப்போ எங்கே வரவேணுமுங்க, அத்தான்?" என்று விரக்தி சூடுகாட்டக் கேட்டாள் வாலைக் குமரி.

"முதலில் நம் காருக்குப் போவோமே!" என்றான் ஞான சேகரன்.

"உங்க காருக்குத் தானே?"

"ஊம்!" தடுமாற்றமும் பெரு மூச்சும் ஆரத் தழுவிக் கொண்டன.

அந்த ரோஜா நிறக் காருக்கும் பேசத் தெரியும். இதயம் இருந்தால், பேச்சுக்குத்தானா பஞ்சம்?

அழகார்ந்த முகத்தில் திரையிட்டு அப்பியிருந்த சோகத் தையும் மீறிய வகையில், "பரிதாபம்! பாகிஸ்தானின் மானம் அந்தரத்திலே ஊசலாடிக்கினு இருக்கு!" என்று எக்காளமிட் டுச் சொன்னான் ஞானசேகரன்.

மஞ்சுளாவிற்குச் 'சுருக்' என்றது. 'என்னோட மானம்—கவுரவம் கூட இப்போது அந்தரத்தில்தானே ஊசலாடுது!... அப்பா இப்படிப்பட்ட கதியை அடைவாருன்னு சிஞ்சித்தும் நினைக்கவே இல்லையே?' தவிப்பைக் கட்டுப்படுத்திக் கொண் டாள் அவள். "உண்மைதானுங்க, அத்தான்! நம்ப பாரதத் தளபதி ஜெனரல் மானேக்ஷா எச்சரிக்கை விடுத்த மாதிரி,

பாகிஸ்தான் நம்ப பாரதத்திடம் சரணுகதி அடைவதைத் தவிர இனி வேறே வழியில்லையாக்கும் !" என்ருள். அவள் பேச்சே அவளைச் சுட்டிருக்க வேண்டும். 'அப்பா கூட அத்தான் கிட்டே சரண் அடைந்ததாலேதானே இப்போது விடுதலை அடைய முடிஞ்சிருக்கு !' என்று தர்க்கரீதியில் ஓர் எண்ணத்தை உருவாக்கி, அதற்காக வருந்தவும் தயாராஞள் அவள். தன் தந்தை சிந்தனை வயப்பட்டு காரின் ஆசனத்தில் பிரமை பிடித்த பாங்கில் உட்கார்ந்திருந்ததைக் கண்டதும், அவளுடைய பெண்மனம் மேலும் குழம்பியது. சிற்றப்பா தனக்குச் செய்தி சொல்லி, தான் உடனடியாகப் புறப்பட்டு வராமற் போகவே, அத்தானுக்குத் தகவல் தெரிவித்து வரவழைத்து விட்டு, அவர் வேலைக்குப் போய்விட்டிருப்பார் போலிருக்கிறது என்றும் அவள் ஊகம் செய்து கொண்டாள். அப்பாவும் அம்மாவும் முன் போல ஒருங்கிணைந்து வாழும் நாள் இனி என்று வரப் போகிறதோ என்றும் குமுறினுள் !

"மஞ்சுளா, ஏன் என்னவோ போல இருக்கே?" என்று அன்புடன் கேட்டான் அவன் —ஞானசேகரன்.

" எப்போதும் போலத்தான் இருக்கேன், அத்தான் !"

"அப்படியா ? சரி, மஞ்சுளா ?... மாமாவோடு நீயும் எங்க பங்களாவுக்குப் புறப்படு. வா, போகலாம்." என்று பாசத்துடன் கோரினுன் ஞானசேகரன்.

சித்திரமாக நின்றவள், நிலை மாறினுள்; அவனைச் சஞ்சலத்தோடு ஆழ்ந்து நோக்கினுள். "அத்தான், என்னைப் பொறுத்த வரை, மன்னிக்கும் ட்யூட்டியைத்தான் கொடுக்க நேரிடுது ! என்ன செய்யட்டும் ?... ஆல் ரைட் ! அப்பா விஷயம் இன்னமும் சஸ்பென்ஸாகவே இருக்குதுங்களே? .. அப்பா ஏன் கைது செய்யப்பட்டாங்களாம் ? " என்று நிதானமான ஏக்கத்துடன் வினவினுள் மஞ்சுளா,

சுந்தரரேசனின் பக்கம் பார்வையைத் திசை மாற்றுமலேயே ஞானசேகரன் பேசினுன் : "அத்தை சினிமாவிலே நடிக்கப் போலதாகக் கேள்விப்பட்டு ஆத்திரமடைந்திருக்கிறுர் மாமா. மத்தியானம் இவர் குடிபோதையில் இந்தப் பக்கமாக வாய் பேசாமச் நடமாடிக்கிட்டிருக்கையிலே, அத்தை போய்க்கினு இருந்த டாக்சி ரிப்பேராகி நின்னுருக்கு அத்தையைக் கண்டதும் மாமாவுக்குப் புத்தி தடுமாறி, ஆத்திரம் தலைக்கு ஏறி, கடைசியிலே அத்தையைக் 'கன்னு பின்னு' வென்று திட்டிக் கிட்டுணா அவங்களை நையப் புடைச்சிருக்கார். அத்தோட நின்றிருந்தால், முச்சந்தியிலே நடந்த குடும்பச் சண்டையாக ஆகியிருக்கும். ஆனு, மாமா பிச்சுவாவை எடுத்து அத்தையை நோக்கிக் குறி பார்த்த சமயத்திலே, விதியாட்டம் எஸ். ஐ. மோட்டார் சைக்கிளிலே குறுக்கிட்டதாலேதான் இந்த மட்டோடு முடிந்தது : பயங்கர விபரீதம் எதுவும் நடக்காமல் தப்பின வரை நல்ல காலம்தான் ! அத்தை கையிலே ஒரு வாக்கு மூலம் வாங்கிக்கினு அவங்களை அந்த டாக்ஸியிலேயே அனுப்பிச்சிட்டு, உன் அப்பாவைக் கைது செய்திருக்கிறுர் எஸ். ஐ. உன் அம்மாவைக் கொலை செய்ய முயற்சி செய்ததாக 'சார்ஜ் ஷீட்' உருவாகியிருக்கு; சட்டத்தின் பிடியிலேருந்து அவ்வளவு சுலபமாகத் தப்பிக்க முடியும்னு எனக்குத் தோணல்ல, மஞ்சுளா ! நீ நேரத்துக்கு வராததாலே, மாமாவுக்கு என் ஞாபகம் வந்திருக்கு. சேது மூலம் தகவல் கிடைச்சதும், பதறித் துடிச்சுப் பறந்து வந்தேன். நபர் ஜாமீனில் என் மாமாவை — உன் அப்பாவை இம்போதைக்கு விடுதலை செய்தாச்சு ! . சட்டத்திலே எந்த 'செக்ஷன்' எப்படி உருவெடுந்து உன் அப்பாவுக்கு என்ன தீர்ப்புப் படிக்கப் போகுதோ அந்த உண்மை பகவானுக்குத்தான் வெளிச்சம் ! அதற்காக நீ இருட்டிலே புழுங்கி உழல வேண்டிய கட்டாயம் கிடையாது. என் அப்பா கையிலே கலந்து ஆக வேண்டியதைப்பற்றி யோசிப்போம் ! "

ஞானசேகரன் பேசி முடித்தான்.

" தெய்வமே! " என்று நெடுமூச்செறிந்தாள் மஞ்சுளா. பாசத்தின் நெகிழ்ச்சியில் அவள் கண்கள் கலங்கித் துடித்தன. குனிந்த தலை நிமிராமல், ஞானசேகரனின் வாக்குமூலத்தை 'உம்' கொட்டிக் கேட்டுக் கொண்டே வந்தவள், அவனுடைய பேச்சின் தொனியை மறுபடி எண்ணிப் பார்த்த தருணத்தில் அவள் தன் வசம் இழக்க நேரிட்டது என்னவோ, உண்மை தான். உண்மைக்காக எதையும் இழக்கலாமென்று சொல்ல வில்லையா விவேகானந்தர்? ஆனால் எதற்காகவும் உண்மையை இழக்கக்கூடாது என்று அதே அடிகளார் ஆணையிட்டிருக்கி ருரல்லவா? அவள் புதியபலம் கைவரப் பெற்றவளாக, தலையை நிமிர்த்தலானாள்.

" மஞ்சு!... " என்று விளித்தான் மஞ்சுளாவின் மாமன் மகன்.

" நான் மஞ்சுளா, அத்தான் மஞ்சுளா! " என்று விழித் தாள் ஞானசேகரனின் அத்தைப் பெண்.

ஞானசேகரனின் முகச் செழிப்பம் ஏனோ சுருங்கி விட்டது. எதையும் மெல்லியதாகவே எடுத்துக் கொள்ள விரும்புகிற பாவ னையில் அவன் ஒரு புன்னகையை வெளியிட்டபடி, என்னவோ கூற வாயெடுத்தான்.

ஆனால் மஞ்சுளாவோ அதற்கு இடம் கொடுக்காமல், " அப்பாவை உங்க விருப்பப்படி உங்க வீட்டுக்கு ஊஹூம், உங்க பங்களாவுக்கு அழைச்சிட்டுப் போங்க. நான் என் நிழ லுக்கு புறப்படுகிறேன், இப்பவே மணி எட்டாகப் போகுதுங்க, அத்தான்! " என்று தெரிவித்தாள்.

எதையோ பறிகொடுத்தவன் போன்று துடியாய் துடித் தான். தன் நெற்றியைப் பற்றி, எதையோ சொல்லவோ கேட்கவோ தவித்தான்.

" அத்தான், நாளைக்கு எனக்கு லீவு! "

" ஓ ! ஆமாம்; நானும் அதை மறக்கவில்லை. நாளைக்கு நான் உன்னைச் சந்திக்கலாமென்றிருக்கிறேன்! "

" அப்படிங்களா, அத்தான்?... எனக்கு நாளைக்கு வேறொரு முக்கியக் கடமை காத்திருக்குதுங்க! "

" ஓ!... அப்படியா ம...ஞ்...சு...ளா? "

" ஆமாங்க, அத்தான் " என்று கூறினாள் மஞ்சுளா, அரைச்சிரிப்புடன். " நாளை என் அப்பாவையும் அம்மாவையும் சந்தித்தாக வேணும் நான்! " என்றாள், உரத்த—உறுதியான குரலில்.

ஞானசேகரன் மறுபேச்சாடவில்லை! மஞ்சுளா ஏறிட்டு விழித்தபோது, அங்கே அந்த ரோஜா வண்ணக் கார் காணப் படவில்லை!

## 8. பூலோக ரம்பை

உதயசூரியனின் தங்கக் கிரணங்கள் நடுக்கூடத்திற்குள் கேள்வி முறையில்லாமல் நுழைந்து கொண்டிருந்தன. மஞ்சுளா இப்போதுதான் விழித்தாள்; கெட்ட கனவு கண்ட மாதிரி விழிகளை மூடிமூடித் திறந்தாள். கலக்கமும் கலவரமும் அவள் உள்ளத்தைவிட்டு இன்னமும் நீங்கினபாடில்லை. அவள் எழுந்தாள், தவம் கலைந்துவிட்டதா, என்ன? தூக்கம் கண்களிலே சொக்கியது. இமைகளை வளைத்திருந்த மென்மையான யதைப்பகுதிகள் வலித்தன. உடலின் உபாதைகளைப் பொருட்படுத்தக்கூடிய நேரமல்ல இது. மனம் நோய் நீங்கினால், எல்லாமே சரியாகி விடும்; சரிப்பட்டுவிடும்! ஆனால் வழி...? விவேகமும் சிந்தனையும் மீண்டும் சுழலத் தொடங்கின. எட்டாத் தொலைவினிலே

அந்த நம்பிக்கை துருவ நட்சத்திரமாக மீண்டும் ஒளிக் காட்டத் தொடங்கியது. கூடத்தினுள்ளே அங்குமிங்குமாக அலைந்தாள் அவள். மனச்சுமைகளை இறக்கிவிட இடம் தேடினளோ? புறப்பட்ட பெருமூச்சுக்கு நடுவில் அழகான புன்னகையும் புறப் படத் தவறவில்லைதான்!

மஞ்சுளா அப்பா படத்தை ஏறிட்டு விழித்தாள். 'அம்மா! அப்பா!'—அவள் நெஞ்சம் விம்மியது. விழிகள் இறங்கின; ஈரச் சொட்டுக்கள் உதிர்ந்தன.

ஞாயிற்றுக் கிழமையென்ருல், அவள் இந்நேரம் காப்பி குடித்து, சமையல் செய்து, குளியலையும்கூட முடித்துக் கொண்டிருப்பாள். இன்றைக்கு அந்த வழக்கத்திற்கும் சோதனை வந்துவிட்டது.

எரி அடுப்பு எரிந்தது. பால், காப்பி ஆனது. 'கப்சிப்!' மஞ்சுளா காப்பி அருந்துகிருள்!—சின்னஞ்சிறு பாப்பா மாதிரி, வாய்க்கு வாய் 'நப்பு' கொட்டியபடி, சுவைத்துப் பருகினள்.

பிறகு எழுந்து பின் கட்டிற்குச் சென்ருள் அங்கே, அண்ணல் காந்தி அடிகளின் படத்தின் அடியில் மலர்மாலை சூழக் காட்சியளித்த பாரத வீரன் குமாரலிங்கத்தின் நிழற்படத்தைத் தன்னை மறந்த நிலையில் தொழுது கொண்டிருந்தாள் நிர்மலா. அக் காட்சியைத் தரிசித்த மஞ்சுளா உட்புறம் நடந்தாள். அவளுடைய கரங்களும் குவிந்தன. கொட்டாவியோடு தும் பலும் வந்தது. சத்தம் கேட்டதும் 'சடக்' கென்று பின்புறம் திரும்பினுள் நிர்மலா.

உணர்ச்சிகளின் சுழிப்பில் கட்டுண்டிருந்த மஞ்சுளா நாசூக்காகச் சமாளித்துக் கொண்டு, நிர்மலா, உனக்காக காப்பி கொண்டாந்திருக்கேன், என்ருள், அன்பு மேலிட,

நிர்மலாவின் விழிகள் இப்பொழுது துல்லியமாகப் பளிச் சிட்டன. "ஓ! இன்னிக்கு லீவு நாளா? எனக்கு நினைவே இல்லை, மஞ்சு!" என்ருள்.

அரைச் சிரிப்புடன், "உன் நினைவை எல்லாம்தான் உன் அத்தான்கிட்டே காணிக்கையாக வச்சிட்டியே, நிர்மலா !" என்றாள்.

நிர்மலா மஞ்சுவின் கையிலிருந்த டப்ராவை வாங்கி, காப்பியைச் சுவைத்தாள்,

" சூடு போதுமா ?"

" சூடும் போதும் ; சுவையும் போதும் !"

" சந்தோஷம் !"

" மஞ்சு, ராத்திரி நீ ரொம்ப லேட்டாய்தான் வீடு திரும்பினாயோ ?"

மஞ்சுளா எதிர்பார்க்காத வினாவல்ல இது ? "ஆமாம் ; வெளியே கொஞ்சம் வேலை இருந்திச்சு !" என்றாள்.

" ஓஹோ ! .. உன் அத்..." என்று பேச்சைத் தொடங்கிய நிர்மலா, சமர்த்தாக, " ஓ, அப்படியா ?" என்று கேட்டுவிட்டு மஞ்சுளாவை ஓரக் கண்ணால் பார்வையிடலானாள், மஞ்சுளா தன் அத்தானின் காதலை அங்கீகரிக்க மறுத்துவிட்ட செய்தி நிர்மலாவின் பார்வையில் கீறிக் கிடந்தது !

உடன் பிறந்த சகோதரிக்கும் மேலாகத் தன்னிடம் உயிரையே வைத்துப் பழகிவரும் சிநேகிதியின் தடுமாற்றத்தை மஞ்சுளா புரிந்து கொண்டாள்.

தன் ஆசை அத்தான் குமாரலிங்கத்தின் படத்திற்குச் சூட்டியிருந்த மலர் மாலையை கனவுகள் சிரிக்க நெருடியவாறு இருந்த நிர்மலாவைப் பரிவுடன் நோக்கிய மஞ்சுளாவின் விழிகளில் ஈரம் கசிந்தது. "நிர்மலா !" என்று கூப்பிட்டாள்,

" என்ன, மஞ்சு ?"

"இந்தப் பூமாலை அற்புதமாக மணக்குதே ?"

"ஆமாம்; என் அத்தானுக்கென்று ஸ்பெஷலாகப்பூக்கடையில் ஆர்டர் கொடுத்துக் கட்டச் சொன்னேன் !"

"அப்படியா ? ஏன் ?"

சொல்வதா, கூடாதா என்று மஞ்சுளா போராடினாள். நெஞ்சுக்கு நல்லதென்று படுவதைச் சொல்லிப் பழகியவள் அவள். "நிர்மலா ! நீ இப்போது போட்டிருக்கிறாயே இந்த மாலை, உன்னோட அத்தானுக்கல்ல ! உன் அத்தானுடைய போட்டோவுக்கு ! .. இல்லையா ?" என்று கேட்டாள்.

"ஆமாம் ! ஆனால், எனக்கு என் அத்தானின் போட்டோ வெறும் போட்டோவாகத் தோணவேயில்லை, மஞ்சு !... என் அன்பு அத்தான் குமாரலிங்கம் புகைப்பட ரூபத்திலே உயிரும் உயிர்ப்புமாகவும் ரத்தமும் நிணமுமாகவும், நேசமும் பாசமுமாகவும் உருக்கொண்டு வந்து உட்கார்ந்திருப்பதாகவே என் மனசுக்குத் தோணுது !...மெய்ம் மறந்து பரவசத்துடன் பேசினாள் நிர்மலா.

மனம் நெகிழ்ந்தாள் மஞ்சுளா, "உன் நினைவும் நிலையும் எனக்கு விளங்காமல் இல்லை, சகோதரி. உன் மனசுக்கு ஆறுதலும் அமைதியும் கிடைக்கணும்னுதான், நீ உன் அத்தானோட படத்துக்கு மாலை சூட்டி அழகு பார்த்துக்கினு இருக்கிறாய் என்பதையும் என்னாலே உணர்ந்துக்கிட முடியுது. ஆனால்...?" என்று நிறுத்தினாள் அவள்.

"சொல்லு, மஞ்சு !"

"உன் அன்பு அத்தான் மிஸ்டர் குமாரலிங்கம் பாரதத் தாயின் வெற்றித் திருமகனாக கூடிய விரைவில் உன்னை வந்து சந்திப்பாரல்லவா? அப்போது உன் ஆசைதீர உன் இஷ்டப்படி அவருக்கு வகைவகையான மலர் மாலைகளை நீ சூட்டி ஆனந்தப்படு, நிர்மலா. ஆனால், இப்போது...... இப்போது ... !"

"சொல்ல வந்ததைச் சொல்லிவிடு, மஞ்சு அக்கா !"

"உயிரோடு இருக்கிறவங்க படத்துக்குப் பூமாலை சூட்டுறது நம்மோட தமிழ்ச் சமுதாயத்தின் பாரம்பரிய மரபு இல்லையாம்; பெரியவங்க சொல்லக் கேட்டிருக்கேன் !"

"ஐயையோ, எனக்குத் தெரியாமல் போயிட்டுதே, மஞ்சு?" என்று உருகித் தவிக்கலானாள் நிர்மலா. நயனச் செம்புகளில் நீர்—சுடுநீர் தளும்பி வழியத் தொடங்கியது. மஞ்சுளாவின் முகத்தோடு தன் முகத்தைச் சேர்த்து அணைத்துக் கொண்டு, "அக்கா... அக்கா ! என் அன்புத் தெய்வத்துக்கு என்னோட தெரியாத்தனத்தினாலே ஒரு குறையும் வந்திடாதே, அக்கா ?" என்று பரிதாபமாகக் கேட்டாள், விக்கலும் விம்மலும் வெடித்தன,

மஞ்சுளா தன் கண்களைத் துடைத்துக்கொண்டு, "உன் அத்தானுக்கு ஒரு குறையும் வைக்க மாட்டான் ஆண்டவன். ஆண்டவனை எதற்கும் எபபோதும் நம்புறதைத் தவிர நமக்கு வேறு வழி ஏது, அம்மா ? உன் அத்தான் சாமான்யமான வரா, என்ன ? நம்ப பாரதத் தாயின் மானத்தைக் காப்பாற்ற தன் உயிரையே பயணம் வச்சுப் போரிட்டுக் கிட்டிருக்கிற மதிப் புச்குரிய ஒரு வீரராயிற்றே உன் அன்பு அத்தான் !" என்று தேற்றவிட்டு. அன்புடன் தோழியின் கண்களையும் துடைத்து விட்டாள் !

"நல்ல காலம், நான் பிழைச்சேன் !" என்று பெருமூச்சு விட்டாள் நிர்மலா.

பாதிக் கவலை என்ன, முழுக் கவலையுமே தீர்ந்துவிட்ட மாதிரி நிர்மலாவை நன்றியுணர்வோடு பார்த்துச் சிரித்தாள் மஞ்சுளா. "அது சரி, இன்னொரு பாதிக் கவலையைப் பாக்கி வைச்சிருக்கியே நிர்மலா ? அது என்ன ?" என்று விசாரித் தாள்.

"அதுவா ? உன்னோட எதிர்கால வாழ்க்கை பற்றி உனக் குள்ள கவலைதான் அது !"

மஞ்சுளா பெருமூச்செறிந்தது நிர்மலாவின் கவலைக் கணக்குக்கு ஒரு மௌன சாட்சியமாக அமைந்திருக்குமோ, என்னவோ?

"சரிதானே நான் சொன்னது?"

"என்னுடைய நிர்மலா சொன்னால் புள்ளி பிசகுமா?"

"வெரி குட்! அப்படியானால், உன்னுடைய வருங்கால வாழ்க்கையைப் பற்றி, நீ ஒரு முடிவுக்கு வந்துவிட்டாயல்லவா? அப்படியென்றால், மணவாழ்க்கை ஏற்க எப்போது நாள் பார்த்திருக்கிறாய்? சொல், மஞ்சுளா; சொல்லேன்!" என்று கதை கேட்கத் துடித்து, தோழியின் கைகளைப் பற்றிக் கெஞ்சினாள் நிர்மலா.

நிர்மலா, நான் மஞ்சுளா இல்லை, மஞ்சு வாக்கும்! என்றாள் மஞ்சுளா.

"உண்மைதான்; நீ மஞ்சுதான்! நீ என் பிரியமுள்ள மஞ்சுவாச்சே? சொல், நான் கேட்டதற்கு விடை கொடேன்!"

"இதோ, விடை கொடுக்கிறேன். நீ இங்கேயே இரு. நான் குளித்துப் பலகாரம் சாப்பிட்டு, என் அம்மா-அப்பாவை சந்திக்கப் போறேன். ராத்திரிப் பேச்சுக்கு நமக்கு விஷயம் வேண்டாமா? ஓ...கே...?" என்று சொல்லிச் சிரித்த வண்ணம், காப்பிப் பாத்திரமும் கையுமாக விடை பெற்றாள் குமாரி மஞ்சுளா!

வேதாளம் திரும்பவும் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டதாம்!—மனமும் அப்படித்தான். ஆனால் ஒன்று. இந்த மனத்திடம் விக்கிரமாதித்தன்—பட்டி ஜம்பமெல்லாம் சாயாது. பின், மன வேதாளம் பழைய கதையை ஏடு புரட்டிப் பார்க்கக் கேட்க வேண்டியதில்லைதான்!

மஞ்சுளாவின் மனம் மீண்டும் தன் தாய் தந்தையின் நினைவிலேயே ஒன்றத் தொடங்கியது. ஒன்றன் பின் ஒன்றாக

நினைவுகள் மனவுணர்வுகளில் கூடுவிட்டுக் கூடு பாயவும் தொடங்கின. கண்ட கனவும், கொண்ட கொள்கையும் பலித மடைந்து, பெற்றோரை இசைந்திருக்கச் செய்ய வேண்டுமென்று தவம் இருந்த தருணத்தில், அவ்விருவருக்கும் ஊடே இருந்த பிளவைப் பொற் பிளவாக ஆக்கித் தொலைத்ததே வேப்பேரி காவல் நிலைய நிகழ்ச்சி ! அப்பா சுந்தரேசன் கைது செய்யப் பட்டதற்கு இப்படியொரு காரணம் அமையுமென சற்றும் எதிர் பார்த்திருக்க வில்லை மகள் மஞ்சுளா, சட்ட விதியும் விதியின் சட்டத்தையும் எதிர்கொள்ளும் ஒரு மன வைராக்கியத்துடன் தன் தாயையும் தந்தையையும் சந்திக்கத் தயாராகிக் கொண் டிருக்கின்றாள் மஞ்சுளா.

காலம் ஒரு புள்ளிமான்.

குளியலறைக்குச் செல்வதற்காக அவள் டவலைத்தேடினாள்; டவல் கிடைத்தது. டவலின் அடியில் பதுங்கிக் கிடந்த டைரி யும் அதன் கீழே ஒளிந்திருந்த லெட்டர் பேப்பர்களும் சேர்ந்து கிடைத்தன. குறிப்பறிந்து, ஒரு கடிதத் தாளை எடுத்தாள் அவள். 'அன்பிற்குரிய நண்பர் உயர்திரு மாசிலாமணி அவர் கட்கு' என்று துவங்கி அக்கடிதத்தைத் தொடர முனைந்த பொழுது, வாடிக்கைக் காய்கறிக்காரி 'தங்கச்சி' தங்கச்சி !' என்று ராகம் போடவே, அவள் எரிச்சலுடன் வாசலுக்கு விரைந்தாள்.

அந்தக் காய்கறியின் வீரப் பிரதாபங்களைப் பின்னுரையாக்கி விட்டு முடிவில்தான் திரையைக் கிழித்தாள் காய்கறிக்காரி.

பொன்னாங்கண்ணிக்கீரை!...

மஞ்சுளாவுக்குத் 'திக்' கென்றது. சமயோசிதமாகச் சமா ளித்துக் கொண்டாள். "இருபத்தஞ்சு காசுக்குக் கொடு" என்று கூறிக் காசைக் கொடுத்தாள்.

"போதுமா, தங்கச்சி?"

"இப்போதைக்குப் போதும். நாளைக்கு என் கல்யாணத் துக்கு நிறைய வாங்கிடுறேன்!"

"புலே!... நாளைக்கா தங்கச்சி உன் கல்யாணம்? அப்ப டின்னு, கூடையோட இப்பவே வாங்கிப் போடேன். இந்த மாதிரி சரக்கு நாளைக்குக் கிடைக்காதாக்கும்! கொத்தவால் சாவடிலேகூட அகப்படாது!"

மஞ்சுளாவால் சிரிப்பை அடக்க முடியவில்லை. "தை மாசம் தான் எனக்குக் கல்யாணம். அப்போதான் முகூர்த்த நாள் பொருந்தி வருது. கல்யாணத்தப்போ உன் கையிலே ஒரு வண்டி பொன்னுங்கண்ணிக்கீரை வாங்கிக்க மாட்டேனா நான்?" என்று சமாதானம் சொல்லி, அவளை அனுப்பி வைத்தாள் மஞ்சுளா.

மணி —எட்டு இருபது.

சமையற்கூடம் வந்தது.

மஞ்சுளா, சுட்டுவைத்த 'திடீர் தோசை'யில் நாலைப்பிட்டு எண்ணெய் கலந்த மிளகாய்ப் பொடியைத் தொட்டுக் கொண்டு வாயில் போட்டுக் கொண்டாள். விக்கல் எழுந்தது. அம்மா நினைக்கிறாளோ? அல்லது, அப்பாதான் நினைக்கிறாரோ?

அப்போது, வாசலில் வந்து நின்ற அழகான காரை விட்டு 'மகாத்மா பதிப்பக'த்தின் உரிமையாளரான செந்தில்நாயகமும், அன்றொரு நாள் ஞானசேகர் அறிமுகப்படுத்தி வைத்த அழகி தமிழரசியும் இறங்கினார்கள்!...

## 9. வரம்

---

தான் அலுவல் பார்க்கும் பதிப்பகத்தின் முதலாளியான செந்தில்நாயகத்தையும், தன் அன்பு அத்தான் ஞானசேகரனால் அறிமுகப்படுத்தப்பட்ட அழகி தமிழரசியையும் ஒருசேரச் சந்தித்த

தும், மஞ்சுளா பேராச்சரியம் எய்தலானாள். அன்பின் மரியா தையோடும், அழகான குறுநகையோடும் அவ்விருவரையும் நோக்கி, " வாங்க, ஐயா ... வாங்க தமிழரசி " என்று முகமன் மொழிந்தாள். ஆனால் அவளது உள்ளுணர்வோ, "யார் இந்தத் தமிழரசி? திருவாளர் செந்தில்நாயகத்திற்கும் தமிழரசிக்கும் என்ன சம்பந்தம்?" என்று நச்சரித்துக் கொண்டேயிருந்தது. அவளுக்கு ஏன்ன தெரியும்?

வெளிச்சத்தில் பால் நுரையாக ஜிப்பா பளபளக்க, ஜரிகை வேட்டி தரையில் புரள, முன்னே நடந்தார் செந்தில் நாயகம். இளங்காற்றில் கறுப்பும் வெள்ளையுமாக சிலமுடிகள் பறந்தன. "வாம்மா" என்ற சொல்லுக்குக் கட்டுப்பட்டவள் போன்று புன்னகையுடன் அவரைப் பின்தொடர்ந்தாள் தமிழரசி. பருவத் தழைப்பும் நாகரீக மோகமும் பகடைக் காய்களாகி அவளிடம் விளையாடின போலும்!

" உட்காருங்க! "

கூடை நாற்காலிகளில் நாகரீகமாக அமர்ந்திருந்த அவர்கள் இருவரையும் ஒன்றாகப் பார்க்க நேர்ந்ததும், மஞ்சுளாவிற்கு ஓர் ஊகம் துளிர்த்தது. 'ஆமாம் ;

தமிழரசி அவரோட மகளாகத்தான் இருக்க வேணும்' என்று எண்ணினாள். 'இவங்க ரெண்டு பேரும் என்னைத் தேடி வந்ததுக்குக் காரணம் என்ன?' குழம்பினாள்!

" அம்மா மஞ்சுளா! " என்றார் செந்தில்நாயகம்.

மஞ்சுளா அவரருகில் வந்து நின்றாள்.

" நீயும் உட்காரம்மா! "

" பரவாயில்லீங்க ஐயா!... ஒரு நிமிஷத்திலே இதோ வந்திடறேனுங்க! " என்று உள்ளே விரைய முயன்றாள் மஞ்சுளா.

குறிப்பறிந்த செந்தில்நாயகம் தடுத்தார். " அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். நாங்க பங்களாவில் டிபன் சாப்பிட்டுத்

தான் கிளம்பினேம். நீயும் எங்கோ புறப்பட்டாய், வாரத்திலே ஒரேயொரு நாள் லீவ் உனக்கு. எனக்கும் ஏகப்பட்ட அலுவல் இருக்கம்மா " என்றார். பிறகு பக்கவாட்டில் திரும்பிப் பார்த்துக் கொண்டே, " எங்க தமிழரசி உன்கிட்ட என்னவோ பேசணுமாம். தமிழரசி உன்னைப் பற்றிச் சொன்னதும், பெரிதும் அது நீயாகத்தான் இருக்கணும்னு நினைச்சேன், உன் அத்தான் ஞானசேகர் காலம்பற என் ஊகத்தை உறுதிப்படுத்திட்டார்! " என்று முடித்தார். சிகரெட் பற்ற வைத்துப் புகையை உறிஞ்சி உமிழ்ந்தவர், எதையோ மறந்துவிட்டாற்போலப் பதறிவிட்டு, " அம்மா மஞ்சுளா, ஒரு முக்கிய விஷயத்தை மறந்திட்டேன், தமிழரசி என்னுடை ஒரே மகள். ஆசைக்கும் ஆஸ்திக்கும் தமிழரசிதான் எங்களுக்கு !"... என்றும் குறிப்பிட்டார்.

" ஓஹோ! அப்படிங்களா? " என்று புன்னகை செய்தாள் மஞ்சுளா. உள்ளமோ இனம் புரியாமல் தத்தளித்தது.

அருமைக் குமரியின் மைவிழிகளிலே கிறுக்கிக் கிடந்த தவிப்பைப் புரிந்து கொண்டு " வேணும்னு உள்ளே போய்ப் பேசம்மா " என்று பரிவுடன் உரைத்தார் தந்தை. அவர் குரல் கனிந்திருந்தது. கன்னிப் பெண்கள் இரண்டு பேரும் நடையைத் தாண்டி உள்ளே சென்றனர்.

" நீங்கள் எதானாலும் சொல்லுங்க; தமிழரசி ! " என்று கேட்டுக் கொண்டாள்மஞ்சுளா. தகப்பனாரின் துணைகொண்டு வீடு தேடி வந்து தன்னிடம் பேசுகிறஅளவுக்கு அப்படி என்ன முக்கியமான சமாசாரம் இருக்குமென்று சிந்தித்துப் பார்க்கையில், அன்றொரு நாள், புஹாரி வாசற்புறத்தில் அத்தான் ஞானசேகரோடு தமிழரசியையும் சேர்த்துச் சந்திக்க நேர்ந்த நடப்பும், அத்தான் பேரில் கூடுதலான ஒட்டுறவு பூண்டு தமிழரசி டாம்பீகமாகப் பேசிய விதமும் அவளுடைய நெஞ்சத் திரையில் படம் காட்டின.

சிறு பொழுது மௌனம் சாதித்த செந்தில்நாயகத்தின் தவப்புதல்வி, தொண்டையைக் கனைத்துக் கொண்டு, " மஞ்சு

சுளா !'' என்று அழைத்தாள். பிறகு மௌனம் ; ஒரு மயக்கம்.

ஏறிட்டுப் பார்வையிட்டாள் மஞ்சுளா, தமிழரசியின் குறுகுறுத்த கண்களினூடாக ஓர் ஆர்வக்கனல் கொழுந்து விட்டெரிந்ததையும் அவள் கண்டு கொண்டாள். அவள் தூண்டிவிட நினைத்த நேரத்தில், தமிழரசியே பேச வாயெடுப்பதை அறிந்து, அந்தப் பேச்சைக் கேட்கத் துடிதுடித்தாள் மஞ்சுளா.

''மஞ்சுளா, நான் இப்போன உங்களிடம் என்ன சொல்லப் போறேன்னு உங்களாலே யூகம் செய்ய முடியும்னு நான் எதிர்பார்க்கிறேன்.''

''நான் துளிகூட எதிர்பார்க்காததெல்லாம் என்னோட வேடிக்கையான வாழ்க்கையிலே நடந்துக்கிட்டு இருக்கிறது சகஜமாகிட்டது. இந் நிலைமையிலே, நீங்க இப்போது என்ன சொல்லப் போறீங்க என்கிறதையெல்லாம் யூகிக்கக் கூடிய மனத் திராணி எனக்கு இல்லீங்க, தமிழரசி. என் கையிலே சொல்ல வந்ததை நேரிடையாகச் சொல்லிடுங்க. நான் கேட்கச் சித்தமாயிருக்கிறேன். நீங்க என்னோட முதலாளியின் அருமைத் திருமகள் !''

''பெண்ணுக்குப் பெண் ஆசைப்படும்படியான உங்க அழகைப் போலவே, உங்க பேச்சும் ரொம்ப நேர்த்தியாக இருக்குது மஞ்சு. ஆனல், ஒன்று. நான் உங்க 'பாஸி'ன்—முதலாளியின் மகளாக இப்போது உங்க முன்னே பேசிக்கிட்டு இருக்கல்லே. உங்களோட அன்புச் சிநேகிதியாகத்தான் வந்திருக்கிறேன். மிஸ்டர் ஞானசேகர் — எஸ் ... உங்க அத்தான் அன்றைக்கொரு நாள் நம்ப ரெண்டு பேரையும் அறிமுகப்படுத்தி வைத்தாரல்லவா? அந்த நட்பின் உறவோடுதான் நான் இப்போது உங்களிடம் ஒரு வரம் கேட்க வந்திருக்கிறேன் !'' — அரைக் கண் மூடிய நிலையில் பேசினாள் தமிழரசி. பூராவாகச் சரிந்து விழுந்து விடவில்லை, பட்டுப் புடவை, 'பிரோஸியர்' தூக்கலாகவே அழகு காட்டியது.

"வரமா ? என்னிடமா ? " என்று மலைத்தாள் மஞ்சுளா.

"ஆமாம் !"

மஞ்சுளா வேதனையும் விரக்தியும் பின்னலிடச் சிரிக்கலானாள். "வரம் கொடுக்கிறதுக்கு நான் ஒன்றும் தெய்வம் இல்லிங்களே, தமிழரசி ? "

" இருக்கலாம் ; ஆனால், நீங்க தமிழச்சி, தமிழ்மகள் ! "

"அதற்காக ?..."

"நட்பின் நிமித்தம் எதையும் விட்டுக் கொடுக்க, ஏன், தியாகம் செய்யக் கூடப் பழகியவள் தமிழச்சி அந்த மனோபலம் அவளுக்குத்தான் உண்டு ! "

"நாடகத்திலே பேசுறதாட்டம் ரொம்ப அழகாகப் பேசுகிறீங்களே !"

எழிலார் மார்பகத்தின் சதைத் திரட்சிகளிலே தவழ்ந்து கிடந்த வைர நெக்லஸ் பளபளக்க, அடிவயிறு சிலிர்க்க காது வளையங்கள் 'டால்' அடிக்க, செல்வ மகள் நெளிந்தாள். "நாடகத்திலே வாழ்க்கையைக் காண முடிகிறபோது, வாழ்க்கையிலே நாடகத்தைக் காண வேண்டியதும் இயல்பு தானே, மஞ்சுளா ?" என்று கூறி, 'லிபிஸ்டிக்' படிந்திட்ட இதழ்களிலே கவர்ச்சிமிக்க சிரிப்பை உதிர்த்தாள் தமிழரசி.

"அழகான, தர்க்க ரீதியான வாதம் !..." என்றாள் மஞ்சுளா.

"வாழ்க்கைக்கு வாதம் மட்டும் போதாது ; பிடிவாதமும் வேணும் !"

"ஓ, அப்படிங்களா ? "

" பின்னே ? " அவளையும் மீறிய வகையில் ஓர் ஆணவம் குரலில் இறுகியது. அவள் : தமிழரசி.

மஞ்சுளாவின் அற்புதமான இயற்கை எழிலை ரசிப்பவள் போன்று அவளைக் கூர்ந்து கவனித்து விட்டு, பின்னர் செயற்கையான ஒரு புன்னகையுடன் தொடர்ந்தாள் :

"இதோ, விஷயத்துக்கு வந்திட்டேன். எங்க பங்களாவுக்கு அடுத்தாற்போல மிஸ்டர் ஞானசேகரோட பங்களா என்றைக்கு வந்திச்சோ, அன்றிலிருந்து அவர் என் இதயத்திலே குடியிருக்கத் தலைப்பட்டுவிட்டார். என்னுடைய இந்த முதல் காதலே இதுவரையிலும் என்னுடை வாழ்க்கையாகவும் அமைந்து வருகிறது. என்னுடைய இந்த முதல் காதலையே என்னுடைய வாழ்க்கைக்குச் சாட்சியாக வச்சு என் அன்பிற்கினிய காதலர் மிஸ்டர் ஞானசேகரின் — ஆமாம், உங்க அத்தான் ஞானசேகரின் அன்புக் கரங்களை ஒரு முகூர்த்த நாளில் பற்றிப் பிடிக்கக் கனவுகண்டுக் கொண்டு இருக்கிறேன். இந்தத் தகவலை அவர் கையிலே சொல்லி அவரோட நல்ல பதிலை ஆசையாக எதிர்பார்த்த சமயத்திலே, காலம்பற அவர் ஒரு வெடிகுண்டைத் தூக்கி என்மேலே போட்டுவிட்டார். கனவில் கூட எதிர்பாராத பேரிடி இது !... மிஸ்டர் ஞானசேகர் உங்களைக் காதலிக்கிறாராம் !..." என்று குரலைத் தாழ்த்தி, அத்கிடன் நிறுத்தினாள் அவள்.

"ஸிஸ்டர் மஞ்சு !... மிஸ்டர் ஞானசேகர் இல்லாமல் என் வாழ்வு இல்லை ; எனக்கு வாழ்வே இல்லை ! இது உண்மை; 'செண்ட் பர்ஸன்ட்' உண்மை ! ஆகவே, நீங்க என் காதலில் குறுக்கிடாமல், உங்க அத்தானை எனக்கு விட்டுக் கொடுப்பீங்களா ? பெண்ணுக்குப் பெண் காட்டவல்ல உயர்ந்த பட்சப் பெருமனத்தோடு நீங்க உங்க அத்தானை எனக்கு விட்டுக் கொடுப்பீங்களா ?... நீங்க எனக்கு இந்த வரத்தைக் கொடுத்து என்னுடை தெய்வமாக ஆகிவிட்டால், எப்படியும் நான் என் முதற் காதலிலே வெற்றி பெற்றே தீருவேன் ! இது உறுதி !..." என்று வீறு கொண்டு பேசி நிறுத்தினாள் தமிழரசி.

மஞ்சுளாவின் மலர் விழிகளிலும் மாம்பழக் கன்னங்களிலும் ரத்தம் குபீரென்று கரை கட்டத் தொடங்கியது." தமிழரசி,

நான் ஏழை வீட்டுப் பெண்; உங்க பதிப்பகத்திலே வேலை பார்த்து வருகிறவள். இந்த நிலைமையிலே, எனக்குக் காதல் ஒரு கேடா?... அன்றைக்கும் சரி, இன்றைக்கும் சரி, என் மன சறிந்து யாருடைய வாழ்க்கையிலும் எந்தக் காரணத்துக்காக வும் குறுக்கிடாதவள் நான். உங்கள் காதலிலே — என் அன்பு எஜமானரின் தவமகளான உங்களோட காதலிலே தானா நான் குறுக்கிடப்போறேன்?... மனிதாபிமானத்தின் பேரிலே செய்யக்கூடிய — தார்மீகக் கடனின் பேரிலே செய்யக் கூடிய — செய்ய வேண்டிய ஒரு சாதாரணச் செயலுக்காகவா வரம் என்று பெரிய சொல்லாகப் போட்டு என்னைப் பயமுறுத்தி னீங்க?... தமிழரசி, இனி என்னைப் பற்றி இம்மியும் நீங்க கவலை கொள்ளத் தேவை கிடையாதுங்க. ஆமா, என் கவலையெல் லாம் உங்களோட இன்பக் கனவு பலிக்க வேணுமே என்பது தான்!" பேச்சு முடிந்ததும் கூட, மஞ்சுளாவின் உதட்டுத் துடிப்பு ஓயக் காணோம்! மனத்தின் துடிப்பு மாத்திரம் முடிந்து விட்டதா, என்ன?... அன்பு அத்தானின் ஆசைக் காதலை ஏற்க மறுத்த ரகசியம், ரகசியமாகவே இருந்து விடட்டும்!...

"மஞ்சு!... மஞ்சு!... நீ... நீங்க என் மட்டுக்கும் தெய்வம் தான்!... உங்களுடைய இந்தத் தியாகத்துக்கு நான் உங்க ளுக்கு எப்பவுமே கடமைப் பட்டிருப்பேன். இது நிச்சயம்!... ரொம்ப ரொம்ப நன்றி, மஞ்சுளா!..." என்றாள் தமிழரசி.

தன் முகத்திரையில் பட்டுச் சிதறிய தமிழரசியின் மகிழ்ச் சிக் கண்ணீரை ஒரு துறவுப் பான்மையோடு தன் பூவிரலால் சுண்டி விட்ட வண்ணம், "தமிழரசி, எனக்காக ஒரு சின்ன உதவியை நீங்க செய்தாகணும்; செய்வீங்களா?" என்று கோரினாள். தமிழரசியிடமிருந்து விடுதலை பெற்றவுடன், மஞ்சுளா நல்ல மூச்சு விட்டாள்.

"சொல்லுங்க, மஞ்சுளா! இப்பவே செய்கிறேன்!" என்று கூறிக் கொண்டே, தன் டம்பப் பையைத் திறந்தாள் லட்சாதி பதியின் லட்சியக் குமாரி, தமிழரசி; "ஊம்; சொல்லுங்க மஞ்சுளா" என்று திரும்பவும் வேண்டினாள்.

தமிழரசியின் செய்கையின் தாத்பரியத்தைப் புரிந்து கொண்ட மஞ்சுளாவுக்கு ஆத்திரமும் வேதனையும் மூண்டது. தமிழரசி, என்னை நீங்கள் தவருக எடைபோட்டுட்டிங்கன்னு நினைக்கிறேன். உங்க கிட்டே யாசித்த அந்தச் சிறிய உதவி என்ன, தெரியுங்களா ? தயவு செய்து என்னைத் தெய்வமாக ஆக்கிடாதீங்க' வெறும் மனிதப் பிறவியான நான், தெய்வம் ஆகிவிட்டால், அப்புறம் தெய்வங்களும் வெறும் கல்லாகவே இருந்திட வேண்டியதுதான். உங்க நன்றியைப் பெறவும் எனக்கு அருகதை இல்லீங்களே?' என்று சலனமிழந்த குரலில் சொல்லிவிட்டு, ஜமக்காளத்தை விட்டு எழுந்தாள் மஞ்சுளா.

தந்தையும் மகளும் பேசிமுடியட்டுமேயென்று காத்திருந்து, பிறகு வெளிப்புறத்தில் தலையை நீட்டினுள் மஞ்சுளா.

என்ன ஆச்சரியம் !

செந்தில்நாயகமும், தமிழரசியும்ஆளுக்கொரு 'போண்டா' சுவைத்துக் கொண்டிருந்தார்கள்!

நிர்மலாவை உள்ளன்புடன் பாராட்டி வாழ்த்தியபின், புறப்பட எழுந்தார் செந்தில் நாயகம் ; "அம்மா மஞ்சுளா, உன் அன்பை எங்களாலே என்றென்றைக்கும் மறக்க முடியாதம்மா !" என்று சன்னமான தொனியில் மஞ்சுளாவிடம் நன்தி சுரக்கத் தெரிவித்துப் புறப்படலானுர். தமிழரசியும் 'டாடா' போட்டு விட்டு விடை பெற்ருள் !

மணி — பத்து — இருபது.

மஞ்சுளா தன் திட்டப்படி முதலில் அவள் தாயையும், அடுத்து அவள் தந்தையையும் காண எண்ணி; பிளாஸ்டிக் பையுடன் அறையினின்றும் வெளிக் கிளம்பிய நேரத்தில், "மஞ்சு, இந்தச் செய்தியைப் பாரேன் !" என்று துள்ளலுடன் சொல்லிக் கொண்டே, அன்றைய தமிழ்ப் பத்திரிகையில் ஓரிடத்தைச் சுட்டிக் காட்டினுள் நிர்மலா.

மஞ்சுளாவுக்குச் சிரிப்பதா, அழுவதா, அல்லது மகிழ்வதா வருந்துவதா என்றே விளங்கவில்லை !...

# 10. அடைக்கும் தாழ் !

மயிலாப்பூரில் லஸ் முனை :

குமாரி மஞ்சுளா தன்னைத்தானே ஒரு முறை ஆராய்ந்து பார்த்தாள். புறத் தோற்றம், சுறுசுறுப்புக் கொண்ட துணிக் கடையின் அலங்கார முகப்பில் 'ஷோ கேஸி'ன் உள்ளே இருக்கும் அலங்காரப் பெண் பொம்மை மாதிரி இருந்தது.

'இப்போ நான் என் அம்மாவைச் சந்திக்கப் போறேன் !' என்ற எண்ணமே அது. பாசத்தின் நெகிழ்ச்சி வெள்ளமாகப் பொங்க; குறுக்கு மறித்து ஓடிய வாகனங்களுக்குக் குறுக்கே நிற்காமல், ஒதுங்கி வழி மிதித்தி வழி நடந்தாள்.

பட்டணத்தைப் பொறுத்த மட்டில், சைனுபஜார்தான் நாகரீகத்தின் பிறப்பிடம் என்பது நேர்மையானவாதமன்று. கச்சேரி ரோடில் புதிதாக முனைத்திருந்த ஒரு புதுப்பங்களாவின் மொட்டை மாடியில் உச்சி வெயிலைக் கூடச் சட்டைபண்ணுமல், இளம் ஜோடி ஒன்று காதல் பண்ணிக்கொண்டிருந்தது. அவர்களின் திருஷ்டியில், எதிர்ப்புறத்து நிழலில் ஒதுங்கி நின்ற 'ஹிப்பி' ஜோடியும் தென்பட்டிருக்க வேண்டும். இந்த இரு வகை இணைகளுக்கும் திருஷ்டி சுற்றிப் போடவோ என்னவோ, எங்கிருந்தோ. "காதல் ! காதல் ! காதல் !..." காதல் இன்றேல் சாதல் ! சாதல் ! சாதல் ;"... என்ற பாட்டு மிதந்து வந்துக் கொண்டிருந்தது.

திடுதிப்பென்று அவளுக்குத் தமிழரசியின் நினைவு வந்தது. அத்தான் ஞானசேகரைக் காதலிக்கிருளாம் தமிழரசி. ஒரு கால், இந்தக் காதல் சித்திபெறவில்லையென்ருல், சாதலை மேற் கொண்டு விடுவாளோ ? ஞானசேகரின் காதல் கடிதத்துக்கும் அவள் முடிவு காட்டிவிட்டாள். 'இந்நிலையிலே, அன்பு அத்

தான் ஞானசேகர் இன்னமும் என்னைக் காதலிக்கிறாரென்று ஒரு வெடி குண்டைப் போட்டுவிட்டாளே தமிழரசி ?' என்ன சோதனை இது ? அத்தானுக்கு அனுப்பிய பதில் கிடைத்திருக்க வேண்டும். அதனால்தான், அத்தான் இன்று என்னைச் சந்திக்க விரும்பியிருக்கிறார் !

கதவுகல் திறந்தன; திறக்கப் பட்டன. ஆமாம்; பொன்னழகின் வண்ண மகள் மஞ்சுளாவை ஈன்றெடுத்த மீனாட்சி. சுந்தரேசனின் வீட்டுக் கதவுகள்தாம் திறந்தன; திறக்கப் பட்டன !

வீடு எனில், வாடகை வீடு.

"ஓ ! மஞ்சுக் குட்டியா ? வாடா, கண்ணே !" என்று புதுப் புனலாகப் பாசம் சுழித்திட வரவேற்றாள் தாய்.

"அம்மா !" உணர்ச்சிகள் விம்மின; மஞ்சுளாவுக்கு கையும் ஓடவில்லை ; காலும் ஓடவில்லை. ஏன் ஓடவேண்டும் ? பாசத்தைப் பாசம் சந்திக்க ஓடோடியல்லவா வந்திருக்கிறது ? அம்மா இன்னமும் மறந்துவிடாது 'டா' போட்டு அழைத்த அந்தப் பாசத்தின் குரல் அவளுடைய கண்ணின் கருமணிகளுல் மோதிச் சுழித்தது. ஆண் குழந்தைக்குப் பாக்கியம் பெறுமல் போகவே, அக் குறையைப் போக்கிக் கொள்ளத் தன் ஒரே மகளை இப்படி 'டா' போட்டு ஆணுகப் பாவித்துக் கூப்பிட்டு ஆறுதல் பெற்றுவந்த இத்தப் பெற்ற மனத்தின் மேன்மையை பாரிமுனையிலும் நினைவு கூர்ந்து மெய்ப் மறந்து, மெய் சிலிர்த்தாள் மஞ்சுளா.

"மஞ்சு. என்னமோ அந்நியமான இடத்துக்குப் பாதை தவறி வந்திட்ட தாட்டம் வழக்கத்துக்கு விரோதமாய் பிரமை தட்டிப்போய் நின்னுக்கிட்டிருக்கியே சரி, சரி, இந்தப் புது சோபாவில் உட்காருடி என் ராஜாத்திக் குட்டி !" என்று அள்ளக் குறையாப் பாசத்தோடு மகளை அள்ளியெடுத்து உட்கார வைத்தாள் மீனாட்சி.

மஞ்சுளாவுக்கு மேனி புல்லரித்தது. 'அம்மாவுக்குத்தான் என் பேரில் எவ்வளவு பாசம்! அம்மா என்றும் அம்மாதான்! அம்மா பழைய அம்மாவேதான்! அட்டி இல்லே! ஆனால்... ஆனால் அம்மா என்றென்றைக்குமே பழைய அம்மாவாகவே இருந்து விடுவாளல்லவா? சிந்தனைக் கூட்டினின்று எட்டிப் பார்த்தது பறவைக் குஞ்சு! ஆம்! அம்மாவின் கண்கள் ஏன் கலங்குகின்றன? கன்னி நெஞ்சம் வேப்பேரி போலீஸ் ஸ்டேஷனைத் தஞ்சமடைந்தது. குலுங்கியது மேனி.

"அம்மா! மஞ்சு!"

"என்னம்மா?"

"ஏம்மா என்னவோபோல இருக்கே?"

"எப்பவும் போலத்தானே இருக்கேன்?"

"ஊஹூம்; நீ பொய் சொல்லுறே!"

"உனக்கு—புண்ணியவதியான உனக்குப் பிறந்த நான் ஏனம்மா பொய் சொல்ல வேண்டும்?"

"நீ சொல்றது உண்மையென்றால், எதையோ பறிகொடுத்த மாதிரி கலகலப்பில்லாமல் இருக்கே? நான் உனக்கும்கூட அன்னியம்—அசலாகப் போயிட்டேனா, மஞ்சு?"

"ஐயையோ! அப்படியெல்லாம் சொல்லாதேம்மா. அந்த மாதிரியெல்லாம் நினைக்காதேம்மா!"

"நான் நம்பமாட்டேன்!"

"ஐயையோ! நீ நம்பாமல் பின்னே இந்த உலகத்திலே வேறே யாரம்மா என்னை நம்புவது?"

"நீ நடிக்கிறாய்!"

"நான் நடிக்கவில்லை அம்மா!"

"அப்படியானால், நான் நடிக்கிறேன் என்கிறாயா?"

"ஆமாம்"

"உண்மையாகத் தான்!",

"மஞ்சு!"

"ஏனம்மா இப்படி வீணாக மனசைப் போட்டு அலட்டிக் கொள்கிறாய்? நெஞ்சில் கைவைத்துச் சொல்; நீ நடிக்கவே இல்லையா?"

"என்ன, நான் நடித்தேனா? எங்கே நடித்தேன்? ஏன் நடித்தேன்? எப்போது நடித்தேன்? பெற்ற மகளிடம் தாய் நடித்தேனா? ஐயையோ, தெய்வமே! கற்பகாம்பிகைத் தாயே! உனக்கே அடுக்குதா இந்தப் பழி?"

"ஐயோ அம்மா! ஏனம்மா இப்படி அழுகிறாய்? நீ என்னிடத்திலே நடிக்கிறாய் என்று நான் சொன்னேன்?"

"அப்புறம்?"

"நீ படத்தில் நடிப்பதையல்லவா சொன்னேன் நான்."

"அடி, என் குறும்புக்கார மஞ்சுக் குட்டி"

சிரிப்பும் சிரிப்பும் இணைந்தன; கண்ணீரும் கண்ணீரும் கலந்தன; பாசமும் பாசமும் ஒன்றின.

காத்திருந்த விநாடிகள் சில, மௌனத்தைக் கபளீகரம் செய்தன. சிந்தனையில் ஈடுபட்டிருந்த மகளை ஜாடையாகப் பார்த்தபடி எழுந்தாள் மீனாட்சி. ரேடியோவை 'ட்யூன்' செய்தாள். தலைப்புச் செய்திகளைக் கருத்தாகக் கேட்டதும், ஒரே துள்ளாகத் திரும்பினாள். "நாம் ஜெயிச்சிட்ட மாதிரிதான் இனி, என்றாள்", மகளை நோக்கி.

"மஞ்சுக் கண்ணே!" என்று அழைத்தாள் மீனாட்சி. மஞ்சுளாவின் தங்கக்கழுத்தை அலங்கரித்த தங்கச் சங்கிலியின் கல் பதக்கத்தை அன்புடனும் பெருமையுடனும் வருடியபடி அவளு

டைய முகத்தோடு தன் முகத்தை இறுத்திப் பொருத்திக் கொண்டு, "தாயறியாத சூல்உண்டான்னுஒரு பேச்சுச்சொல்லு வாங்க. ஆனா, நீயோ தாய்க்கும் தெரியாமல் ஏதோ மனசிலே நினைச்சு நினைச்சு வருந்திக்கிட்டு இருக்கிற மாதிரி எனக்குத் தோணுது. இல்லாவிட்டால், இல்லாவிட்டால் உன் கண் கலங்குமா ?... இதுவரைக்கும் நீ கவலைப்பட்டதெல்லாம் சரி, இனிமேல் நீ கவலைப்பட தேவையே இல்லையம்மா !...உன்னோட குறை என்ன ? மனம் திறந்து சொல்லு. அது எந்தக் குறை யானாலும், என்னோட உயிரைக் கொடுத்தாவது அந்தக் குறையை நிவர்த்தி செஞ்சுகிடுறேன் ! "மஞ்சு சொல்லம்மா !"

அன்னையின் பேச்சை அவள் மறந்து விட மாட்டாள். அவளுடைய செவ்வதரங்களில் சோகம் நிரம்பிய புன் சிரிப்புப் படர்ந்து "என்னோட குறையைப் போக்க வேண்டி, நீ உன் உயிரையே கொடுத்து விட்டால், அப்புறம் நீ எப்படி அம்மா படத்தில் நடிக்க முடியும் ?" என்று குறும்புத்தனமான கேலி யுடன் கேட்டாள் மஞ்சுளா.

"நான் சினிமாவிலே நடிக்க மனம் துணிஞ்சதே உன்னோட எதிர்கால நலனை உத்தேசித்துத்தானே, மஞ்சு? மகளின் மனக் குறையை ஒரு தாயினால் தீர்க்க முடியவில்லையென்றால், பிற்பாடு இந்த உயிரே எதற்கு ? நீயே சொல்லேன் !"

இந்தப் பேச்சினால் அவளுள் ஓர் இனிமையான பரவசம் பரவத் தொடங்கியது. மகிழ்வு தவழ, பெற்றவளை ஏறிட்டு உற்று நோக்கினாள். "இப்பதான் அம்மா எனக்கு நல்ல மூச்சு வந்திச்சாக்கும் !... அம்மா என்றால் அம்மாதான் ! நீ என் பழைய அம்மாவேதான் !" என்று உணர்ச்சிகளைக் கட்டுப் படுத்தத் தெரியாமல் தவித்தாள் மஞ்சு.

முந்தித் தவமிருந்து பெற்ற அருமை மகளிடமிருந்துவெளிப் பட்ட பேச்சைக் கேட்ட மாத்திரத்தில், மீனாட்சியின் சிவந்து வந்த முக விலாசம் கறுக்கத் தொடங்கியது. மகளை ஆழ்ந்து பார்த்துக் கொண்டே, "அப்படீன்னா, ரொம்ப நாளைக்கு

ரொம்ப நாள் கழிச்சு நீ வந்து என்னைச் சந்திச்ச அந்த நேரத்திலேயிருந்து இந்நேரம் வரையிலும் நான் உனக்கும் புது அம்மாவாகத் தோன்றினேனு ?... அப்படித்தானே, மஞ்சு ?" என்று ஏக்கமும் உருக்கமுமாகக் கெஞ்சினுள் மீனுட்சி. மகளின் செக்கச் சிவந்த மோவாயைப் பற்றிக் கொண்டு விம்மினுள்.

"அப்படியெல்லாம் இல்லேம்மா. நீ சினிமாவிலே நடிக்க நொடங்கிட்ட காரணத்தினுலே நீ எனக்கு, — என் கண்களுக்குப் புது அம்மாவாகத் தோன்ற முடியுமா ? நீ என் மேலே வைத்திருக்கிற ஈடு எடுப்பற்ற அன்பையும் பாசத்தையும் சின்ன இடைவேளைக்குப்பின்னே கொஞ்ச முந்தி மறுபடியும் நான் உணர்ந்து கிட்டதும், அந்த மகிழ்ச்சுத் திளைப்பிலேதான் 'நீ என் பழைய அம்மாவேதான்' என்று சொன்னேன். என்னுடை ஒளிக்கு மூலமே நீ தானேம்மா ?... இதுக்கு மேலே உன் முன்னே புகழ்ப் புராணம் படித்தால், அதை நீ வெறுப்பாய் என்கிறதை நான் மறந்திடமாட்டேனே. அம்மா ?" என்று சமாதானம் படித்தாள் மகள். மூச்சு வாங்கியது.

மீனுட்சியின் கண்கள் ஒளி சிந்தின. உள்ளார்ந்த அமைதிக்கு வடிகால்தான் புன்முறுவல் கோலம். "நல்லவேளை, நான் பிழைச்சேன். சரி, சரி ! விஷயத்துக்கு வர்றேன், உன் மனக் குறையைச் சொல் டைம் ஆகுது. உனக்கும் பசிக்கும்! " என்று தூண்டித் துருவினுள் அவள்.

"சமயம் வரும்போது, அதைப் பற்றிச் சொல்வேன் அம்மா. எனக்குள்ள குறைகளெல்லாம் கொட்டிப் புலம்ப எனக்குக் கிடைச்சிருக்கிற முதன்மையான ஆறுதல் கோயிலே உன் சந்நிதானம்தானே, அம்மா ?... அப்பா என்னைப் பொறுத்த அளவில் இரண்டாம் பட்சம்தானே !..." திட்டமிட்டுச் சொல்லிவிட்டு, அந்தச் சூட்டோடு அம்மாவை ஊடுருவிய சமயம், அம்மாவின் முகம் சலனம் காட்டியதையும் சலனத்தில் சோகப் பெருமூச்சு வெடித்ததையும் அவள் — மஞ்சுளா இனம் கண்டு கொண்டாள். அந்த அளவுக்கு அவள் மகத்தான ஆறுதல் பெற முயன்றுள். தன் திட்டம் வெல்வதற்கான நல்ல சகுனம்

திடயம் காட்டி, நடமும் காட்டி விட்டது. அப்பாவை மறந்து விடவில்லை அம்மா !...

கனவு கண்டு சிரிப்பது போல் மஞ்சுளா சிரித்த சிரிப்பை இனம் கண்டு கொள்ள இயலாத ஆதங்கத்தோடு அவளை ஏற இறங்கப் பார்த்து விட்டு, "சரி, மஞ்சு ; உன் விருப்பப்படிரோ மனம் திறந்து எப்போது வேணும்னாலும் என்னிடம் சொல்ல லாம் !" என்று தாய்மைப் பாசத்தோடு அனுதாபக் குரலில் மீனாட்சி சொன்னாள். அவள் சகஜமான நிலைக்கு வந்ததும், சுவர்க் கடிகாரத்தின் மணியோசை காதில் விழவே, "அடடே; மணி ஒண்ணு அடிச்சிட்டுதே ! என் மஞ்சு பசி தாளமாட்டாளே ? சரி, சரி ; வா... வா... சாப்பிடலாம்," என்று பரபரத்துக் கொண்டே, மஞ்சுளாவின் இடுப்பில் கை கொடுத்துத் தூக்கி விட முனைந்தாள்.

" மஞ்சு, என்னம்மா பாக்கெட் அது ?"

"அதுவா அம்மா ? அது... திடீர்த் தோசை ! உனக்காக ஓட்டலிலே வாங்கி வந்தேன் ;" மஞ்சுளாவின் சமயோசிதப் புத்தி யாருக்கு வரும் ?

"அப்படியா ? பேஷ், பேஷ் ; நாம ரெண்டு பேருமமுதலில் சாப்பாடு சாப்பிட்டிட்டு அப்பாலே, திடீர்த் தோசையையும் ஆளுக்குப் பாதி ஒரு கை பார்த்திட்டால் தீர்ந்திச்சு. என்ன சரிதானேம்மா ? " கொண்டைப் பூ குலுங்கியது.

"அம்மா பேச்சுக்கு அப்பீல் ஏது ? "

"ஏன் இல்லையாம் ? — நீ இருக்கிறயே, மஞ்சு ? சரி, சரி. வா, உள்ளே போகலாம் !"

அம்மாவுக்குத் தன்னிடம் இருக்கும் பாசத்தின் மதிப்பைக் கண்டவுடன் மஞ்சுளாவுக்குத் தலைகால் புரியாத குதூகலம். 'என் திட்டப்படி அப்பவையும் அம்மாவையும் மனம் திருத்தி, அவர்கள் இருவரையும் மறுபடியும் இல்லற வாழ்க்கைக்குத் திருப்பிட முடியும்னுதான் தோணுது !... ஆண்டவன் புண்ணி

யத்தில் சட்டமும் விதியும் கை கொடுக்க வேணும்!'—'அந்தச் சிந்தனை'யின் இனிப்பான நினைவுகளுக்குப பின் புறத்தில் 'பிச்சுவா' வின் பயங்கர நிழல் படர்ந்து மறைந்த ரகசியத்தைப் பற்றி எண்ணிப் பார்க்க அவளுக்கு நேரம் இல்லை போலும்' நோன்பு மேற்கொண்ட ஓர் உள்ளத் தெளிவுடனும், தென்புடனும் தாயைத் தொடர்ந்தாள் மஞ்சுளா. அவளது கண்பார்வையும் உள் ரேழி மூலையிலே கிடந்த ஒரு நிழற் படம் தட்டுப்பட்டது; பார்த்த சடுதியில், மஞ்சுளாவின் ஈரல் குலை நடுங்கி விட்டது.

அது, சுந்தரேசன் — மீனாட்சி தம்பதியின் திருமணப் படம்!

அந்தப்படம் இப்பொழுது சுக்கல் நூறாக உடைந்து போய்க் காட்சி தந்தது!

## 11. கடலும் கப்பலும்!

அம்மம்மா! — என்னதான் ஆனாலும் இத்தனை அவசரம் கூடாது அம்மாவுக்கு!

தான் சினிமாவில் நடிக்கப் போகும் செய்தியை ஒரு சம்பிரதாயத்தை அனுசரித்துக்கூட அம்மா—தன்னைப் பெற்ற தாய் தன்னிடம் முன்கூட்டியே தெரியப்படுத்தாமல் இருந்த நிலவரத்தை எண்ணிக் குமைந்தாள் மஞ்சுளா.

" உட்காரம்மா, மஞ்சு. எதைப் பொறுத்தாலும் பொறுத்துக்கலாம். ஆனால் பசியை மட்டிலும் பொறுக்கக்கூடாது. ஏன்னா, கல்யாணத்துக்கு நிற்கிற பெண்ணாச்சே நீ? ' என்று கூறி, ஆவி பறந்த சோற்றை இரண்டு எவர்சில்வர் தட்டுக்களிலே கொட்டினாள் மஞ்சுளாவின் அன்னை மீனாட்சி.

மஞ்சுளா கூடத்தின் கிழக்குமூலை ஓரமாக உட்கார்ந்தாள். அன்னையின் சுறுசுறுப்பு அவளுக்குப் புரிந்த விவரம்தான். அந்தப் பாங்கு துளியும் மாறுபட்டதாகத் தோன்றக் காணோம்! அம்மாவைப் பார்த்தால், 'கவலையற்ற மகராஜி' என்றுதான் யாருமே வியாககியானம் படிப்பார்கள். இப்போதும்கூட அவ்வாறு தான் தோற்றம் தருகின்றாள் அம்மா. அப்படியென்றால்; அம்மாவுக்கு அப்பாவைப் பிரிந்து வந்ததில் ச ஞ் ச ல மே இல்லையா?

மீனாட்சி பின்கட்டினின்றும் திரும்பியிருந்தாள். உருகியிருந்த நெய்யை வாளியோடு அப்படியே கவிழ்த்தாள். "போதும் அம்மா, போதும்!" பதற்றத்துடன் எச்சரித்த சொற்களை அவள் காதில் வாங்கிக் கொள்ளவே இல்லை. பொன்னாங்கண்ணிக் கீரை மசியலை நாலு கரண்டி அள்ளிப் போட்டாள். "உம், சோற்றை நல்லாக் கிளறிவிட்டு, மசியலையும் சேர்த்துப் பிசைஞ்சுக்க, மஞ்சு" என்றாள்.

விதியும் அவதாரம் கொள்ளும்போலும்! இல்லையென்றால்? கேவலம், பொன்னாங்கண்ணிக்கீரை, மீனாட்சி—சுந்தரேசனின் வாழ்வில் அப்படிப்பட்டதொரு பிளவை — கற்பிளவை உண்டு பண்ணியிருக்க வாய்த்திருக்குமா?

சர்வசாதாரணமான நிகழ்ச்சி அது...!

அம்மாவுக்குப் பொன்னாங்கண்ணிக்கீரை யென்றால் மிகப் பிரியம். உடம்பிற்குக் குளிர்ச்சி என்பதால் அதில் ஒரு நாட்டம். கீரை வாங்கும்போதே சுந்தரேசன், "இன்னிக்கு எனக்குச் சளி பிடுச்சிருக்குது; பொன்னாங்கண்ணி வேணாம்" என்று சொல்லியிருந்தும், அந்த அபாயக் குறிப்பை மறந்தோ அல்லது அலட்சியம் செய்தோ கணவனின் இஷ்டத்திற்குவிரோதமாகப் பொன்னாங்கண்ணிக் கீரையைக் கூட்டுச் செய்துவிட்டாள் மீனாட்சி.

சாப்பிட வந்தார் சுந்தரேசன். பொன்னாங்கண்ணிக்கீரையைக் கறித்தட்டில் கண்டாரோ, இல்லையோ அவருக்குக் கண்

மண் தெரியாமல் கோபம் பீறிட்டு வெடித்துத் தொலைத்தது. கீரையைக் கொத்தாக அள்ளி மனைவியின் கண்களைக் குறி வைத்து வீசினார் அவர். வைத்த குறி தப்பவில்லை,

மீனாட்சி வேதனை தாளாமல் துடித்தவண்ணம், கண்களைப் பிடித்துக் கொண்டு தரையில் உட்கார்ந்துவிட்டாள். "ஊர் உலகத்தைப்போல கவலைப்பட்டுக் கரிசனம் கொண்டு, பெற்ற பெண்ணைக் கரையேற்றிட வேணுமே என்கிற துப்பு இல்லாத புத்திகெட்ட உங்க மூஞ்சியிலே முழிக்க வேண்டிய துர்பாக்கி யத்தை இனியும் எனக்கு வைக்காமல், காளிகாம்பிகை தெய்வம் இந்த மட்டோடு என்னோட கண் ரெண்டையும் பொட்டை ஆக்கிட்டுதின்னா, எனக்கு நல்ல காலம்தான்! என் பெண்ணை என் கனவுப்படி கட்டிக் கொடுத்துப்பிடுவேன்!" என்று ஒரு பாட்டம் கத்தித் தீர்த்தாள்.

மனைவியின் அழகான கண்களிலே பொன்னாங்கண்ணிக் கீரைக் கறியை வீசிய நிர்தாட்சண்யம் பற்றிச் சுந்தரேசன் லட்சி யம் செய்யவில்லை. ஆனால் மனைவியின் ஏச்சும் பேச்சும் மட்டும் அவர் நெஞ்சில் உறைத்துவிட்டது. "புருஷன் பேச்சை மதிச்சு நடக்கத் தெரியாத வீம்புக்காரக் கழுதையோட கண் ரெண்டும் கெட்டால்கூட நல்லதுதான். பெண் ஜன்மம் எடுத்த உனக்கே இவ்வளவு தைரியம் இருந்தால், ஆண்பிள்ளையான எனக்கு எவ்வளவு தைரியம் இருக்கும்! என் பெண்ணை அதோட கனவுப் படி கலியாணம் செய்து கொடுத்துப்பிட எனக்கும் வழி தெரியு மாக்கும்!..." என்று காரசாரமாகக் கனைத்துக் கொண்டே சொற்களை வாரி வீசினார்.

கண்களைக் கழுவிக் கொண்டு இரண்டாம் கட்டுக்கு மீனாட்சி வருவதற்கும், மஞ்சுளா வேலை முடிந்து பகற்சாப்பாட் டுக்கு வீட்டுக்கு வருவதற்கும் சரியாக இருந்தது.

சுந்தரேசன் சுதாரித்துக் கொண்டார். "சரி, சரி, மஞ்சு வுக்கும் எனக்கும் சோறு போடு!" என்றார்.

இந்தப் பிணக்கின் கதையை மஞ்சுளா அறியவில்லை. அப்போதைக்குச் சாதம் பரிமாறினாள் மீனாட்சி. பொன்னாங்கண்ணி கீரையைச் சுவைத்துச் சாப்பிட்டாள் மஞ்சுளா. ஆனால் சுந்தரேசன் அந்தக் கீரையைத் தொட்டுப் பார்க்கவேயில்லை.

மீண்டும் கம்பெனிக்குப் புறப்பட்ட மஞ்சுளா வழக்கத்திற்கு முன்னதாகவே திரும்ப நேர்ந்தது. அப்போது, வெளித்தாழ்வாரத்திலே பெட்டியும் கையுமாக தன் தாய் நிற்பதைக் கண்டதும் அவளுக்குப் பகீரென்றது. தந்தையையும் அன்னையையும் ஏதும் விளங்காமல் பார்வையிட்டாள்.

"அம்மா மஞ்சு, உன் கையிலே சொல்லிட்டுப் போகணும்னுதான் நீ வருகிற வழியையே பார்த்துகிணு நிற்கிறேன்!" என்றாள் மீனாட்சி.

சுந்தரேசன் ஆடவில்லை; அசையவில்லை!

"ஊர்ப்பயணம் புறப்பட்டுவிட்டாயா, அம்மா? அப்பாவும் அம்மாவும் புறப்பட்டாச்சுப்போல, பெற்ற மகளை மட்டும் தனியாவிட்டுட்டு" என்றாள் மஞ்சுளா. பெற்றவளின் கண்களிலே எதையோ புதிதாகத் தேடினாள் அவள். தேடியது கிட்டவில்லை. அதற்கு விரோதமாக, அன்னையின் விழிகளில் ரத்தம் கட்டியிருந்த பயங்கரச் சிவப்பைத்தான் அவளால் காணமுடிந்தது. "என்னம்மா உன் கண் ரெண்டும் அப்படிச் சிவந்திருக்குது? ஏதாச்சும் கண்ணிலே பட்டிடுச்சா? ஆயின்மெண்ட் ஏதானும் போட்டட்டுமா, அம்மா?" என்று பரிவுடன் கேட்டாள்.

மீனாட்சியின் மனத்துயரத்துக்கு மகளது ஆதரவுப் பேச்சு தூபம் போட்டது. தாலிச்சங்கிலியை நெருடிக் கொண்டிருந்தவள் சடக்கென்று கையை உதறிக் கொண்டே, "மஞ்சு, என் கண்ணுக்கு மருந்து போடுறேன்னு சொல்லுறே. ஆனால் என் தலைவிதிக்கு உன்னாலே மருந்துபோட முடியுமா அம்மா? நான் இந்த வீட்டிலேருந்து கிளம்பியாச்சு. என்னைத் தடுத்து நிறுத்த இனி யாராலேயும் முடியாது. ஆகவே நீயும் இந்த விஷயத்தில் குறுக்கிடாமல் இருக்கிறதுதான் நல்லது. உன்னை உன் மாமன்

மகன் கையிலே ஒப்படைக்கிற மட்டும் பொறுமையாக இருந்திட வேணும்னு நான் நினைச்சிருந்தேன். முடியாமல் போயிட்டுது. அம்மா, மஞ்சு நீயும் என்கூடப் புறப்பட்டுவரப் பிரியப்பட்டால், தாராளமாக வந்திடு. இல்லென்னு, அப்புறம் உன் இஷ்டம். மற்றப்படி என்னிடம் வேறே எதையும் கேட்காதே, மஞ்சு! " என மூர்த்தண்யமான பிடிவாதத்தோடு பேசினாள் அவள்.

மஞ்சுளா இத்தகைய ஒரு கட்டத்தை எப்படி எதிர் நோக்கியிருப்பாள்? அவள் தவித்தாள். அம்மாவின் ஆத்திரப் பேச்சிலிருந்து விஷயத்தை ஓரளவுக்கு அவளால் ஊகம் செய்து கொள்ள முடிந்தது. வீட்டில் நடந்த நடப்பு அவளுக்குத் தெரிய நியாயமில்லைதான். ஆனால் அம்மாவைக் கண்மண் தெரியாமல் அப்பா அடித்துப் போட்டிருக்க வேண்டும் என்றும் அதனால் தான் அம்மாவின் விழிகள் அப்படி ரத்தம் கட்டிப் போயிருக்கின்றன என்றும், அப்பா மீதுள்ள கட்டுக்கடங்காக் கோபம் காரணமாகவே அம்மா வீட்டைத் துறந்து வெளிக்கிளம்ப முடிவு செய்துவிட்டிருக்கிறாள் என்றும் மஞ்சுளா ஊகித்தாள். அன்னையின் நிர்தாட்சண்யமான பேச்சு அவளுடைய வாயைக் கட்டிப் போட்டுவிட்டது. அம்மாவின் வீம்புத்தனத்துக்கு— தான் எதுவுமே செய்ய முடியாது என்ற உண்மையையும் அவள் மறந்து விடமுடியாது. அம்மாவை விழிகளை உயர்த்திப் பார்த்த சூட்டோடு அப்பாவைப் பார்த்தாள் அவள். அம்மாவின் பிரிவு அப்பாவைத் துளியும் பாதிக்கவில்லையா என்ன?

மஞ்சுளா தட்டுத் தடுமாறினாள். ஒரு சாதாரணமான குடும்பத் தகராறின் விளைவாக அப்பாவும் அம்மாவும் திசை மாறித் திசைக்கு—திசை தவறித் திசைக்குப் பிரியக் காத்திருந்த நிலவரம் மேலும் அவளைக் கலவரப் படுத்தியது. அப்பாவுக்கு அம்மாவின் பிரிவில் பாதிப்பு இல்லைபோலும். அது மாதிரி அம்மாவுக்கு அப்பாவின் பிரிவில் கவலை இல்லைபோலும். தன்னைப் பற்றின கவலையோ அக்கறையோ அல்லது அனுதாபமோ தன்னைப் பெற்றவர்களுக்கு இருக்கவில்லை என்ற நுட்பமான ரகசியத்தை அவள் புரிந்துதான் வைத்திருந்தாள்,—அம்மா, வாழ்க்கை என்பது ஒரு புனிதமான பயணம், மானமான

யாத்தீரை, இதிலே வெயில் இருக்கும், நிழல் இருக்கும். சந்தர்ப்பத்துக்குத் தக்கபடி அனுசரித்தும், விட்டுக் கொடுத்தும் பயணத்தைக் கவுரமா நடத்திறதிலேதான் வாழ்க்கைப் பங்கு தாரர்களின் கெட்டி புரிய முடியும். அப்பா பேரிலே உனக்கு இருக்கிற ஆத்திரத்திலே நீ வீட்டைவிட்டு வெளிக் கிளம்புறது சரியில்லே. மற்றப்படி, என்னைப் பெற்றவளான உனக்கு நான் வேறே என்ன சமாதானம் சொல்ல முடியும்? என்ருள் மஞ்சுளா.

மீனுட்சி கரைக்க முடியாத கல்லாக நின்ருள். ''மஞ்சு, நீ என்னேடு புறப்படப் போகிருயா, இல்லையா? என்று திரும்ப வும் கேட்டாள்'' தாய்க்காரி.

நான் உன்னேடு வருவதற்கில்லை அம்மா என்ருள் மஞ்சுளா.

''பேஷ், அப்படிச் சொல்!'' என்று சொல்லிக் குறுக்கிட்டுச் சிரித்தார் திருவாளர் சுந்தரேசன். மீனுட்சி தன் கண்களை எரித்துவிடத் துடித்து விழித்து நோக்கினுள்.

''உன்னேடு நானும் வந்திட்ட, அப்புறம் அப்பாவுக்கு யாரம்மா ஆதரவு?'' என்று மஞ்சுளா எதிர்க் கேள்வி வீசிய பேச்சை வாங்கிக் கொள்ளாமலேயே மீனுட்சி அங்கிருந்து கிளம்பி விட்டாள்.

''நல்லகாலம், சனியன் விட்டது!'' என்று எழுந்தார் சுந்தரேசன். ''அம்மா மஞ்சு, உன் தாய் பெண் அல்ல, பிசாசு, அதனுல்தான் தன் மூப்பிலே இப்படிப் பிடிகயிறு அறுபட்ட பசுவாட்டம் கிளம்பிட்டா. மஞ்சு, நீ வீணுக மனம் நொந்து பிரயோசனம் இல்லே, இனி. உடைந்த சங்கை ஊதமுடியுமா?'' என்று வேதனையின் நெட்டுயிர்ப்புடன் சொல்லிவிட்டு அங்கி ருந்து கிளம்ப முயன்ருர். நானும் என் வழியிலே புறப்படுறேன். உன்னை விட்டுட்டு நானும் தனிச்சு இருந்தால்தான் உன் அம்மாவுக்குப் புத்திவரும். உனக்கு வேண்டுமென்கிற பணத்தை நான் அவ்வப் போது கொண்டுவந்து தாரேன், நீ

மனசைப் போட்டு அலட்டிக் கொள்ளாமல் இரம்மா'' என்ருர். பொன்ருங்கண்ணிக் கீரை விளைவித்த கலகம் பற்றியும் சொல்லி விட்டார் அவர்.

மஞ்சுளா தன் விதியை எண்ணி வெறுப்பும் ஆத்திரமும் படுவதைத் தவிர வேறு வழி எதுவுமே அவளுக்கு அப்போதைக் குப் புலப்பட மறுத்தது. 'வெளிக் கிளம்ப் ஆயத்தப்பட்ட அப்பாவை நோக்கினுள். 'அப்பா, நீங்களும் என்னைப் பற்றிக் கவலைப்படாமல் புறப்படுறீங்களா ? உங்க விருப்பம் அதுவாஞல் நன்ருகப் போங்க. என்னோட சாண் வயிற்றைக் கழுவி மூட எனக்குக் கிடைக்கிற வேலை கை கொடுக்கும். என்னை நான் காப்பாற்றிக்கிடத் தெரியாதா, என்ன?' என்று வேதனையோடு பேசினுள் மஞ்சுளா. வாய் பேசாமல்—புறப்பட்ட தந்தையும் பார்வையைவிட்டு மறைந்தார்.

பருவம் அடைந்த மகளைத் தனியே விட்டுவிட்டு அவரவர் கோபமும் வீம்புமே பிரதானமென்று அப்பாவும் அம்மாவும் கிழக்கும் மேற்குமாகத் திசைமாறிப் போய்விட்ட இந் நிகழ்ச் சிக்கு என்ன பெயர் சூட்டுவது ? தவித்தாள் மஞ்சுளா.

"மஞ்சு இப்போ எந்தக் கப்பல், எந்தக் கடலிலே கவிழ்ந் திட்டுதாம் ? பிசைந்த சோற்றை அள்ளிச் சாப்பிடாமல் கை யிலே கன்னத்தை தாங்கிட்டு இருக்கியே, அம்மா ?''

அன்னையின் அழுத்தமான பாசக்குரல் மகளை இம்மண் ணுக்குக் கொண்டு வந்து சேர்த்தது ! நெற்றியில் புள்ளிக் கோலம் போட்டிருந்த வேர்வையைச் சுத்தப்படுத்தக்கூட மன மிழந்தவளாக, வாய் பேசாமல் சாப்பாட்டுக் கவளங்களை உருட் டிப் போட்டுக் கொள்வதில் முனைந்தாள்.

ஐயோ, அம்மா அப்பா பிரிவு எந்த வேளையில் ஏற்பட்டது இனி எப்படி—எப்போது அவர்கள் ஒன்றுகூடப் போகிருர் களோ,

மஞ்சு, 'மோர் கொண்டு வாரேன் என்று கூறி, உள்ளே நகர்ந்தாள் மீனுட்சி.

"வேண்டாம் அம்மா" என்று சொல்லி எழுந்தாள் மஞ்சுளா,

"மோர் என்றால் உனக்கு ரொம்பப் பிடிக்குமே அம்மா."

"நீ சொல்வது மெய்தான் அம்மா. ஆனால், இப்போது எனக்குத் தேவை மோர் இல்லையே அம்மா." என்றாள் மஞ்சுளா.

புதல்வியைச் சஞ்சலம் பிணைய ஏறிட்டு விழித்தாள் தாய். "சாப்பிட்டுக்கினு இருக்கிறப்ப உனக்குத்தேவை மோர் இல்லை யென்னு சொல்றே நீ, வேறே என்னம்மா தேவை. சொல்லம்மா, என் பேரிலே உனக்கு உள்ளூர இருக்கக்கூடிய வருத்தம் உன் பேச்சிலே தெரிகிற ரகசியம் எனக்குத் தெரியாதா மஞ்சு, ஊம், சொல்லம்மா, உனக்கு இப்போது என்ன தேவை. நான் உன் கையிலே பேசத் துடிக்கிற விஷயங்கள், நான் உனக்கோ சரம் போட்டிருக்கிற திட்டங்கள் எல்லாம் ஒருபுறம் இருக்கட்டும் முதலில் இப்போது உன் தேவை என்னவென்று மனம்விட்டுச் சொல்" நான் கட்டாயம் நிறைவேற்றுவேன், என்று அருமைச் செல்வியை விழிகளில் நீர் முத்தெடுக்கப் பரிதாபத்தோடு பார்த் தாள். அப்பார்வையில் பாசம் கெஞ்சியது.

பெற்றவள் மீதிருந்த கண்களை மீட்டுக் கொண்டாள் மஞ்சுளா. என்னவோ ஒரு பலம் மனத்தில் ஊறியது. அம்மா இப்போதைக்கு எனக்குத் தேவை உன்னுடைய உண்மையான அன்புதான் அம்மா". என்று நிதானமாகக் குறிப்பிட்டாள் மஞ்சுளா.

பின்புறம் திரும்பிய போது தென்பட்ட சிறிய முற்றத்தைக் குறிப்பில் வைத்துக் கொண்டு அலம்ப எண்ணமிட்டுத் திரும் பினாள்,

அப்போது, செருமல் ஒலி கேட்டது. மறுகினாள் மஞ்சுளா. மீனாட்சி செருமிச் செருமி அழுதுகொண்டிருந்தாள்.

## 12. நல்ல பெண் அம்மா நீ !

மஞ்சுளா ஒரு முறை கண்களைக் கசக்கிவிட்டுக் கொண்டு எதிர்ப்பக்கம் பார்த்தாள். அம்மா ஏன் இப்படித் திடீரென்று செருமிச் செருமி அழுகிருள்.

மஞ்சுளா பெருமூச் செறிந்தாள். குலைந்த அமைதியை மீட்டுக் கொண்டு அன்னையை நோக்கி நகர்ந்தாள், கைகளில் படிந்திருந்த ஈரம் இமை வளையங்களுக்குத் தாவியிருக்கலாம். அம்மா, இப்போ என்னம்மா நடந்திட்டுது ? ஏனம்மா இப் படிச் செருமிச் செருமி அழுதுகிட்டு நிற்கிருய்? என்று ஆதர வும் அன்பும் பிரிவினை ஆகாத நெகிழ்ச்சியோடு கேட்கலானுள்.

மீனாட்சி அவளைப் பரிதாபத்தோடு ஏறிட்டு நோக்கினுள், இமைகளின் படபடப்பு—விசும்பல் ஒலியின் அலைகள்—நெஞ் சின் துடிதுடிப்பு இன்னமும் மாறவில்லை, மறையவில்லை. மஞ்சு நான் பாவி அம்மா, என்று விம்மி வெடித்து மண்டை யில் அடித்துக் கொண்டாள் மீனாட்சி.

மஞ்சுளாவின் மெய் சிலிர்த்தது. 'நான் பாவி' என்று அம்மா வருந்தித் துடித்துக் தவிக்கிருளே ? தெய்வமே ! கண் கள் தளும்ப, பெற்றவளை ஆதுரத்துடன் பார்த்தாள் அன்பு மகள்.

உணர்வுகளின் சங்கமத்தில் அவள் பேச்சு மணி அடித்தாற் போல கேட்டது. "நீயா பாவி, நீ அன்பின் உருவம்";

"ஐயோ மகளே ! ஏன் இப்படி என்னைக் கொல்லாமல் கொல்கிருய் ? உன் அப்பா பேரில் எனக்கிருந்த ஆத்திரத்தில் என்னுடைய வீம்பும் கோபமுமே முக்கியம் என்று பெற்ற மகளான உன்னைத்தனியே விட்டுவிட்டு வந்த நான் பாவி தானே மஞ்சு?".

மீனாட்சிக்கு மேற் கொண்டு பேச்சைத் தொடர முடிய வில்லை; தொண்டை அடைபட்டது.

மஞ்சுளா திகைப்புற்றாள். அப்பாவின் பால் அம்மாவின் மனம் காலங்கடந்து திறம்புவதற்காகத்தான் அம்மா தன்னைப் பாவி என்று குற்றம் சுமத்திக் கொண்டு வருந்துகிறாள் என்றும் அந்த வருத்தத்தில் அப்பா-அம்மாவின் வாழ்வுக் கடலில் புதிய அலை உருக்காட்டப் போகிறதென்றும் மனக்கோட்டை கட்டி யிருந்தாள் மஞ்சுளா. ஆனால் அம்மா கடைசியில் தன்னை யல்லவா சுற்றிவந்து நிற்கின்றாள்!— "அது ஒரு சாதாரண விஷயம் அம்மா. இதற்குப்போய் இவ்வளவு தூரம் நீ வருந்த வேணுமா என்ன? எனக்கு நானே துணையாக நிற்கமுடியும் என்கிற ஒரு நம்பிக்கை உனக்கும் அப்பாவுக்கு இருந்ததால் தானே நீங்கள் இரண்டுபேரும் அன்றைக்கு அப்படிவிட்டுட்டுப் போக நேரிட்டது?... சரி, சரி. முதலிலே நீ உன் முகத்தைத் துடைச்சிக்க அம்மா. யாராவது புரொட்யூசர் அல்லது பத்தி ரிக்கை நிருபர் வந்தாலும் வரலாம் உன்னைப் பேட்டிக் காண. முதலிலே நீ சாப்பிடு அம்மா" என்று கேட்டுக் கொண்டாள் மஞ்சுளா.

மீனாட்சி ஆற்றாமையோடு சிரித்தாள். அச்சிரிப்பில் விரக்தி மேலோங்கி இருந்தது. முகத்திரையில் படர்ந்திருந்த கண்ணீரின் உவர்க்கோடுகளின் கரையைத் துடைத்துக் கொண்டாள். "மஞ்சு, நீ சூட்சுமமான பெண். அதனால்தான், நான் ஒரு சினிமா நடிகை என்பதை நீ எனக்கு ஞாபகப்படுத்துறே! நான் நடிகை என்பது இரண்டாம் பட்சம்தான். ஆகையினாலேதான் நான் சினிமாவிலே நடிக்க மனம் துணிஞ்ச விஷயத்தைக்கூட உன்னிடம் நானாகத் தெரிவிக்க முன்வரலே! நான் ஒரு தாய்; உன்னைப் பத்து மாசம் சுமந்து பெற்றவள். உன்னைப் பொறுத்த அளவிலே எனக்கென்று ஆசாபாசங்கள், லட்சியக் கனவுகள் இருக்குமில்லையா? அவற்றையெல்லாம் நிறைவேற்றிக்கிடத் தான் நான் சினிமாவிலே நடிக்கத் தொடங்கினேன், மஞ்சு. அப்புறம் சாயந்தரம் நாம் பேசலாம்" என்றாள். சொற்கள் இப் போது அமைதியோடு வெளிப்பட்டன.

அப்பா கைது செய்யப்பட்ட செய்தி அம்மாவுக்கு தெரியுமா? அந்தப் பேச்சை எப்படித் துவக்குவது? " அம்மா மணி ரெண்டுக்கு மேலே ஆயிட்டுது. நீ சாப்பிடம்மா முதலில். சோறு அப்புறம் தண்ணீர் விட்டுப் போயிடாதா? " என்று பாசத்துடன் நினைவுப்படுத்தினுள்.

" சாதம் எக்கேடு கெட்டுப் போகட்டும். அதைப்பற்றி அக்கறை கிடையாது அம்மா! " என்ருள் மீனுட்சி.

" ஏனம்மா இப்படி அலுப்போடு பேசுகிருய்? "

" நீதான் வரும்போது திடீர்த் தோசை பார்சல் வாங்கிட்டு வந்திருப்பதாகச் சொன்னுயே? அதை சாப்பிட்டால் தீர்ந்துச்சு பசி. பசியின் ஜம்பம் சாண் வயிற்றுக்குள்ளேதானே செல்லுபடி ஆகும்? இல்லியா அம்மா? "

மஞ்சுளா சாப்பிட்ட இடத்தில் அமர்ந்து தன்னுடைய எவர்சில்வர் பிளேட்டை நகர்த்தினுள் மீனுட்சி. பார்சலின் நூல் கயிற்றின் முடிச்சை அவிழ்க்க முயன்ருள். முடியவில்லை. பட்டென்று அதை அறுத்துவிட்டாள்.

அம்மாவின் செய்கையில் இருந்த முரட்டுத்தனம் மகளை மலைப்புறச் செய்தது. " நான் இதுமாதிரி நூல்களையெல்லாம் அறுத்து வீணடிக்கமாட்டேன். முடிச்சில் சிக்கல் படிந்திருந்தால், எந்நேரமானுலும் எப்பாடுபட்டாச்சும் சிக்கலை அவிழ்த்து விட்டுத்தான் மறுவேலை பார்ப்பேன், அம்மா! " என்ருள்.

அருமைப் புதல்வியை ஆச்சரியமாக நோக்கினுள் மீனுட்சி. " ஓ, அப்படியா? " என்று விநயமான மென்சிரிப்பை உதிர்த்து விட்டு, தோசைப் பொட்டணத்தைப் பிரித்தாள். சுற்றப்பட்டிருந்த காகிதங்களை வீசிக் கொண்டே, " என் மஞ்சுக்குட்டி எனக்காக ஹோட்டலிலே அன்போடு வாங்கியாந்திருக்கிற திடீர்த் தோசையைச் சாப்பிட்டால் போதும்; என்னுேட பசி அடங்கிடும் " என்று பான்மை கொண்ட பாசத்தோடு தோசையைப் பிரித்தாள். நடுவில் இருந்த தோசையின் மடிப்பில்

எண்ணெய் கலந்த மிளகாய்ப் பொடியைக் கண்டதுதான் தாமதம், மீனாட்சியின் புன்னகை சுருங்கிக் கொண்டது.

மிளகாய்ப்பொடிக் கலவையின் துகள்கள் மடியில் விழ, அவற்றைப் பற்றிய ஆதங்கம் இல்லாதவளாக, அருமை மகளைத் துழாவினாள் மீனாட்சி. "ஏம்மா மஞ்சு, தோசையை ஹோட்டலிலே வாங்கினால் சாதாரணமாக சட்டினிதானே வைப்பாங்க? நீ வாங்கின ஹோட்டல்லே ஸ்பெஷலாக உனக்கு மிளகாய்ப் பொடி வைத்திருக்காங்களே?... உனக்கு மிளகாய்ப் பொடின்னு பிடிக்கும் என்கிற விஷயத்தைத் தெரிஞ்சு வச்சிருக்கிற ஹோட்டலாகப் பிடிச்சிருக்கிறாயே? பேஷ்!" என்று சரளமாக கேட்டது போலக் கேட்டாள்.

மஞ்சுளாவின் வதனம் சட்டென்று மலர்ந்தது. அன்னையின் பேச்சில் ஒலித்த செயற்கைப் பாவனை அவள் நெஞ்சைச் சுடத் தவறவில்லை; ஆனாலும் அதைப் பெரிதுபடுத்த விரும்பவில்லை, அதற்குக் காரணம் இருந்தது. "என்னம்மா சொல்ற நீ,

நான் திடீர்த் தோசையை ஹோட்டலிலே வாங்கினேன் என்று நினைச்சிருக்கே? அட, கடவுளே! என் கையாலேயே நான் சுட்டதாக்கும் இந்தத் திடீர் தோசை. மிளகாய்ப் பொடி ரெடியாக இருந்திச்சு. அவசரம் அவசரமாக இருந்ததை உனக்காகக் கட்டிக் கொண்டு வந்தேன். இதுதான் நடந்தது. இந்தத் திடீர்த் தோசையை நான் ஹோட்டலிலே வாங்கினதாக வாய் தவறுதலாக சொன்னேனோ என்னவோ, எனக்குச் சரியாக நினைப்பில்லையே, அம்மா!" என்றாள் மஞ்சுளா.

மீனாட்சி வாய்விட்டுச் சிரித்தாள். "என்னோட மஞ்சுக் குட்டியின் சமர்த்து வேறே யாருக்குமே வராது!... பரவாயில்லை. எனக்காக ஹோட்டலிலே தோசை வாங்கி வந்ததாகத்தான் நீ சொன்னே! எப்படி இருந்தால் என்ன? அம்மாவுக்கென்று நினைவு வச்சிக்கினு கையிலே கிடைச்சதை ஆசையோடவும் அன்போடவும் கொண்டாந்திருக்கியே, அந்தப் பாசம்தான் எனக்கு நிம்மதியைக் கொடுக்குது அம்மா!... ஊம், அம்மாவைப்

பார்க்க வந்த நீ, உன் பசிக்கென்று இப்படியா பார்சல் கட்டிக் கிட்டு வந்திருக்கப் போறே?... சரி, சரி. நீயும் பாதித் தோசை எடுத்துக்கம்மா மஞ்சு!" என்று வேண்டினுள்.

மஞ்சுளாவின் நெஞ்சு குறுகுறுக்காமல் இருக்குமா? துரும் பைத் தூணுக ஆக்கும் குண இயல்பு இன்னமும் அம்மாவிட மிருந்து விடைபெறக் காணுேமே? "நீ என்னம்மா? பாதித் தோசை எனக்கு எப்படிப் பற்றுமாம்?" என்று சிரித்தாள்.

"படுசுட்டியாச்சே நீ! இருக்கிற தோசையிலே பாதியை நீ எடுத்துக்க அப்படின்னுதான் நான் சொன்னேன்!"

"ஓஹோ, அப்படியா? சரி, சரி. எனக்கு வயிறு ஏற்க னவே நிரம்பியிருக்குது. நீதான் பசியோட இருககே. நீயே எல்லாத் தோசையையும் எடுத்துக்க அம்மா. தோசைதான் ஆறி அவலாய்ப் போயிருக்கும்! தோசையைச் சாப்பிட்டுட்டு, அப்புறம் சோறும் சாப்பிடு" என்ருள் மஞ்சுளா.

"தோசை சாப்பிட்டாலே போதும்" என்று சொல்லிக் கொண்டே தோசையைச் சுவைக்கலாணுள் மீனுட்சி.

மஞ்சுளாவின் உள்மனம், அப்பா அம்மாவின் பூசலை— நீத்தலம் வரை பாதம் பதித்துவிட்ட சண்டையை எப்படித் தீர்ப்பது என்பதிலேயே கவலை கொண்டிருந்தது. அம்மா பக்க வாட்டிலே திரும்பிய தருணத்தில், அவளது இடதுகாதுப் பகுதி யில் பதிந்திருந்த கைவிரல் தழும்பு பளிச் சென்று தெரிந்தது. மஞ்சுளாவின் பாச மனம் துணுக்குற்றது. ஐயோ! அப்பாவின் மூர்க்கத்தனமான முன்கோபம் என்றைக்குத்தான் மாறப் போகிறதோ?

"மஞ்சு!"

"என்னம்மா!"

"மறுபடியும் என்னம்மா சிந்தனை வந்திட்டுது?"

அம்மாவாகத் தங்களது தாம்பத்தியச் சண்டை பற்றிப் பிரஸ்தாபிக்க மாட்டாள் போலிருக்கிறதே? நாமே அந்தப் பேச்சை ஆரம்பித்துவிடலாமா? "என்னம்மா சொன்னே?" என்று வேண்டுமென்றே அன்னையைத் திரும்பவும் கேட்டாள் மஞ்சுளா.

"சரிதான், உன் சிந்தனை வேறே எங்கேயோ சுற்றிக்கிட்டு இருந்திருக்குது! பேசாமல் இருக்கியே, ஏதாவது பேசேன் என்றேன், அவ்வளவுதான்!" என்ருள் மீனுட்சி.

"உன்கிட்டே பேசுறதுக்கு விஷயமா இல்லை, அம்மா?"

"எல்லாப் பேச்சையும் சாயந்திரம் பேசிடு. எனக்கும் உன் கையிலே பேசுறதுக்கு ஏகப்பட்ட சமாசாரம் இருக்குதாக்கும்!"

"ஓஹோ! ஆல் ரைட்! பொன்னுங்கண்ணிக்கீரை மசியல் ரொம்பப் பிரமாதமாக இருந்திச்சு, அம்மா!"

மீனுட்சி தன் அன்பு மகளைச் சலனம் நேங்கப் பார்த்தாள். "எனக்குப் பொன்னுங்கண்ணின்னு ரொம்ப இஷ்டம். உனக்கும்தான் அது பிடிக்கும். என்னவோ நீ வந்து சேர்ந்த சமயத்திலே அதே பொன்னுங்கண்ணிக் கறி வெய்ச்சிருக்குது!" என்று கூறினுள், முன் இருந்த தெளிவு இப்போது குரலில் காணப்படவில்லைதான்.

"நீயும் அப்பாவும் சண்டை போட்டுக்கிட்டுப் பிரிய நேர்ந்திட்ட அன்றைக்குக்கூட இதே பொன்னுங்கண்ணிக் கீரைதான் சமையல் செஞ்சிருந்தே நீ. இல்லையா, அம்மா?" என்று துருவித் தூண்டினுள் மஞ்சுளா.

"அதையும் மறந்திடல்லே!" என்று கேள்விக்கான விடை என்ற அளவில் சொல்லி நிறுத்தினுள் மஞ்சுளாவின் அன்புத் தாய்.

அம்மாவின் முக விலாசத்தில் கோடு கிறுக்கிக் கிடந்த சலனத்தின் நூலிழைகளை மஞ்சுளாவால் கவனித்து உணர

முடிந்தது. அன்றைய வம்புக்கு அடிகோலிய பொன்னாங் கண்ணிக் கீரையின் கதையைப் பற்றி அவளிடம் சுந்தரேசன் தானே சொன்னார் ? — மீனாட்சி ஒன்றும் சொல்லவில்லை அல்லவா ?

மீனாட்சி எழுந்தாள்.

" சோறு சாப்பிடலையா அம்மா ?"

" ஊஹூம். இதுக்கு மேலே வயிறு தாங்காது, மஞ்சு. கொஞ்ச நாழி ரெஸ்ட் எடுத்துக்கலாம். சாயங்காலம் முண்டக் கண்ணி அம்மனையும், கபாலீஸ்வரர் — கற்பகாம்பிகையையும் சேவிக்கலாம். அப்புறம் விடியவிடிய வேண்டுமானாலும் பேசிக் கிட்டிருப்போம். உனக்கும் லீவுதான். எனக்கும் லீவுதான்!"

பேச்சைத் துண்டாடாமலே கை கழுவித் திரும்பினாள் மீனாட்சி.

வயிற்றைப் பிசைந்தாள் மஞ்சுளா.

"பின்னாலே போகணுமா, என்ன ? சொல்றது தானே ? நம்ப வீட்டிலேகூடக் கூச்சமா அம்மா ?" என்று சொல்லி, வழி காட்டினாள் அன்னை.

மஞ்சுளா போய்த் திரும்பியபோது, அவள் கையில் திரை உலகப் பத்திரிகை ஒன்று இருந்தது, அதன் முகப்புப் பக்கத் தில் அன்னைவடிவமாக வேடம் புனைந்து காட்சியளித்த அன்னை யின் படம் வெளியாகியிருந்தது. அந்தப் போட்டோவைப் பார்க்கப் பார்க்க மஞ்சுளாவுக்குப் பெருமையாக இருந்தது. கொஞ்சப் பொழுதுக்கு முன்னதாக இந்த வீட்டிற்குள் அம்மா அப்பாவின் உடைபட்ட கல்யாணப் படம் உடைபட்ட கோலத் தோடுமட்டுமல்லாமல், ஏதோ ஒரு மூலையிலும் ஏன் நாதியற்றுக் கிடக்கவேண்டும் ? அம்மா ? — புதிராக இருக்கிறதே எல்லாம்?

" மஞ்சுக் குட்டி இதைப் பாருடா !" என்று அழைத்தாள் மீனாட்சி.

எதைப் பார்க்கச் சொல்கிறாள் அம்மா?

மஞ்சுளாவின் கண்கள் தாயை நோக்கி ஓடின. மீனாட்சி யின் கைகளில் அழகான நகைப்பெட்டி ஒன்று காணப்பட்டது. 'நெக்லஸ்' கண்ணைப் பறித்தது.

"ரொம்பவும் அழகாக இருக்குது அம்மா, நீ செலக்ட் பண்ணினால் அது சோடை போகமுடியுமா, என்ன? உன் கழுத் துக்குப் பொருத்தமான நெக்லஸ் அம்மா!" என்றாள் மஞ்சுளா.

"மஞ்சுளா, நானும் பார்த்துக் கொண்டிருக்கிறேன். நீ என்னைச் சோதிச்சுட்டே போகிறாய்! ஜாக்கிரதை!" என்று கடுமையாகச் சொல்லிவிட்டு, அந்தக் கடுமையை மறைத்து, 'க்ளுக்' கென்று சிரித்தாள். "நல்ல பெண் அம்மா நீ! இந்த நெக்லஸ் உனக்காக்கும்! இதை உன்னிடம் கொண்டாந்து கொடுக்கணும்னு இருந்தேன், நல்ல வேளையாக, நீயே வந் திட்டே. உன் அத்தான் ஞானசேகருக்கும் இந்த நெக்லஸ் ரொம்பப் பிடிச்சுட்டுது, மஞ்சு! சரி, இதைப் போட்டுக் கொள்ளடி, ராசாத்தி! தாய்ப் பாசம் குழைந்தது.

"அம்மா!" என்று அழைத்து என்னவோ சொல்ல வா யெடுத்தாள் மஞ்சுளா. அதற்குள், முகப்பில் இருந்த அழைப்பு மணி அலறத் தொடங்கிவிட்டது!

## 13. ஏன்?

பாதிப்புக்கள் இல்லையென்றால், வாழ்க்கையில் மாற்றங்கள் ஏற்படுவதில்லை போலும்!

முகப்பில் இருந்த 'காலிங் பெல்லின்' அலறல் ஒலியைக் கேட்டதும், மஞ்சுளா பதட்ட நிலை அடைந்தாள். அவள்

சூழல் அவ்விதம். அம்மா மீது ஆத்திரம் கொண்டு பிச்சுவர் கத்தியினல் அவளை அப்பா குத்த முயன்றிருக்கிருர், குடி போதையில். அந்த சமயம் பார்த்து விதி வேப்பேரி சப்–இன்ஸ் பெக்டரையும் அக்காட்சியைக் காணச் செய்து விட்டது. கொலை முயற்சியும் அதற்கு நிதர்சன ஆதாரமாகப் பிச்சுவா வும்தான் இப்போது விதிஉருவில் அப்பாவைப் பயங்கர சூழலில் நிறுத்தி வைத்திருக்கின்றன என்ற உண்மை நிலை அவளுக்குத் தெள்ளத் தெளிவாகவே விளங்கியிருந்தது.

மஞ்சுளா விரைந்து அம்மாவைத் தொடர்ந்தாள்,

மீனாட்சி கதவுகளைத் திறந்து விட்டாள். வீதியைக் கடந்து நின்ற அழகான கார் மீதிருந்த பார்வையை மீட்டுக்கொண்டு வாசற்புறம் பார்வையிட்டாள். ஆடம்பரமான இளைஞரொருவர் நின்று கொண்டிருந்தார்,

மீனாட்சிக்கு விளங்கி விட்டது; உதடுகளை நீக்கி. "வாங்க, யாரைப் பார்க்கணும்?" என்று பவ்யமாக விசாரித் தாள்.

"உங்களைத் தான் பார்க்க வந்தேன், நீங்க நடிகை மீனாட்சி அம்மாள்தானே ?"

"ஆமாம் நீங்க யாருன்னு சொல்லவில்லையே ?"

"நான் 'பராசக்தி மூவிஸ்' என்கிற புதிய படக் கம்பெனி யின் சொந்தக்காரன் சித்தலிங்கம் !"

"ஓ, அப்படிங்களா ? உள்ளே வாங்க," என்று முகம் மலர்ந்து வரவேற்று, படத் தயாரிப்பாளர் சித்தலிங்கத்தை உள்ளே அழைதுச் சென்ருள்மீனாட்சி. கலைந்திருந்த மயிரிழைத் களை வாகு சேர்துக் கோதி விட்டுக் கொண்டாள் அந்த நடிகை.

மணி, மூன்று அடித்தது.

சித்தலிங்கம் கம்பீரமான மிடுக்குடன் சாய்ந்தவாறு உட் கார்ந்திருந்தார், ஸ்டூல் மீதிருந்த பத்திரிகையில் வெளியாகி

யிருந்த மீனுட்சியின் படத்தைப் பார்வையிட்டபின் அவர் பார்வை மேலே உயர்ந்தது. அழகி மஞ்சுளாவை இப்போது முன்னைக் காட்டிலும் சற்றுக் கூர்மையாக நோக்கினுர்.

"ஐயாவுக்குத் தாகத்துக்குகாப்பி வேணுங்களா? இல்லே, ஹார்லிக்ஸ் கொண்டாரட்டுமா ? ஓவல்டின் தரவா ?"

"காப்பியே போதும் !"

போன சுவடு தெரியாமல் தாயும் மகளும் உள்ளே போய் வெளியே வந்தார்கள். காப்பிக் கோப்பையை நளினம் மின்னி 'டீபாய்' மீது வைத்தாள் குமாரி மஞ்சுளா.

"இது என்னோட பெண். மஞ்சுளா என்று பெயர்."

மஞ்சுளாவின் பொற்கரங்கள் அஞ்சலி முத்திரை காட்டின;

"ஓ, அப்படியா ?" உதட்டுக் கரையில் நெளிந்து ஒளிந்தது நாக்கு.

"பாசம் பொல்லாதது" படத்தின் 'ரஷ்' பார்த்தேன். உங்களுக்குக் கொடுத்திருந்த அம்மா ரோலே ரொம்பவும் நயம்படச் செஞ்சிருக்கீங்க. நாங்க 'பாசம் ஒரு விளையாட்டு' என்று ஒரு படம் எடுக்கப் போறோம். அதிலேயும் உங்களையே தாய்ப் பாத்திரத்திலே நடிக்க வைக்க வேணும்னு தீர்மானிச்சிருக்கேன்; ஆனு, எங்க படத்திலே உங்க போர்ஷன் முற்றிலும் மாறுபட்டது ; அதாவது, வித்தியாசமான பாத்திரம். தமிழ்ப் பொங்கலன்றைக்குத்தான் பூஜை போடப் போகிறோம். அன்றைக்கே நாம் ஒப்பந்தம் செய்து கொள்வோம்," என்றுர் இளைஞர் சித்தலிங்கம்.

"அதற்கென்ன ! உங்கள் விருப்பப்படியே செய்வோம்; இதற்கிடையில் என்னுடைய முதல் படத்தின் படப்பிடிப்பும் முடிந்து விடும். அந்தப் படம் பொங்கல் ரீலீஸ் !" என்றுள் மீனுட்சி. மயங்கி வந்த மாலைக் கதிரில் அவளது நெற்றித் திலகம் மங்களகரமாக மின்னிற்று.

"பாசம் பொல்லாதது, படம் உங்களுக்கு நல்ல புகழைச் சம்பாதிச்சுக் கொடுக்குங்க அம்மா!"

"எல்லாம் ஆண்டவனின் கருணையைப் பொருத்த விஷயம். உங்களோ நல்ல வாக்கு பலிச்சிட்டால்தான், என்னுடைய லட்சியங்களும் பலிக்க முடியும்!..."

"நீங்க நிம்மதியாக இருக்கலாம், விதவைத் தாயாராக ஆனதுக்கப்புறம், குடும்பத்திலே நிகழ்கிற ஒவ்வொரு பிரச்சினைக்கும் நீங்க தீர்ப்புச் சொல்ல நேரிடுகிற கட்டத்திலே பாசத்தின் முழு வடிவமாக நீங்க விளக்குறீங்களே, அந்தக் கட்டத்தை நான் வெகுவாக ரசித்தேன்!"

"ஓஹோ!" மீனாட்சி தன் மார்புத் தாலியை நெருடியபடி புன்னகை செய்தாள்.

மஞ்சுளா தங்கப்பதுமையாக அமர்ந்திருந்தாள். நெஞ்சில் அலைகள் ஆர்ப்பரித்தன. அம்மாவுக்குப் பசுமைமிக்க எதிர் காலம் காத்திருப்பதாகப் புதிய படக் கம்பெனிக்காரரான சித்த லிங்கம் நல்வாக்குக் கொடுத்ததைக் கேட்டதும் அவள்மகிழ்ச்சி அடைந்தாள். அம்மா கொண்டிருக்கும் லட்சியங்கள் என்ன வாக இருக்கக் கூடும்?... அம்மாவே சொல்லட்டும். நாமாகக் கேட்கக் கூடாது! அப்பா சம்பந்தமான பேச்சை அவளாகவே தொடங்காமலா இருந்து விடுவாள்! அம்மாவுக்கும் இதயம் இருக்கும்!—

அன்னையைப் பற்றிய நினைவுகளோடு தலையை உயர்த்திய சமயத்தில், தன்னை நோக்கித் திரும்பிய பட அதிபர் சித்தலிங் கத்தின் கண்களைச் சந்திக்க நேர்ந்தது. தனக்குக் கதாநாயகி யாக நடிக்க வாய்ப்பு அருளுவதாகத் தகவல் கொடுத்திருப்பவர் இந்தச் சித்தலிங்கமேதான் என்பதை அறிந்ததிலிருந்து அவள் மனத்தின் அடிவாரத்திலும் ஒரு நம்பிக்கை பச்சைக் கொடி காட்டிக் கொண்டுதான் இருக்கின்றது!—நாளைக்கு 'பராசக்தி மூவிஸ்' கம்பெனியில் அவளுக்கு 'இண்டர்வ்யூ'. இன்றே

அக்கம்பெனியின் முதலாளியை இங்கே அவள் அன்னையின் இல்லத்தில் விதி கொணர்ந்து சேர்க்கிறது !

பராசக்தி படத் தயாரிப்பு நிறுவனம் தயாரிக்க விருக்கும் படத்தில் தனக்குத் தாய் வேஷம்தான் கிட்டப்போகிறது என்ப தில் அவளுக்கும் பெருமிதம் கனிந்தது. இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னர் பழைய படக் கம்பெனி முதலாளி வந்து தன் படத்தில் 'வில்லி'யாக நடிக்க வேண்டுமென்று மீனாட்சி யிடம் விருப்பம் தெரிவித்ததற்கு, மீனாட்சி மறுத்து விட்டாள். "வில்லியாக நடிப்பதற்கு இப்போதைக்கு நான் தயாராக இல்லை. பிறகு வேண்டுமானால் பார்க்கலாம்", என்று சொல்லி விட்டாள்.

மஞ்சுளா நிமிர்ந்து அமர்ந்தாள். எம்பி அடங்கிய மார்பின் மையத்தைக் கணித்து அடங்கிக் கிடந்த சங்கிலியின் டாலரை வருடிக் கொடுத்தபடி, "ஸார், உங்களுடைய புதிய படத்துக்கு யாருடைய கதையைத் தேர்வு செஞ்சிருக்கீங்க ?" என்று கவர்ச்சி கெஞ்சிய இன்குரலெடுத்துக் கேட்டாள் கன்னி இளமான்.

"இளைய பிரான் எழுதிய கதை !" என்று மறுமொழி பகர்ந்தார் தயாரிப்பாளர் சித்தலிங்கம். 'காலிபர்' சட்டையை நீவி விட்டுக் கொண்டார், அழகான புன்னகையின் நெளிவு மாறவில்லை.

"நானே கேட்கணும்னு இருந்தேன். எங்க மஞ்சு முந்திக் குட்டுது. 'பாசம் ஒரு விளையாட்டு' படத்தின் கதையைத் தயவு பண்ணி சொல்றீங்களா ? சும்மா ஒரு 'ஜிஸ்ட்' — சுருக் கம் தந்தாலே போதுங்க, ஐயா !" என்று வேண்டிக் கொண் டாள் மீனாட்சி. சோளியின் முதுகுப்புறத்தின் அடிப்பட்டையை இழுத்து விட்டுக் கொண்டபடி, தயாரிப்பாளரை ஆவல் சுரக்க நோக்கினாள்.

படத் தயாரிப்பாளர் கதை சொன்னார் :

"ஒரு தமிழ்க் 'குடும்பம்; அம்மா, அப்பா. ஒரு பெண்; வயதுக்குவந்த பெண். அப்பாவுக்கும் அம்மாவுக்கும் சதா சச்சரவு மூள்கிறது. இல்வாழ்வில் ஏற்பட்ட முரண் காரணமாக, அம்மா பிரிகிருள் தன் கணவனைவிட்டு. அப்படிப் பிரியும் போது, மகளைத் தன்னுடன் கூப்பிடுகிருள். மகளோ புரட்சிப் பெண். தாயின் அழைப்பை ஏற்க ஒப்பவில்லை. அதே மாதிரி, தந்தையோடும் இருக்க மறுத்துவிடுகிருள் புதல்வி. அப்பாவுக்கும் அம்மாவுக்கும் இடையே ஏற்பட்ட பிளவைச் சமன் செய்து அவர்கள் இருவரையும் சமாதானப்படுத்தி ஒன்று சேர்த்துவைக்க படாதபாடு படுகிருள்! முடிவில், மகள் கொண்ட லட்சியம் வெல்கிறது. அம்மா தான் பண்புகொண்ட ஒரு தமிழ்க் குடும்பத்தின் தலைவி என்ற சத்திய உண்மையை உணர்ந்து கொள்கிருள்!

கைதட்டல் சத்தம் படீரென்று வெடித்தது.

சிந்தனை வயப்பட்டுப் பொறிகலங்கிவிட்டிருந்த தர்ம சங்கடமான நிலைப்பிில் அமிழ்ந்திருந்த மீனுட்சி பதட்டத்தோடு சத்தம் பாய்ந்த பக்கம் இமைகளை விரித்தாள்.

கை தட்டியவள் மஞ்சுளாதான். "ரொம்ம நல்ல கதை' அழகான ப்ராப்ளம் ஸ்டோரி, ஸார்! தரமான ஸென்டிமெண்டல் சப்ஜெக்ட்தான்! மஞ்சுளா அடுக்கிக்கொண்டே போனுள்.

"ரொம்ப மகிழ்ச்சி, மஞ்சுளா!" என்று மகிழ்ச்சிப் புன்னகை காட்டினூர் சித்தலிங்கம். பிறகு மீனுட்சியின் திசை நோக்கித் திரும்பி, "கதை உங்களுக்கும் பிடிச்சிருக்கும்னு எதிர் பார்க்கிறேன்," என்ருர்.

தட்டுத் தடுமாறிய வண்ணம், "ஓ! கதை பிடிச்சிருக்கு!' என்று குரலைச் செம்மைப் படுத்தியவளாகச் செப்பினுள் மீனுட்சி நெற்றியில் ஓடிய வேர்வையை ஒற்றியபடி. கதையில் கால் பாவிய பேச்சை தடம் திரும்பிவிடும் நோக்கத்துடன், "ஐயா, உங்களிடத்திலே ஹீரோயின் யார்? பழைய முகமா? இல்லே, புது முகமா? என்று வினவினுள் அவள்,

"புது முகம்தான்! என்றார் சித்தலிங்கம்.

"பெயர்?" என்று கேட்டாள் மஞ்சுளாவின் அம்மா.

"மஞ்சுளா!"—சித்தலிங்கம்.

"எந்த மஞ்சுளா, ஐயா?" மீனாட்சி.

"உங்க பெண் மஞ்சுளாவேதானுங்க அம்மா!"

"என்ன, அப்படியா சங்கதி?" என்று திகைப்பை அடக்க மாட்டாமல் கேட்டுவிட்டாள் மீனாட்சி. அவள் பூரிப்புடன் அருமைத் திருமகளை நோக்கினாள்.

மஞ்சுளா நாணம் காத்து, நளினம் பேணி, முறுவல் இழைத்துக் காணப் பட்டாள். பிளாஸ்டிக் கூடையை நகர்த்தி அதிலிருந்த ரோஜா நிற டைரியை எடுத்தாள்.

"உங்க கிட்டே உங்க டாட்டர் இதுவரை சொல்லலீங்களா?" என்று விசாரித்தார் பராசக்தி மூவீஸ் உரிமையாளர்.

மீனாட்சி மௌனப் பிண்டமாக இருந்தாள்.

"இதோ பாருங்க ஸார், நீங்க எனக்கு எழுதியிருந்த எக்ஸ்பிரஸ் லெட்டரை அம்மா கையிலே காண்பிக்கக் கையோடு கொண்டாந்திருக்கேன்!" என்றாள் மஞ்சுளா, பாசத்தின் பிடிப்பை விட்டுக் கொடுக்காத வகையில், அந்தக் கடிதத்தை அம்மாவின் நடுங்கிய கைகளில் வைத்தாள் பெண்.

"ஓஹோ! சரி. அப்படீன்னா, நீங்க உங்க அம்மாவோடு இல்லீங்களா, மஞ்சுளா?"

"எனக்கு வேலைக்குப் போனதுக்கு ஜி.டி. பகுதி கொஞ்சம் வசதியாக இருக்குதுங்க. அதனாலே தற்காலிகமாக அங்கேயே தங்கி வரேன்!"

"உங்களுக்கு வேலை அண்ணா சாலைப் பகுதி. பாரீஸிலிருந்து வேலைக்குப் போறதுக்கும், மயிலாப்பூரிலிருந்து வேலைக்குப் போறதுக்கும் என்ன அப்படிப் பிரமாதமான வித்தியாசம்

இருக்கிறதாக நீங்க நினைச்சுக்கிட்டு, பெற்ற அம்மாவை விட்டுட்டுத் தனியே இருக்கீங்க, மஞ்சுளா ?"

"இனி நான் என் அம்மாவோடுதான் இருக்கப்போறேன்!", என்று ஒரு மாதிரியாகச் சமாளித்தாள் மஞ்சுளா. ஆனால், தொடுக்கப்பட்ட படத்தயாரிப்பாளரின் சந்தேகக் கேள்விக்கு உரிய பதில் அவள் சொன்னாளா ?

சித்தலிங்கம் தொண்டையைக் கனைத்துக் கொண்டார். "அம்மா, என்ன அப்படிச் சிந்தனை வசப்பட்டு இருந்திட்டீங்க? ...உங்களோட தங்கமான மனசுக்கு நான் சொன்ன படக்கதை ஒரு சோதனையாக அமைஞ்சிட்டுதுங்களா ? நான் சொன்னது கதை தானுங்களே ?" என்றார். மெல்லச் சிரித்தார். சிரித்தது சித்தலிங்கம்தானா ?

"அது கதைதான், ஐயா. ஒரு சந்தேகம், கேட்கலாமா ?"

"பேஷாகக் கேளுங்கள், மீனாட்சி அம்மா !"

மஞ்சுளாவின் பேசும் விழிகள் பேசாமல் குறுக்கே பாய்ந்தன.

"எங்க மஞ்சு புது முகம். அதைக் கதாநாயகியாக எப்படித் துணிஞ்சு போட்டிருக்கீங்க ? என்று கேட்டாள் மீனாட்சி.

"என்னவோ ஒரு நம்பிக்கை என்னோட இந்தப் படத்தைப் பொறுத்தமட்டிலே எல்லாவற்றிலுமே புதுமைதான் இருக்கப் போகுதுங்க. நாளைக்கு உங்க டாட்டர் மஞ்சுளா எங்க கம்பெனிக்குப் பேட்டிக்கு வரவேணும்னு ஏற்பாடு. இனி, பேட்டி நடந்திடுச்சே ! கதாநாயகித் தேர்வுக்காக வந்த போட்டோக்களிலே உங்க மஞ்சுளாவோட படம்தான் என் மனசுக்கு ரொம்பவும் திருப்தி அளிச்சுது. கடவுளோட அனுக்கிரகத்தாலே இன்னொரு விசேஷமும் கைகூடியிருக்கிறது. தாயும் மகளும், படத்திலேயும் தாயும் மகளுமாக நடிக்கப் போறீங்க. உங்க பெண் மஞ்சுளா எங்க படத்திலே கட்டாயம் ஸ்டார்

வால்யூ பெற்றிடுவாங்க !" என்று விளக்கமாகப் பேசினுர் சித்தலிங்கம். குமாரி மஞ்சுளாவின் கோல மதர் விழிகள் மகிழ்ச்சிப் பரவசத்தில் பளபளத்தன.

"எங்க மஞ்சுவோட கெட்டி யாருக்கும் வராதுங்க !" இயல்பாகச் சிரித்தாள் மீனுட்சி.

"உண்மைதான் !" என்று சிரித்தபடியே சித்தலிங்கமும் ஆமோதிக்கலானுர், புறப்பட எழுந்தவர், "அம்மா உங்க கணவர் எங்கே காணும் ?" என்று விசாரித்தார்,

மஞ்சுளா தவித்தாள்.

மீனுட்சி, "அவர் பாம்பேயிலே இருக்கார். போன வாரம் தான் வந்திட்டுப் போனுர். இன்னமும் கொஞ்சநாளிலே இங்கேயே செட்டில் ஆகிவிடுவாருங்க, ஐயா!"

"சந்தோஷம்!" என்று சொல்லிவிட்டு அம்மாவிடமும் பெண்ணிடமும் சொல்லிக் கொண்டு விடை பெறலானுர் பராசக்தி மூவீஸின் உரிமையாளரான சித்தலிங்கம்.

மணி ஐந்து. தாயும் மகளும் கோவிலுக்குப் புறப்படத் தயாராகிக் கொண்டிருந்தார். கூடத்துக்கு வந்த மீனுட்சி காலில் சிக்கிய காகிதத் தாளை எடுத்தாள். அவள் முகம் ஏன் அப்படிச் சிறுத்துக் கறுகறுத்து விட்டது?

"அம்மா!... புறப்படலாமா?" என்று கேட்டுக் கொண்டே கையிலிருந்த மாலைப்பதிப்புப் பத்திரிக்கையைப் புரட்டிக் கொண்டு வந்த மஞ்சுளாவின் வதனம் ஏன் அவ்வாறு பொலிவு இழந்துவிட்டது ?

## 14. தாய் - மகள் !

பழமொழிப் பேச்சு ஒன்று உண்டு. தாயும் மகளும் ஆனாலும் வாயும் வயிறும் வேறுதான் என்பதே அப்பேச்சு. தாயைப் போலே மகள்; நூலைப் போலே சேலை என்னும் பொதுப்படையான மரபின் விதிக்கு மேற்கண்ட பழமொழி ஒரு விதிவிலக்காக அமைகிறது. நாணயத்திற்கு மறுபக்கம் இருக்குமே அப்படி!

அந்த நெக்லஸைப் பற்றிய நினைவை மீனாட்சி மீட்டுக் கொண்டதாகத் தெரியவில்லை. தாய்க்கும் மகளான மஞ்சுளாவுக்கும் நெக்லஸ் பற்றின கவலை நெஞ்சைப் பற்றி நிற்கவில்லை. "அம்மா!" என்று என்னவோ மறுமொழி பேச வாயெடுத்த நிலவரமும் அப்போதைக்கு அவளுக்கு மறந்து போயிருக்க வேண்டும். பாவம், மஞ்சுளாவின் நெஞ்சை அரித்த சிக்கல் ஒன்று, இரண்டா?

அப்போது மீனாட்சியின் கையில் ஒரு காகிதத்தாள் கிட்டியது. அதில் எண்ணெய் கலந்த மிளகாய்ப் பொடியின் கறை படிந்திருந்தது. ஆம்; மஞ்சுளா பார்சல் கட்டிவந்த தாள்களில் ஒன்று. அந்தத் தாளைக் கண்டதும் அவளது தாயுள்ளம் பதறித் துடித்தது!

இந்நிலையிலே, தாயும் பெண்ணும் அவரவர் நிலைமையில் தத்தளித்து, தவித்து, அடங்கத் தேவைப்பட்டது ஐந்தே ஐந்து நிமிஷங்கள்தான்.

அந்த ஐந்து நிமிஷம் ஆயிற்று. சுயப்பிரக்ஞை இருமுனைத் தாக்குதலாகச் சிலிர்ப்புக் கொடுத்தது. வெயில் என்றால், நிழல் இல்லாமலா?

"மஞ்சு, புறப்படலாமோ?"

"ஓ, நான் ரெடி அம்மா!"

"நானும்தான் ரெடியாக்கும்!"

அன்னையும் புதல்வியும் புறப்பட்டார்கள்.

முண்டகக்கண்ணி அம்மன் கோவிலிலும் சரி, கபாலி கோவிலிலும் சரி, தரிசனம் செய்தபோது தாயும் மகளும் எதிரும் புதிருமாகவே நின்றார்கள்.

மீனாட்சி, கூப்பிய கரங்களுடன் நின்ற தன் மகளைக் கண்டபோது அவளுடைய கண்கள் கசிந்த காட்சியைக் காண நேர்ந்தது.

அதேமாதிரியே, மஞ்சுளா கண்மூடிக் கும்பிட்ட தன் அன்னையைப் பார்த்த வேளையில் அவளுடைய விழிகளும் நனைந்திருப்பதை அறிந்தாள். உணர்ச்சி வெள்ளத்திற்கு உருவம் அமைத்துக் காண்பித்த பக்திப் பெருக்கின் அந்நிலையை அவர்கள் இரண்டுபேரும் பரிமாற்றம் செய்து கொள்ள நேர்ந்தபோது அவ்விருவரது உதடுகளிலும் உள்ளார்ந்த புன்னகை அழகுக் கோலம் புனைந்திருந்தது.

"தெய்வமே! என் அருமை மகளை அவள் அத்தான் ஞானசேகரனுக்கே வாழ்க்கைப்பட அருள் செய்!" — மீனாட்சியின் விண்ணப்பம் இது.

"தெய்வமே! என் அப்பாவையும் அம்மாவையும் இனியும் சோதிக்காமல் இருவரையும் மீண்டும் ஒன்றுகூடச் செய்!" — மஞ்சுளாவின் வேண்டுகோள் இது.

"மஞ்சு!"

"என்னம்மா?"

"காப்பி சாப்பிட்டுட்டுப் போகலாமா, மஞ்சு?"

"வீட்டுக்குப் போய்க் காப்பி சாப்பிட்டுக்கலாமே அம்மா?"

"சாயங்காலப் பால் வாங்குவதில்லே. காலம்பற நான் காப்பு குடிக்கலே. அந்தப் பால்தான் புது ப்ரொட்யூஸ்ருக்கு உபயோகப் பட்டது, மஞ்சு !"

"இப்போதும்கூடவா அம்மா நீ சிக்கனம் பிடிக்கணும் ?"

என்னம்மா மஞ்சு அப்படிச் சொல்சுட்டே ? இப்போது தான் நான் ரொம்பவும் சிக்கனமாக இருந்தாக வேணுமாக்கும். என் அருமை மஞ்சுவோட கல்யாணம் வாசலுக்கு வந்து எட்டிப் பார்க்கப் போகுதில்லையா ? சினிமா சான்ஸ் கிடைக்கிறதுக்கு முந்தி நான்பட்ட கஷ்டம் கடவுளுக்குத்தான் வெளிச்சம் !" என்றுள் மீனுட்சி. அம்மாவின் பேச்சு மஞ்சுளாவின் நெஞ்சை உலுக்கிவிட்டது, "நீ பெற்ற பெண் நான் ஒருத்தி இருகள்றப்ப நீ எதுக்காக அம்மா கஷ்டப்படணும் ? உன் வீம்புதான் உனக்கு உயர்வாகப் போயிடுச்சு, இல்லையா அம்மா ?" என்று குரல் தழுதழுக்கக் கேட்டாள். கேட்டு விட்டு, தாயைப் பரிவுடன் நோக்கிஞள், தெறித்து வீழ்ந்த நீர் மணிகளைக் கண்டதும் மஞ்சுளாவுக்கு இனம் புரிந்த ஓர் ஆறுதல் வேர்விடத் தொடங்கியது. அம்மாவுக்கு நல்ல புத்தி திரும்ப ஆரம்பித்திருக்கிறது ! பேஷ், பேஷ் !

"மஞ்சு, பழைய குப்பையைக் கிளருதே. என்னோட வீம்பு இனியேலா கை தாழ்ந்து போயிடப் போகுது ? ஊஹூம், ஒருகாலும் இல்லே ! என் விதி எனக்கு அன்னிக்கும் தெரிஞ்சு தான் இருந்திச்சு; இன்னிக்கும் தெரிஞ்சுதான் இருக்குது ! இப்போதைக்கு எனக்கு உள்ள கவலையெல்லாம் உன்னைப் பற்றியேதான் ! அப்புறம் எனக்கென்ன கவலே இந்த மகராஜிக்கு ! சரி, சரி, எனக்குத் தலைவலி வந்தாச்சு. வா, காப்பி சாப்பிட்டுட்டுப் போயிடலாம் !" என்றுள் மீனுட்சி.

தாயின் சொல்லேத் தட்டமுடியுமா மகளால் ?

ஆளுக்கொரு 'ப்ளு' காஃபி அருந்திவிட்டு வெளியே வந்தார்கள் மீனுட்சியும் மஞ்சுளாவும்.

"ஹாய் மீனு !" என்ற குரல் எதிரொலி பரப்பியது.

மீனாட்சி ஏறிட்டு விழித்தாள். "சௌக்கியமா, ஆம்மா?" என்று நலன் விசாரித்து, கையெடுத்துக் கும்பிட்டாள்.

"ஓ! உன் படம் ரிலீஸ் ஆனதும் பார்ப்பேன். நான் உன் கையிலே முன்னே சொன்ன 'ரிக்வஸ்ட்' நினைப்பிருக்கில்லை! சீக்கிரம் முடிக்சுக் கொடுத்திடு! என்ன, ஓ. கே?" என்றாள் ஆங்கிலோ இந்திய மாது.

"ஆகட்டும், பார்க்கலாம்," என்று சுவாரஸ்யம் இழந்த தொனியில் சொல்லி விடைபெற்றாள் மீனாட்சி. சிறு பொழுது மௌனமாக முன்னே நடந்தாள், பிறகு நின்றாள்." மண்ணடியிலேருந்து அன்னிக்கு நான் புறப்பட்டு இங்கே வந்ததும் எனக்குப் புகல் அளிச்ச புண்ணியவதி அம்மா அந்த ஆங்கிலோ இண்டியன் லேடி!" என்று நன்றியறிவுடன் குறிப்பிட்டாள்.

"அப்படியா அம்மா? என்னை அந்த அம்மாவிடம அறிமுகப்படுத்தியிருந்தால் என் பங்குக்கான தாங்க்ஸையும் தெரிவிச்சிருப்பேனே? சரி; என்னமோ உன்கிட்டே ரிக்வஸ்ட் என்று என்னம்மா அது?" என்று மஞ்சுளா கேட்டாள்.

மீனாட்சியின் முகக்களை மாறிவந்தது." அது ஒண்ணும் பெரிய சமாசாரம இல்லேமமா மஞ்சு!" என்று 'டக்'கென்று ஏனோ நிறுத்திவிட்டாள். மஞ்சுளாவின் உணர்ச்சியைப் புரிந்து கொள்ளத் தவறவில்லை மீனாட்சி.

நீ என்னைப் பிரித்துப் பார்த்து, யாரோ அந்நியம் அசலாளிடம் பேசுவது லபாலப் பேசினால் நான் என்ன செய்வேன் அம்மா? நீயுமா என்னைச் சோதிக்க வேணும், தாயே? அன்றும் சரி, இன்றும் சரி, என்றும் சரி, நான் மீனாட்சிதான்!— உன் அம்மா மீனாட்சிதாள்! தெய்வமும் நீயும் என்னைப் புரிந்து கொள்ள முடிந்தால் போதும்! வேறு எதைப் பற்றியும்

வேறு யாரைப் பற்றியும் எனக்கு அக்கறை கிடையாது! சரி, நிறுத்திட்ட என்னோட பேச்சுக்கு வாரேன், மஞ்சு. அந்த அம்மணி ஸ்டெல்லா க்ரிஸ்டோஃபர் என் கையிலே விடுத்த அந்த 'ரிக்வஸ்ட்'—வேண்டுகோள், நான் தம்பதி சமேதராக வும் குடும்ப சகிதமாகவும் அவங்க வீட்டுக்கு விருந்துக்கு விரைவிலேயே வந்தாகணுமாம்! இதுதான் நடப்பு, தாயே!" என்றாள் மீனாட்சி.

தன்னைக் கருவிலே சுமந்த அன்னையின் தெய்வமணிக் கரங்கள் தீண்டியதால் விளைந்த அந்தத் 'தொட்டுணர்வில்' கட்டுண்டிருந்த செல்வி அம்மாவின் சலனம் எய்தி யிருந்த விழிகளைச் சந்தித்த தடத்திலேயே நடைபயின்றவளாக, "ஆஹா! அப்படியா அம்மா? அந்த அம்மணி ரொம்பவும் நல்லவங்களாக—பண்புள்ளவங்களாக இருப்பாங்க போலிருக் குதே! அவங்களோட வேண்டுகோளுக்கு நீ என்னம்மா பதில் தெரிவிச்சே?" என்று துருவிக் கேட்டாள். மீனாட்சி சொன்ன பதிலை அவள் மறந்துவிடவும் இல்லை; காதில் வாங்கிக்கொள்ளா மலும் இல்லை. இருந்தாலும், ஒரு பேச்சுக்குத் திருப்பிக் கேட்டாள்.

"நான் சொன்ன பதில் உனக்குக் கேட்கல்லியா, மஞ்சு? ஆகட்டும், பார்க்கலாம்—அப்படின்னு சொன்னேன்!" என்றாள் மீனாட்சி. பேச்சில் முன்பு இருந்ததைக் காட்டிலும் தெம்பு தாழ்ந்திருந்தது.

"'ஆகட்டும் பார்க்கலாம்' என்றால் என்னம்மா அர்த்தம்?" என்று மீனாட்சியின் வாயைக் கிளறி, தன் மனப்புயலுக்குப் பூந் தென்றலின் விடிவை—முடிவை ஈட்டிக் கொடுக்கவே துடித் தாள் மஞ்சுளா. விதரணை புரிந்த பெண்; பக்குவம் அடைந்த வள் அவள்.

அதற்குள், மீனாட்சி, "சரி, சரி, வாம்மா வீட்டுக்குப் போக லாம். வெறும் பேச்சு உப்புக்கு ஆகப்போகிறதா? புளிக்கு ஆகப்போகிறதா?" என்று விரக்தியோடு சொல்லிக்கொண்டே நடந்தாள்.

ஒரு கௌரவப் பிரச்னைக்குச் சோதிப்பு விளைந்த தவிப்போடு தயக்கம் தாங்கித் தொடர்ந்தாள் மஞ்சுளா. அவளது அகக் கண்களிலே அவள் காண நேர்ந்த அச்செய்தி ஏடு புரண்டது. இரவு தங்கியாவது அம்மாவின் பிடிவாதக் குணத்தைத் திருப்பி விட்டுவிட வேண்டும்! அப்பா மீது இத்தனை வர்மம் அம்மாவின் நெஞ்சிலே எப்படி விழுந்தது? ஏன் விழுந்தது? அப்பா சுத்த மோசம்! அத்தான் ஞானசேகரின் பங்களாவைவிட்டு இந்நேரம் அவர் தம்முடைய புரசைவாக்கம் ஜாகைக்குத் திரும்பியிருப்பாரா? வக்கீல் என்ன சொன்னாரோ? தெரியவில்லையே!

பஸ் வந்தது

பொய் நாகரிகத்தின் மெய்யான நெடியும் வந்தது.

கச்சேரி ரோடு திரும்பியது. அவர்கள் மட்டும் திரும்பாமல் இருக்கலாமா?

அது தருணம், ஓ! மஞ்சுளா! என்ற பழகிய அன்பின் குரலை ஏவிவிட்டவாறு, எதிரே வந்து நின்றான் மாசிலாமணி.

"ஓ! வாங்க, வாங்க!"

மஞ்சுளா வரம் கொள்ளாச் சிரிப்பால் மனம் கொள்ளா அன்போடு வரவேற்றாள். "அம்மா! அம்மா! இவர்தான் மிஸ்டர் மாசிலாமணி!" என்று அறிமுகம் செய்து வைத்தாள். பிறகு, "இவங்கதான் என் அம்மா!," என்று மாசிலாமணிக்கும் அறிமுகப்படுத்தினாள்.

"வணக்கமுங்க அம்மா!" என்பதாகப் பான்மை சேர, வணங்கினான் மாசிலாமணி.

"வணக்கம், வணக்கம்!" என்றாள் மீனாட்சி. அந்த வணக்கத்தில இயல்பின் நெறி காணக் கிடைக்கக் காணோம்!

"நீங்க என்ன செய்யறீங்க?" என்றான்.

"சொல்ல இருந்தேன். என்னோடு சேர்ந்து மகாத்மா பதிப்பகத்திலே பணிசெய்கிறார் இவர். ரொம்பவும் நல்லவர்; இதயம் உள்ளவர், அம்மா!"

"அப்படியா?"

"அம்மா, உங்க மஞ்சுளாவுக்கு உங்களைப்பற்றியும் உங்கள் கணவரைப் பற்றியுமேதான் சதா கவலை. நீங்களும் உங்க வீட்டுக்காரரும் ஒற்றுமைப் பட்டால்தான். இவங்களுக்கு மனசிலே நிம்மதி உண்டாகுமுங்க!" என்றான் மாசிலாமணி.

மஞ்சுளாவின் முத்துப் பற்கள் முத்தொளி சிந்தின. ஆனால்... மீனாட்சியின் முகமோ கறுக்கத் தொடங்கியது. அவள் தான் ஈன்ற செல்வத்தைப் பார்த்தாள். 'நம்ப குடும்ப விஷயத்தை அன்னியரிடமெல்லாம் ஏனம்மா சொல்லணும்?' என்ற மனக்குறை அப்பார்வையில் பேசியது. "ஓஹோ! அப்படிங்களா?" என்று மாசிலாமணியைக் கேட்டுவிட்டு," வாம்மா போவோம். எனக்குத் தலையை வலிக்கிறது," என்றாள் தாய்.

அன்புப் அன்பும் விடைபெற்றன.

மீனாட்சியும் மஞ்சுளாவும் மௌனம் போர்த்திக் கொண்டு, மப்புப் போட்டிருந்த வானையைக் கடந்து நடந்தார்கள்.

மீனாட்சியின் பார்வையில் தட்டுப்பட்டது 'டாட்ஜ்'கார்' 'ஓ! மாப்பிள்ளை ஞானசேகர்!'—அவளுடைய தாயுள்ளம் அப்போது அடைந்த மகிழ்ச்சி அவளுக்குத்தான் தெரியும்!

# 15. மீனாட்சி சிரிக்கின்றாள்!

"வாங்க அத்தை! வா, மஞ்சு!"

"வாங்க, ஞானசேகர்! வீட்டுக்கு வந்த விருந்தாளியைத் தாங்க வரவேற்கவேண்டிய திருக்க, இப்போ நீங்க எங்களை வரவேற்கிறீங்க!" என்று மீனாட்சி புன்னகையுடன் கேட்டாள்.

ஞானசேகரின் பார்வையில் சிரிப்பு. அவன் மஞ்சுளாவை இமைக்காமல் பார்த்தவண்ணம் காரின் சாவியைச் சுழலவிட்டபடி நின்றிருந்தான். அவன் செய்கைக்கு ஒரு மாற்றம் கொடுக்க வேண்டி, "இத்தான், நீங்க வந்து ரொம்ப டைம் ஆச்சோ?" என்று விசாரித்தாள் மஞ்சுளா.

"ஆமாம்," என்கின்ற பாவனையில் மிடுக்கோடு தலையை ஆட்டினான் ஞானசேகரன். சுற்றிலும் படரத் தொடங்யிருந்த தெரு விளக்கின் வெளிச்சத்தில் அவனுடைய கண்களின் மருட்சி ஆழமாகப் பொலிந்தது. இப்போது அவன் மஞ்சுளாவைப் பார்த்த பார்வையில் ஏன் இவ்வளவு தாபமும் தாகமும் விளையாட வேண்டும்?

அவசரம் அவசரமாக மீனாட்சி வீட்டைத் திறந்தாள் "உள்ளே வாங்க," என்று ஞானசேகரை நோக்கிக் கூறினாள். கையிலிருந்த கூடையைக் கூடத்தின் ஓர் ஓரத்தில் வைத்து சுவாமி பிரசாதத்தை எடுத்துத் தன் தமையனை மகனிடம் நீட்டினாள். "விபூதி குங்குமம் இருக்கு; பூசிக்கங்க," என்றாள். "அண்ணே, அண்ணி எல்லாரும் சுகந்தானே?" என்று நலம் விசாரித்தாள். "ஆமாம்," என்று கிட்டின பதிலில் கிடைத்த அமைதியோடு உள்ளே சென்றாள்.

மென்மையாக எழுந்த சத்தத்தைக் கேட்டதும், ஞானசேகர் சிந்தனையினின்றும் விடுதலை அடைந்து, "ஈவினிங் பேப்பரா, மஞ்சு?" என்று கேட்டான்.

'ஊம்' கொட்டினாள் மஞ்சுளா.

"பார்க்கலாமா ?"

"ஓ!"

ஞானசேகரன் செய்திகளை மேலோட்டமாகப் பார்வையிடலானான்.

மஞ்சுளாவுக்குக் கால்கள் தரையில் பாவ மறுத்தன. அத்தானின் பார்வையிலிருந்து அச் செய்தி தப்ப முடியாது! அம்மாவுக்கும் இனி செய்தி தெரிந்துவிடும்! தெரியட்டும், தெரியட்டும்! வேப்பேரி காவல் நிலையத்தின் வெளிவாசலில் ஞானசேகரன் தன்னிடம் கூறிய விஷயங்களை ஒன்றுவிடாமல் நினைவு கூர்ந்தாள். 'மஞ்சு! உன் முடிவு நல்லதனமாக அமைந்துவிட்டால், உன் தாய் தந்தையரை 'ராசி'யாக்கி, நம் கல்யாணத்தை அவர்களை முன் நின்று நடத்தச் செய்வது என் பொறுப்பு' என் சாகசங்களால் வென்ற தீருவேன் நான்!' அத்தான் ஞானசேகர் தன் கடிதத்தின் இறுதியில் குறித்திருந்த செய்தி அவளுக்குப் புதிர்போடத் தொடங்கிவிட்டது. காவல் நிலையத்தில் ஞானசேகர் பேசும்போது அபாய அறிவிப்பைக் காட்டியும் அபயக் கரம் நீட்டியும் கொடிகாட்டிக் குறிப்பிட்ட விவரங்களையும் அவள் மனம் அசை போட்டது. 'அத்தானுக்கு மஞ்சுவாக இருந்த நான், காவல் நிலையத்தில் மஞ்சுளாவாக மாறினேன்; இப்போது இங்கே மறுபடி மஞ்சுவாக ஆகிவிட்டேனே ?—அவளுடைய மதுர இதழ்கள் சிரிப்பைக் கண்டன. தமிழரசியின் காதலுக்குக் குறுக்கே தான் நிற்பதில்லை என்று அவளிடம் உத்தாரம் கொடுத்த அந்த 'இன்பச் செய்தி'யை அவள் இந்நேரம் மிஸ்டர் ஞானசேகரிடம் அஞ்சல் செய்திருக்கவே வேண்டும்! ஆமாம்!

கடிகாரம் ஏழு முறை ஒலித்தது.

மீனாட்சி வந்தாள். கையில் இரண்டு 'செட்' ஹார்லிக்ஸ் பானம் இருந்தது. "மஞ்சு, உன் அன்பு அத்தானுக்கு ஹார் லிக்ஸை கொடேன்" என்றார்.

அம்மாவின் உள்நோக்கம் மஞ்சுளாவுக்குப் புரிந்தது. "இதோ, கொடுக்கிறேன், அம்மா," என்று சொல்லி, அம்மா வின் கையிலிருந்த ஒரு செட் ஹார்லிக்ஸை வாங்கிக் கொண்டு "அத்தான், இந்தாங்க!" என்று நீட்டினாள்.

மஞ்சுளா நீட்டிய பானத்தைக் கைநீட்டி வாங்க முனைந்த ஞானசேகர், காற்றில் பறந்து வந்த காகிதமொன்று காலில் படவே அதை எடுக்கக் குனிந்து நிமிர்ந்த போது, அதே காற்றின் குறும்புத்தனம் காரணமாக மஞ்சுளாவின் 'மேலாக்கு புடவைப் பகுதி இடுப்புக்கு இறங்கிவிட்ட காட்சியைக் கண்டு ஓர் அரைக்கணம் மோகக் கிளர்ச்சி அடைந்தான். "ஊம், வாங்கிக்கங்க," என்று மீண்டும் நினைப்பூட்டிய குரலின் அழுத் தமும் அவனது நெஞ்சில் உறைக்காமல் இல்லை, ஆகவே, பானத்தை வாங்கினான் அவன்.

மாரகச்சேலையை ஒழுங்குபடுத்தினாள் மஞ்சுளா. அலட் சியமாகப் பத்திரிகையை மடியில் போட்டுக் கொண்ட ஞான சேகரின் போக்கிலிருந்து அந்தச் செய்தி இன்னமும் அத்தா னின் பார்வைக்கு இலக்காகவில்லை என்ற உண்மை நிலையை உணர்ந்தாள் மஞ்சுளா. அத்தானின் ஆர்வத்தைத் தூண்டி விட்ட அந்தத்தாள் மீது அவள் கவனம் சென்றது. என்ன காகிதம் அது? புரட்டிய காகிதத்தை நான்காக மடித்துக் கொண்டே, பானத்தைப் பருகத் தொடங்கிய காட்சியைக் கண் டாள் அவள். "இந்த ஹார்லிக்ஸ் உனக்கு, வாங்கிக் கொள் மஞ்சு," என்ற அன்னையின் குரலுக்குக் கட்டுப்பட்டாள் மஞ்சுளா. விரல் பதமாக சூடு இருக்கவே, 'மடக்'கென்று குடிக்கலானாள். அத்தானின் வரவு காரணகாரியமில்லாமல் இருக்கமாட்டாதே; அப்பாவின் எதிர்காலம் என்ன ஆகப்போ கிறதோ என்ற தவிப்பும் கூட்டுச் சேர்ந்தது.

அம்மாவின் பக்கமாகத் திரும்பலானாள் மஞ்சுளா. "கேட்க மறந்திட்டேன், அம்மா. நீ ஹார்லிக்ஸ் சாப்பிடவேணுமா? நான் கலந்து கொண்டாரட்டுமா?" என்று கேட்டாள்.

"எனக்கு வேண்டாம்," என்றாள் மீனாட்சி. ஞானசேகரின் மடியிலிருந்த பத்திரிகையைக் கவனித்தாள் அவள்.

"அத்தை, எண்ணெய்க் கறை படிஞ்ச இந்தப் பழைய காகிதத்திலே யாரோ ஒரு அப்பாவிப் பெண் தன்னோட காதலனுக்குக் காதல் கடிதம் கடிதம் எழுதத் தொடங்கிருக்கா, 'அன்பிற்குகந்த நண்பர் உயர்திரு மாசிலாமணி அவர்கட்கு' அப்படின்னு மட்டும்தான் எழுதியிருக்கா. அதுக்குள்ளே அந்தப் பெண் காதல் காற்றிலே அல்லாட ஆரம்பிச்சிடுச்சோ என்னவோ? இந்தா பாருங்க அத்தை, இந்தக் காதல் கடிதம் இப்போ என் கைக்குள்ளார அடங்கிக் கிடக்கிற அதிசயக் கூத்தை!" என்று ஏளனமாக எள்ளி நகையாடிக் கூறினான் ஞானசேகர்.

அவன் முழக்கம் செய்த பேச்சின் ஒலி அடங்கு முன்பே, தாயும் மகளும் ஞானசேகரை ஒருங்கிணையப் பார்த்தார்கள்.

"அப்படியா? என்கிட்டே கொடுங்களேன், பார்க்கிறேன்!" என்றாள் மீனாட்சி.

அவ்வாறே அத்தையின் கைகளிலே அக் கடிதத்தை— பூர்த்தி அடையாத கடிதத்தைச் சமர்ப்பித்தான் ஞானசேகர். அங்ஙனம் கொடுக்கும்போது, அவன் தன் அத்தையைக் கவனிக்காமல், அத்தையின் மகளைக் கவனித்தான்.

மஞ்சுளாவின் அழகுமுகம் அழகிழந்து போயிற்று. நெற்றித் திடலில் கோடைத் தூற்றலாகச் சிதறியிருந்தன வேர்வைத் துளிகள். அன்பிற்குரிய மிஸ்டர் மாசிலாமணிக்கு எழுதத்தொடங்கியிருந்த என் கடிதம் இங்கே எப்படி வந்தது? காகிதத்தில் படிந்திருந்த எண்ணெய்க்கறை அவளது நினைவுத்திரையில் கேள்விக்கான விடையை ஒதுக்கிக் காட்டிற்று. மயிலாப்பூருக்குப்

புறப்பட்ட அவசரத்தில் கைக்குக் கிடைத்த தாள்களை எடுத்து தோசைகளைப் பார்சல் கட்டிக்கொண்டபோது, சிதறிக் கிடந்த காகிதங்களுக்கு ஊடாக அந்தத் தாளும் இடைச் செருகலாகச் சேர்ந்து கொண்டு இப்போது விதியாக விளையாடும் விசித்திரம் அவளுக்குப் புரிந்தது. 'அத்தானுக்கு என் கையெழுத்துத் தெரியும். அதைத் தெரிந்து வைத்துக் கொண்டே இப்போது நையாண்டி பண்ணுகிறார் திருவாளர் ஞானசேகர்! அவருடைய காதலை நான் 'ரிஜக்ட்' செய்துவிட்ட ஆத்திரம் அவரைச் சும்மா விட்டுவிடுமா, என்ன?'—நெஞ்சுக் குருத்தில் சூடேறியது. அத்தானுக்கு பதிலடி கொடுத்து விட்டால்தான் சரிப் படும்! எஸ்... இட் இஸ் த வே!... ஆமாம், அதுதான் வழி!

"மஞ்சு!"

யார்; ஞானசேகரன் அத்தானா?

"நான் மஞ்சு இல்லீங்க. நான் மஞ்சுளா அத்தான்!" என்று நயம்படக் கூறித் தலையை அமர்த்தலோடு உயர்த்தலானாள் மஞ்சுளா.

"அப்படியா?" என்ற ஆச்சரியக் குறியோடு பேச்சைத் துண்டித்துக் கொண்டான் மாமன் மகன்; மாநிறம் கொண்டிருந்த முகம் நிறம் மங்கியது.

மீனாட்சி கலவரம் சூழ்ந்திட்ட கண்களால் மஞ்சுளாவையும் ஞானசேகரனையும் அளந்தாள். கையில் அகப்பட்டுக் கொண்டிருந்த பூர்த்தி பெறாத கடிதத்தை அவள் பார்ப்பது இது இரண்டாம் தடவையாகும். கோயிலுக்குப் புறப்பட்ட வேளையில் கிடைத்த இக் கடிதத்தைப் பார்த்துவிட்டு வீசிவிட்டாள் அவள் அது இப்போது ஞானசேகரின் பார்வைக்கு ஆஜராகி, மீனாட்சியின் கவனத்துக்கு மீண்டும் கொண்டுவரப் பட்டிருக்கிறது. மகளுக்கு அன்புடன் வாங்கி வைத்திருந்த நெக்லஸின் நினைவு மூண்டெழுந்தது. மஞ்சுளாவிடம் நெக்லஸைக் காட்டி விவரம் சொன்னபோது, 'அம்மா' என்று அவள்—மஞ்சுளா என்னவோ சொல்ல வாயெடுத்ததையும் அவள் கூர்மையாகக் கவனித்

திருந்தாள். ஆக, ஒரு விஷயத்தை மீனாட்சியால் கிரகித்துக் கொள்ள முடிந்தது. கையிலிருந்த காகிதத்தின் கையெழுத்து தன்னுடைய அன்பு மகளினுடையது என்பதும், அந்த அரைகுறைக் கடிதம், மஞ்சுளாவுக்கும் ஞானசேகரனுக்கும் இடையே ஏதோவொரு பிணவுக்குச் சாட்சியமாகக் காட்சி கொடுத்த நடப்பும் அவளுக்குப் புரிந்திருந்தது. மஞ்சுளா—ஞானசேகர் பற்றின விவகாரம் தன்போக்கில் புறப்படட்டுமென்று முடிவு செய்யலானாள். ஆகவே, கையிலிருந்த கடிதத்தைக் கசக்கி வீசிவிட்டு," அந்தப் பேப்பரைப் பார்த்திட்டா, கொடுங்க" என்று ஞானசேகரிடம் கூறினாள்.

வீசியெறியப்பட்ட கடிதத்தைப் பதட்ட நிலையோடு எடுத்தாள் மஞ்சுளா. "இது என்னோட லெட்டர் அம்மா!" என்றும் தெரிவித்துக் கொண்டாள். குரலின் சலனம் அவளது எழில் வதனத்துக்கும் தாவியிருந்தது.

"அப்படியா மஞ்சு?" என்று மட்டும் கேட்டுவிட்டு, ஞானசேகரைப் பார்த்தாள் மீனாட்சி. ஞானசேகரின் முகத் திரையில் பளிச்சிட்ட கரும்புள்ளியின் நிழலை அவள் கண்டு கொள்ளாமல் இல்லை. நீட்டிய பத்திரிகையை ஏந்தினாள் அவள் 'பாங்களா தேஷ் விடுதலைப் போரிலே பாகிஸ்தான் சரணடைவது உறுதி. பாரதத்தின் பெருமை மேலும் ஒருபடி கூடுதல் அடையப் போகிறது!' என்று நினைவுகளைக் கூட்டிக்கொண்டு பக்கங்களைப் புரட்டினாள். ஞானசேகரன் ஏன் வந்திருக்கிறார்? எப்போதாகிலும் வந்து பார்த்துத் திரும்புவான் ஞானசேகரன். அது மாதிரிதான் ஒரு முக்கியத்துவம் இல்லாதவகையில் தன் அண்ணன் மகன் வருகை புரிந்திருக்க வேண்டுமென்றுதான் அவள் கருதினாள். தைப் பொங்கலுக்குத்தான் 'ஞானசேகர் ஃபிலிம்ஸ்' அடுத்த படத்திற்கான பூஜையைப் போடப் போகிறார்களாம்!

மணி ஏழரை.

"அத்தை, நான் புறப்படணும்" என்றான் ஞானசேகரன். வலை எடுத்து, பிடரிப் பகுதியைத் துடைத்துக் கொண்டான்

"சாப்பிட்டுப் போகலாம். மஞ்சுவும் வந்திருக்கு. ஏனக்கும் இன்றைக்கு ஷூட்டிங் கிடையாது. கொஞ்ச நாழி பேசிக் கொண்டிருந்து விட்டுச் சாப்பிடலாம்", என்றாள் மீனாட்சி.

தயங்கினான் ஞானசேகரன். "உங்க கையிலே பேசணும்னுதான் வந்தேன், அத்தை!" என்றான் அவன்.

"என் கிட்டே பேசறதுக்கு அனுமதி வேறே கேட்க வேணுமா, என்ன? அடுப்பிலே உலை போட்டிட்டு வந்தேன், இதோ, நொடியிலே அரிசி களைந்துபோட்டுட்டு வந்திடுறேன், திடீர் சூப் வச்சிடுறேன், அப்பளம் பூ பொறிச்சிடலாம், மெனு போதுமல்லவா, ஞானசேகர்?" என்று வினவினாள் மீனாட்சி.

"போதுங்க, அத்தை. உங்க விருப்பத்துக்குத் தக்கபடி தான் உங்க திட்டமும் உருவாகிடுது. அப்புறம், நான் எப்படி மறுதலிக்க முடியும்!" என்றான் அவன்.

புன்னகையை அளந்து வெளிச் சொரிந்த வண்ணம், பத்திரிகையும் கையுமாக அங்கிருந்து விலகிச் செல்ல ஆயத்தம் செய்தாள் மீனாட்சி.

அம்மா அங்கிருந்து நகர்ந்து விட்டால், அத்தானும் தானும் தனிமையில் இருக்க வேண்டி வருமே என்னும் தவிப்பில் மனம் புழுங்கினாள் மஞ்சுளா. "அம்மா, நீ பேசிக்கிட்டிரேன், நான் உணவுப் பிரச்சினையைத் தீர்த்து வச்சிடுறேனே!" என்றாள் அவள். அம்மாவும் அத்தானும் தனித்திருந்தால் எப்படியும் அப்பா சம்பந்தமாக ஏதாவது பேச்சுக் கிளம்பாமல் தப்பாது என்றும் கருதினாள் அவள்.

ஞானசேகரன் விநயபூர்வமாகச் சோதித்தான் மஞ்சுளாவை.

"ஊஹூம்; வேண்டாமம்மா, மஞ்சு. நீ இப்போ என் 'கெஸ்ட்' ஆக்கும்!... நான் ஒரு நொடியிலே சமையலை முடிச்சிட்டுத் திரும்பிடுவேன்; அதற்குள், உன் அத்தானோடு நீ

பேசிக்கிட்டிரு, அம்மா !" என்று சொல்லிப் பத்திரிகையோடு புறப்பட்டாள் மீனாட்சி.

மஞ்சுளாவின் முகம் பரிதாபமாக மாறிற்று. அத்தானின் காதலை நிராகரித்து விட்ட செய்தியை அடுத்து ஞானசேகரே அவள் வேப்பேரி காவல் நிலையத்தில் சந்தித்த பொழுது, அந்த நடப்புப் பற்றிய பேச்சை அவன் துவக்குவதற்குவதற்கான வாய்ப்பு ஏற்பட வழி உருவாக இயலாமல் போயிற்று. மஞ்சுளாவை ஞானசேகரன் சந்திக்கக் காலையில் தயாராக இருப்பதாகச் சொல்லியுங்கூட, அந்தகைய சந்தர்ப்பத்தை அவளாகவே தடுத்து விட்டாள். ஆனால் இப்போது, அம்மா உருவாக்கிக் கொடுத்து விட்டிருக்கும் இச்சமயத்தை அவள் சந்தித்தே தீர வேண்டும். அத்தான் ஆத்திரத்தை வெளிப்படுத்தலாம்; தன்னை அவள் நிராகரிப்பதற்கான காரணத்தை வினவக் கூடும் ஞானசேகரன். அதனின்றும் சமாளிக்கவும் அவளுக்குத் தெரியும். காதலிப்பதும் காதலிக்கப்படுவதும் இயல்பாக நடந்தேற வேண்டிய உணர்வின் அடிப்படையிலான மாற்றங்கள் அல்லவா ? எதையும் சமாளிக்கத் தெரிந்தவள்தான் அவள். எதையும் தாங்கிப் பழகியவள்தான் அவள். ஆனாலும், அவளது கன்னி மனம் ஏனோ தவித்தது ; கலவரப்பட்டது. இத்தகைய விசித்திரமான மனச் சலனத்துக் காரணம் அவளது தற்போதைய சூழல் தானா ? அல்லது...?

"மஞ்சுளா !" என்று அழைத்தான் ஞானசேகரன்.

"அத்தான், என் அப்பா அவங்களோட ஜாகைக்குப் புறப்பட்டுட்டாங்களா ?" என்று கேட்கலானாள் மஞ்சுளா.

நெற்றியில் குறுக்கிட்டிருந்த சிந்தனைக் கோடுகளை அழுந்தத் தேய்த்து விட்ட ஞானசேகரன், "உன் அப்பாவை — என்னோட அத்தை புருஷனை அவரோட ஜாகையில் இறக்கி விட்டுட்டுத்தான் நான் இங்கே பறந்து வந்தேனாக்கும், மஞ்சுளா!" ம், மஞ்சுளா! பதிலுரைத்தாள்

அப்போது விரைந்து வந்த மீனாட்சி, ''மஞ்சு ! ஞான சேகர் ! சேதி தெரியாதா உங்க ரெண்டு பேருக்கும் ?'' என்று ஒரு அதிர்வேட்டுக் கேள்வியை வெடித்தாள்.

எதுவும் விளங்காமல் மஞ்சுளாவும் ஞானசேகரும் விழித்தார்கள்.

''பாவம், உங்க ரெண்டு பேர் பார்வையிலேயும் இந்தச் சங்கதி விழல்லே போலிருக்குது ! இருங்க, நானே படிச்சுக் காட்டுறேன் '' என்று ஆணவமாகச் சொல்லி, பிரித்திருந்த செய்தித்தாளின் கீழ்ப்பகுதியை அழுத்தத்தோடு படிக்கத் தொடங்கினாள் :

''மீனாட்சி என்கிற திரை நடிகையை அவள் கணவரான (தற்சமயம் பிரிந்துவிட்ட) சுந்தரேசன் என்பவர் போதை வெறியில் கத்தியால் குத்த முனைந்தபோது, சுந்தரேசன் கையும் களவுமாகப் பிடிபட்டுக் கைது செய்யப்பட்டு, ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது !...''

செய்தியை வாசித்து முடித்த மீனாட்சி மருள் கொண்டு ஒரு நிமிடம் அப்படியே செயலற்று நின்றாள். மறு நிமிடம், அவள் அட்டகாசமாகச் சிரிக்கத் தலைப்பட்டுவிட்டாள் !

சிரித்தது மீனாட்சிதானா ?

## 16. தமிழ்ச் சமுதாயத்தின் விதி !

மெய்தான் ! சுந்தரேசன் வாயிலாக மங்கலத் தாலி பெற்ற — தாலிப் பாக்கியம் பெற்ற மீனாட்சியேதான் அப்படிச் சிரித்தாள் !

அவளுடைய வாய் மொழியாகச் சிந்திச் சிதறிய அந்தச் செய்தியின் ஒலி அலைகள் இன்னமும் எதிரொலி கிளப்பிக் கொண்டிருந்தன !

ஞானசேகரன் சிலையாக மலைத்து விட்டான். அத்தகைய நேருக்கு நேராகப் பார்க்கக் கூச்சப்படும் அவன் இப்போது தொடுத்த கண் எடுக்காமல் நோக்கினான். அவனுடைய சலனம் அடைந்திருந்த மனத்தில் மேலும் கலவரமும் குழப்பமும் மேலிடத் தொடங்கின. மீனாட்சி அத்தையின் சிரிப்பும், சிரிப்புக்குப் பின்னே பின்னணிக்குரல் கொடுத்த பத்திரிகைத் தகவலும் அவனுக்கு ஒரு மர்மப் பின்னலாக — புதிர்ச்சிக்கலாக — மாய விடுகதையாகவே தோன்றியிருக்க வேண்டும். அத்தையின் கணவர் சுந்தரேசனின் நிலைபற்றிஅத்தையிடம் சொல்லித் தீர வேண்டிய பிரச்சினைகளைச் சுமந்து கொண்டு வந்த அவன் பேச்சைத் தொடங்குவதற்கான நேரம் காலத்திற்காகவே பொறுமையோடு காத்திருக்கையில், மஞ்சுளாவின் போக்கும் அவளது கையெழுத்துக்கொண்ட எண்ணெய் படிந்த காகிதத்தாளும் அவனைப் பெரிதும் பாதித்தாலும் கூட, எல்லா அவலங்களையும் கட்டறுத்துக் கொண்டு அத்தையிடம் பேசியாக வேண்டிய விஷயங்களைப் பேசித் தீர்த்துத் திரும்பிவிட வேண்டுமென்று தவித்துக் கொண்டிருந்தவன் ஆயிற்றே அவன் ! மஞ்சுளாவின் தந்தை குறித்தும் அப்பால், மஞ்சுளாவைப் பற்றியும் செய்திகளைக் கொடுத்து வாங்கி விட வேண்டாமா அவன் ? தை பிறக்கப் போகிறது ! தை பிறந்தால் வழு பிறக்கும் என்பார்களே தமிழரசியின் முகம் மனக்கண்ணில் 'டால்' அடிக்க, அவன் மேனி புல்லரித்தது. நறி கெட்டு அலைந்த சிந்தனையைப் பற்றி இழுத்தவனாக, "அத்தை !" என்று விளித்தான் ஞானசேகர்.

மீனாட்சி நிறுத்திய சிரிப்பைத் தொடர்ந்தாள். பாவம், மஞ்சுளாவுக்குக் கண்கள் கசியத் தொடங்கிவிட்டன. அப்பாவைப் பற்றின பத்திரிகைச் சேதியை அவளே அம்மாவிடம் குறிப்புணர்ந்து காட்டிவிடவேண்டுமென்றுதான் இருந்தாள். அந்தத் தகவலை அம்மா தானாகவே பார்க்க நேர்ந்துவிட்டது.

ஆனால் அத்தானுக்கு மட்டும் இச் செய்தி எப்படிக் கண்ணில் படாமல் தப்பித்தது ?

மீனாட்சி சிரிப்பை நிறுத்தினாள்.

அணைந்திட்ட மௌனத்தை அணைத்தவாறு, "அத்தை, உங்களுக்குச் சுயப் பிரக்ஞை வந்திட்டதின்னு நினைக்கிறேன். சரி தானே ?" என்று கேட்டான் ஞானசேகரன்.

"வித்தியாசமான வகையிலே நான் சிரிச்சதை வச்சுக்கினு இப்படிச் சந்தேகப் படுறீங்கன்னு நினைக்கிறேன். சரிதானே, ஞானசேகர் ?" எதிர்க் கேள்வி போட்டாள் மீனாட்சி. "நான் சுயப்பிரக்ஞையோடதான் சிரிச்சேன். சிரிக்கவேண்டிய சந்தர்ப்பம் வரும்போது, சிரிக்காமல் இருக்கலாமா, என்ன ?" என்றாள் அவள்.

மஞ்சுளா அதிர்ந்தாள். சிரிப்பு என்றால், களிப்புக்கு அடையாளம் என்று பொருள் இல்லையா ?

"அத்தை !" என்றான் ஞானசேகரன்.

"சொல்லுங்கள், ஞானசேகர் !" என்றாள் மீனாட்சி.

"நல்லதோ, கெட்டதோ, எதுவாயிருந்தாலும் நான்கு சுவர்களுக்கு மத்தியில்தான் அடைபட்டுக் கிடந்தாக வேணுமே தவிர, வீட்டுக்கு வெளியே வரக்கூடாது. அதுதான் இல்லற வாழ்க்கைக்கு உண்டான சத்திய தருமம் ஆகும். அந்தச் சத்திய தருமத்தைத்தான் நாம் கவுரவம் என்கிறோம்; பண்பாடு என்கிறோம். ஆனால், இப்போது உங்களுடைய குடும்பப் பிரச்சினை வேப்பேரி முச்சந்தியோடு நிற்காமல், காவல் நிலையத்தை அடைந்தது. அத்தோடாவது நின்றதா வென்றால், அதுவும் இல்லை. அது இப்போது நியூஸ் பேப்பரிலேயும்கூட இடம் கண்டுவிட்டது. நான்கு சுவர்களுக்கு நடுவிலே உழன்று தீர்வு காணவேண்டிய அந்தரங்கப் பிரச்சினை இப்போது நான்கு கட்டங்களுக்கு நடுவே இடம் பெற்றுவிட்டது!

இந்த அவல நிலைமைக்காக நீங்க வருந்தவேண்டியிருக்க, அட்ட காசமாகச் சிரித்தால் அதற்கு என்னங்க அத்தை அர்த்தம்?"

ஞானசேகரின் கேள்வியில் அத்து மீறிய கவலை தொனித்தது.

அந்தத் தொனி மஞ்சுளாவுக்கு ஆறுதலளிக்கவே செய்தது.

'நான் அத்தான் ஞானசேகரின் காதலைப் புறக்கணித்து விட்டேன். இப்போது அவரது மனநிலை ஏதாகிலும் சூழ்ச்சிப் பாதையிலே தடம் மாறிவிட்டால் என்ன செய்வது? அப்பா அம்மாவின் பிணக்கைத் தீர்ப்பதற்குப் பதிலாக, அப் பிணக்கத்தை முறுக்கேற்றிவிட்டு, விதி வேடிக்கை பார்ப்பது போதா தென்று அத்தானும் வேடிக்கை பார்க்கத் திட்டம் போட்டால் என்ன செய்வது?' என்று மறுகிக் கொண்டிருந்த அவளுக்கு ஞானசேகரின் பேச்சு வெயிலுக்கு கிடைத்த நிழலாக இருந்ததில வியப்பில்லையே!

கண்களை மூடிக்கொண்டு சிந்தனை சூழ்ந்த நிலையில் வீற்றிருந்த அத்தானைப் பார்த்தபின், அன்னையை நோக்கிக் கூர்த்த விழி பதித்தாள் மஞ்சுளா.

மீனாட்சி நெஞ்சைத் தடவிக் கொண்டாள். நெஞ்சில் முத்திரை பதிந்திருந்த அந்தத் தாலித் தழும்பையும் சேர்த்துத் தான் தடவிக்கொண்டிருக்க வேண்டும் அவள். சில வினாடிகளின் மௌனத்துக்குப் பிறகு, அவள் தலையை நிமிர்த்தினாள். முன்னெற்றியில் வீம்பு செய்த குஞ்சு மயிரிழைகளை ஒதுக்கினாள் அவள். தொண்டையைக் கனைத்துக் கொண்டாள்.

"பேசுங்க, அத்தை! எனக்கு நேரம் ஆகுதுங்க!" என்று கூறினான் ஞானசேகர். "தயவு செய்து மறுபடியும் முன்போலச் சிரிச்சிடாதீங்க, அத்தை," என்றும் கேட்டுக்கொண்டான்.

"ஞானசேகர் என் சிரிப்புக்கான கவலை உங்களை அரிச்சுக்கிட்டு இருக்குது என்கிற உண்மையை நான் தட்டிக் கழிக்க

மாட்டேன், அதே சமயத்தில் என்னோட சிரிப்புக்கான காரணத்தையும் நீங்க புரிஞ்சுக்கிறது என்தரப்புக்கு நல்லது என்றும் நான் நினைக்கிறேன். சிரிப்புப் பொதுவாக சந்தோஷத்திலேதான் வரும். ஆனால், துன்பம் மிகுதியாக ஏற்பட்டாலும் சரி, ஆத்திரம் மிதமிஞ்சி உண்டானாலும் சரி, சிரிப்பும் அளவுக்கு மீறி வெடிக்கவே செய்யும். இது என் அனுபவம்,'' என்று நிறுத்தினாள் மீனாட்சி.

அத்தையின் பேச்சை அங்கீகாரம் செய்ய ஞானசேகரன் தலையை ஆட்டிவைத்தான். ''சற்று முன்னதாக நீங்க சிரிச்ச சிரிப்புக்கு நீங்க எந்த ரகத்தைக் காரணமாகக் கொண்டீங்க அத்தை?'' என்று வினா விடுத்தான் அவன்.

மீனாட்சியின் புன்முறுவலில் சோகமும் சினமும் பிரதிபலித்தன. ''என் சிரிப்பிலே சந்தோஷம இருந்திச்சு. என் கணவர் என்னை நடுச் சந்தியிலே சந்தி சிரிக்கச் செஞ்ச அநியாயத்துக்கு அவருக்குக் கிடைச்ச தண்டனையைக் கண்டதும் என் மனம் ஆனந்தப் பட்டுச்சு. என் சிரிப்பிலே துன்பமும் இருந்திச்சு. எனக்கு ஏற்பட்ட கவுரவக் குறைவை எண்ணினதும், ஏற்பட்ட துயரம் அது, என்னோட சிரிப்பிலே ஆத்திரமும் இருந்திச்சு, அதுக்குக் காரணம்... காரணம், என் கணவர் ஜாமீனில் விடுவிக்கப்பட்ட தகவலாக்கும்!'' என்று சிரிப்பு விளக்கம் கொடுத்தாள் சுந்தரேசனின் மீனாட்சி.

மஞ்சுளாவின் முகம் மட்டும்தானா சுறுத்தது?

ஞானசேகரின் நெற்றி சுருங்கிவிட்டது, புறப்பட எழுந்தவன், மறு வினாடி தன போக்கில் அமரலானான். சிகரெட்டை எடுக்க முனைந்தவன், இருக்குமிடம் உணர்ந்து, சிகரெட் டப்பாவை சட்டைப்பையிலேயே அழுத்திவிட்டான்.'' அத்தை' நான் புறப்படணும். அம்மா தேடுவாங்க, சரி, இப்போது உங்கள் முடிவுதான் என்ன? என்று கேட்டான். குரல் தாழ்ந்தது,

''முடிவா? எதைப் பற்றிய முடிவைக் கேட்கறீங்க, ஞான சேகர்?''

"சற்று முந்தி நான் சொன்ன உங்க குடும்பச் சிக்கலுக்கு உண்டான முடிவைப்பற்றித்தான் கேட்கிறேனுங்க அத்தை !"

"அந்த முடிவைத்தான் என் சிரிப்பு உங்களுக்குச் சொல்லிடுச்சே ? அது போதாதின்னுதான் என்னோட சிரிப்புக்கான விளக்கங்களையும் கூறினேனே ?"

"அப்படின்னு, உங்க புருஷன்—பெண் சாதி பூசல் தீர்க்கப் பட முடியாத — தீர்க்கப்பட வேண்டாத ஒரு நிரந்தரப் பிரச்சினையாகவே இருந்து விட வேணும்னு தான் நீங்க முடிவு செஞ்சிருக்கீங்களா ? சொல்லுங்களேன் அத்தை !" ஞானசேகரின் பேச்சில் முன்னைக்காட்டிலும் சூடு இருந்தது. அது வெளிப் படையாகவும் தெரிந்தது.

ஜன்னலின் கதவுகளுக்கு அழகு பூட்டியிருந்த பூந்திரையினைக் கட்டறுத்துக் கொண்டு சூறைக் காற்று உட்புறம் நுழைந்தது.

மீனாட்சியின் உடல் குலுங்கியது, கூதல்தான் காரணமோ ? உள்ளே நிலவிய புயலைக் கண்டறியத்தான் சூறைக் காற்று கேள்விமுறையில்லாமல் அம்படி நுழைந்ததோ ?

"ஞானசேகர், நான் மீனாட்சி !"

"அத்தை, நீங்கள் வெறும் மீனாட்சியல்ல !— நீங்கள் சுந்தரேசன் மீனாட்சியாக்கும் !" என்றான் ஞானசேகரன், அழுத்தமான குரலிலே. அவன் பார்வை அத்தைக்கு மங்கலம் அருளிய தாலி மீது ஆரோகணித்திருந்தது.

"ஊஹூம் ! நான் வெறும் மீனாட்சியேதான். என்னைப் பொறுத்த மட்டில் அப்படித்தான் நான் நினைச்சுக்கிட்டிருக்கிறேன். இதுதான் உண்மை, ஞானசேகர் !" என்றாள் மீனாட்சி. அவள் வார்த்தைகளில் விரக்திக்குப் பதிலாக ஆத்திரம்தான் மேலோங்கியிருந்தது.

"பொய், அத்தை, பொய் !"

"ஏது பொய் ?"

"உங்களோட நினைப்பு !"

"நான் ஏற்க முடியாது !"

"அப்படியா ? அப்படியானல் நீங்க உலகத்தின் பார்வைக்கும் கூட வெறும் மீனுட்சியாகத்தான் தோன்றுறீங்களா ? அப்படியானல், நீங்க அணிஞ்சுக்கிட்டிருக்கிற அந்தத் தாலிக்கு உங்களைப் பொறுத்தமட்டிலே என்ன பொருள்?" என்று ஓங்கிய குரலில் கேட்டான் அவன்.

"உலகத்தின் பார்வைக்கு நான் எப்படித் தென்படுறேனே அது எனக்குத் தெரியாது. அதைப் பற்றியெல்லாம் கவலைப் படவும் நான் தயாராக இல்லே. என்னுடை இந்தந் தாலிக்கு உடையவர் திருவாளர் சுந்தரேசன். ஆனல் எனக்கு உடையவராகும் உரிமையை 'அவர்' இழந்து பல மாசம் ஆகிட்டுது, ஞானசேகர் !"

"பேஷ், பேஷ் ! அத்தை சினிமாவிலே நடிக்கத் தொடங்கியேதிலிருந்து வாதம் செய்யக் கற்றுக்கிட்டாங்க!... ரைட்டோ! அத்தை, நீங்க மதிக்க விரும்பாத மாஜி கணவர் கட்டின அந்த தாலியை மட்டிலும் நீங்க ஏன் அணிஞ்சுக்கிட்டிருக்கீங்க ? இப்படிக் கேட்கிறதுக்கு நான் வேதனைப்படுகிறேன்தான். ஆனலும், வாதம் என்று வந்து விட்டால், நாலும்தான் பேச வேண்டு வரும் ; நாலையும்தான் கேட்க வேண்டி வரும் ! ஊம் சொல்லுங்க அத்தை !"

மீனுட்சி பொங்கி வழிந்த வேர்வையைத் துடைத்துக் கொள்ளவில்லை. ரத்தம் கட்டியிருந்த கண்களை ஞானசேகரன் பேரில் வீசினுள்.

பொன்மணித் தீபமென நின்றிருந்த மஞ்சுளாவின் விழிகள் குளமாகி விட்டன.

"அத்தை, பேசுங்களேன் !"

"தமிழ்ச் சமுதாயத்தின் விதி அது. ஆனல், அது என் விதியல்ல! — அல்லவே அல்ல! ஏன், தெரியுமா? திருவாளர் சுந்தரேசன் அவர்களுடைய உயிர் எந்த விநாடியில் பிரிகிறதோ அதே விநாடியில் இந்தத் தாலியும என்னுடைய கழுத்தை விட்டுப் பிரிந்துவிடும்!"

மீனுட்சி பேசிவிட்டுக் கல்லானுள்.

"ஐயோ அம்மா!" அப்படியெல்லாம் சொல்லாதே அம்மா!" என்று வீரிட்டு அலறினுள் மஞ்சுளா!

## 17. புனிதமான நிலைமை!

ஞானசேகரன் அட்டகாசமாகச் சிரிக்கத் தொடங்கினுன். மீனுட்சி சில நிமிஷங்களுக்கு முன்னம் சிரித்தாளே, அப்படிப் பட்ட பாங்கில் அவன் சிரித்தான். எந்த 'பாங்கி'ல் இச்சிரிப் பைச் சேமித்து வைத்திருந்தானே, தெரியவில்லை! அருவருப்பின் உணர்வு பளிச்சிட அவன் தன்னுடைய அருமையான அத் தையை நோக்கினுன் :

"அத்தை!" என்று அழைத்தான் ஞானசேகர். சற்று முன் அத்தை மொழிந்த சொற்கள் அவன் மனத்தில் சிலம்பம் ஆடின. அத்தை புருஷன் சுந்தரேசனின் உயிர் அவரை விட்டுப் பிரிந்து விட்டால், அத்தை மீனுட்சியின் தாலி அத்தை யின் கழுத்தை விட்டுப் பிரிந்துதானே ஆக வேண்டும்! "அத்தை, நீங்க சொன்னது சுத்தமான பேச்சுதான்! ஆக, உங்களோட தாலியின் உயிர் உங்க கணவரின் உயிரில்அடங்கி யிருக்குது! இல்லீங்களா!" என்று கேட்டான் ஞானசேகரன்.

"ஊம் பேசுங்க!" என்ருள் மீனுட்சி.

"சரி இன்னொரு கசப்பான உண்மையையும் நீங்க நிச்சய மாகப் புறக்கணிக்க முடியாது !"

"சொல்லுங்க, கேட்கிறேன் !"

மஞ்சுளாவுக்கு இருப்புக் கொள்ளவில்லை. அப்பா அம்மா பிணக்கைத் தீர்க்க வேண்டியதிருக்க, அம்மாவின் தாலியை ஒரு பிரச்சினையாக்கி ஏன் அத்தான் 'ட்விஸ்ட்' செய்து பேசுகிறார் ?

"அத்தை, உங்க கழுத்திலே தாலி இருக்கிற வரையிலும் தான்-உங்களுக்கு இந்தத் தமிழ்ச் சமூகத்திலே ஒரு புனிதமான — மங்களகரமான — கௌரவமான மதிப்பும் மரியாதையும் தார்மீக ரீதியில் வழங்கப்படும் சரிதானே அத்தை ?"

"சரி!"

"அப்படியென்றால், உங்க கழுத்திலே விளங்கக் கூடிய தாலி மூலம் — அதாவது திருவாளர் சுந்தரேசன் உங்களுக்குத் திருப்பூட்டின அந்தத் தாலி மூலம் உங்களுக்கு அப்படிப்பட்ட மதிப்பும் கௌரவமும் ஏற்பட்டிருக்குது என்பதும் நிராகரிக்க முடியாத உண்மையாகும். இந்த நன்மைக்கு மூலமாக இருக்கிறார் உங்கள் கணவர் சுந்தரேசன், அந்தத் தெய்பிறுலேதான் பராசக்தி மூவிஸ் முதலாளியிடம அதாவது உங்க கணவர் வடக்கே இருப்பதாக ஒரு அப்பட்டமான புளுகைச் சொன்னீங்க. ஆனால் அவரோ வழியில் வாங்கிய பத்திரிகையிலே உங்களைப் பற்றியும் உங்க புருஷனைப் பற்றியும் வெளியான சேதியைப் படிக்க நேர்ந்ததாம். அவர் உங்களைப் பற்றி என்ன நினைச்சிருப்பாரோ, எனக்குத் தெரியாதுங்க !... சரி !... அத்தை நீங்க உங்க தாலிக்கு மதிப்புக் கொடுக்கறீங்க தானே ?"

"ஆமாம் !"

"காரணம் ?"

"அது நம் தமிழ்ப் பண்பாடு ஆகும் !"

"வெரிகுட் ! இப்பதான் 'ட்ரம்ப்' என் கைக்குச் சிக்கியிருக்குது, அத்தை ! ரைட்டோ ! அத்தை, நீங்க உங்க தாலியை மதிக்கிறது தமிழ்ப் பண்பாடு என்கிற உண்மையை உணரக் கூடிய பெரு மனம் உங்களுக்கு இருக்குது, அம்மட்டில் நான் ரொம்ப மகிழ்ச்சியடைறேன், ஆனா, ஒரு சந்தேகம் !"

"கேட்கலாமே !"

"உங்க தாலியை மதிக்கப் பழகியிருக்கிற நீங்கள், அந்தத் தாலியை உங்களுக்கு வழங்கிய கணவரை மதிக்கிறதுக்கு மாத்திரம் அந்தத் தமிழ்ப் பண்பாடு சம்மதிக்கமாட்டேன் என்கிறதா, அத்தை ?" ஏளனத்தைத் தவிர்க்க முடியவில்லை அவனால்.

"ஞானசேகர் ! நீங்க என் தமையன் மகன், அந்த ஒரு உறவை உத்தேசிச்சு மாத்திரம் நான் இப்போது பொறுமையைக் கடைப் பிடிக்கல்லே ! ஆனாலும், உங்க பேச்சு எல்லைத் தாண்டிப் போகுது !"

"நீங்களே எல்லை தாண்டிப்போனபின், மூன்றுமவர் யாராக இருந்தாலும் அவங்க பேச்சு உங்க விஷயத்திலே கட்டாயம் எல்லை தாண்டித்தான் போகும். நீங்க ஒரு கண்ணியமான தமிழ்க் குடும்பத்தின் கடமை உணர்வும் கட்டுப்பாட்டுப் புத்தியும் கொண்ட தலைவியாக நடந்து கொள்ளத் தவறி விட்டீங்க ! இப்படி நிர்த்தாட்சண்யமாகப் பேச நேர்ந்ததுக்காக நான் மனப் பூர்வமாக வேதனைப்படுறனுங்க, அத்தை, வேதனைப்படுகிறேன் !"

"ஞானசேகர், உங்க அத்தை புருஷனின் ஒரு பக்க வாக்கு மூலத்தை மட்டும் கேட்டுக்கினு நீங்க இப்படிப் பேசுறது அழகில்லை ! எனக்குள்ள எல்லே அவருக்கும்—அதாவது திருவாளர் சுந்தரேசன் அவர்களுக்கும் உண்டுதானே ?"

"கொட்டு முழக்கோடு உண்டு !"

"அப்படியென்ருல், அவர் —என் கணவர், என்னை—தான் தொட்டுத் தாலி கட்டிய என்னைத் தேவடியாள்—வேசி அப்படி இப்படி என்றெல்லாம் வரம்பில்லாலும் அசிங்கமாகவும் பேச லாமோ... தகராறு நடந்த அன்றைக்கு, பொன்ருங்கண்ணிக் கீரைச் சமையல் செஞ்சிருந்தேன். பிடிக்கல்லேன்ரு, ஒதுக்கி வச்சுப்பிட வேண்டியதுதானே ? அந்தக் கீரையை அப்படியே என் கண்ணில் வீசியடிச்சிட்டார்: அதுதான் தொலையட்டும் ! அதற்கப்புறம் பேச்சு வார்த்தை தடிச்சுது, எங்களுக்குள்ளே... கொஞ்சகாலமாக அவரோட நடத்தை தடம் புரண்டு வந்ததை சுட்டிச் சொன்னேன். எரிச்சல் வந்திடுச்சு அவருக்கு 'உன் ஒருத்தியை மாத்திரம் நம்பி இருக்க வேண்டிய தலை விதி எனக் குக் கிடையாது. ஏன் தெரியுமாடி ? நான் ஆண்பிள்ளை !..." அப்படின்னு சொல்லிப் போதை வெறியிலே என்னை அடிச்சுப் போட்டார். பொறுமைக்கும் அளவு இல்லையா ? "அப்படின்ரு நான் மாத்திரம் உங்களையே நம்பிக்கிட்டுத்தான் இருப்பேனுக் கும் ? என் வயிற்றை என்னுலே கழுவி முடிக்கிட வழி தெரி யும் !... சட்டப்படி நடந்துக்கிடவும் பாதை புரியும் எனக்கு !" அப்படின்னு சொன்னேன், ஆத்திரம் தாங்காமல் ! அவ்வளவு தான் !... "இப்பவே என் வீட்டை விட்டுக் கிளம்படி, வேசிச் சிறுக்கி, தேவடியாள் கழுதை !" அப்படின்னு ஏசினுர், பேசி னுர். நான் புறப்படுற சமயத்திலேதான் மஞ்சு வந்திச்சு ! அதுக்கு ஒரு கதையும் தெரியாது !... தெரியதுக்கும் வழி இல்லே !... இப்போ சொல்லுங்க ; என்னை மதிக்கத் தெரியாத அவரை—அந்த சுந்தரேசனை நான் மட்டும் மதிக்க வேணுமா, என்ன ? மான அவமானம் கடந்து நடந்துக்கிட்ட அவரை— அந்தச் சுந்தரேசனை நான் எந்த விதியின் பேராலே நான் இனி மன்னிக்க முடியும் ? ஊம், இப்போ நீங்க பதில் சொல்லுங்க !... கல்லானுலும் கணவன் ; புல்லானுலும் புருஷன் என்கிற கதை சொல்லாமல், நியாய ரீதியான ஒரு தர்மமான முடிவைச் சொல் லுங்க, ஞானசேகர் !" நீதி விசாரணை கோரினுள் மீனுட்சி. விழி வளையங்களிலே வெஞ்சினம் 'பார்' விளையாடியிருக் குமோ ?... 'ஊவரம்' இருக்க வேண்டிய இடம் இதுதானே ?

நிமிர்ந்து அமரலானான் ஞானசேகரன். சட்டையின் கழுத்துப் பட்டையைத் தூக்கி விட்டுக் கொண்டான். பின் விசிறியையும் மீறி உடம்பில் ஊறிய வேர்வையைப் போக்கவே அவ்வாறு செய்திருக்கலாம். உடல் சீரடைந்தால் தானே உள்ளமும் சீரடையக் கூடும். "கல்லானாலும் கணவன்; புல்லானாலும் புருஷன்' என்றநியதித்தத்துவத்தை எடுத்தியம்பி அத்தையை மடக்க நினைத்திருந்தான் ஞானசேகர். தன் நாயகன் பேரிலே அத்தைக்கு ஏற்பட்டிருந்த ஆத்திரத்தின் கொடுமையில் நியாயம் இருக்கத்தான் இருக்கிறது! அத்தகைய அத்தையின் கணவர் 'தேவடியாள்—வேசி' என்று கேவலமாகப் பேசியது எப்படி தர்ம நியாயமாகும்? அந்தச் சொற்கள்தாம் அத்தைக்கு இத்தகைய தொருவர்மத்தை உருவாக்கியிருக்க வேண்டும்! அத்தை புருஷனின் நிலை சட்ட ரீதியாகக் கவலைக்கிடம் அளிப்பதாக இருக்கிறது. இதற்கிடையில், அத்தைக்கும் அத்தையின் கணவருக்கும் இடையில் சமாதானம் நிலவச் செய்து விட்டால், சட்டத்தைப் துழாவிப் பார்க்க ஏதாகிலும் ஓர் இடைவெளி கிட்டக் கூடும் என்று லாயர் மதன் மோகன் சொல்லவில்லையா? அத்தகைய குழப்பமும் கலவரமும் நிலவப் பார்வையிட்டான் ஞானசேகரன்.

மீனாட்சி—தலையைத் தாழ்த்தி மார்பில் பொலிந்திட்ட தாலியையே கூர்ந்து பார்த்தவாறு இருந்தாள்.

"அத்தை!"

"என்ன?"

"அத்தை, இப்போது உங்க கணவர் ரொம்பவும் இக்கட்டான நிலைமையிலே இருக்கார். பிச்சுவாக் கத்தியைக் கொண்டு குடி வெறியிலே உங்களைக் கொல்ல முயற்சி செஞ்ச சமயம் பார்த்து எஸ். ஐ.யை விதி கொண்டாந்து சேர்த்ததுதான் இப்பொழுது பெரும் சிக்கலை ஏற்படுத்தியிருக்குதுங்க. சிக்கலின் முடிச்சை மேலும் முறுக்கேற்றி விட உதவியிருக்குது, நீங்க கொடுத்த ஸ்டேட்மெண்ட் — வாக்கு மூலத்தின் துணையோட

தான் இப்போது 'சார்ஜ ஷீட்' பதிவாகியிருக்குதுங்க. நீங்களும் உங்க கணவரும் 'ராசி' ஆகி, மன இணக்கம் கொண்டால் அதன் விளைவாக ஏதாவது ஒரு சந்து கிடைச்சு, அதன் வழியாக உங்க புருஷனைக் காப்பாற்ற ஏதாவது ஒரு சந்து ஏற்படுமான்னு பார்க்க முடியும். அப்பாவோட தனித்த அபிப்பிராயமும் இதுதான். இது ஒரு முயற்சி! — அவ்வளவேதான்! மற்றப்படி, இதிலே அமைதிப்படவும் நம்பிக்கை வைக்கவும் வழி இருக்கிறதாகத் தெரியவில்லை!...

ஞானசேகரன் பெருமூச்சை நெட்டித் தள்ளி விட்டு மறுபடி தொடரலானான் ;

"அத்தை! ஒரு உண்மையின் அடிப்படை நிலையை நீங்க புரிந்து கொள்ள வேண்டும். 'இந்தியன் பீனல் கோட்' ஐந்நூற்றுப் பதினொன்றுவது செக்ஷன் ஆதமாகக் காத்துக்கினு இருக்கிறது என்கிற உண்மையை, ரகசியத்தை நீங்க மறந்து விடவே கூடாதுங்க! மறந்தால், அது நியாயம் இல்லை ; தர்மமும் ஆகமாட்டாது! சட்டத்தை இருட்டறை அப்படின்னு சொல்லுவாங்க. இதை நாம் நம்புவதற்கில்லை. சட்டம் என்கிறது ஒரு ஒளி அரங்கம். அறையிலே செய்யப்படுகிற தவறுகள் அம்பலத்துக்கு வந்து சேர்வதெல்லாம் இந்த ஒளி மேடையில் தானுங்களே? இந்த மேடையிலே அம்பலமாகியும் அம்பலப்படுத்தப்படும் இருக்கிற கேஸ்கள் எத்தனை எத்தனையோ! ஆகவே, அத்தனை பலமுள்ள— நிர்த்தாட்சண்யமுள்ள சட்டத்தை உடைக்க முடியுமான்னு நாம் இருட்டிலே நின்று முயன்று பார்த்தாக வேணும். பிடிப்பில்லாத — நம்பிக்கையில்லாத ஒரு முயற்சிக்கு உங்களுடைய மனிதாபிமனமுள்ள — நல்லெண்ணம்மிக்க ஒத்துழைப்பும்தான் கைகொடுக்க வேணும் குடும்பம் என்றால், நாலும்தான் இருக்கும். மன்னிக்கிறதும் மன்னிக்கப்படுறதும் கூட தார்மீக அடிப்படையின் குடும்ப விவகாரங்களிலே சர்வ சகஜமாக இடம் பெறுகிற — இடம் பெற வேண்டிய நடவடிக்கைதான். நடந்துக்கிட்டிருக்கிற இந்தப் பாரத — பாகிஸ்தான் சண்டையிலேதான் பதட்ட நிலை

நெருக்கடி நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதில்லை. இங்கேயும் தானே அத்தகைய் சூழல் நிலவுது? ஆக, நான் சொல்ல வேண்டியது சாடாவையும் உடைச்சு வச்சுச் சொல்லியாச்சு. இனி, தீர்ப்புச் சொல்ல வேண்டிய புண்ணியம் உங்க கையிலே தான் இருக்குதுங்க, அத்தை!... உங்களோட ஒரு சொல்லிலே தான் உங்க தாலியின் உயிர் ஊசலாடுது!... ஆகவே, நல்ல முடிவை நல்ல மனம் கொண்டு சொல்லுவீங்களா, அத்தை?... நீங்க கொடுத்த வாக்கு மூலத்தை மறுதலிச்சால், ஒரு வேளை உங்க கணவருக்குத் தப்ப வழி கிடைக்கழுங்க, அத்தை!"

ஞானசேகர் இருமினன்.

'அம்மா, அம்மா!' என்று மஞ்சுளாவின் இதய அந்தரங்கம் மனத் தவிப்போடு புலம்பியது.

"ஞானசேகர்!" என்று அழைத்தாள் மீனாட்சி—சுந்தரேசனிடமிருந்து மாங்கல்ய பாக்கியம் பெற்ற மீனாட்சி. பிறகு நிறுத்தினாள்; அப்பால், தொடர்ந்தாள்; முகில்வானம் மழை பொழிந்து தானே தீரவேண்டும்?

"ஞானசேகர், எங்க குடும்பத்திலே நீங்க கொண்டிருக்கிற அக்கறை மிக அதிகம். அதுக்காக நான் சந்தோஷப் படுகிறேன், ஆனால், அதே சமயத்தில் உங்க பொன்னான மனசைப் புண்படுத்த நேரிடுகிறதே என்றும் நான் கிலேசப்படாமல் இருக்க முடியல்லே! ஞானசேகர், உடைந்த அல்லது உடைபட்ட கண்ணாடி எங்கேயாவது ஒன்றுசேர்ந்திருக்கிறதா? அது மாதிரிதான் எங்க தாம்பத்தியப் பூசலும்! சண்டை என்ருல் சமாதானம் ஏற்படுவது இயல்பு. இப்போ நடந்துகிட்டிருக்கிற பாரத — பாகிஸ்தான் சண்டைகூட நாளைக்கு சமாதானம் ஆகாமல் தப்பாது! ஆனால், எங்கள் சண்டை 'ராசி' ஆகவே முடியாதுங்க. அபவாதமாக, அநியாயமாக—ஏசி வசைமாரி பொழிஞ்சாரல்லவா? அந்தப் பாவச் சொல்லுக்கு, அந்தப் பழிச் சொல்லுக்கு. நான் என்றே என்னையே பலியாக்கிட்டேன்! அந்தப் பாவத்துக்கு உண்டான

கூலியை—கர்த்துக்கிட்டிருக்கிற கூலியை என் கணவர் ஏற்றுக்கிடவேண்டியதுதான் விதியோட தீர்ப்பாகவும் இருக்க முடியும் ஆகவே, இது சம்பந்தமாக—அதாகப்பட்டது, எங்களுடைய குடும்பப் பிரச்சினை சம்பந்தமாக இனி நீங்க என்னை தலையிடாமல் இருந்தால் தேவலாம்!

என் அருமை மகளை அவள் விரும்புகிறவருக்குக் கல்யாணம் செய்து கொடுக்க வேணுமென்கிறதுதான் என் லட்சியக் கனவாகும். அதை நிறைவேற்றத்தான் என் உயிரை நான் சுமந்துகிட்டு வாழ்கிறேன்! இது அந்த முண்டகக்கண்ணி அம்மனுக்குதான் தெரியும்! ஆமாம், ஞானசேகர்!''

மீனாட்சியின் குரல் உணர்ச்சிப் பெருக்கில் உடைந்தது; உள்ளத்துச் சுமையில் கண்ணீரும் உடைந்தது.

''அம்மா!''

மஞ்சுளா விம்மினாள்.

ஞானசேகரன் எழுந்துவிட்டான்.

''சாப்பிடலாமா, ஞானசேகர்?'' என்று கேட்டாள் மீனாட்சி.

''உங்க வீட்டிலே சாப்பிட நான் விரும்பல்லேங்க, அத்தை என்னை மன்னிக்க பிரியமிருந்தால் மன்னிச்சிடுங்க!''

சொற்களின் எதிரொலியைப் பின்னே விட்டுவிட்டு நடந்தான் ஞானசேகர்.

'டாட்ஜ்', அவனுக்காக எத்தனை நாழிதான் காத்துக் கொண்டிருக்க முடியும்?

## 18. தாலிப் பிரச்னை !

மீனாட்சியின் இருப்பிடத்தை விட்டுப் புறப்பட்ட ஞான சேகரன் சாலையைக் கடந்து, தன்னுடைய காரை அடைந்தான் மூடிக்கிடந்த மீனாட்சி அத்தையின் மூர்த்தண்யமான போக்கில் ஆத்திரம் அடைந்திருந்த அவன், மூடிக்கிடந்த காரின் கதவு களைத் திறந்தான், ஏறி அமர்ந்து கொண்டான். விழுப்பம் தரும் ஒழுக்கம் பற்றின குறள் கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வந்தது. ஒழுக்கம் செயலில் மட்டுமல்லாது, சொல்லிலும் இருக்க வேண்டாமா ?

'அத்தையாம் அத்தை ! சே ! அத்தையின் கல் மனத்தைக் கரைக்க முடியவில்லையே ? நான் தோற்றுத் திரும்புகிறேனே ? தாலியை மதிக்கத் தெரிகிறது அத்தைக்கு! ஆனால் தாலி கொடுத்தவரை மட்டும் மதிக்கத் தெரியமாட்டேன் என்கிறதே ! அப்படியென்றால், அந்தத் தாலியை அணிந்து கொள்ளமட்டும் எந்த விதி—எந்த சட்டம்—எந்த பண்பு அத்தைக்கு அனுமதி வழங்கியிருக்கிறதாம் ? உண்மையான ரோஷம் இருந்தால், மானம் இருந்தால், அந்தத் தாலியை—வேண்டாத கணவர் கட்டிய அந்தத் தாலியைக் கழற்றி வீசியிருக்க வேண்டாமோ அத்தை ? சே ! மகளுக்கு மட்டும்தான் கல் மனம் என்றிருந் தேன் ! அதற்கு மேலே கல்லாக இருக்கிறது அத்தையின் மனம் !'

நினைவுகளின் தாறுமாறான உடும்புப் பிடியின் எரிச்சலையும் வலியையும் தாள முடியாமல் 'ஸ்டியரிங்கில் கைவைத்தான் ஞானசேகரன். அருகிலிருந்த கடையில் இருந்த கடிகாரத்தில் ஒன்பது மணி அடித்த சத்தம் கேட்டது. பரபரப்போடு புறப்பட ஆயத்தப்பட்டான் அவன். நெஞ்சில் விளையாடிய மஞ்சுளா

அத்தை மகள் மஞ்சுளா நினைவிலும் விளையாடுகிருள்! மஞ்சு ஓ! மை டியர் மஞ்சு!—கண்கள் பொடித்தன.

கார் புறப்படப் போகிறது!

அப்போது:

"அத்தான்! அத்தான்!"

மஞ்சுளா ஒளி வெள்ளத்தில் உருக் கொண்டு வந்து நின்ருள்.

பொங்கிவரும் பெரு நிலவாக வந்து நின்ற மஞ்சுளாவை வியப்பு விரிய ஆழமாகப் பார்வை பரப்பிஞன் ஞானசேகர். "மஞ்சு!" என்று உந்திக் கமலத்தினின்றும் புறப்பட்ட குரலால் அழைத்தான்.

மஞ்சுளா வேதனையின் இழை பின்ன, புன்னகை இழையச் செய்தாள். கறுப்பு வட்டத்தில் அமைந்த சிவப்புப் புள்ளியாக அப்புன்னகை அழகு கண்டது. "நீங்கள் என்னையும் என் அம்மாவையும் சோதிச்சிட்டீங்க?" என்று குற்றப் பத்திரிகை வாசித்தாள்.

"என்ன சொல்கிரும், மஞ்சு?"

"நடந்த கதையைச் சொல்கிறேன், அத்தான்!"

"விளங்கும்படியாகச் சொல்லேன், மஞ்சுளா!"

சரி, உடைத்தே சொல்லிவிடுகிறேன்.

முன்போல அப்பாவும் அம்மாவும் சமாதானமடையச் செய்வீங்க நீங்க என்று நான் தெய்வத்தையும் உங்களையும் நம்பிக்கிட்டு ஆவலோடு காத்துக்கிட்டு இருந்தேன். ஆனல்..."

"ஆனல் என்ன? பேச்சை முடித்து விடு, மஞ்சுளா!"

"ஆனல், அந்த பள்ளத்தை மேலும் ஆழமாக ஆக்கிட்டீங்க நீங்க, அத்தான்! நான் உங்க காதலை ஏற்க மறுத்த

காரணத்தை மனசிலே வச்சுக் கிட்டு, எனக்கு நீங்க எழுதின கடிதத்திலே குறிப்பிட்டிருந்த எச்சரிக்கைப் பிரகாரம் உங்க சாகஸங்களை விதியாக விளையாட விட்டுட்டீங்களே அத்தான்? நீங்க எதிர்பார்த்த மாதிரி என் முடிவு நல்லதனமாக அமைந்திருந்தால், நீங்க என் தாய் தந்தையின் பிணக்கைத் தீர்த்து வச்சிருப்பீங்க, இல்லையா?'' என்று தழுதழுத்த குரலில் சாடினுள் குமாரி மஞ்சுளா.

நெற்றியைப் பிசைந்து கொண்டே, சோகத்தின் நிதர்சனப் பிம்பமாகத் தன்னை ஒரு கணம் அவன் காட்டிக் கொண்டான். "மஞ்சுளா! என்னை நீ தவருகக் கணிச்சிட்டே! அதுவும்கூட என்னோட துரதிர்ஷ்டம்னுதான் நினைச்சாகணும்! மற்றப்படி, நீ என்பேரிலே பழி போட்டமாதிரி, நான் வேறே யார் மீதோ அல்லது விதிமீதோ பழிபோட விரும்பல்லே! ஆனால், ஒரு விவரத்தை மட்டும் என்னுலே புரிந்துகொள்ள முடிஞ்சிருக்குது! நீ என்னை உன்னுடைய அன்பு அத்தான் ஞானசேகராகவே மதிக்கவில்லை; என்னை வெறும் ஞானசேகராக—இதயம் இழந்த ஒரு மிருகமாகவேதான் நீ என்னை எடை போட்டிருக்கே! மஞ்சு ஓ... ஸாரி... மஞ்சுளா! நான் என் நிலையைத் திரிகரண சுத்தியோடு எடுத்துக்காட்டியாக வேண்டிய தருணம் வந்தாச்சு. நன்ருக கேட்டுக்கொள், நான் சொல்கிறேன்; நீ கேட்கிருய்! நானும் மனிதாபிமானத்தோடும் தார்மீகப் பண்போடும் சொல்கிறேன், நீயும் அதே மனிதாபிமானத்துடனும் தார்மீக நெறியுடனும் கேட்டுக்கொள்ள வேண்டுமல்லவா?''—ஞானசேகரின் உணர்ச்சிச் செறிவு பூண்ட பேச்சு நின்றது.

''வாஸ்தவம்தான், அத்தான்!'' என்று ஆமோதிப்புக் கொடுத்தாள் மஞ்சுளா. இங்கிதமான ஆதுரம் சிந்தச் சொன்ஞள் மஞ்சுளா.

ஞானசேகரன் பேசுகிருன்:

"மஞ்சுளா, நீ என் காதலை நிராகரித்தாய்; அது உன் சொந்த விஷயம். என் காதலில்—அதாவது, நான் உன் மீது கொண்ட காதலில்.உன் அளவில் நான் தோற்றுப் போனேன்.

அது என் சொந்த விஷயம்! இவ்விரண்டு நடப்புக்களும் சாமான்யமானவையல்ல — நம் இருவரது வாழ்க்கையிலும்! ஆனால் ஒன்று. இவை இரண்டும் சுயநலத்தின் விதிககு ஆட்பட்டவை. ஆகவே, நீ எனக்கு சாதகமான முடிவைக் காட்டவில்லை என்பதற்காக, நான் உன் தாய் தந்தையின் பிரச்சினையிலே சுமுகமான முடிவை உண்டாக்கத் தவறிவிட்டேன் என்று நீ என்மீது குற்றம் சாட்டுவது நியாயமல்ல; நேர்மையும் ஆகாது. தவறு உன் அம்மாவிடம் மட்டுந்தான் இருக்கிறதென்பதை நான் ஒப்புக் கொள்ள முடியாதவனாக ஆகிறேன். அந்தத் தவறுக்கு நீயும்தான் உடந்தையாக இருக்கிறாய்! அன்றைக்கு உன் அம்மாவும் அப்பாவும் சண்டைபோட்டுக் கொண்டு அதன் விளைவாக உன் அம்மா வீட்டை விட்டுக் கிளம்பிப் புறப்படும்போதே, நீ உன் அம்மாவைத் தடுத்து நிறுத்தியிருக்க வேண்டாமா?

"சரி, இன்னும் கேள் மஞ்சுளா! தாம்பத்யம் என்றால் இனிப்பும் இருக்கும்; கசப்பும் இருக்கும். உன் தாயாரை வீணான அபவாதத்திற்கு இலக்காக்கித் தவறான வகையிலே உன் அப்பா ஏசிப் பேசியது குற்றம்தான். அந்தமட்டில் உன் அப்பா குற்றவாளியாகவே அமைகிறார். ஆனால் இன்றைய நிலவரத்தின்படி, உன் அப்பாவைவிட ஒருபடி கூடுதலான குற்றவாளியாக உன் அம்மா இருக்கிறார்களே? பெண்—தமிழ்க் குலப் பெண் என்றால் பொறுமைக்குப் புகலிடமாக இருக்க வேண்டுமென்பதே தர்மம். ஆனால் உன் அம்மாவோ தாலி கொடுத்தவரையே கிஞ்சித்தும் மதிப்பதாகத் தெரியவில்லையே? அத்தை தன் புருஷன்மீது பழிவாங்கத் துடிக்கிறார்கள்! ஆனால் அத்தை புருஷனோ அத்தைபேரில் பழிக்குப் பழி வாங்கத் தவிக்கிறார்! இந்த நிலைமையிலே, நான் என்னவோ... கடமையைச் சொந்தத்தின் பேரால் செய்யவே இந்தச் சிக்கலில் தலையிட்டேன். இதிலும் நான் தோற்றவனாகவே ஆகியிருக்கிறேன்!

"மஞ்சுளா, நீ வெற்றிச் செல்வி ஆயிற்றே! நீ இரவு உன் தாயைச் சாந்தப்படுத்து; உன் அப்பாவை நசுக்கக் காத்திருக்

கும் சட்டத்தை உடைக்க முடியுமா என்று பார்க்கும் முயற்சிக்குரிய ஆதாரம் உன் அம்மாவின் கையில்தான் இருக்கிறது! உன் திட்டப் பிரகாரம் உன் அம்மாவையும் அப்பாவையும் சமாதானம் செய்து வைக்க முயற்சி செய்! விதியும் வினையும் வழி விட்டால், தெய்வம் கண் திறக்கும்! ஆனல், இப்போது முதலில் கண் திறக்கவேண்டியது உன் அம்மாதான்—என் அத்தைதான்! மறந்து விடாதே, மஞ்சுளா! மறுத்து விடாதே, மஞ்சுளா! நான் சொல்லி விட்டேன்!''

இருமல் பிசிறு தட்டி வெடித்தது,

''அத்தான், என் வரையிலும் என் அப்பாவும் சரி, என் அம்மாவும் சரி, என்னைப் பற்றி துளிகூட அக்கறை பட்டதாக நான் நம்பமாட்டேன். பருவம் அடைந்த மகளைத் தனியே விட்டுட்டு அவரவர் வீம்பும் விருப்புமே பெரிது என்று திசை மாறிப் போனவர்கள் அவர்கள், ஆனலும் அன்று நான் என்னுல் முடிந்தவரை அம்மாவைத் தடுத்துத்தான் பார்த்தேன், வீட்டை விட்டு வெளிச்செல்ல வேண்டாமென்று, கேட்டால் தானே? இன்றும் அவர்களை சமாதானப் படுத்தவே முயன்று வருகிறேன். அம்மாவிடம் இரவில் பேசுவேன். நாளை அப்பாவையும் சந்திப்பேன். முடிவு ஆண்டவன் கையில்! அப்புறம் அவன் விட்ட வழி!'' என்ருள் மஞ்சுளா. ''அத்தான், உங்களோட மனசைப் புண்படுத்துற மாதிரி ஏதேனும் நான் சொல்லியிருந்தால், தயவு பண்ணி என்னை மன்னிச்சிடுங்க!' என்று வேண்டிக் கொண்டாள்.

ஞானசேகரன் பற்றுக் கடந்த பாவனையில் மெய் நகைத்தான். ''உன்னை மன்னிக்க நான் யார், மிஸ் மஞ்சுளா?'' என்ருன்.

''நீங்க என் அன்பு அத்தான்!''

''ஓ! இஸ் இட் ஸோ? அப்படியா, மிஸ் மஞ்சுளா?'' ஊம், சரி; நான் புறப்படுகிறேன்!'' என்று விரக்தியுடன் கூறி, காரை இயக்க முனைந்தான் ஞானசேகரன்.

"சாப்பிட்டுட்டுப் போங்க, அத்தான்!"

"ஊஹூம்! முடியாது!" என்று கடுமையான குரலில் சொல்லிவிட்டான் ஞானசேகர்.

மஞ்சுளா தந்தப் பதுமையாகச் சமைந்து நின்றாள்.

அப்போது:

"மஞ்சு!", என்று பழகிய அன்பின் குரல் கேட்டது.

சுய உணர்வைப் பெற்றாள் மஞ்சுளா.

மாசிலாமணி எதிரில் நின்றான்!

மஞ்சுளா நாணம் காட்டி, புன்னகை காட்டினாள். உடனே காரை அண்டினாள். "அத்தான், ஒன் செகண்ட், ப்ளீஸ்!" என்றாள். மாசிலாமணியும் அவளருகில் வந்ததை உணர்ந்தாள். பிறகு, மாசிலாமணியின் முகத்தைக் குறியிட்டாள். "இவங்க தான் மிஸ்டர் ஞானசேகர்... என்னோட அன்பு அத்தான்!" என்றாள். அப்பால், ஞானசேகரின் விழிகளை ஊடுருவியவளாக "அத்தான், இவர்தான மிஸ்டர் மாசிலாமணி! என்னோடு 'மகாத்மா பதிப்பகத்திலே—ஆமாம், உங்க பிரியமுள்ள சிநேகதி தமிழரசியின் அப்பாவுடைய பதிப்பகத்திலே பணி செய்கிறார்!" என்றாள்.

'ஓ!' என்னும் வியப்புக் குறியோடு ஞானசேகரனும் மாசிலாமணியும் கும்பிட்ட கரங்களோடு ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"நீங்க பாக்கியசாலி, மிஸ்டர் ஞானசேகர்!" என்றான் மாசிலாமணி, அவன் பார்வை ஞானசேகரைத் தீண்டி, மஞ்சுளா மீது நிலைத்தது.

"நீங்க தப்புக் கணக்குப் போடுறீங்க, மிஸ்டர் மாசிலாமணி! விடை சரிபார்க்கிறப்போது, எல்லாம் தெரிஞ்சிடும்."

இவ்வாறு ஞானசேகரன் தெரியப்படுத்தினுன். அவனது வாய்மொழியில் துளிகூடச் சலனம் இல்லை!

ஞானசேகரின் கணித உவமையை மாசிலாமணி புரிந்து கொள்ள இயலாமல் தவித்தான். என்ன சொல்கிருர் ஞான சேகர்! பேரழகுப் பெண்பாவையான மஞ்சுளாவைக் கைத்தலம் பற்றவிருக்கும் ஞானசேகரைப் பாக்கியசாலி என்றேன். அதற்கு, 'நீங்க தப்புக் கணக்குப் போடுறீங்க!' அப்படியென்று ஏன இவர் சொல்லிக் காட்டவேண்டும்? அப்படியென்ருல், நான் நினைத்தமாதிரி, மஞ்சுளாவை இந்த ஞானசேகரன் திருமணம் செய்துகொள்ளப போவதில்லையா? பணச் செருக்கு இவர் கண்களை மறைத்துவிட்டதா? ஐயோ, எப்படி இக்கொடுமையை — ஏமாற்றத்தைத் தாங்கப் போகிருள் அனபுத் தோழி மஞ்சுளா? ஞானசேகர் மீது எரிச்சல் துள்ள ஓரக்கண் வீசினுன அவன். அதேசுதியில், மஞ்சுளாவின் சோகம் செறிந்த குவளை மலர்க் கண்களும் குறுக்கிட்டன.

"மிஸ்டர் மாசிலாமணி!"

மாசிலாமணி வாய்பேசாமல் ஆத்திரமும் அசூயையுமாக ஏறிட்டு விழித்தான.

"மாசிலாமணி, என்னைப் பாக்கியசாலி எனறீர்கள் நீங்கள். ஆனுல், உண்மையில் நீங்கள்தான பாக்கியசாலி ஆகப் போகிறீர்கள்! என புதிருக்கான விடையை விரைவில் காலம் உங்களுக்குச் சொல்லும! மஞ்சுளா, நான சொல்வது சரிதானே?" எனறு கூறினுன் ஞானசேகரன.

மஞ்சுளாவின கருவண்டுக் கண்கள் இரண்டும் நாணம் தாளாமல், குலை சாய்ந்த செவ்வாழை ஆயின — மாசிலாமணியின் எதிரில்.

மாசிலாமணிக்கு ஏதும் விளங்கவில்லை. ஞானசேகர் எனன சொலகிருர்? நான பாக்கியசாலி ஆகப்போகிறேனு? எனன புதிர் இது? மஞ்சுளா ஏன நாணம் கொள்கிருர்கள்,

என்னைக் கண்டு ? அவன் மஞ்சுளாவையும் ஞானசேகரையு இனம்புரியாத தவிப்போடு பாரத்தது பார்த்தபடி நின்றான்.

அதற்குள், இரு குரல்களில் 'டாடா' போட்டுவிட்டு 'டாட்ஜ்' வண்டி மஞ்சுளாவையும் மாசிலாமணியையும் துறந்து பறந்தது.

இப்போது அங்கே அப்பொழுது நிலவிக் கிடந்த உல்லாச மான அமைதியைப் பேணிக்காக்கக் கடப்பாடு கொண்டவர்கள் போன்று மஞ்சுளாவும் மாசிலாமணியும் கண்களை மூடாமல் ஆனால் வாயை மூடிக்கொண்டு ரதி—மன்மதன் சிலைகளாக மெய்ம்மறந்த நிலையிலே நின்றுவிட்டார்கள் !

வழி மறித்து, தலை தெறிக்க ஓடிக்கொண்டிருந்தது வாட கைக் கார் ஒன்று. மாசிலாமணிதான் முதலில் கண் மலர்ந் தான். ஆனால், குமாரி மஞ்சுளாவோ இன்னமும் கண்களைத் திறந்திடவில்லை ! மஞ்சுளாவை — அவளுடைய பொங்கும் எழிலின் புனிதம் கூடிய மகத்துவத்தை அப்போதுதான் அவன் முதன் முறையாகத் தரிசித்தான்.

மஞ்சுளா ! ஆஹா ! பூஞ்சிட்டுக் கன்னங்கள் ! போதம் தரும் கோல மாதர் விழிகள் ! தேனூறும் இதழ்கள் ! எழிற்கூட மாகப் பொலிந்த இளம் மார்பகம் ! அவன் எங்கோ பறந்தான்! 'உண்மையில் நீங்கள்தான் பாக்யசாலியாகப் போகிறீர்கள் !' என்று தன்னிடம் தெரியப்படுத்திய ஞானசேகரின் கூற்று அவனை எங்கோ இட்டுச் சென்றது.

"மஞ்சுளா !" என்றான் மாசிலாமணி.

காதலின் பாசமிகுந்த அந்த அழைப்பினைச் செவிமடுத்த தும், ரோஜாப் பூ மலர்வது போல விழி மலர்ந்தாள் மஞ்சுளா, அவள் அவனை நோக்கினாள். அவளுடைய பேசும் விழிகள் அவனைப் பேசாமல் நோக்கின ; மறுகணம் அவ்விழி இணைகள் நாணம் பூண்டன; நாணம் பூண்டன. பூஞ்சிட்டுக் கன்னங்கள் மலர்ந்தன. ஒற்றைத் திருவடி பதித்துத் தவம்

இயற்றிய சக்தி உமையவளின் அழகுக் கோலம் — அருட் கோலம்—காதற் கொலம் நெஞ்சிலும் நினைவிலும் அழகு காட்டியது ; அன்பு காட்டியது ; அருள் காட்டியது !

"மிஸ்டர் மாசிலாமணி !"

"சொல்லுங்கள், மஞ்சு !"

"மாசிலாமணி, நான் உங்களை மனப்பூர்வமாய்க் காதலிக் கிறேனுங்க ! என்றாள் மஞ்சுளா, கண்கள் பொடித்தன !

"மஞ்சு !" என்றான் மாசிலாமணி. அழகோடிய அவனது கண்களில் ஆனந்தக் கண்ணீர் ஓடியது. "மஞ்சு... மஞ்சு !... அப்படியா ? அது என்னோட பாக்கியம் ! நான் கொடுத்துவச்ச வன் !" என்று மெய்ம் மறந்து, இதயம் திறந்து பேசினான் மாசிலாமணி. குமாரி மஞ்சுளாவும் ஆனந்தக் கண்ணீர் சொரிந் தாள் !

## 19. பழிக்குப் பழியா !

ஒரு காலில் தவம் செய்தாள் உமையவள்—மகேஸ்வரனை அடைய ! தவம் வென்றது. அவள் உமா மகேசுவரி ஆனாள் ! பொற்பு நிறைந்த அந்தப் புனிதக் கதையின் புராணத்தை நினைத்துக் கொண்டாள் மஞ்சுளா. அவ்வாறு நினைத்துக் கொண்டே சாலையைக் கடந்தாள் அவள்.

பெற்றவள் குடியிருந்த மனையின் வாசலில் வந்து நின்றாள் அவள். 'பொன்மணித் தீபமாகச் சுடர் தெறித்தது அவளது பொங்கும் எழில். புன்னகையின் மெல்லிய இளங்கீற்று கண் களிலும் உதடுகளிலும் நிழலாடியது. மாசிலாமணி சிரிக்கை

யில், அவள் மாத்திரம் சிரிக்கமாட்டாளா, என்ன ? 'புயலுக்கு ஊடே பூந்தென்றலும் வீசுமோ ? வீசக் கூடுமோ !

மஞ்சுளா இனி மாசிலாமணியின் மஞ்சுளா !

"வந்திட்டியாம்மா, மஞ்சு !" என்று மனம் மகிழ்ந்தாள் மீனாட்சி. வாய் கொள்ளாமல் மகிழ்ச்சி பெருகியது.

மஞ்சுளா 'ஊம்' கொட்டினாள். அன்னையின் ஆனந்தம் அவளுக்குத் தேளாகக் கொட்டியது. அம்மாவுக்குச் சிரிக்கவும் மனம் வந்திருக்கிறதே ? நான்கு சுவர்களுக்கு இடையிலே புறப்பட்ட தாம்பத்யப் புயலை வீட்டுக்கு வெளியே சூறைக் காற்றாக வீசச் செய்யவேதான் அம்மா படிதாண்டினாளா ? அம்மா பெண்தானா ? இல்லை, அவளேதான் விதியாக விளையாடக் கங்கணம் கட்டியிருக்கின்றாளா ?

கூடத்தில் இரவு மணி பத்து ஆகிறதாம் !

"வாம்மா, உள்ளே போகலாம் !" என்றாள் மீனாட்சி.

மஞ்சுளா கடமை உணர்வுகொண்ட விழிப்புணர்ச்சியோடு கூடை நாற்காலியில் அமர்ந்தாள். அத்தான் ஞானசேகரனும் காதலன் மாசிலாமணியும் சட்டமாகிவிட்ட விதியின் இருவேறு பிரிவுகளாக அவளுள் இயங்கினார்கள். பெருமூச்சும் பெருமிதமும் தழுவாத துருவங்களாக உருக்கொண்டன; உருக்காட்டின. உருக்காட்டும் படலம் ஏடு புரளப் போகிறதோ ? அந்தக் கடிதத்தை, அன்பிற்குகந்த மாசிலாமணிக்கு எழுதத் தொடங்கி அரைகுறையாகிவிட்டு அம்பலத்துக்கு வந்து அடங்கிய கடிதத்தை—மீனாட்சி கசக்கி வீசியெறிந்த அந்தக் கடிதத்தைக் காற்றுட வெளிப்புறத்தே எடுத்தாள் மஞ்சுளா. உள்ளத்தில் அடங்காமல் ஒயில் காட்டிய மையல் கனவை உள்ளங்கையிலே அடக்கிக் கொண்டிருக்க வேண்டும். அவள் தீர்மானமான தொரு முடிவின் விளம்பில் அவளது பெண்மனம் விழித்துக் கொண்டபடி கால் பதித்தது.

"மஞ்சு, இந்நேரம் எங்கே அம்மா போயிருந்தே ?" என்று வாஞ்சை வழிய விசாரித்தாள் அன்னை மீனாட்சி.

"அதை ஏன் அம்மா நீ கேட்கிறே?" என்று கேட்டாள் மஞ்சுளா. நெற்றிச் சுருக்கங்கள் கூடின,

மீனாட்சி மனம் அதிர்ந்தாள் "ராத்திரி வேளையிலே, நேரம் கெட்ட நேரத்திலே நீ இந்நேரம் எங்கே போயிருந்தே என்று உன்னைப் பெற்ற அம்மா கேட்கப் படாதா?" என்று வேதனைதாளாமல் கேட்டாள் மீனாட்சி.

"ஏன் கேட்கக் கூடாது? தாராளமாகக் கேட்கலாம்!"

"பின்னே என்ன?"

"பின்னேயும் ஒன்றுமில்லே; முன்னேயும் ஒன்றுமில்லே நீ கேட்டதுக்கு நான் பதில் சொல்லணும்; அவ்வளவு தானே? அது சரி; இப்போது இத்தனை கரிசனத்தோடு என்னைப் பற்றிக் கவலையோடு விசாரிக்கிற நீ, கழிந்த பலமாத இடைவேளையிலே என்னைப் பற்றி ஏனம்மா கவலையே கொள்ளவில்லை? அப்பாவானும் எப்போதாகிலும் என்னைத் தேடி வந்துபோனார். ஆனால், பெற்ற தாயான உனக்கு உன் மகளைப் பார்க்கிறதுக்குக் கூட நேரம் கிடைக்கல்லே! பாவம், நீ என்ன செய்வே? சினிமா நடிகையாக ஆகிவிட்ட உனக்கு நேரம் கிடைச்சால் தானே? அப்படியே நேரம் கிடைச்சாலும், என்னைப் பார்க்கவேணும் என்கிற கவலையும் மனமும் இருக்கணுமில்லே உனக்கு?" சொல்ல வேண்டுமென்றுதிட்டமிட்டிருந்தவற்றைச்சொன்னாள்மஞ்சுளா.

வினைமட்டும்தான் சுடும் என்பதில்லை.

மீனாட்சியின் தாய்மனத்தில் மகளின் சொற்கள் சம்மட்டிகளாகத் தாக்கின. வேதனையின் துடிப்புக் கூடியது. "நீ என்னென்னமோ சொல்லுறியே, மஞ்சு?" என்றாள், தாழ் குரலில்.

"எல்லைதாண்டிப்பேசிட்டேனா, அம்மா? ஊகூம்! அப்படிப் பேச மாட்டேனே நான்! நெஞ்சை ஒளித்து வஞ்சகம் இருக்கக் கூடாதின்னு சொல்லுவாங்க. என்னோட மனசை அரிச்சுக் கிட்டு இருக்கிற புழுக்களை ஒவ்வொன்றாக எடுத்து வீசிப்பிட

வேணுமா, அம்மா ? நீயே சொல்லம்மா ? உனக்குத் தெரியா தா ?''

அருமை மஞ்சுளாப் பெண்ணின் பேச்சு மீனாட்சி அன்னை யின் மனத்தை மீண்டும் அரிக்கவும் தொடங்கவே, அவள் நெஞ்சைப் பிசைந்து கொள்ள வேண்டியவள் ஆனால். பேய்க் கணங்களாக ஊர்ந்த தொகுதிப்பொழுதை மௌனத்தில் நழுவ விட்டபின், தாழ்ந்திருந்த தலையை நிமிர்த்தி நிறுத்தினள் அவள், "எனக்கு இருக்கக்கூடிய குழப்பம் போதாதா ? நீ வேறேயா என்னைக் குழப்பணும், மஞ்சு ?'' என்று வருந்தினாள்.

கேலியாக நகைத்தாள் மஞ்சுளா. "உனக்காவது குழப்ப மாவது ? உன்கிட்டே குழப்பம் எப்படியம்மா வந்து நிற்கமுடி யும் ? நீ பொய் சொல்றே அம்மா !'' என்று பேசினாள்,

மீனாட்சி நெற்றிப் பொட்டுக்கள் இரண்டையும் தாங்கிப் பற்றிக் கொண்டாள். "அம்மா மஞ்சு, இனியும் நீ ஏதாச்சும் பேசினால், அப்புறம் என்னோட நெஞ்சு வெடிச்சிடும், மஞ்சு!'' என்று துடித்துத் துவண்டாள்.

"அடடே ! உனக்குக்கூட நெஞ்சம் என்கிற ஒன்று இருக் குதா அம்மா ?'' என்று கேட்டுவிட்டுக் கை கொட்டி நகைக்க லானாள் மீனாட்சியின் அருமைத் திருமகள்.

"மஞ்சு !'' என்று ஓங்காரமாகக் கூவினாள் மஞ்சுளாவின் அன்புத் தாய்.

நெருப்பின் 'ஜம்பம்' தண்ணீரிடம் பலிக்குமா ? மஞ்சுளா சிரித்தாள், அலட்சியமாக. மீனாட்சியின் மனச் சாட்சியை அந்த அலட்சியச் சிரிப்பு சுட்டதா ?— இல்லை, சாடியதா ?

மஞ்சுளாவின் முகத்தில் ஓர் அழகான பவளச் சிரிப்புப் பிறந்தது. எழுந்தவள் மார்பை மறைத்த புடவைத் தலைப்பு இறங்கிவிட்டிருந்த கோலத்தைக் கண்டதும், சுதாரிப்பு ஏற் பட்டது. இப்பொழுது, கழுத்துச் சங்கிலி மார்புச் சேலைப் பகுதி யின் மீது நாகரிகமாகப் பள்ளி கொண்டது.

பணத்தை ஆளுக்குப் பாதியாகப் பாகம் பிரித்துப் போட்டு விட்ட தாயும் தந்தை பாசத்தையும்கூட அதே விகிதாசாரத் தில்தான் போட்டிருப்பார்களோ ? அவளது குடும்பத்தின் ஐந் தொகைக் கணக்கைப் பார்ப்பதற்கு இதுவல்லவே நேரம் ? அம்மா அப்பாவின் விவகாரம் நிலைக்கு வந்தால் அல்லவா கணக்கைப் புள்ளிபோட்டுப் பார்க்க சாத்யப்படும் ? இல்லையா ? அன்னையை ஊடுருவினுள், அம்மா தன்னுணர்வை மீட் டுக் கொண்டிருந்தாள். "அம்மா, நான் புறப்படுகிறேன்," என்ருள் நிதானமாக.

ஆனால் மீனுட்சிக்குத்தான் நிதானம் பிடிபடவில்லை. "எங்கே புறப்படுறே, மஞ்சு ?" எனறு கேட்டாள். கேள்வி கடுமையாக விழுந்தது.

இமைகளை விரித்து, "எங்கே புறப்பட்டால் உனக்கென் னம்மா ?" என்று துடுக்காகக் கேட்டாள் மஞ்சுளா. கேட்டி ருக்க வேண்டாம்; கேட்டுவிட்டாள். அத்தனை ஆத்திரம் அம்மா மீது.

"எனக் கென்னவா ? என்ன கேள்வி இது ? நான் உன் அம்மா, மஞ்சு !"

"ஓ ! நல்ல காலம், அந்த உண்மையாவது நீ மறந்து விடாமல் இருந்தாயே ?—அந்த வரைக்கும் நன்மை ! நீ என் தாய்; நான் உன் மகள். நான் மறந்திட மாட்டேன்!"

"அப்படின்ஞ, நான் மறந்திட்டேன்னு சொல்றிய, மஞ்சு?"

"அப்படி நான் சொன்னேனு, அம்மா ?"

"உன் பேச்சுப் புதிராக இருக்கே, மஞ்சு ?"

"என் பேச்சுப் புதிராக இருக்குதா? பேஷ் ! என் பேச்சுத் தான் புதிராக இருக்கு; ஆனல், நீயே புதிராக இருக்கிருயே, அம்மா ?"

"நான் புதிராக இருக்கிறேனு ? அட கடவுளே ! நேரம் கெட்ட நேரத்திலே வீட்டைவிட்டு ஒரு கன்னிப்பெண் வெளியே

புறப்பட்டால், எங்கே புறப்படுறேன்னு கேட்டால், அது தப்பு ஆகுமா, மஞ்சு? கௌரவம், பண்பாடு அப்படி இப்படின்னு வாய் ஓயாமல் பேசிப் பழகிட்ட நீ எங்கே அதையெல்லாம் மறந்திட்டியோன்னு நினைவுபடுத்தினேன், அவ்வளவு தான், மஞ்சு!''

' நீ சொன்ன கௌரவம், பண்பாடு என்கிறதை யெல்லாம் பேச்சோடு நிறுத்திடப் பழகாதவள் அம்மா நான்! அப்படியொரு பெருமையை எனக்கு அளிக்க நீ விரும்பினால், அந்தப் பெருமைக்குக் காரணமானவள் நீ தான்! ஆகவே, நான் பண்பாட்டையோ அல்லது கௌரவத்தையோ எப்போதுமே மறந்திட மாட்டேன். ஆனால் நீ தான் அந்தக்கௌரவத்தையும் பண்பாட்டையும் தூக்கி எறிஞ்சு பந்தாடிக்கிட்டு இருக்கே; அம்மா!''

''என்ன, நான் பண்பாட்டையும் கௌரவத்தையும் தூக்கி வீசிட்டேனா?''

''ஐயோ பாவம்! உன் மனசான மனசு ஒரு நிலையிலே இருந்தால்தானே உனக்கு உன் தவறு பிடிபடும்? நீ பண்பாட்டையும் கௌரவத்தையும் மதிக்காததோடு மட்டுமில்ல; அவைகளை மிதிக்கவும் செய்தவளாச்சே அம்மா நீ? அப்பாவோடு ஏற்பட்ட மனஸ்தாபத்திலே—மனத் தாங்கலிலே நீ அன்றைக்கு வீட்டைவிட்டு வெளியேறினியே, அதற்கு என்னம்மா அர்த்தம்? இப்போ, அப்பாவின் உயிரைக் கசக்கிப் பிழிஞ்சு ரத்தச் சாறு எடுத்துச் சிரிக்கக் காத்துக்கிட்டு இருக்கிற சட்டத்தோட 'உடும்புப் பிடியிலேருந்து அப்பாவை—உன் கணவரைக்—காப்பாற்ற முடியுமா என்கிற ஒரு சபலத்துக்கு—சபல முயற்சிக்கு உன் துணை நிற்கும்படி சற்று முன்னே ஞானசேகர் அத்தான் கெஞ்சிக் கூத்தாடினதுச்கு நீ மனம் இணங்கவும் மனம் இளகவும் மறுத்தாயே, அதுக்குப் பேர் என்ன அம்மா?''

''அதற்கு உரிய பெயரை நீயே சூட்டிக் கொள். நான் நீ சொல்கிறமாதிரி பண்பாட்டையும் கௌரவத்தையும் மதிக்காத

வள் என்றே வைத்துக்கொள். விவகாரம் என் சொந்த விஷயம். நான் பழிக்குப் பழி வாங்கியே தீருவேன்! இந்தச் சங்கதியிலே நீ தலையிடாமல் இருக்கிறதுதான் உனக்கு அழகு. சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டேன், மஞ்சு!" என்றாள் மீனாட்சி.

"இத்தனை மூர்த்தண்யமான பிடிவாதத்தோடும் இரக்கமற்ற வீம்போடும் பேசுறதுதான் அழகென்று உனக்குத் தோணுது. அப்படித்தானே அம்மா? பின் என்னைப் பற்றி நீ எதற்கம்மா அக்கறைப் படவேணும்? வேளை கெட்ட வேளையிலே நான் எங்கே போய்த் தொலைந்தால் உனக்கென்னம்மா? உன் மகளை எவனும் சிறையெடுத்திட்டுப் போயிடமாட்டான்; சிறையெடுத்திட்டுப் போயிடவும் முடியாது! என் பாதையிலே நெறியோடும் நேர்மையோடும் தர்மத்தோடும் சத்தியத்தோடும் நடந்து செல்ல எனக்குத் தெரியும்!" என்றாள் மஞ்சுளா.

அவளுள் ஞானசேகரனைக் குறித்த நிகழ்ச்சியும் கொடி மின்னலாகச் சீறியது, பிஞ்சுப் பிராயத்தில் அத்தானைச் சந்திக்கச் சென்னைக்கு வந்து அவனை அவன் பங்களாவில் சந்தித்த போது, வந்தவளை 'வா' என்றுகூட அழைக்காமல் இருந்த ஞானசேகர் அத்தான் மீது உரிமை பாராட்டி வேதனைப் பட்டாள் சிறுமி மஞ்சுளா.

அந்தச் சொற்களை அவள் அன்றும் சரி, இன்றும் சரி, என்றுமே மறக்கமாட்டாள்தானே? அத்தான் ஞானசேகரின் அந்த ஏச்சும் அவள் மனத்தில் ஆழப்பதிந்து விட்ட கீறலாகி விடவில்லையா? நாவினால் சுட்டவடு எப்படி ஆறும்? வாய்ச் சொற்களின் விபரீத அநியாயம் தன்னையும் அம்மாவையும் எப்படிப் பாதித்து விட்டன என்னும் உண்மையை—உண்மையின் நிலையை அப்பொழுது அவளால் சிந்தித்து உணர முடிந்திருக்க வேண்டும்! 'ஐயோ அப்பா!' — அவள்—மஞ்சுளா ஏறிட்டு நோக்கினாள்.

மீனாட்சியின் கண்கள் கலங்கியிருந்தன. மஞ்சுளாவின் பாச நெஞ்சம் அழுதது.

"அம்மா மஞ்சு, இப்போது உன் திட்டம்தான் என்ன ?"

"நான் இப்போ அப்பாவை—என் அப்பாவைச் சந்திக்கப் போறேன், அம்மா !"

"ஓ, அப்படியா ? சாப்பிட்டுட்டு இரவு படுத்திருந்துவிட்டு காலையில் போகலாம்."

"எனக்குப் பசிக்கவில்லை அம்மா ! நீ போய்ச் சாப்பிடு !"

நீ பசியோடு இருந்தால் என் பெற்ற மனசு சமாதானப் படுமா, அம்மா ? நீ சமர்த்துப் பெண் ஆயிற்றே ? வா, அம்மா! என்று குழைவுடன் நயந்து கெஞ்சினாள் மீனாட்சி.

"ஊஹூம், எனக்குப் பசியே இல்லை ! நான் சாப்பிடல்லே அம்மா !"

"சாப்பிட மாட்டியா மஞ்சு ?"

"ஊஹூம் !"

மீனாட்சி எழுந்தாள். ஏக்கமும் ஏமாற்றமும் பிராண்டின, மனம் துடித்துத் துவண்டது. "இப்போது என்ன செய்யப் போறே, மஞ்சு ?" என்று வலிபொறுத்து வினவினாள் மீனாட்சி.

"உன் இஷ்டப்படி ராத்திரி இங்கே படுத்திருந்திட்டு, விடிஞ்சதும் நான் என் அப்பாவைப் பார்க்கப் புறப்படுறேன் ! அம்மா !

"ஓ கே !"

இரண்டாம் கட்டை அடைந்தாள் மஞ்சுளா; சிமெண்டுத் தரையில் படுத்தாள். பதறித் துடித்தாள் மீனாட்சி.

"அம்மா மஞ்சு, நீ என்னோட கட்டிலிலே படுத்துக்கொள். நான் கீழே படுத்துக்கிறேன்!" என்று வேண்டினாள்.

மஞ்சுளா மறுதலித்துவிடவில்லை. கட்டிலின் மெத்தையில் சாய்ந்தாள். "நீ சாப்பிடம்மா !" என்று கெஞ்சினாள் மஞ்சுளா.

“எனக்கும் பசி இல்லேம்மா !”

காலம் ஓடியது.

தாயும் மகளும் உறக்கம் பிடிக்காமல் புரண்டுக் கொண்டே யிருந்தார்கள்.

மணி பன்னிரண்டு அடித்தது.

வாசற் கதவு ‘தடதட’ வென்று தட்டப்பட்ட சத்தம் கொடூரமாகக் கேட்டது !

## 20. ரோஜாப்பூஞ்செடி சாய்கிறது !

‘தட்டுங்கள் திறக்கப்படும் !,—இது வேத வாக்கு,

தட்டியது யார் ? தெரியாது, ஆனால், வீட்டின் வாசற் புறக் கதவு தட்டப்பட்டதால் எழுந்த சத்தத்தின் கொடூரத்தை தாயும் மகளும்—அதாவது, மீனாட்சியும் மஞ்சுளாவும் ஒருசேர வே கேட்டார்கள். அரவம் கேட்ட உடனே அவர்கள் இரு வருமே படுக்கையை விட்டு எழுந்தார்கள், பசியினால் ஏற்பட் சோர்வைப் பொருட்படுத்த அதுவல்ல நேரம்.

மீனாட்சி தன்னைத் திருத்திக் கொண்டாள். இனம் விளங் கின பதற்றத்துடன் பின்பக்கம் திரும்பி மகளைக் கண்ணுற்றாள். தட்டிய கதவைத் திறப்பதற்காக தன்னை முந்திக்கொண்டு தன் புதல்வி செல்லவிருக்கும் துடிப்பை அவள் உணர்ந்த நேரத்தில், வாசல் வெளியினின்றும் புறப்பட்ட காரின் சத்தத்தை வேறு அப்பொழுது மீனாட்சி செவிமடுக்க நேர்ந்தது. யார் கதவைத் தட்டினார்கள் ? யார் தட்டியது ?—ஒருகால்...... ?—அவளுக்கு ரத்தம் உறைந்து விடுவது மாதிரி இருந்தது, “அம்மா மஞ்சு,

காலம் கெட்டுக் கிடக்குது. நீ போய்த் தூங்கு இனியாச்சும் நான் போய்க் கதவைத் திறக்கிறேன்,'' என்றாள் மீனாட்சி. அவளையும் அறியாமல் அவளது பெண் மனம் ஏதோ கலவரத்தால் கலங்கிவிட்டது. என்றாலும், எந்தத் துன்பத்தையும் எதிர்கொள்ளத் தயாராகிவிட்டவள் போன்று அவளுடைய சலனம் கண்ட முகத்திலே ஒரு புதிய வல்லமை கோடிட்டிருந்தது. மஞ்சுளா தன் சொல்லை இவ்விஷயத்திலாவது தட்டவில்லையே என்று எண்ணி ஆறுதல் கொண்டவளாக நடை தொடர்ந்தாள் நடை கடந்தாள்.

தெருவில் நாய் ஊளையிட்டது. மீனாட்சியின் மேனி அதிர்ந்தது. சமாளித்துக் கொண்டாள்; வாசல் தாழ்வாரத்தை அடைந்தாள். விளக்குப் பொத்தானைக் கை நடுக்கத்தோடு அழுத்தினாள். கை நடுக்கம் நெஞ்சில் பாய்ந்தது; நெஞ்சம் நடுங்க, நெஞ்சத்தின் மங்கலத் தாலியும் நடுங்கியது. வெளிச்சத்தின் மையத்தில் நின்றவள் இன்னமும் இருட்டிலே நின்று கொண்டிருப்பதாகவே உணர்ந்தாள், பாவம்! கண்களைத் திறந்தால்தானே—கண்கள் திறந்தால்தானே வெளிச்சத்தின் தத்துவம் புரியும்?—தவம் விளங்கும்! கதவைத் தட்டிய நபரை யாரென்று தெரிந்துகொண்டுதான் கதவைத் திறக்கவேண்டும்! மீனாட்சி சாமார்த்தியசாலி அல்லவா? அவள் கண்களைத் திறந்தாள்!—'ஆ!' இதயத்தின் இதயம் ஏன் இப்படி வீரிட்டு அலறுகிறது? நெஞ்சைப் பிசைந்துகொள்ள விரல்களைப் பரப்பிவிட்டவளுக்கு அந்தத் தாலிதான் கிடைத்தது. கனவு காண்கிறாளா அவள்? கண்களைக் கசக்கிக் கொண்டாள். நெஞ்சின் வலி விழிகளையும் தாக்காதா, என்ன? புயலிடைச் சிக்கிய மலர்க் கொடியாக அல்லாடுகிறாளே, பாவம்!

"மீனாட்சி, சீக்கிரம் கதவைத் திற. போலீஸ் துரத்திக் கினு வருது!"

மீனாட்சி கல்லாகச் சமைந்தாள்.

கொஞ்சினாரா சுந்தரேசன்?

ஊகூம்'!

கெஞ்சினார் சுந்தரேசன் — மீனாட்சியின் சுந்தரேசன்! இம் மாதிரி, சுய புத்தியும் நிதானமும் கைகூடி வருவது அபூர்வமே!

மீனாட்சி—சுந்தரேசனின் மீனாட்சி கண்களை நேர்வசமாகத் திருப்பிப் பாய்ச்சினாள். கண்களில் நீர்மல்க, "மீனாட்சி! தயவு பண்ணி சீக்கிரம் கதவைத் திற!" என்று மீண்டும் கெஞ்சித் தவித்த சுந்தரேசனின் குரல் மீனாட்சிக்குச் சுயப் பிரக்ஞையை அருளியது போலும்! கண்ணீரைச் சந்தித்த கண்களும் கசி கின்றனவே! மந்திரத்தால் கட்டுண்ட நாகப்பாம்பாகி, அடைத் திருந்த கதவின் தாழ்ப்பாளை விரல் நடுங்கத் திறந்து விட்டாள் மீனாட்சி!

என்ன சோதனை இது?

என்ன மாய விதியாம் இது?

சுந்தரேசன் திருடனைப் போல அஞ்சி நடுங்கியவராக, கையில் சுழன்ற தோல் பையுடன் பாய்ந்து வந்த புயலாக உள்ளே நுழையலானார்!

கதவுகள் மறுபடி அடைத்துக் கொண்டன.

இருள் மறுபடி சூழ்ந்து கொண்டது.

'ஸீரோ வாட்', பகலைக் கண்டதா? இரவைக் கண்டதா?

கூடத்துக் குழல் விளக்கு எரிவதற்கும் சுவரின் கடிகாரம் இசைப்பதற்கும் சரியாக இருந்தது.

ஒளியும் ஒலியும் முழங்கினால், சிரிப்புப் பிறக்கும் என்று விஞ்ஞானம் தீர்ப்புச் சொல்கிறது?

யாருக்குத் தெரிகிறது?

ஆனால், அப்போது நிலவியிருந்த புண்ணிய பூமியின் பளிங்கு அமைதி என்னவோ சிரித்துக்கொண்டுதான் இருந்தது!

இரவு, மணி பன்னிரண்டு முப்பது.

"அப்பா!" என்று விம்மினாள் மஞ்சுளா. அப்பாவை இந்நேரத்தில், அதிலும் இந்த இடத்தில் அவள் எங்ஙனம் எதிர் பார்த்திருக்க முடியும்? கண்ணுக்கு முன்னே நிகழ்ந்துள்ள நிதர்சனக் காட்சி-மாயை அல்ல, மாயமும் அல்ல என்னும் உண்மையை அவள் உள்ளம் உணர்ந்து வினாடிகள் நாலைந்து கூட ஆகியிருக்காது. ஆனாலும் அந்தச் சில வினாடிகளின் இடைவேளையில் அவள் புதிய கனவைத் தன் மனத்தில் சுழல விட்டவளாகவே இருந்தாள்,

அப்பா, கனவில் நிகழ்வது மாதிரி—ஏன், கனவில் இவ் வாறு நிகழ்வதுகூட வெகு அபூர்வமாகிவிட்ட நிலையில் அப்பா இப்பொழுது அம்மாவின் வீட்டில் வந்து நிற்கிறார்! அது போதும்! ஆஹா!—அப்பாவையும் அம்மாவையும் மாறிமாறிப் பார்வையிட்டாள் மஞ்சுளா.

அப்பா குனிந்த தலை நிமிராமல் நின்றிருந்தார். அம்மாவும் தலையைக் குனிந்தவாறுதான் நின்றிருந்தாள்.

குற்றம் புரிந்தவர்கள்தாம் தலையைக் குனிந்து கொண்டி ருப்பார்கள்! ஆனால், இவர்கள்—மீனாட்சி—சுந்தரேசன் ஆகிய இவர்கள் தலையைக் குனிந்த வண்ணம் நிற்கிறார்களே?

துன்பத்தைச் சாடிநின்ற இன்பத்தின் சிதறலோடு மஞ்சுளா தாயையும் தந்தையையும் மீண்டும் நோக்கினாள். தன் பெற்றோரை ஒரு சேரக் காணநேர்ந்த அக்காட்சி இன்ன மும் கூட அவளுக்குப் பிரமையாகவே தோன்றியிருக்க வேண் டும். என்றாலும், பிரமையைவிட்டு விடுபட அவள் தயாராகவே இருந்தாள்.

கடிகாரத்தின் பெண்டுலம் சன்னமான நாதத்தோடு இயங் கிக் கொண்டிருக்கிறது,

"அப்பா!" என்று அழைத்தாள் மஞ்சுளா.

தந்தையான சுந்தரேசன் தலையை உயர்த்தினார். சரியாக வாரிவிடப்படாமல் இருந்த தலைமுடிகளும் க்ஷவரம் செய்யப் படாமல் இருந்த முகத்தின் மயிர்க் கால்களும் ஒரு சோகச் சித்திரத்தை அவருள் உருவாக்கியிருந்தது.

"அம்மா!" என்று கூப்பிட்டான் மகள் மஞ்சுளா.

தாய் மீனாட்சியின் கண்களும் உயர்ந்தன.

அம்மாவின் விழிகளை ஊடுருவினாள் மஞ்சுளா. அன்னை யின் கண்கள் காண்பித்த கசிவை மஞ்சுளாவால் கண்டு கொள்ள முடிந்தது. "அப்பா நின்னுக்கிட்டே இருக்காங்களே, அம்மா?" என்றாள்.

மீனாட்சி அதற்குப் பதில் சொல்லக் காணோம்.

போலீஸ் நடமாட்டம் எதையும் காணோமே? அப்படி யென்றால், 'அவர்' பொய் சொன்னாரா? அப்படி அவர் பொய் பேசியிருந்தால், அவர் இங்கே திடுதிப்பென்று வந்து குதிப்ப தற்கு என்னவோ உள்நோக்கம் இருக்கத்தானே வேண்டும்? கலவரமும் பீதியும் அரித்தன. வேப்பேரி காவல் நிலையத்தின் வாசற்பகுதியில்—நடுச் சந்தியில்—தன்னை அடித்துப் போட்டுக் கொல்ல முயற்சி செய்த சுந்தரேசனின் அந்தக் குடிவெறிப் போக்கும் இப்போது அவளுள் பூதாகாரமான ஆத்திரத்தைக் சீண்டிவிட்டது.

தன் கணவருக்காகப் பரிந்துரைத்த தன் தமையனின் மகன் ஞானசேகரின் பேச்சையும் தன் செல்வி மஞ்சுளாவின் கெஞ்சுதலையும்கூட அவள் ஒதுக்கிக் கழித்துவிட மாட்டாள்! ஆனால், எல்லாவற்றைப் பார்க்கிலும், மர்மமான அச்சுறுத்த லொன்று உள்ளத்திலே புழுவாக அரித்துத் துளைத்துக் கொண்டே இருக்கிறதே? ஏன்?

மஞ்சுளா தவித்தாள். பதட்ட நிலை வளர்ந்தது. ஒன்றுக் கொன்று முரண்பட்ட இச்சூழ்நிலையை எவ்வாறு சமன் செய் வது என்று விளங்கவில்லை அவளுக்கு. மௌனத்திற்கு இந்தனை

கொடுமைப் பண்பு இருக்குமோ? தெய்வமே! ஒரு நல்ல முடிவுக்காகத்தான் இந்த ஆரம்பத்தை உண்டுபண்ணி, அம்மா விடம் அப்பாவை கொண்டுவந்து சேர்த்திருக்கிறாயா? அப்படி யென்றால்—அவ்வாறு நல்ல விளைவு ஏற்படுவதானால், சீக்கிரமே ஏற்படச் செய்யக் கூடாதா, தெய்வமே? தந்தையை நோக்கி நடந்தாள் மஞ்சுளா. திறந்திருந்த அலமாரியில் தலை நீட்டிய நெக்லஸ் பெட்டி அவள் பார்வையில் தலை நீட்டியது. உடனே அவளுக்குத் தன் அன்பு அத்தான் ஞானசேகரின் நினைவு மின்னல் கீற்றாகப் பாய்ந்தது. அதைத் தொடர்ந்து, சில நாழிகைப் பொழுதுக்கு முன் மாசிலாமணியைச் சந்தித்த 'அந்த இன்ப வேளை'யைப் பற்றிய நினைவும் பளிச்சிட்டது. "அப்பா, சோபாவில் உட்காருங்கள். எவ்வளவு நேரம்தான் நீன்னுக் கிட்டே இருப்பீங்க?" என்று பாசத்தோடு மொழிந்தாள் மஞ்சுளா.

சுந்தரேசன் மகளை ஏறிட்டுச் சோகம் சூழ நோக்கினார். கையிலிருந்த தோல் பையைச் சுவர் ஓரமாக வைத்துவிட்டு, சோபாவில் தயக்கத்துடன் உட்கார்ந்தார்.

மென்மையான முறுவலோடு அம்மாவின் பக்கம் நகர்ந்தாள் மஞ்சுளா. ஞானசேகர் அத்தான் இங்கிருந்து நேராக அப்பா விடம் போய், நடந்த கதையைச் சொல்லி, அதன் பேரில் அப்பா இங்கே வந்திருப்பாரோ? இந்தப் பக்குவம் அப்பா வுக்கு முன்னரே உண்டாகியிருந்தால், ஏன் இத்தனை சங்கடங் கள் விளையப் போகின்றன? அப்பா இப்படிக் கெட்டலைந்தும் தடுமாறியும் சீரழிந்தும் போகக்கூடிய அவலச் சூழல் ஏன் உரு வாகப் போகின்றது? ஓர் ஆலோசனை கிளர்ந்தெழுந்தது. பசியின் உறுத்தல் அவளுக்கு ஆறுதலாகவே அமைந்தது. "அம்மா, அம்மா! பசிக்குது அம்மா!" என்று செல்லமாகக் குழைந்தாள் மஞ்சுளா, தாயைத் தாயோடு கெஞ்சிக் கூத்தா டும் பாலகியைப் போலே! தன் பசியைக் காரணமாகக் காட்டி, அதன் துணையோடு அப்பாவுக்கும் அம்மாவைச் சோறு படைக் கச் செய்து விடலாமல்லவா?

மீனாட்சி அன்பு மகளை விழித்துப் பார்த்தாள், கடுகடுப்பான பார்வை; சிடுசிடுப்பான தேக்கம். "பசித்தால் சோறு போட்டுட்டுச் சாப்பிடு, மஞ்சு !" என்றாள்.

இப்படிப்பட்ட பதிலையா மஞ்சுளா எதிர் நோக்கினாள் ? "உனக்குமா பசிக்குமே, அம்மா ?" என்றாள்.

"என் பசி உனக்கு எப்படித் தெரியும் ? நீ உன் பாட்டைப் பார்த்துக் கொள்ளேன் !" என்று கரகரப்புடன் கூறினாள் மீனாட்சி.

"கோபப்படாமல் கேளம்மா. நீயும் பட்டினி; நானும் பட்டினி. நம்ப ரெண்டு பேருமே பட்டினி. ஆகையினாலே, நம்ப ரெண்டு பேரோட பசியும் நம்ப ரெண்டுபேருக்குமே தெரிஞ்சதுதான். அப்புறம், இந்த விஷயத்திலே ரகசியம் எப்படி இருக்க முடியும் அம்மா ! வா அம்மா, சாப்பிடலாம் !" என்று கனிவுடன் வேண்டினாள் மஞ்சுளா.

"எனக்குப் பசிதான் ஒரு கேடாக்கும் ! நான் சொன்னால் சொன்னதுதான். உனக்குப் பசித்தால், நீ போட்டுக் கொண்டு சாப்பிடு, மஞ்சு !" என்று ஆத்திரம் கொடிகட்டிப் பறக்கப் பேசினாள் மீனாட்சி.

"நான் மட்டும் சாப்பிடவா ? உன்னை விட்டுட்டு, நான் மாத்திரம் சோறு உண்ணவா? ஊகூம் ! மாட்டேன், அம்மா!"

"அப்படியானால், அது உன் இஷ்டம் !"

"அம்மா !"

"ஊம், என்ன ?"

"இன்னமுமா அம்மா உன் கோபமும் வைராக்கியமும் தீரவில்லை ?" என்று அடக்கமாட்டாத வேதனையுடன் வினவினாள் மஞ்சுளா.

"இப்போது மட்டும் எனக்கு என்ன புதுப் பெருமை வந்திட்டுதாம் ? சொல்லேன், மஞ்சு !"

"அப்பா வந்திருக்காரே அம்மா உன்னைத் தேடி! அது ஒண்ணு போதாதா, அம்மா?" என்றாள் மஞ்சுளா. கண்களின் துளிகள் கரைந்தன.

"உன் அப்பா என்னைத் தேடியா வந்திருக்கார்? ஐயோ பாவம்! போலீஸ் உன் அப்பாவைத் தேடிவந்திருக்கு. உன் அப்பா தலைதப்பிக்க வேண்டி, இந்த இடத்திலே வந்து தஞ்ச மடைஞ்சிருக்கார்!" என்றாள் மீனாட்சி, படபடப்புடன்.

"அப்படியா, அம்மா?" மஞ்சுளாவுக்கு அதிர்ச்சி விளைந்தது. அம்மாவைப் பார்க்க மனமின்றி, அப்பாவைப் பார்த்தாள். "அப்படியா அப்பா?" என்று கேட்டாள்,

"இல்லை அம்மா இல்லை! என்னைப் போலீஸ் தேடிவரவில்லை; போலீஸ் என்னைத் துரத்திவரவும் இல்லை! உன் அம்மாவிடம் நான் அப்படிப் பொய் சொன்னேன்!" என்றார் சுந்தரேசன். குரல் கீழிறங்கியது.

"ஓ அப்படியா?" என்று அதிசயம் காட்டினாள் மஞ்சுளா. பொய்க்குத்தான் வாழ்க்கையில் எத்தனை சபலப் புத்தி விளைந்து விடுகிறது! அப்பாவிடமிருந்து அம்மாவை நாடினாள். "அம்மா, அப்பா தேடி வந்தது உன்னைத்தானும்! அப்பா வாயாலேயே சொல்லிட்டாங்களே, கேட்கலையா அம்மா? அம்மா, எனக்குப் பசி பொறுக்கலே! உனக்கும் பசி தாளாது! அப்பாவுக்கும் பசிக்கும்! மூணு பேரும் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிடுறதுக்குத் தெய்வமே ஒரு அழகான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்திருக்குது, ரொம்ப ரொம்ப நாளைக்கப்புறம்! எழுந்திரு அம்மா! மூணுபேரும் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிடலாம்!" என்று மன்றாடினாள் மஞ்சுளா.

மீனாட்சி ஊழிப்புயலாகச் சீறினாள். "மஞ்சு, இந்த ஜன்மத்திலே உன் அப்பாவுக்கு என் கையினாலே மறுபடியும் சோறு போடுவேன் நான் என்று நீ மனப்பால் குடிச்சே? ஐயோ பாவமே! மஞ்சு, இது என் வீடு. நான் வாடகை கொடுக்கும் வீடு இது! இங்கே உன் அப்பாவுக்கு இனி ஒரு விநாடிகூடத்

தங்க உரிமை கிடையாது! ஆமாம், சொல்லிவிட்டேன்!" என்று முழக்கம் செய்தாள் அவள்! மீனாட்சிக்கென்று இப்படியொரு பயங்கரமான வைராக்கியப் பண்பா?

"அம்மா!" என்று வீரிட்டாள் மஞ்சுளா. மறுகணம் அவள் நெஞ்சைப் பிசைந்து கொண்டே வெட்டுண்ட ரோஜாப் பூஞ்செடியாகத் தரையில் சாய்ந்துவிட்டாள்!

## 21. மங்கலப் பூக்கள்

அதோ, அடிசாய்ந்த ரோஜாப் பூச்செடியை ஒத்து மஞ்சுளா தரையில் சாய்ந்து கிடக்கின்றாள்!

'அம்மா!' என்று வீரிட்டலறிய மூன்றெழுத்துச் சொல்லின் எதிரொலி இன்னமும் தேயவில்லை; ஓயவில்லை!

'அம்மா!' என்ற அந்த அழைப்பின் ஒலி—மஞ்சுளாவின் அலறல் சத்தம், மஞ்சுளாவைப் பெற்ற மீனாட்சியின் தளர்ந்த நெஞ்சத்தை உலுக்கிக் குலுக்கிவிட்டது! அருமைப் பெண்ணுக்கு ஏற்பட்டுவிட்ட அலங்கோலத்தைக் காணச் சகிக்கவில்லை அவளுக்கு. மகளை நோக்கி விரைந்தவளுக்குக் கையும் ஓடவில்லை; காலும் ஓடவில்லை. மனமும் ஓடாமல் இருந்திருக்கலாகாதோ? அப்படிச் செயலிழந்து இருந்திருந்தால், அவள் தன் கணவரைப் பற்றி இம்மியளவும் கருணை இல்லாமல், பேசிய பேச்சு மகளான மஞ்சுளாவை இப்போது பிரக்ஞை தவறிச் சாய்ந்து கிடக்கச் செய்து விட்டது. இந்த உண்மையை மீனாட்சி உணர்ந்திருப்பாளா?—"மஞ்சு! அம்மா மஞ்சு!" என்று விம்மிக்கொண்டே, மஞ்சுளாவின் நெஞ்சை தடவிக் கொடுத்தாள்; மூச்சின் ஓட்டத்தை அறிய, கை விரலை மகளின்

மூக்கின் அருகிலே வைத்துப் பார்த்தாள். அப்போது அவளு டைய கைவிரலில் சுடுநீர்த்துளியின் ஸ்பரிசத்தை உணர்ந்த தும், தலையை உயர்த்தி விடலானாள் மீனாட்சி,

உதிர்ந்த கண்ணீர்த் துளி சுந்தரேசனுக்குச் சொந்தம். செல்ல மகளின் முகத்தை வைத்த கண் விலக்காமல் பார்த்த வாறிருந்த அவரது மனம் சிலும்பிக் குலுங்கியது; மஞ்சுளாவின் நெற்றியில் கையைவைத்துப் பார்த்தார். என்ன தோன்றியதோ என்னவோ ? "மஞ்சுவோட நிலைமையைப் பார்த்தால், பயமாக இருக்கு. உடனடியாக, நல்ல டாக்டர் யாரையானும் கொண் டாப்து காட்டினால்தான் தேவலாம்," என்று மெல்லிய குரலில் சொன்னார். சொன்னார் என்று சொல்வதை விடச் சொல்லிக் கொண்டார் என்று சொல்வது சரியானதாகும். தனக்குள்ளா கக் கூறிக்கொண்ட தகவலைத் தன் மனைவி மீனாட்சி அறிந்து கொண்டாளா என்கிற தவிப்புத் துடிப்பாக மேலோங்க, அவர் அவளை உறுத்துப் பார்வை பரப்பினார்.

"மஞ்சு, அம்மா மஞ்சு !" என்று கனமான அழுத்தத் துடன் விம்மினார் சுந்தரேசன்.

மோதிவந்த சஞ்சலத்தை உதட்டுக் கரையில் ஒதுக்க முடியாமல், எழுந்து உள்ளே விரைந்த மீனாட்சி, வெந்நீரோடு திரும்பி, நாலு சொட்டை எடுத்து மகளின் அழகான சிவந்த அதரங்களை விலக்கி ஊற்றினாள். ஊற்றப்பட்ட சுடுநீர் உதடு களை விட்டுத் தாண்டாத துன்பத்தைக் கண்ட தாய் மீனாட்சி யின் மனமும் மனச்சாட்சியும் குறுகித் தவித்துத் தளும்ப, "கண்ணே மஞ்சு, நான் ஓடிப்போய் ஒரு நொடியிலே டாக்டரை அழைச்சுக்கிட்டு வந்திடுறேன்," என்று சொல்லிக் கொண்டு எழுந்தாள்.

சுந்தரேசனும் எழுந்தார். தூணில் சாய்ந்து மோதிக் கொள்ளாதவரை மிச்சம். மிச்சம் விபத்தும் ரத்தமும், "எந்த டாக்டரை அழைச்சிட்டு வரப்போறே ?"

"டாக்டர் கிருஷ்ணனை !"

"எந்தத் தெருவிலே இருக்கார் அவர் ?"

"பக்கத்திலே நாச்சியப்ப செட்டித் தெருவிலே !"

"சரி, நான் போய் அழைச்சிக்கினு வாரேன், டாக்டர் என்ருல் போர்டு இருக்கும், பார்த்துக்கிடுறேன்."

"நான் போனுல்தான் நல்லது."

"நீ எப்படித் தனியாகப் போவாய் ?"

"நான் பேஷாகத் தனியாகப் போவேன்."

"துணைக்கு நான் வரட்டுமா ?"!

"இரண்டு பேரும் போய்விட்டால் அப்புறம் நம்ப மஞ்சுக்கு யார் துணை ?"

"நீ மஞ்சுவுக்குத் துணை இரு. நான் போய் அந்த டாக்டரை அழைச்சிட்டு வந்திடுறேன், அகால நேரமாக இருக்கிறதினுலே, கூடுதலான துட்டுக் கேட்பார்; கேட்டதைக் கொடுத்திட்டால், வராமல் இருக்க முடியுமா ? மகளைப் பேச்சு மூச்சு இல்லாமல் கம்மின்னு போட்டு வச்சுக்கினு இனிமேலும் 'டிலே' பண்ணினுல், அப்பாலே விஷப் பரீட்சை ஆயிடும் !" என்று சூன்யத்தைக் குறியிட்டுச் சொல்லிவிட்டு, வெளிப்புறம் நோக்கி நடந்தார் சுந்தரேசன்.

மீனுட்சி செயலிழந்து, மகளின் அருகில் உட்கார்ந்து விட்டாள், துணையாக. பெண்ணைக் கட்டிலில் கிடத்திஞல் நல்லது என்று தோன்றிற்று அவளுக்கு. ஒருத்தியாக எப்படிக் கிடத்த முடியும் ? ஓர் உபாயம் பளிச்சிட்டது. காலடியில் இருந்த வெந்நீரை அள்ளி மஞ்சுளாவின் முகத்தில் தெளித்தாள். அவள் கண்களைத் திறந்தாலும் திறக்கலாமென்று கருதி, அவ்வாறு செய்தாள். தன் கணவர் வாசற்புறக் கதவைக் குலுக்கிய சத்தத்தை அவள் காது கொடுத்துக் கேட்டாள். பார்வை மகள் மீது நிலைத்துவிட்டிருந்தது.

சுடுநீர் பட்டதுதான் தாமதம்; மஞ்சுளாவின் பேசும் விழி கள் இரண்டும் பேசாமல் திறந்தன. அம்மாவை ஓரக் கண்ணால் கள்ளத்தனமாகப் பார்வையிட்டவாறு, வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து அமர்ந்தாள்; வாசற் கதவின் தாழ்ப்பாளை விலக்கிக் கொண்டிருந்த சத்தத்தைக் காதில் வாங்கிக் கொண்டே பின் பக்கம் திரும்பிப் பார்த்தாள்; "அப்பா எங்கே, அம்மா ?" என்று பதற்றத்துடன் வினவினாள் மஞ்சுளா.

மகள் கண் திறந்த மகிழ்ச்சியில் மனத்தில் அமைதியை வர வழைத்துக் கொண்டிருந்த மீனாட்சியின் கண்கள் மஞ்சுளாவை ஊடுருவின. அப்பா எங்கே என்று கேட்கிறாளே மஞ்சுளா ? "உன் அப்பா டாக்டரை அழைச்சுவரப் போயிருக்கார் அம்மா!" என்று பதில் மொழிந்தாள்.

மஞ்சுளா தன்னுடைய மார்பகத்தின் நடுவிலே கச்சித மாகச் சுருண்டு ஒதுங்கியிருந்த மாரகச் சேலையை மார்பின் இரு மங்கிலும் ஒதுக்கிச் சீரமைத்த வண்ணம், "அப்பாவுக்கு மயி லாப்பூர் வட்டாரத்து டாக்டரைத் தெரியாதே, அம்மா?" என்று அடுத்த கேள்வியைத் தொடுத்தாள். வறட்சி மிகுந்திருந்த உதடுகளின் கீழ்ப்பகுதியில் அவளுடைய நாக்கின் நுனி ஊர்ந்தது.

"எனக்குத் தெரிந்த டாக்டர் கிருஷ்ணனின் இருப்பிடத் தைச் சொன்னேன்," என்றாள் மீனாட்சி. இயல்பு கெடாமல் இருந்தது விடை.

"அப்பா டாக்டரைத் தேடி ஏன் போனார் ? உனக்கு உடம்புக்குச் சரிப்படலையா, அம்மா ?" என்று மூன்றாவது சந்தேகத்தை ஏவிவிட்டாள் மஞ்சுளா.

"என் உடம்புக்கு என்னம்மா கேடு வந்திச்சு ?" என்று வெறுப்புணர்வோடு கூறினாள் மீனாட்சி.

"அப்படிச் சொல்லாதே அம்மா. உனக்கு உடம்பு சரியாக இருக்குது என்கிறாய். அப்படியானால், அப்பாவுக்கு உடம்புக்கு ஏதாவது வந்திடுச்சோ ?"

"அதெல்லாம் எனக்குத் தெரியாது, உன் அப்பா இப் போது டாக்டரைத் தேடி போயிருப்பது உனக்காகத்தான்!" என்றாள் மஞ்சுளாவின் தாயார், கண்டனத்தொனியிலே ஓர் அழுத்தம்.

மஞ்சுளா விழிகளை அகல விரிக்கலானாள், "எனக்கு என்னம்மா வந்திடுச்சு இப்போ? நான் நல்லபடியாகத்தானே இருக்கேன்?" என்று வியப்பை ஏந்தினாள் அவள்,

"இப்போது நீ நல்லபடியாகத்தான் இருக்கே, ஆனா, கொஞ்ச முந்தி நீ திடீரென்று மயங்கிக் கீழே சாய்ஞ்சு, எங் களைக் கதிகலங்கச் செய்த விவரம் உனக்குத் தெரியாதே?" என்றாள் மீனாட்சி,

மஞ்சுளா, தன்னை ஈன்றவள் மீது துளைத்த பார்வையைத் திருப்பினாள். அன்னையின் வாசகத்தில் அழுத்தம் கொடுத்து ஒலித்த 'எங்களை' என்ற அந்த ஒரு சொல் அவளை எங்கெல் லாமோ இட்டுச் சென்றிருக்கவேண்டும், அந்த ஒற்றை வார்த் தை—அந்த ஒற்றை வார்த்தையில் குரல் கொடுத்த உரிமைப் பாசம் அவளை—மஞ்சுளாவை அமைதி தேடச் செய்ததிலே வியப்பு இருக்க முடியாதுதான்! "அப்படியா அம்மா?" என்று வியந்தாள்.

"ஊம்!" என்றாள் மீனாட்சி,

"நான் மயங்கிக் கீழே சாய்ந்தது உங்களைக் கதிகலங்கச் செஞ்சிடுது, அப்படித்தானே, அம்மா?"

"ஊம்!"

"உங்களை என்றால் உன்னையும் உன் கணவரையும்னு அர்த்தம்! இல்லையா அம்மா?"

மீனாட்சியின் அழகான முகத்தில் வேர்வை துளிர்த்தது. மகள் ஏவிய வினாவுக்கு மறுமொழி சொல்லவேண்டாமோ மீனாட்சி? மௌனமாக இருந்தாள், மௌனம், ஒப்புதலுக்கு அடையாளம் தானே?

அம்மாவின் வீம்புத்தனத்தையும் மீறிக்கொண்டு வெடித்துச் சிதறிய அந்த ஒட்டுறவு நல்ல முடிவைக் காட்டுமா? ஞான சேகரன் அத்தானும் அம்மாவும் அப்பாவைக் குறித்துச் சில மணிநேரத்திற்கு முன் நடத்திக் காட்டிய வாதப் பிரதிவாதங்களை அவள் மனம் 'டேப் ரெகார்டர்' ஆகி மீண்டும் பேசிக் காட்டியது. "அம்மா, சொல்லம்மா!" என்று நினைவுபடுத்தினாள்

மீனாட்சி வாய் திறக்கவில்லை!

ஆனால், மகளுக்கு அருகே வந்து நின்ற சுந்தரேசன் வாய் திறந்தார். "நீ மயக்கம் போட்டு விழுந்தது எங்களைக் கதிகலங்கச் செஞ்சிடுச்சின்னு உன் அம்மா சொன்னாள். எங்களை என்றால், என்னையும் உன் அம்மாவையும் சேர்த்துத்தான், மஞ்சு! இதிலே சந்தேகத்துக்கு இடம் ஏதம்மா?" என்று விளக்கம் தந்தார் அவர். தன்னுடைய அருமைமிகு மனையாட்டியின் அழகை ரசிக்க முனைந்தவராக மீனாட்சியைக் குறும்புத்தனத்தோடு கொஞ்சுதலாகப் பார்த்தார், சுந்தரேசன்.

அந்தப் பார்வையைச் சந்தித்தாளா மீனாட்சி?— சுந்தரேசனின் மீனாட்சி?

ஆம்.

'அம்மா என்ன சொல்லப் போகிறாளோ?' என்ற தவிப்பும் பயமும் மனத்திடையே புகைய, மஞ்சுளா உருகினாள். 'அம்மா நல்ல விதமாகப் பதில் சொன்னால், அல்லது அப்பாவின் பேச்சுக்குச் சம்மதமாக மௌனமாக இருந்தால் நல்லது. ஒருவேளை அவள் தாறுமாறாக ஏதாகிலும் ஆவேசத்தோடு சொல்லிவிட்டால், அப்பாவின் கோபம் பேயாட்டம் போட்டுவிடுமே?' என்று உருக்குலைந்தாள்.

அம்மாவை உன்னிப்பாகப் பார்த்தாள். அன்னையின் நெற்றியில் பொலிந்த மங்கலத் திலகமும் கொண்டையில் மணந்த பூச்சரமும்தாம் எடுத்த எடுப்பில் அவள் பார்வையில் பட்டன, அப்புறம்தான் அவள் தன் தாயின் முகவிலாசத்தைச் சந்தித்

தாள். அம்மாவோட முகம் ஏன் அப்படிக் கடுகடுப்பாக மாறி யது? என்று அஞ்சி நடுங்கலானாள்! அம்மாவின் புனிதத் தாலி ஏன் அங்ஙனம் ஊசலாடுகிறதாம்? அத்தான் ஞான சேகரோடு அம்மா வாதம்புரிந்த போக்கை அப்பா அறிந்திருப் பாரா? அத்தானைச் சந்தித்து விட்டுத்தான் அப்பா இங்கே வந்திருப்பாரோ? அப்படியென்றால், அப்பா இறங்கி வந்து விட்டாரென்றுதான் பொருளாகுமா? கதை இப்படித் திரும்பி யிருந்தால், அப்புறம் அம்மா இரங்கிவரத் தடை இருக்கக் கூடுமா?

"மஞ்சு!"

யார் அழைத்தது?

அப்பாவா?

இல்லை!

அம்மா அழைத்தாள்.

"அம்மா, பசிக்குதம்மா!"

"பசித்தால் போய்ச் சாப்பிடுவதுதானே, மஞ்சு?"

"நீ...? அப்பா...?" இதழ் விரித்த பேச்சைத் தடுமாற் றத்துடன் துண்டித்தாள் மஞ்சுளா.

"நான் உள்ளே போய்க் கதவைத் தாழிட்டுக் கொண்டு படுக்கப் போறேன்!" என்றாள் மீனாட்சி.

பெற்றவளின் பேச்சு மகளை அதிர வைக்காதா? "அம்மா நான் இங்கேயே படுத்துக்கிடுறேன்! வெளிக் கதவைப் பூட்டிப் பிடு அம்மா!" என்றாள்.

"வாசல் கதவு பூட்டித்தான் இருக்குது மஞ்சு!"

"அப்படியா? சந்தோஷம்!

மீனாட்சி உட்புறம் செல்லத் தலைப்பட்டாள்.

மீண்டும் அம்மாவை அழைத்தாள் மஞ்சுளா.

"என்ன, மஞ்சு?" என்று ஆத்திரம் மூளக் கேட்டாள் மீனாட்சி.

"அப்பா...?" என்று சொல்லித் தயங்கினாள் மஞ்சுளா' 'உன் வீட்டைத் தேடிவந்த அப்பாவுக்குப் பசிக்குச் சோறு போடத்தான் உனக்கு மனசில்லாமல் போயிட்டுது, ஆனா, அப்பாவுக்குப் படுக்கிறதுக்காவது ஏற்பாடு செய்யக்கூடாதா, அம்மா? அவர் உன் கணவர்; உனக்குத் தாலி பாக்கியம் கொடுத்த புண்ணியவான் ஆச்சே அம்மா? இது நீ முன்னே சொன்னமாதிரி உனக்கு உரிமையான நிழலாக இருக்கலாம். ஆனாலும், அந்த நிழலிலே அவருக்கும் உரிமை—தார்மீக உரிமை இல்லையா, அம்மா?" என்றாள் மஞ்சுளா, நா தழுதழுத்தது. இமை விளிம்புகளில் ஈரம் வழிந்தது.

சுந்தரேசன் — மீனாட்சிக்கு மங்கல அந்தஸ்து அருளிய சுந்தரேசன் சிலையாக நின்றார்; மறுகணம், அவர் ஓர் ஓரத்தில் இருந்த தோல் பையை எடுத்துக் கொண்டார். என்னவோ கூற முனைந்தார்.

அதற்குள்:

மீனாட்சி இடைமறித்து விட்டாள். அவள் கண்களிலே ஏன் அப்படித் தீப்பொறி சரம் கட்டுகிறது? பாண்டியன் நெடுஞ் செழியனின் அரசவையிலே நீதி விசாரணை கோரிய கண்ணகி யாக அல்லவா உருமாறிக் கொண்டிருக்கிறாள்? அப்படித்தான் இருக்குமோ? மெய்தானோ? "மஞ்சு! முன்பே சொன்னேன், என்னோட சொந்த விஷயத்திலே நீ தலையிடக் கூடாது அப்படின்னு! என் எச்சரிக்கையை நீ மதிக்கவில்லை! திரும்பவும் சொல்றேன்: அவர் — என்னோட முன்னாள் கணவர் என்னை — தன் கையாலே எனக்குத் தாலி பூட்டிய திருவாளர் சுந்தரேசன் என்னைத் தேவடியாள் — வேசின்னு என்றைக்கு அவதூறு பேசி, அபவாதமாக ஏசினாரோ, அன்றைக்கே எனக்கும் அவருக்கும் உள்ள தாம்பத்திய பந்தமும் உறவும் பிணைப்பும் அற்றுப் போயிற்

டுச்சு! அந்தப் பாவத்துக்கு உண்டான கூலியை அவர் அனுபவிச்சேதான் ஆக வேண்டும்!" என்று வீறு கொண்டு ஆவேசமாக முழங்கினுள் மீனுட்சி.

மறுகணம்:

மீனுட்சி பாயும் பெண் புலியாகத் தன் கணவனைக் குறி வைத்துப் பாய்ந்தாள். "நான் தேவடியாளா? வேசியா? ஊம், சொல்லுங்க!... ம்... பதில் சொல்லுங்க!." என்று விதிக் கணையாகச் சாடினுள் அவள். அவிழ்ந்த கூந்தலை முடியக் கூடச் சிந்தை இழந்தாள், "ஊம், பேசுங்க!" என்று கூக்குரலிட்டபடி, சுந்தரேசனின் சட்டையைப் பற்றினுள். "என்னைத் தேவடியாள்—வேசின்னு அன்றைக்கு ஏசிப் பேசினப்பவே அந்த நாக்கைச் சீவி வீசியிருப்பேன் நான்! தப்பிச்சீங்க நீங்க. இப்போது விதி உங்களைச் சட்டத்தின் ரூபத்திலே வசமாக மாட்டிவச்சிடுது! சொல்லுங்க; நானு தாசி? நானு தேவடியாள்? உங்களுக்கு வாழ்க்கைப்பட்ட என்னை அப்படிப் பழி சுமத்த உங்களுக்கு எப்படி மனம் வந்திச்சு?.. ம்... பேசுங்க, திருவாளர் சுந்தரேசன்! "என்று மீண்டும் கத்தினுள் மீனுட்சி—சுந்தரேசனின் மீனுட்சி. "பழிக்குப் பழி வாங்கியே தீருவேன்! ஆம், பேசுங்க, அத்தான்!" என்று விம்மினுள் மீனுட்சி: அவள் கண்களில்கூட அழகான கண்ணீர் மின்னுகிறதே?

சுந்தரேசன் மீனுட்சியின் கணவரான சுந்தரேசன் அவளை—தன் மனையாட்டியான மீனுட்சியை ஊடுருவிப் பார்த்தார்; பார்த்துவிட்டுச் சிரித்தார்; பிறகு ஆவேசமாக உடலைக் குலுக்கிக் கொண்டபடி, மீனுட்சியின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டார். "மீனுட்சி, இப்போதாவது உன் அத்தான் நினைவு வந்ததே! பேஷ்! தாலி ஏந்தின மனைவி, தாலி கொடுத்த கணவனை மதிக்கத் தவறினுல், அப்புறம் அவள் பண்பு கெட்டவள் என்றுதானே அர்த்தம்?" என்று எதிர்க் கேள்வியை ஏவினுர் அவர்.

"அதுக்காக என்னை அப்படி இழிவாகப் பேச உங்களுக்கு ஏது உரிமை? என்னை நாக்கிலே நரம்பில்லாமல் பேசிட்டு,

எனக்குரிய இந்த நிழலிலே இவ்வளவு நேரம் தங்குறதுக்கோ அல்லது இந்த நிழலைத் தேடிவருகிறதற்கோ உங்களுக்கு வெட் கம் இல்லையே? ஐயோ, பாவம்! சட்டத்தின் பிடியிலேயிருந்து தப்புறதுக்காக உங்களை ஞானசேகரன் இங்கே அனுப்பியிருக் கார் போலிருக்குது! ஆல் ரைட்! நீங்க இங்கே இனிமேலும் தாமதிக்க நான் அனுமதிக்க முடியாது!" என்று கூச்சல் போட் டாள் மீனாட்சி.

"அம்மா! நீ பெண்தானா? இல்லே, பெண் பேயா அம்மா? ஞானசேகரன் அத்தான் சொன்னபடி, அப்பா கொடுத்த தாலிதான் உங்களுக்கு இந்தச் சமுதாயத்திலே ஒரு மங்கள கரமான புனிதமான—கௌரவமான சமுதாய அந்தஸ்தைக் கொடுத்துவருது என்கிற சத்திய தருமத்தை மறந்திட்டியா அம்மா? அப்பா ஆத்திரத்திலே உன்னை ஏசினதை இவ்வளவு தூரத்துக்குப் பெரிசாக எடுத்துக்கிட்டு, நீ உன்னையும் அழிச் சுக் கிட்டு, அப்பாவையுந் அழிக்கப் பார்க்கிறியா, அம்மா? ஒழுக்கம் செயலிலே இருக்க வேண்டியதுதான் பண்பாடு. அந்த விதியிலே நீ எவ்வளவு புனிதமானவள் என்கிற உண் மையை தெய்வம் அறியும்; நான் அறிவேன்; அப்பாவுந் அறி வார்! இது சத்தியம்! ஆனால், உன் பேச்சிலேயும் நடவடிக் கையிலேயும் அந்தப் பண்பாடு இருக்கவேண்டாமா, அம்மா? நேரம் கெட்ட இந்த நேரத்திலே, கொண்ட புருஷனை வீட்டை விட்டுத் துரத்தினால், யாராவது பார்த்தால் என்ன நினைப் பாங்க?" என்று பதைபதைத்து விட்டுப் பொருமினாள் மஞ்சுளா.

மீனாட்சி வைராக்கியப் பதுமையாக நின்றாள்!

சுந்தரேசன், "அம்மா மஞ்சு, இந்தப் பையை நீ வச்சுக்க, அம்மா. நான் புறப்பட்டாக வேண்டிய வேளையும் விதியும் வந்தாச்சு. விதியோட பயங்கர விளையாட்டு இனி முடிஞ்சிடும்! கண்ணே மஞ்சு!!" என்று தேம்பினார். பையை மகளிடம் ஒப் படைத்தார். அங்கிருந்து புறப்படப் பாதங்களைப் பிரித்தார்.

அப்போது :

வாசல் வெளியில் கதவு தட்டும் சத்தம் கேட்டது,

சுந்தரேசன் நடந்தார்.

போலீஸ்காரர் ஒருவர் நின்றார். "ரொம்ப நேரமாய் இங்கே கலாட்டா நடந்துக்கினு இருக்குதே !" என்ன சமாச்சாரம்? யார் நீங்க ?" என்று விசாரித்தார்.

"என் பெயர் சுந்தரேசன் !"

"அது சரி ; நீங்க இங்கே என்ன சண்டை போடுறீங்க ;"

"இது என் வீடு !"

"ஓ !... நீங்க அந்த அம்மாளோட புருஷனு ?..."

புயலாகக் குறுக்கிட்டார் சுந்தரேசன், "ஆமாங்க சார் !" என்றார்.

"ஏம்மா, அவர் சொல்றது வாஸ்தவம்தானு ?" என்று மீனுட்சியை நோக்கிக் கேட்டார் காவலர்.

மீனுட்சி குரல் கம்ம, "ஆமாங்க ஐயா !" என்று பதிலுறுத்தாள்.

சுந்தரேசன் ஏன் அப்படிச் சிரிக்கிறார் ?

"சரி, சரி, போய்ப்படுங்க, குடும்பம் என்றால் சண்டையும் சமாதானமும் இருக்கிறது இயல்புதான். போய்ப் படுங்க, நாட்டிலே பதட்ட நிலைமை இருக்கிறதை மறந்திட்டீங்க போலிருக்கு !" என்று எச்சரித்துவிட்டு, போலீஸ்காரர் மறைந்தார்.

டக்கென்று வாசற்புற விளக்கை அணைத்தாள் மஞ்சுளா. மீனுட்சி உள்ளே நடந்தாள். கொண்டைப் பூ நழுவியதை அவள் அறிந்தால்தானே ?...

சுந்தரேசன் பூட்டப்பட்டிருந்த வாசற் புறக் கதவைத் திறந்து வெளியே நடந்தார் அப்படியே நின்றார். சிரித்தது சுந்தரேசன் தானு ?

"அப்பா அப்பா !"

மறுகணம் வெளிப்புறத்திலிருந்து என்னவோ சத்தம் கேட்டது. மஞ்சுளா வெளியே ஓடினாள்.

"ஐயோ அப்பா !" என்று வீரிட்டாள் மஞ்சுளா.

திருவாளர் சுந்தரேசன், திரையுலக நடிகையான மீனாட்சிக்குத் தாலிப்பாக்கியம் அருளிய சுந்தரேசன் தரையிலே அடியற்ற நெடு மரமாகச் சாய்ந்து விட்டார் ! அவருடைய வாயினின்றும் ரத்தமும் நுரையுமாகக் கொப்புளித்துக் கொண்டேயிருந்தது !

"ஐயோ, அப்பா !... ஐயையோ அம்மா !" என்று ஓலமிட்டாள் மஞ்சுளா.

பாவம், மங்கலப் பூக்கள் அழுகின்றனவே ?

## 22. ஓர் துவக்கம் !

பாவமும் புண்ணியமும் விதிக்குத் தெரியமாட்டேன் என்கிறதே ? — அப்படியென்றால், விதி என்ற ஒன்று இருக்கத்தான் செய்கிறதா ? அதனால்தான் வாழ்க்கையில் விளையாடத் தேவைக்கு அதிகப்படியான சுதந்தரத்தை எடுத்துக் கொள்கிறதா விதி ?— ஐயோ, விதியே !

'அம்மா !'

மஞ்சுளாவின் நைந்த நெஞ்சம் அழுதது ; புலம்பியது; தவித்தது. "அப்பா ! ஐயோ, அப்பா !" என்று வாய் விட்டு அலறினாள் அவள். மேனியின் துடிப்பும் இதயத்தின்

நடுக்கமும் இன்னமும் தீரவில்லை. பொங்கிவரும் காவிரியின் புதுப்புனலாக அவளது கண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது.

இளங் காலைப் பொழுதின் ஆரோக்கியமான அமைதி வெளிப்புறத்தில் மட்டும்தான் இருந்தது. ஆனால், நைனியப்பன் தெருவில்தான் இப்போதெல்லாம் நெரிசல் மிதமிஞ்சி விட்டதே !

''மஞ்சு !''

மஞ்சுளா திரும்பினாள்.

யார் அழைப்பது ?

அம்மாவா ?

ஐயோ, அம்மா !

மஞ்சள் இழந்து, மங்கலம் இழந்து, அந்தஸ்து இழந்து மஞ்சுளாவின் மனக்கிழியில் சோகச் சித்திரமாகத் தோன்றினாள் மீனாட்சி ! மஞ்சுளா பச்சைப் பாலகியாகத் தேம்பத் தொடங்கினாள்.

அம்மா எப்படி இங்கே வருவாள், மயிலாப்பூரைவிட்டு ? அம்மா ரோசக் காரியாயிற்றே ? ஐயோ அம்மா! — ஏக்கம், வேதனை, ஏமாற்றம், தவிப்பு, குமைச்சல் போன்ற பலதரப்பட்ட உணர்வின் நிலைகளால் அவள் — மஞ்சுளா எத்தனை நாட்களுக்குத்தான் இன்னமும் அலைக்கழிக்கப் படுவாள் ? திரும்பினாள். வழிந்த நீரை வழித்துவிடக்கூட ச் சிந்தையற்றுத் திரும்பினாள்.

அங்கே !

அவளுடைய இன்னுயிர்த் தோழி நிர்மலா கண்ணீரும் கம்பலையுமாக நின்றுக் கொண்டிருந்தாள்.

மஞ்சுளா பதறினாள்; முடித்தாள். ''நிர்மலா, நீ ஏன் அழுகிறாய் ? வேறு ஒண்ணும் விசேஷம் இல்லையே ?'' என்று

பதட்டத்துடன் கேட்டாள். வங்காள தேச விடுதலைப் போர் வெற்றியோடு முடிந்த அந்தச் சுதந்திரக் கதைக்குப் பின்னே அன்றாடம் பத்திரிகைகளில் வெளியாகிய வண்ணம் இருந்த அவலங்களை—சோகங்களை—நெட்டுயிர்ப்புக்களை அவள் மனம் எங்ஙனம் தட்டிக் கழிக்க முடியும் ?

"நீ அழும்போது நான் மட்டும் அழாமல் இருக்கமுடியுமா, மஞ்சு ?"

மஞ்சுளா என்ன பதில் சொல்வாள் ? — எப்படிப் பதில் சொல்வாள் ?" நான் அழலலே, நிர்மலா ! நீயும் அழாதே! இன்றைக்காவது கட்டாயம் உன் அன்பு அத்தான் குமாரலிங் கத்திட மிருந்து உனக்கு நல்ல கடிதமாக வரும்னு என் மன சிலே தோணுது ! ஆமாம், நிர்மலா !,' என்று உணர்ச்சிப் பெருக்குடன் மொழிந்தாள் மஞ்சுளா.

"ரொம்ப நன்றி, மஞ்சு ! நல்ல இதயம் கொடுக்கிற நல்ல வாக்குத் தெய்வ வாக்குக்குச் சமமானது இல்லையா ?" என்று மெய்மறந்து பேசினாள் நிர்மலா. கொண்டு வந்த காப்பியை எடுத்து மஞ்சுளாவின் கைகளில் ஒப்படைத்தாள் அவள்.

மஞ்சுளாவின் உலர்ந்த உதடுகள் துடித்தன. பூஞ்சிட்டுக் கன்னங்களில் கண்ணீரின் ரேகைகள் எப்போதுதான் மறை யுமோ ? 'அம்மா ... அப்பா !— உள் மனம் புலம்ப, அவள் எதிர்ப்புறம் நோக்கினாள்.

அம்மாவின் வீட்டில் கண்ணாடி உடைந்து மூலையில் கிடந்த அந்தப் படம் இப்போது எவ்வளவு அழகாகத் தரிசனம் தரு கின்றது ! அப்பா — அம்மா ஜோடிப் பொருத்தம் வெகு நேர்த் தியாக இருக்கிறது — படத்தில் !

சுந்தரேசன் அன்று ஒப்படைத்த அந்தத் தோல்பை— அதனுள்ளே இருந்த ஐயாயிரம் ரூபாய் ரொக்கப் பணம்—டைரி எல்லாம் அச்சுக் குலையாமல் கச்சிதமாகவே இருக்கின்றன.

ஆனால் அப்பாவைத்தான் அவளால் நிறுத்தி வைக்க முடியாமல் போய் விட்டது! — சாவதற்கென்று திட்டமிட்டுத்தான் அப்பா ஓடி வந்தார் அம்மாவைத் தேடி? — 'அப்பா! அப்பா!... இறப்பதற்கு விஷம் உங்களுக்கு எப்படிக் கிடைத்தது? ஐயோ, தெய்வமே!

புன்னிவாடை கலந்தது!

உதயசூரியனின் கதிர்கள் ஏறுமுகம் காட்டின.

நீராடி மீண்டாள் மஞ்சுளா.

"நிர்மலா, நான் அம்மாவைத் தேடி மயிலாப்பூர் போகப் போகிறேன். பாவம், அம்மா!... அவள் ரோசக்காரி. நானாக போகாவிட்டால், அப்புறம் அம்மாவின் கதியைப் பற்றியும் நான் ஒண்ணுமே நிர்ணயிக்க முடியாது போனாலும் போயிடலாம்!... அம்மா தானாக என்னைத் தேடிக்கிட்டு இங்கே வருவான்னு இனியும் என்னாலே நம்பமுடியலே நிர்மலா!" என்றாள் மஞ்சுளா.

நிர்மலா அவள் பேச்சை ஆமோதித்தாள். 'பாவம் அம்மா!' என்று மட்டுமே அவளால் அப்போதைக்குக் கூறமுடிந்தது.

"நிர்மலா, வாழ்ந்து காட்டத்தான் வாழ்க்கைன்னு சொல்லுவாங்க. ஆனால், அம்மாவுக்கோ விளையாடிக் காட்ட அவளோட வாழ்க்கை அமைஞ்சிடுச்சு! அம்மா மனம் அப்படி! அம்மா விதி அப்படி! சட்டமும் விதியும் போட்டி போட்டுச்சு! அப்பா சட்டத்தைத் தோற்கடிச்சிட்டாங்க! ஆனால், இந்த வேடிக்கையான வறட்டுப் போட்டியிலே ஜெயிச்சது அப்பாவா? இல்லே, அம்மாவா? இல்லே, விதியா? எனக்கு ஒன்றுமே சொல்லத் தெரியலே!"

மஞ்சுளாவின் கோல விழிகள் மடை திறந்தன.

"மஞ்சு, நீ இன்னிக்கு ஆபீசுக்குப் போகணும், நினைவிருக்குதில்லையா?" என்று வினவினாள் நிர்மலா.

"ஓ! என் அன்பர் மிஸ்டர் மாசிலாமணி அவர்களோட அன்பின் ஆணையை நான் எப்படி மறுதலிக்க முடியும், நிர்மலா? சூழ்நிலை மாறினால், என் மனம் ஓரளவுக்காச்சும் தேறிவரலானும் அவர் நினைக்கிறார். ,என்றாள் மஞ்சுளா.

மஞ்சுளா இப்போது தன்னுடைய தனி அறையில் இருந்தாள். அவள் நெஞ்சில் அப்பாவும் அம்மாவும் மாறிமாறிச் சிரித்தார்கள்! ஏன் அங்ஙனம் சிரிக்கிறார்கள்? அப்பாவும் அம்மாவும் ஒருவரை ஒருவர் பார்த்து அல்லவா விதிபோலச் சிரிக்கிறார்கள்? ஏன் அப்படி? அந்தச் சிரிப்புக்குப் பொருள் என்ன? அம்மாவை அப்பா வென்றுவிட்டார் என்றுதான் அப்பா அப்படிச் சிரிக்கிறாரா? அப்பாவைப் பழிவாங்கத் துடித்தாளே அம்மா? ஐயோ, அம்மா! ஐயோ அப்பா! வாழ்க்கை என்றால் இத்தனை பயங்கரப் போராட்டமாகவா அமையும்!

மயிலாப்பூருக்குப் புறப்படத் தயாரானாள் மஞ்சுளா.

மேஜையிலிருந்த டைரி கைபட்ட வேகத்தில் கீழே விழுந்தது. அதனின்று இரு கடிதங்கள்—அசலும் நகலுமாகச் சிதறின. அத்தான் ஞானசேகர் அவளுக்கு எழுதியதும் அவள் தன் அத்தானுக்கு வரைந்த கடிதத்தின் நகலும்தான் அவை! அவள் மனம் விம்மியது. அவள் இடம் மாறினாள். அங்கே மாசிலாமணியின் ஆறுதல் கடிதம் அவள் பார்வையில் பட்டது.

அன்புமிக்க மஞ்சுளா,

உன்னுடைய மிகப்பெரிய சோகத்திற்கு ஆறுதல் சொல்ல தெய்வ சக்தியால்தான் முடியும். ஏனெனில் நீ தெய்வத்தை நம்புபவள். அந்தத் தெய்வம் உன் அன்னையின் உருவிலும் அமையலாம் அல்லவா? உன் தாயை நீயாவது மன்னித்தால்தான் நல்லது, ஏன் தெரியுமா?

உன் அம்மா துர்க்கை அவதாரம் எடுத்திருக்க வேண்டும்!

இல்லையென்றால், விதி இப்படிச் சிரித்திருக்குமா?

பாவம், திருவாளர் சுந்தரேசன்!

கடந்த காலம் கண்ணீரோடு கழியட்டும்.

இனி நீ அமைதிபெற முயன்றால்தான் நல்லது. நீ பெறும் அமைதியில்தான் உன்னைப் பெற்ற தாயின் எதிர் காலம் இருக்கிறது!

முடிவில்தான் ஆரம்பம் பிறக்கிறதோ?

சிந்தித்துச் செயலாற்ற வேண்டுமல்லவா?

அலுவலகப் பணிகள் உனக்கு ஆறுதல் பயக்கக்கூடும்!

இது என் அன்பான ஆலோசனை,

நாளை பணிமனையில் சந்திப்போம் நாம்!

உன் அன்புள்ள,

எல். மாசிலாமணி

விழி நீரை வழித்து விட்டாள் மஞ்சுளா.

அப்போது.

வாசல் வெளியில் கார் சத்தம் வெடித்தது.

அங்கே:

தமிழரசி—பேரழகி தமிழரசி நின்றாள்!

ஞானசேகர் எங்கே ?

அத்தான் ஞானசேகர் எங்கே ?

"மஞ்சுளா !"

மஞ்சுளா திரும்பினாள், தன் தந்தையின் மறைவுச் செய்தி கேட்டு ஓடோடி வரவில்லையா தமிழரசி ?

"வாங்க தமிழரசி !" என்றாள் மஞ்சுளா.

தமிழரசி ஓர் அரைக்கணம் சிலையாகச் சமைந்து நின்றாள் ! பிறகு வாய் திறந்தாள். "மஞ்சுளா உன் அன்பு அத்தான் மிஸ்டர் ஞானசேகர் என்னுடைய முதற் காதலை நிராகரித்து விட்டார், சகோதரி !" என்று விம்மி வெடித்தாள்.

"ஆ !" என்று வீரிட்டாள் குமாரி மஞ்சுளா.

அதோ பாருங்கள் :—

பொன்மணித் தீபம் கண்ணீர்மாலை தொடுத்துக் கொண்டேயிருக்கின்றது !

—:O:—